# மேகலை



25

1995-2020

SILVER JUBLIEE PUBLICATION

வெள்ளி விழா மலர்

**நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் பிரித்தானியா**

**Nainai Manimekalai Welfare Association - UK**

Estd. 1995, Registered Charity No: 1068522



# மேகலை 25இன் உள்ளே


| | |
|---|---|
| தமிழ் மொழி வாழ்த்து | 06 |
| கழக கீதம் | 07 |
| ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஆதீன குருவின் ஆசிச் செய்தி | 08 |
| நாகதீப புராதன ரஜமகா விகாராதிபதியின் ஆசிச் செய்தி | 09 |
| மொய்டீன் ஜும்ஆப் பள்ளிவாசல் மௌலவியின் ஆசிச் செய்தி | 10 |
| தூய அந்தோனியார் ஆலய பங்குத்தந்தையின் ஆசிச் செய்தி | 11 |
| கழக நிர்வாகசபை உறுப்பினர்கள் 2019-2021 & 2021-2023 | 12 |
| கழகத்தினை ஆரம்பித்துவைத்த உறுப்பினர்கள் | 13 |
| விழாக்குழு உறுப்பினர்கள் | 14 |
| மலர்க்குழு உறுப்பினர்கள் | 15 |
| இளையோர்குழு உறுப்பினர்கள் | 16 |
| பிரித்தானிய மகாராணியின் அலுவலகத்தின் வாழ்த்துச்செய்தி | 18 |
| Kingston மாநகரசபை உறுப்பினரின் வாழ்த்துச்செய்தி | 19 |
| Sutton மாநகரசபை உறுப்பினரின் வாழ்த்துச்செய்தி | 20 |
| பிரதமவிருந்தினர் திரு ம சத்தியரூபனின் வாழ்த்துச்செய்தி | 21 |
| பிரதமவிருந்தினர் திரு ந கிருஷ்ணாவின் வாழ்த்துச்செய்தி | 22 |
| பத்திராதிபரின் வாழ்த்துச்செய்தி | 24 |
| கழக தலைவரின் வாழ்த்துச்செய்தி | 26 |
| கழக செயலாளரின் வாழ்த்துச்செய்தி | 28 |
| கழக பொருளாளரின் வாழ்த்துச்செய்தி | 30 |
| Message from NMWA Youth Team | 32 |
| விழாக்குழுத் தலைவரின் வாழ்த்துச்செய்தி | 33 |
| கழக காப்பாளர் திரு மு வே பூபாலசுந்தரத்தின் வாழ்த்துச்செய்தி | 34 |
| கழக காப்பாளர் திரு தி சந்திரபாலனின் வாழ்த்துச்செய்தி | 36 |
| கழக காப்பாளர் திரு திரு அ பஞ்சானந்தராஜாவின் வாழ்த்துச்செய்தி | 37 |
| கழக உள்ளக கணக்காய்வாளர் திரு தி குகதாசனின் வாழ்த்துச்செய்தி | 38 |
| கழக உறுப்பினர்கள் சார்பாக வாழ்த்துச்செய்தி | 40 |
| கழகத்தின் நயினாதீவு தலைவரின் வாழ்த்துச்செய்தி | 41 |
| கழகத்தின் நயினாதீவு செயலாளரின் வாழ்த்துச்செய்தி | 42 |
| கழகத்தின் நயினாதீவு பொருளாளரின் வாழ்த்துச்செய்தி | 44 |
| ஆசிரியர் செல்வி மு இ ஜெயலெட்சுமியின் வாழ்த்துச்செய்தி | 45 |
| ஆசிரியர் திரு ஐ திருவாசகநாதரின் வாழ்த்துச்செய்தி | 46 |
| வேலணைப் பிரதேச செயலாளரின் வாழ்த்துச்செய்தி | 48 |
| வேலணைப் பிரதேச சபை தலைவரின் வாழ்த்துச்செய்தி | 49 |
| ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய தலைவரின் வாழ்த்துச்செய்தி | 50 |
| அமுதசுரபி அன்னதான சபைச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி | 52 |
| நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாச்சார அபிவிருத்திச் சங்கத்தின் வாழ்த்துப்பா | 53 |
| நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கத்தின் செய்தி | 54 |
| நயினை கவிஞர் அமரர் நா க சண்முகநாதபிள்ளை அவர்களின் வாழ்த்துப்பா | 56 |
| நயினாதீவு அபிவிருத்திக் கழகம் - பிரான்சின் செய்தி | 58 |
| நயினாதீவு அபிவிருத்திக் கழகம் - சுவிஸ்லாந்தின் செய்தி | 60 |
| நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாச்சார அபிவிருத்திச் சங்கத்தின் செய்தி | 64 |
| ஆசிரியர் கலை தில்லைநாதன், டென்மார்க் அவர்களின் வாழ்த்துச்செய்தி | 76 |
| புங்குடுதீவு நலன்புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் வாழ்த்துச்செய்தி | 78 |

வேலணை ஒன்றியம், பிரித்தானியாவின் வாழ்த்துச்செய்தி 80
நெடுந்தீவு ஒன்றியம், ஐக்கிய இராச்சியத்தின் வாழ்த்துச்செய்தி 81
காரை நலன்புரிச் சங்கம் ஐக்கிய இராச்சியத்தின் வாழ்த்துச்செய்தி 82
கழக அபிமானி திரு கு ஜெகதீஸ்வரம்பிள்ளையின் வாழ்த்துச்செய்தி 83
நயினாதீவு மகாவித்தியாலய அதிபரின் வாழ்த்துச்செய்தி 84
ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலய அதிபரின் வாழ்த்துச்செய்தி 86
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலய அதிபரின் வாழ்த்துச்செய்தி 88
கழக அங்குரார்ப்பணம் 90
நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் நோக்கங்களும் செயற்திட்டங்களும் 93
நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் கல்வித்திட்டம் 96
வன்னி ஆபுத்திரன் பண்ணைத்திட்டம் 100
வரகவி க நாகமணிப்புலவரின் நயினை மான்மியம் 104
நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் - திரு சு வரதன் 106
Presentations of Nainativu Manimekalai Welfare Association 112
நயினை அமுதனின் வாழ்த்துக்கவி 140
நயினாதீவின் தொன்மை ஓர் வரலாற்றுப் பார்வை - திருமதி ஷர்மின் சஞ்சீவன் 144
1995-2021 வரை இடம்பெற்ற கழக நிகழ்வுகளின் சில பதிவுகள் 148
நயினாதீவில் கல்வி வரலாறு - ஒரு நோக்கு - திரு சோ தில்லைநாதன் 165
நயினையின் தனித்துவம் - செல்வி சர்விகா அமிர்தலிங்கம் 176
நயினை வித்துவான் அமரர் சி குமாரசாமி அவர்களின் கவிதை 178
கலை வளர்ச்சியில் மணிபல்லவ கலாமன்றம் - செல்வி மு இ ஜெயலெட்சுமி 180
Uniqueness of Nainativu - Mr Piranaava Amirthalingam 184
ஈழத்து இசை வளர்ச்சியில் நயினையம்பதி - பேராசிரியர் நா வி மு நவரெத்தினம் 186
Science of Meditation - Master Mr Kula Ratnam 188
நயினை கவிஞர் அமரர் நா க சண்முகநாதபிள்ளை அவர்களின் கவிதை 192
Diabetes - An Insight - Late Dr N Sivananthan 194
நயினாதீவு மக்களின் குடிப்பெயர்வும் புலம்பெயர்வும் - திரு யோ ஜயகாந் 198
Language (மொழி) - Dr Ajanth Varathanathan 208
How to get out of debt? - Mr Kulanathan Ratnam 212
பிரித்தானியாவில் தமிழ்க் கல்வி - திரு மு வே பூபாலசுந்தரம் 214
நயினை புலவர்கள் ஒரு வெட்டுமுகப் பார்வை - பேராசிரியர் கி விசாகரூபன் 216
சர்வ சமய சந்நிதிகள் - பேராசிரியல் மா வேதநாதன் 218
இந்துமத வழக்கங்களில் உள்ள அற்புதமான அறிவியல் காரணங்கள்-
செல்வி மு இ ஜெயலெட்சுமி 233
நயினாதீவில் விளையாட்டுத்துறை - திரு ப ந உருத்திரலிங்கம் 238
நயினாதீவு கிராம சபையும் கிராம அலுவலர்களும் - திரு இ சிவபாதசேகரம் 242
நயினாதீவில் வைத்திய சேவை அன்றும் இன்றும் - ஒரு நோக்கு - திரு த பாலமுருகன் 246
நயினாதீவில் வங்கிசார் செயற்பாட்டின் தேவையும் வளர்ச்சியும் - திரு சி மணிகரன் 252
நயினாதீவு தபால் அலுவலக வரலாறும் அதனூடான சேவைகளும் - திரு ப யோகராசா 255
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை - திரு அ சர்வானந்தராஜா 262
நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய யாத்திரீகர் தொண்டர் சபையும் தாகசாந்தி
நிலையங்களும் - திரு சோ தில்லைநாதன் 268
வாழ்வது அர்த்தமில்லை என்ற எண்ணம்? - வைத்தியர் கா மனோரஞ்சன் 270
வாழ்த்துவோம் வாரீர் 272
1995 முதல் 2020 வரை கழகத்தின் வளர்ச்சிக்காய் கரம் கொடுத்த
நிர்வாகசபை உறுப்பினர்கள் 293

# மேகலை 25

வெள்ளிவிழா சிறப்பு மலர்

Silver Jubilee Publication

1995-2020

# கடவுள் வணக்கம்



நீலக்கடலோரம் கோலமயில் நாகாச்சி

ஞாலம் காத்திடவே முகப்பினிலே – அவளாட்சி

சோகம் சுமந்தன்பர் தாள்பணிந்தாள் அவர்

சோகமெலாம் தீர்ப்பாளே சிவசக்கி

அரவம் மீதேறி அசைந்து வரும் திருக்காட்சி – நித்தம்

சிரம்மேல் கரம் கூப்பி அன்பர் தொழுவதோ அருட்காட்சி

கரியவன் இட்டபீடம், பெரியவன் பணிந்த பீடம் – தினம்காலை

கதிரவன் பணியும் பீடம், நாகன்னை தாள் பணிவோம்.

நயினை இளந்திரையன்

# Table Of Contents





# தமிழ் மொழி வாழ்த்து

*தான தனத்தன தான தனத்தன தானன தந்தானே*

*வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி*
*வாழிய வாழியவே!*
*வானமளந்த தனைத்தும் அளந்திடும்*
*வண்மொழி வாழியவே!*
*ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி*
*இசைகொண்டு வாழியவே!*
*எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி*
*என்றென்றும் வாழியவே!*
*சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்*
*துலங்குக வையகமே!*
*தொல்லை வினைதரு தொல்லை யகன்று*
*சுடர்க தமிழ்நாடே!*
*வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!*
*வாழ்க தமிழ்மொழியே!*
*வானம் அறிந்த தனைத்தும் அறிந்து*
*வளர்மொழி வாழியவே!*





# கழக கீதம்

## பல்லவி

ஒற்றுமையாக வாழ்ந்திடுவோம் - உலகில்
ஓரினமாக உயர்ந்திடுவாம்

## அனுபல்லவி

கயிலையில் நடனம் புரிபவர் பாங்குறை
நயினையின் அன்னையைப் பணிந்திடுவோம்

## சரணம்

கற்றதை மனதில் நிறுத்தி நிற்போம்
கனிதருமரம் போல் பயன் கொடுப்போம்
மற்றவர் மான்புற வாழவென்றே வந்த
மணிமேகலை முன்னேற்றக்கழகம் வாழியவே



உ

Sri Nagapooshani Thunai

Tharumal Athena " Aahamapraveena"
"Aasiruvathasarabam" "Prathistathilakam"

## Sivasri I. Kailasanatha Vamathevakurukal

(Nainativu Nagapoosani Amman Temple)



### ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
### ஆலய ஆதீன குருவின் ஆசி

நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகமானது அன்னை ஸ்ரீ நாகபூஷணியின் அருளால் நம் புராண இதிகாசங்களோடு சம்பந்தப்பட்டுள்ள பெயரில் அமைந்திருப்பது இந்தச் சபைக்கு தனித்துவமான ஒரு சிறப்பு. இச்சபையானது மக்களுக்கு பல கல்விச் சிறப்பு, வாழ்வாதாரம், குடும்ப நன்மை, கலை, கலாச்சாரம், அபிவிருத்தி எனப் பல வழிகளிலும் சேவை செய்து நிமிர்ந்து நிற்கும் ஒரு பெரிய தொண்டு நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது.

நயினை மக்களால் உருவாக்கப்பட்டு சா்வதேச மக்கள் அனைவரின் மத்தியிலும் புகழ் பெற்று விளங்கும் இச்சபையானது மேன்மேலும் வளர இறையருளும் நயினையின் குருவான கைலாசநாதக் குருவின் ஆசியும் என்றும் கிடைக்கப் பிராத்திக்கின்றேன்.

ஐ.கை.குரு
சிவசிறி. கைலை. வாமதேவகுருக்கள்.
ஆதீன குரு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்.
நயினாதீவு



"පරං රක්ඛන්තෝ
අත්තානං රක්ඛති"

"අනුන් රකින්නා තමාද රකී"

வட இலங்கை பிரதான சங்க தலைவர்
வடமாகாண கடற்படை பிரதான மத ஆலோசகர்
நாகதீபம் புராதன ரஜமா பிரதான விகாரை அதிபதி
கலாநிதி தம்பாக்கித்தி ஸ்ரீ நீதவான் (அகில இலங்கை)
பதிவு இல : 06/05/உ_ந/மு.தீ/150
அதிவணக்கத்துக்குரிய நவந்தகல பதும கித்தி திஸ்ஸ நாயக ஸ்தவீர
நாகதீப புராதன ரஜமா விகாரை
நாகதீபம் நைனா தீவு
இலங்கை
தொலைபேசி இல: 021 3213356

උතුරු ලංකාවේ ප්‍රධාන සංඝ නායක,
උතුරු පළාත් නාවික හමුදා ප්‍රධාන ආගමික අනුශාසක,
නාගදීප පුරාණ රජමහා විහාරය, බුද්ධ වලව්ව පුරාණ රජමහා විහාරය,
දඹකොළ පටුන සංඝමිත්තා පුරාණ රජමහා විහාරය යන විහාරස්ථානාධිපති,
ප්‍රවීණාචාර්ය, ධර්මකීර්ති ශ්‍රී, සාමවිනිසුරු (දි.වි.)
ලි.ප. අංක 06/05/උතුප/ලිපි/150
අති පූජ්‍ය නවඳගල පදුම කිත්ති තිස්ස නායක ස්ථවිර
නාගදීප පුරාණ රජමහා විහාරය
නාගදීපය - නයිනතිව්, ශ්‍රී ලංකාව.
දුරකථන : 021-3213356

Chief Sangha Nayaka of Northern Province
Chief Religious Advisor to the Sri Lankan Navy in the Northern Province
Chief Incumbent, Nagadeepa Purana Rajamaha Viharaya,
Budda Walauwa Purana Rajamaha Viharaya & Dambakolapatuna Sangamiththa Viharaya
Praweenacharya, Dharmakiththi Sri, Justice of Peace (All Island)
**Ven. Nawandagala Paduma Kiththi Thissa Nayaka Thero**

20.........................

### ஆசிச் செய்தி

மகத்தான பணி சிறப்புடன் தொடர்க.......

நயினை மணி மேகலை அபிவிருத்தி கழகம் பிரித்தானியா 25ம் ஆண்டு நிறைவு நாள் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

" பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றமிழ் வானில் நனி சிறந்திடவே"

என்ற உயரிய குறிக்கோளுக்கு அமைய நயினை மண்ணிலே பிறந்து வாழ்ந்து தொழில் நிமித்தம் புலம் பெயர்ந்து பிரித்தானியாவில் வாழ்கின்ற நயினை உறவுகள் ஊரின் வளர்ச்சிக்காகவும் உன்னத சேவைக்காகவும் உயரிய குறிக்கோளுடன் அனைத்து உறவுகளின் அயராத உழைப்பினால் ஒன்று திரட்டி உருவாக்கப்பட்ட மணிமேகலை என்ற தத்துவார்த்த நாமத்தோடு ஆரம்பிக்கப்பட்ட கழகமானது 25 ம் ஆண்டு நிறைவுநாளினை காண்கிறது என்றால் அது ஊர்மக்களாகிய நாம் செய்த பெரும்பாக்கியம்.

அது மட்டும் அன்றி ஊரின் வளர்ச்சிக்காக அபிவிருத்தி சமூகப்பணிகளோடு மாணவ சமுதாய கல்விப் புலத்திலே உயர்வடைய வேண்டும்மென்ற உயரிய நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டு கல்விக்கூடமாக திகழ்கின்ற மணிமேகலை கல்விக்கூடத்தின் பணி போற்றுதற்குரியது அது மட்டும் அன்றி பல மாணவர்களை இன்று திறமையானவர்களாக உயர்த்துவதில் அவர்களின் பங்களிப்பு என்றும் போற்றப்படவேண்டியது.

ஊரின் பணிகளுடன் மட்டும் அல்லாது ஏனைய மாவட்டங்களுக்கும் வாழ்வாதார உதவிகளை செய்துவருவதுடன் நிலை அறிந்து சேவை செய்கின்ற கழகமாக திகழ்வதை இட்டு மனநிறைவடைகின்றேன். இவ்வாறு இவர்களின் பணிகளை தொட்டுக் கொண்டே செல்லலாம்.

இவர்களின் பணி சிறக்கவும் கழகம் மேலும் எழுச்சி பெறவும் அங்கத்தவர்கள் நற் சுகத்துடன் வாழ புத்தபிரான் அருளோடு நயினை நாகபூசணி அம்பிகையினையும் வேண்டிநிற்கின்றேன்.

நன்றி

அதிவணக்கத்துக்குரிய நவந்தகல பதும கித்தி திஸ்ஸ நாயக்க தேரோ
நாகதீப புராதன ரஜமாகா விகாரை
நயினாதீவு

නාගදීප රජමහා විහාරාධිපති
පූජ්‍ය නවඳගල පදුමකිත්ති තිස්ස ස්ථවිර
නාගදීප රජ මහා විහාරය
නාගදීපය, නයිනාතිව්,
ශ්‍රී ලංකා.

බුද්ධ වලව්ව පුරාණ රජමහා විහාරය, නාගදීපය, නයිනතිව්. දඹකොළ පටුන සංඝමිත්තා විහාරය, සම්බතුරෙයි, මාදගල්.
புத்த வலவ்வ புரான ரஜமஹா விஹார நாகதீப நைனாதீவு தம்பகோலபடுன சங்கமித்த விஹார சம்பாந்துறை மடகல்
Budda Walauwa Purana Rajamaha Viharaya, Nagadeepaya, Nainathiw.
Dambakolapatuna Sangamiththa Viharaya, Sambathurai, Madagal.

IN THE NAME OF ALLAH

மொய்டீன் ஜும்ஆப் பள்ளிவாசல்

මොයිඩීන් ජුම්ආප් පල්ලිය

Moideen Jummah Mosque

Reg No: R/691/J 14 Ward No. 6, Nainativu, Jaffna, Sri Lanka.

## ஆசிச் செய்தி

அஸ்ஸலாமு அலைக்கும்

எல்லாம் வல்ல இறைவனை வேண்டி சப்த தீவுகளில் பல்வேறு பெருமைகளைத் தன்னகத்தே கொண்டமைந்த நயினை மண்ணில் தன்னிகரற்ற சேவைதனை பல்வேறு துறைகளிலும் தன் மண்ணுக்கு ஆற்றி வரும் நயினாதீவு மணிமேகலை முன்னேற்றக் கழகம் வெள்ளி விழாக் காண்பதையிட்டு அக மகிழ்வடைகின்றேன். மாணவர்களின் முன்னேற்றத்திற்கு சேவை புரியும் நோக்குடன் செயற்படும் இக்கழகத்தின் பணி தொடர, சிறக்க வாழ்த்துகின்றேன்.

வஸ்ஸலாம்

மௌலவி: இன் ஆமுல் ஹஸன்.
நயினாதீவு முஹைதீன் ஜும்மா பள்ளிவாசல்.



J.M.J

தூய அந்தோனியார் ஆலயம்

நயினாதீவு

7ம் வட்டாரம்,
நயினாதீவு.
..............20..

CA | JAFFNA | 13 | 63 | C2

## ஆசிச் செய்தி

இலங்கை மணித்திரு நாட்டில் சப்த தீவுகளில் ஒன்றான நயினையூரில் எழுச்சி பெற்றிருக்கும் மணிமேகலை முன்னேற்றக்கழகத்தின் இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவு விழாவில் கால் பதிக்கும் விழாக் குழுவினரைப் பாராட்டி வாழ்த்துவதில் நயினையூர் பங்குத்தந்தை என்ற பெருமிதத்தோடு உளம் பூரிப்படைகின்றேன்.

எதிர்கால நாட்டின் நலன் கருதி மாணவர்களின் கல்விச் செயற்பாட்டிற்கு மணிமேகலை முன்நேற்றக்கழகமானது பாரிய பங்களிப்பை வழங்குவதுடன் சிறந்த பெறுபேற்றைப் பெற்று நயினையூரின் புகழை எட்டுத்திக்கும் பரப்பிய பெருமை மணிமேகலை முன்னேற்றக்கழகத்தயே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இன, மத பாகுபாடின்றி அனைவர்க்கும் கல்வி வழங்குவதோடு பல் கலாசாரத் தீவில் மணிமேகலை முன்னேற்றக்கழகம் ஓங்கி வளர்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும், தாய் மண்ணின் வளர்ச்சிக்காகவும், ஊர் மக்களின் நலனுக்காகவும் அயராது பாடுபட்டுழைக்கும் உங்கள் அனைவரையும் வாழ்த்துவதோடு உங்கள் பணி வாழ்வு சிறக்க இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

"இறை இயேசுவின் அருள் உங்கள் அனவரோடும் இருப்பதாக"

செபமாலை. செபஜீவன்.
பங்குத்தந்தை.

# நிர்வாகசபை உறுப்பினர்கள் 2019 - 2021 & 2021 - 2023



**Left to Right Standing**
Mr. K. Mathipalan (PRO) | Mr. N. Krishna (PRO) | Mr. K. Rameswaran | Mr. S. Nishanthan (Editor) | Mr. K Puvaneswara | Dr. K Manoranjan (PRO)
Mr. K .Muraleetharan|Mr. A . Yasotharajah (PRO) |Mr. S.Vithiyaroban | Mr. Kugendran

**Left to Right Sitting**
Mr. G Edwin | Mr. T Amirthalingam (PRO) | Mr. S Ganesapathy (Vice President) | Mr. T Jeevendran (Secretary) | Mr. S Varathanathan (President)
Mr. Y Jayakanth (Treasurer) | Mr. A Satchithananthadarajah (Asst. Treasurer) | Mrs. S Sharmini (Asst. Secretary) | Mr. R Kulanathan

**Patrons :-** Mr. V Poopalasundaram Mr. A Panchananthrarajah Mr. T Chandrapalan Mr. T Kugathasan (Internal Auditor)

## Absentees



Mr. G. Ketheeswaran



Mr. K Sotheeswara
(PRO)
( 2019-2021)



Mr. Y Sasikajan
(PRO)
(2021-2023)

PRO - Public Relation Officer



# கழகத்தினை ஆரம்பித்துவைத்த உறுப்பினர்கள்



திரு. அம்பலவாணர்
பஞ்சானந்தராஜா



திரு. சுப்ரமணியம்
வரதன்



திரு. சோமசுந்தரம்
சற்குணநாதன்



திரு. கந்தப்பு
புவனேஸ்வரா



திரு. கந்தசாமி
குகராசா



திரு. மாணிக்கம்
சுரேந்திரன்

# விழாக்குழு உறுப்பினர்கள்

திரு அ.சச்சிதானந்தராஜா (தலைவர்)

திரு சோ. சற்குணநாதன்

திரு தி. ஜீவேந்திரன்

திரு க.கேதீஸ்வரன்

திரு சோ. வரதநாதன்

திரு யோ. ஜயகாந்

வைத்தியர் கு. திசாந்தன்



# மலர்க்குழு உறுப்பினர்கள்

திரு ச. நிஷாந்தன் (தலைவர்)

திரு அ. பஞ்சானந்தராஜா

திரு யோ. ஜயகாந்

திரு தி. ஜீவேந்திரன்

திருமதி ச.ஷர்மினி

திரு சோ. வரதநாதன்

# இளையோர்குழு உறுப்பினர்கள்

திருமதி தி. அனுசியா

திரு அ. பிரணவா

திரு ஐ. லவணன்

செல்வி சி. லக்சிதா

செல்வி கு. சஜானி

செல்வி கி. விதுசிகா





BUCKINGHAM PALACE

10th March, 2020.

Dear Mr. Varathanathan,

I have been asked to thank you for your kind letter to The Queen sent on behalf of Nainai Manimekalai Welfare Association on the occasion of your Twenty-Fifth Anniversary which is being marked on 11th April.

Her Majesty was interested to learn of the work of the organisation since its founding and much appreciated your thoughtfulness in writing as you did. In return, The Queen sends her warm good wishes to all concerned for a most memorable and successful celebration.

Yours sincerely,
Miranda Hansen Lise

Miranda Hansen Lise
Loyal Greetings Officer

Mr S Varathanathan.





THE ROYAL BOROUGH OF KINGSTON UPON THAMES

**Councillor Thay Thayalan**
Tolworth and Hook Rise Ward
***Former Mayor 2018/2019***

On the significant occasion of reaching a great milestone, the Twenty-fifth Anniversary of the association, it gives me great pleasure to extend my warm congratulations and best wishes to those who contributed to the development and success of the Nainai Manimekalai Welfare association. I had the pleasure of attending many of your functions in the early years of the association and as Councillor in recent years. I enjoyed the cultural events, the Annual Sports day and Get together and the warm welcome from Nainativu people

It is amazing to read through the summary report of the projects and achievements in the last 25 years. Establishing a free tuition centre, contribution towards new hospital, campaign for environmental protection, farm project for visually impaired people and flood disaster relief project were highlights to be proud of. Your projects over the past quarter century have brought so much positive changes to improve the quality of life of so many people and their families in Nainativu and Vanni.

I have pleasant memories of my visits to this small beautiful Island of Naiantivu with an ancient name of Manipallavam, particularly the historically famous Nagapooshani Amman Kovil on pilgrimage trips with my family.

My best wishes for a successful 25th anniversary celebrations. I wish you continued success in all your future endeavours.

Wydeeswaran Thayalan



Councillor Param Nandha
Conservative Councillor for North Cheam Ward
London Borough of Sutton

Sutton

Dear All,

I am delighted to send my greetings and best wishes for Nainai Manimekalai Welfare Association's Silver Jubilee celebration.

I have been given an opportunity to lead the association for Five years as I aspired to provide opportunities to our community in every possible way. Therefore, during my time we embarked on a major project to improve education and other curriculum activities. In pursuing this project, we purchased land in Nainativu and built an education centre for underprivileged students, now it has expanded further more classrooms and computer rooms for IT education. The venue is also used as a community hub for various community projects which is a great milestone.

Moreover, the Welfare Association has reiterated its kindness to further projects such as; farms, saving the environment (tree planting) and disaster relief activities in other parts of the Tamil speaking area, which is their remarkable growth within a decade, which shows their explicitness. This success story is an inspiration for all younger generations. Furthermore, I really appreciate the hard work of each and everyone in the NMWA past & present management committee who have rendered their valuable time and contribution to make this organisation to reach this milestone.

I wish the Nainai Manimekalai Welfare Association all the success for many more years to come .

**Yours sincerely,**

**'Son of Nainativu'**

***Param nandha***

**Param Nandha (MBA Finance spe)**

*Vice Chairman, Audit and Governance Committee*
*Appointed Governor-Nonsuch High School for Girls*
*Appointed Governor Greenshaw High School*
*Non Executive Director- Griffin College London*





# பிரதம விருந்தினரின் வாழ்த்துச்செய்தி

MSR GROUP
EST 2005

நயினாதீவு மணிமேகலை முன்னேற்றக்கழகம் நடத்தும் 25 வது ஆண்டு வெள்ளி விழா நிகழ்ச்சிக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

பிரித்தானியாவில் வாழும் நயினை மண்ணின் உறவுகள் ஒன்றுகூடி உருவாக்கி கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நயினை மண்ணின் அபிவிருத்திக்காக பல்வேறு நற்பணிகளை இந்த அறக்கட்டளை செய்து வருகின்றதனை நான் அறிவேன்.

ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு அபிவிருத்திகள், உதவிகள் நயினை மண்ணில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ் அறக்கட்டளையின் செயற்பாடுகளுக்காக என்னாலான கொடைகளையும் சேவைகளையும் நான் ஆண்டுதோறும் செய்துவருவதில் மகிழ்ச்சியடைகின்றேன். தொடர்ந்து இருபத்தைந்து ஆண்டுகளாக நற்பணி செய்வதென்பது இந்த அறக்கட்டளைக்காகத் தம்மை அர்ப்பணித்து பணி செய்வோர்களின் ஒற்றுமையையும் பரந்த மனப்பான்மையினையும் எடுத்துக் காட்டுகின்றது.

கல்விக்கூடம், ஆசிரியர்கள் கொடுப்பனவு, வாழ்வாதாரப் பணிகள் என பல்வேறு திட்டங்களைச் செய்துவரும் நயினை மணிமேகலை அறக்கட்டளையானது நயினை மண்ணில் மட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களிலும் தனது நற்பணிகளைச் செய்துவருவது பாராட்டத்தக்கது.

அது மட்டுமன்றி பிரித்தானியாவிலும் எமது சமூகத்தின் ஒற்றுமையினை பேணும் வகையிலும், கலை பண்பாட்டு விழுமியங்களை பாதுகாக்கும் வகையிலும் பல்வேறு நிகழ்ச்சிகளையும், போட்டிகளையும் ஒழுங்குபடுத்தி செயற்படுத்தி வருகின்றமையும் பாராட்டத்தக்கது.

அடுத்து இன்றைய வெள்ளிவிழா கலை நிகழ்வினை முன்னிட்டு இடம்பெறும் பல்வேறு நிக்ழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெற எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கனம்,

மகா சத்தியரூபன்

The Parliamentary Review MEMBERS

MSR Group
MSR House, 329 Ley Street, Ilford
Essex IG1 4AA
T: 020 8514 2678 F: 020 8514 6963
E: ruban@msraccounting.org
W: msrgroup.org.uk

The Parliamentary Review BEST PRACTICE REPRESENTATIVE
APPROVED Accountax
ico. Information Commissioner's Office

# பிரதம விருந்தினரின் வாழ்த்துச்செய்தி



எல்லாம்வல்ல நயினை நாகபூசணித்தாயின் பாதரவிந்தங்களை வணங்கி அகிலமெங்கணும் பரந்துவாழும் நயினைத்தாயின் குழந்தைகள் அவளின் அருளாட்ச்சி கோலோச்சும் நயினை மண்ணை மனதார நேசித்து அந்த மண்ணும் மக்களும் சிறப்புடன் வாழவேண்டும் என்ற உயரிய நோக்கில் 25 ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்தானியாவிற்கு புலம்பெயர்ந்த எமது உறவுகளின் பொதுநலச்சிந்தனையில் உருவானதே நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம். அந்தக்காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்த எமது உறவுகளை ஒன்றிணைத்து தாம் பிறந்து வளர்ந்த மண்ணிற்கும் அங்குவாழும் மக்களுக்கும் தம்மால் முடிந்த உதவிகளை ச்செய்வதற்கு எம் உறவுகள் ஆதரவுக்கரம் கொடுத்து கழகத்தினை வளர்த்தெடுத்தனர். இவ்வாறு 25 ஆண்டுகளுக்கு முன்னர் கழகத்தினை உருவாக்க அரும்பாடுபட்ட, ஆதரவளித்த உறவுகளுக்கு எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்று வெள்ளிவிழாக்கண்டு நிற்கும் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தில் இத்தனை காலமும் அல்லும் பகலும் உழைத்த அனைத்து உறுப்பினர்களுக்கும் ஆதரவுக்கரம் நீட்டிய அன்பு உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு உங்கள் பணியும் உதவிகளும் எமது ஊருக்கும் மக்களுக்கும் தாயக தமிழ் உறவுகளுக்கு என்றும் தொடரவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

வெள்ளிவிழாக்காணும் கழகத்தின் செயற்பாடுகளிற்கு உதவவும், இணைந்து செயற்படவும், 2017-2019 காலப்பகுதியில் தலைவராக இருந்து கழகத்தினை வழிநடத்தவும் வாய்ப்பளித்த கழக உறுப்பினர்களுக்கு எனது நன்றியை தெரிவிப்பதோடு வெள்ளிவிழா நிகழ்வுகள் சிறப்புடன் இடம்பெற உழைத்துவரும் விழாக்குழுவினர், வெள்ளிவிழா சிறப்புமலரான "மேகலை 25" இனை அழகுற வெளியிடப்பாடுபடும் மலர்குழுவினருடன் இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகமானது இன்று வருங்கால சந்ததியினரையும் உள்வாங்கி பயணிக்கத்தொடங்கியுள்ளமையானது கழகம் இன்னமும் பலநூறு ஆண்டுகள் நிலைபெற்று வளர்ந்து பெரு விருட்சமாகி கிளைபரப்பி நிழல் கொடுக்கும் என்ற நம்பிக்கையினை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. கழகத்தின் செயற்பாடுகளில் இணைந்து செயற்படும் எமது இளையோரை மனதார வாழ்த்துவதுடன் மேலும் பல இளையோரை உள்வாங்கி காலத்தினதும் சூழ்நிலைகளினதும் மாற்றங்களை உள்வாங்கி அனைவரையும் ஒன்றிணைத்து கழக செயற்பாடுகளை மேலும் முனைப்புடன் முன்கொண்டு செல்ல எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

திரு. நடராசா கிருஷ்ணா
நிர்வாக இயக்குனர்
கிருஸ்ணிக்கா ஜிவல்லரி
ஸ்ரீ சோபனா ஜிவல்லரி





# பத்திராதிபரின் வாழ்த்துச்செய்தி



நயினை மணிமேகலை முன்னேற்றக்கழகம் பிரித்தானியா இன்று தனது 25 அகவையில் அதன்நிறைவு விழாவை சிறப்புடன் கொண்டாடுகின்றது. இவ் விழா சிறப்புடன் நடைபெற என் வாழ்த்துக்களை பத்திராதிபர் என்ற வகையில் தெரிவிப்பதோடு சில விடயங்களை பகிர்ந்து கொள்ளவிளைகின்றேன்

1995இல் ஆரம்பிக்கபட்ட நயினை மணிமேகலை முன்னேற்றக்கழகம் நயினை நாகபூசணி அருளோடும் எம்மவர்களின் முயற்சியோடும் பெரும் விருட்சமாக நின்று சேவை ஆற்றி வருகின்றது . புலத்தில் இருந்து புலம்பெயர் எம்மவர்கள் துணையோடு நயினை மண் உட்பட தாயகம் எங்கும் இடர்நெருங்கும் காலமெல்லாம் துயர்போக்கி நிற்கின்றது. கல்வி, மருத்துவம், வலியோர்க்கு உதவிடல் என்பதோடு மட்டுமன்றி வாழும் பிரித்தானிய மண்ணிலும் அதன் சேவையை ஆற்றி நிற்கின்றது.

நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுத்து செல்வதற்கும் எம் மக்களை ஒன்றிணைப்பதற்கும் எம் இளையோர்கள் நாளை கழகத்தின் தூண்களாக நிற்பதற்கும் எம்மால் முடிந்தளவு கலை நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகள், ஊர்கூடி உவகை கொள்ளும் ஒன்றுகூடல்கள் என பலவற்றை நடாத்தி கழகத்தின் செயல்திட்டங்களை நிறைவேற்றி வருகின்றோம் இனியும் தொடர்வோம்.

இத்தருணத்தில் 25 ஆண்டு நிறைவையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்திகள், கட்டுரை ஆக்கங்கள், புகைப்படங்கள், வழங்கிய அனைவருக்கும் இம்மலரை அழகுற வடிவமைத்த அச்சகத்திக்கும் மலர் சிறப்புற அமையப்பாடுபட்ட மலர் குழுவினர்க்கும் சிரம் தாழ்ந்தி நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

25 அகவை கடந்து நிற்கும் மணிமேகலை தொடர்ந்து ஒற்றுமையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பட்டு மென்மேலும் வளர நயினை தாயின் ஆசி வேண்டி வாழ்த்து கூறுவதில் பெருமைகொள்கிறேன்.

நன்றி

**திரு சண்முகரெட்ணம் நிசாந்தன்**
நயினை மணிமேகலை முன்னேற்ற கழகம் , பிரித்தானியா





## கழக தலைவரின் உள்ளத்திலிருந்து



’கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஆர் எனின்’

சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த தமிழினத்தின் வழித்தோன்றல்கள் நாம் பல்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்த போதும் செம்மொழியான தமிழ்மொழியையும் அதன் கலை, கலாசார, பண்பாட்டு பாரம்பரியங்களையும் எமது எதிர்கால சந்ததியினர் தொடர்ந்து பின்பற்றுவதற்கு வழியேற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற உயரிய சிந்தனையை சிரமேற்கொண்டும், எமது மண்ணில் தேவையான நலத் திட்டங்களை நிறைவேற்றுமுகமாகவும் 1995ம் ஆண்டு மணிமேகலை முன்னேற்றக் கழகமானது அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அதற்கு வித்திட்ட ஆரம்பகர்த்தாக்களுக்கும், இக் கழகத்திற்கென ஓர் யாப்பினை உருவாக்கி பிரித்தானியா தொண்டுநிறுவன ஆணைக்குழுவில் பதிவு செய்து அதன் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களுக்கும், தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் கழகத்தின் பணிக்காக தங்களை அர்ப்பணித்து செயற்பட்ட அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் இம்மலர் மூலம் நன்றி தெரிவிப்பதில் கழகத்தின் தலைவர் என்ற ரீதியில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கழகமானது எமது மக்களை ஒன்று திரட்டுமுகமாகவும், எமது கலை, கலாச்சாரத்தை முன்னிறுத்துமுகமாகவும் ஒவ்வொரு ஆண்டும் ”மேகலை” என்ற பெயரில் கலாசார விழா, பொங்கல் விழா, மற்றும் விளையாட்டு போட்டி போன்றவற்றை நடாத்தி வருவது யாவரும் அறிந்ததே. அதற்கான ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த அனைவரையும் இந்தனேரத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

கழகமானது பல நலத்திட்டங்களை தேவையின் அடிப்படையில் ஆராய்ந்து சிறப்புற செயற்படுத்தி வருகின்றது. குறிப்பாக கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து சுனாமி நிதி, மற்றும் ஆலங்குள வீதி புனரமைப்பு நிதி என்பவற்றை வழங்கி உதவியது. மேலும் நயினாதீவில் அமைக்கப்பட்டுள்ள எமது கழகத்தின் இலவச கல்வி நிலையமானது முதற்கட்டமாக வகுப்பு அறைகள் அதற்கான தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டு கல்விப்பணி தொடர்ந்து வந்த நிலையில், 2015ம் ஆண்டு மீண்டும் ஒரு கணணி நூலகம் வகுப்பறைகளுடன் உருவாக்கப்பட்டு கல்விப்பணி தொடர வழி அமைந்துள்ளது. அத்துடன் வன்னியில் விழிப்புணர்வற்றோரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களுக்கான ஒரு பால் பண்ணையினை அமைத்துக் கொடுத்துள்ளது. மேலும் மரநடுகை திட்டம் (பசுமைப்புரட்சி), வெள்ளநிவாரண நிதி மற்றும் பலதரப்பட்ட உதவிகளையும் வழங்கி வருகின்றோம். அதற்கு எங்களுக்கு நிதியுதவி தந்துதவிய நன்கொடையாளர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

அத்துடன், எமது நயினாதீவில் முன்னெடுக்கப்பட்டுவரும் கல்வித் திட்டத்தற்கும் இதர செலவினங்களுக்குமான கொடுப்பனவானது நிர்வாகத்தில் இருக்கும் நிர்வாக உறுப்பினர்களின் நிதிப் பங்களிப்பிலேயே வழங்கப்பட்டு வருகின்றது. கல்விப்பணிதொடர தொடர்ந்து ஆதரவளித்துவரும் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது கழகத்தின் வளர்ச்சியையும், எதிர்காலத்தின் இருப்பையும் முன்னிறுத்தும் தொலைநோக்கு சிந்தனையில் இளையோருக்கான ஓர் துணை அமைப்பினை கழகத்தினுள் உருவாக்கி உள்ளோம். அவர்களுக்கான முதலாவது அமர்வு 2019ஆம் ஆண்டு இறுதிப் பகுதியிலும், 2020ஆம் ஆண்டு முற்பகுதியில் ஓர் ஒன்றுகூடலினையும் ஏற்பாடு செய்திருந்தோம். இளையோர் அமைப்பில் எங்களுடன் இணைந்து பயணிக்க இணைந்து கொண்ட அனைத்து இளையோர்களையும் வாழ்த்தி வரவேற்பதோடு அதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உறவுகளுக்கும், பெற்றோர்களுக்கும் கழகத்தின் சார்பில் நன்றியினைத்தெரிவித்துக் கொள்கின்றேன்.

25ம் ஆண்டு வெள்ளிவிழாவினை கொண்டாடும்முகமாக இடம்பெறும் ”மேகலை” 2022 நட்சத்திர இசைவிருந்தினை சிறப்புற நடாத்த பெரிதும் உறுதுணையாக இருந்த விழாக்குழு மற்றும், இதற்கு ஆதரவு வழங்குவோர் மலர்க்குழுவினர் மற்றும், இதற்கு ஒத்துழைப்பு வழங்குவோர், இளையோர் உள்ளடங்கிய விழா ஒருங்கமைப்புக்குழுவினர் விழா சிறப்புற அன்பளிப்பு வழங்கியவர்கள், விழா மலர் சிறப்புற ஆக்கங்களைத் தந்துதவியவர்கள், வாழ்த்துச் செய்தியைத் தந்துதவியவர்கள், ஆசிச் செய்தி வழங்கிய பெரியவர்கள், விளம்பரம் தந்துதவிய நிறுவனத்தினர் அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்கழகமானது வெள்ளிவிழாவினையும் 27ஆவது ஆண்டு விழாவினையும் இணைந்து மாபெரும் விழாவாக இந்திய இசைக் கலைஞர்களையும், தாயகம் சார் பிரித்தானிய இசைக் கலைஞர்களையும் இணைத்துக் கொண்டாடுகின்றது. இந்நாளிலே விழா இனிதே நடைபெற வாழ்த்துவதோடு இவ்விழா சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து உள்ளங்களையும் மனமார வாழ்த்துகின்றேன். உங்கள் அனைவரின் ஆதரவினை கழகம் என்றும் வேண்டிநிற்கின்றது.

நன்றி.
வணக்கம்.

திரு. சோ.வரதநாதன்
தலைவர்





## செயலாளரின் வாழ்த்துச் செய்தி



காலமும், கடல் கடந்த தூரமும் எம்மையெல்லாம் பிரித்து நின்றாலும் அன்னை நாகபூஷணி மண்ணில் பிறந்த காரணத்தினால் நாம் எங்கெல்லாம் பிரிந்து, பரந்து வாழ்ந்தாலும் எமது எண்ணமும் சிந்தனையும் எமது மண்ணையும், மக்களையும், மாணவர்களையும் நோக்கியதாகவே உள்ளது. அந்த வகையில் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் - பிரித்தானியா 2020ல் 25வது ஆண்டில் காலடி எடுத்து வைத்தமையையிட்டு நாங்கள் அனைவரும் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

எமது கழகத்திற்கு நீண்ட நெடிய வரலாறு உள்ளது. 1995 ஆம் ஆண்டு மண்ணின் மைந்தர்கள் ஆறுபேர் கூடிக் கதைத்து உருவானது இன்று பெரும் விருட்சமாக வளர்ந்துள்ளமைக்கு இங்குள்ள எமது மக்களும், ஆதரவாளர்களும் இருகரம் கொடுத்தமையே காரணமாகும். அவர்கள் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் மனதார நன்றி கூறிக் கொள்கின்றோம். அத்தோடு அன்றும், இன்றும், தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கழகப் பணிகளைச் செயற்படுத்துபவர்களை கழகம் ஒருபோதும் மறவாது நினைவு கொள்வதோடு, கழக வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி இன்று அமரத்துவம் அடைந்தவர்களையும் நினைவுகூறி அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்கிறது.

“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்’

என்கின்ற வள்ளுவன் வாக்கிற்கமைய காலத்தின் தேவை கருதி காலத்திற்குக் காலம் துடிப்புள்ள இளைஞர்களை உள்வாங்கி செயற்பட்டு எமது கழகமானது புலத்தில் சமூக, கலை, கலாசாரத்தை வளர்ப்பதோடு நாம் பிறந்த மண்ணுக்கு எங்களால் இயன்ற நற்பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் கழக நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும், இளையோர் அமைப்பினர்க்கும், கழக அங்கத்தவர்கள், அபிமானிகள், நண்பர்கள், நன்கொடைகளை அள்ளி வழங்கும் உறவுகள் மற்றும் வர்த்தகப் பெருமக்களுக்கும் நன்றி கூறிக்கொண்டு கடந்த காலத்தைப் போன்று எதிர்காலத்திலும் உங்கள் ஒத்துழைப்புக்களை நல்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

“உண்மையில் இறைவன் கைகொடுப்பதும் இல்லை. கைவிடுவதும் இல்லை. நாம் செய்த புண்ணியங்களே நமக்குக் கைகொடுக்கின்றன. நாம் செய்யும் பாவங்களே நமக்குக் குழி பறிக்கின்றன.”

அன்பான உறவுகளே.....
நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் உயரிய நோக்கங்களையும், அர்ப்பணிப்புக்களையும் அனைத்து உறவுகளும் புரிந்து கொள்ள வேண்டும். இங்குள்ள எமது இளையோரையும், அங்குள்ள எமது இளம் சமுதாயத்தையும் ஒருங்கிணைத்து முடிந்தளவு பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தை பொற்காலமாக மாற்றியமைத்து நல்லதோர் சமூகத்தை வளர்ந்தெடுக்க அனைவரும் ஒரே கூரையின் கீழ் பயணிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு எனக்கு இச்சந்தர்ப்பத்தினை நல்கிய நயினை மணிமேகலை முன்னேற்றக் கழக நிர்வாகத்தினருக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

நன்றி - வணக்கம்.

திரு தி ஜிவேந்திரன்








## பொருளாளரின் வாழ்த்துச் செய்தி

எமது நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் தனது 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழாவினை 2022 இல் கொண்டாடிக்கொண்டிருக்கும் இந்த தருணத்தில் வெள்ளிவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றினை வழங்குவதற்கு எனக்கு வாய்ப்பளித்த நயினை உறவுகள் அனைவருக்கும் முதற்கண் எனது மனமார்ந்த நன்றிகள்.

25 ஆவது ஆண்டு வெள்ளிவிழாவின் இந்த சிறப்பு மலரினை சிறப்புற வடிவமைப்பதற்கு மலர்குழுவுடன் பெரிதும் இணைந்து செயற்பட்ட கழகத்தின் காப்பாளர்களில் ஒருவரான திரு அம்பலவாணர் பஞ்சானந்தராஜா அவர்களுக்கும் ஏனைய மலர்குழு உறுப்பினர்களுக்கும் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழாவினை விமரிசையாக கொண்டாடுவதற்கு அல்லும்பகலும் அரும்பணியாற்றிய விழாக்குழு மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் நன்றியும் உரித்தாகட்டும்.

நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகமானது பிரித்தானியா வாழ் நயினை மக்களினாலும் நலன்விரும்பிகளினாலும் நன்கொடையாளர்களினாலும் பாலூட்டி தாலாட்டி தலை தடவி தாவணி போட்டு வளர்த்தெடுக்கப்பட்டு இன்று தனது 25 ஆவது அகவையில் சேலை கட்டி சிங்காரித்து நிற்கின்றாள்.

எமது ஊரில் கூட்டுக்குடும்பங்களாக கொஞ்சி குலாவித்திரிந்த நாம் பல்வேறு காரணங்களால் புலம்பெயர்ந்து உலகின் பல்வேறு நாடுகளுக்கு சென்றாலும் மண் வாசனையை மறக்காது நாம் பிறந்து வளர்ந்த ஊரினை வளம்படுத்த வேண்டும் என்ற உயரிய எண்ணத்தில் 25 ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்தானியா வாழ் எமது உறவுகளின் சிந்தனையில் உதித்து சிற்பமாகி உயிர்பெற்று இன்று மணிமேகலை என்ற பெயருடன் 25 வயது நிரம்பிய தெரிவைப் பருவத்தில் நயினைத் தாயின் மகளாக, பிரித்தானியா வாழ் நயினை உறவுகளின் அடையாளமாக உலாவருகின்றாள்.

மொழிதெரியா ஊரில், வேறுபட்ட காலநிலையில், தலைக்கு மேல் பொறுப்புக்களை சுமந்துகொண்டு பிரித்தானியா வந்து, தமது இருப்பே நிட்சயப்படுத்தப்படாத நிலையில் தங்குவதற்கு இடங்கள் அற்ற சூழ்நிலையில் ஊரின் வளர்ச்சியினையும் பிரித்தானியா வாழ் உறவுகளின் ஒன்றிணைவை சிந்தனையில் கொண்டு நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தினை உருவாக்கி பிரித்தானியா வாழ் நயினை மக்களுக்கோர் அடையாளத்தினை வழங்கிய எமது அன்பான உறவுகளையும், கழகத்தினை நெறிப்படுத்தி அதற்கான யாப்பினை உருவாக்கி பிரித்தானிய தொண்டுநிறுவன ஆணைக்குழு மற்றும் வருமான வரித்திணைக்களம் என்பவற்றில் பதிவினை மேற்கொண்டு பிரித்தானிய சட்டதிட்டங்களுக்குட்பட்ட ஓர் சட்டரீதியான அமைப்பாக கழகத்தினை உருவாக்கி அதன் இன்றய வளர்ச்சிக்கு கால்கோலிட்ட உறவுகள் அனைவரையும் இந்த சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவுகூர கடமைப்பட்டுள்ளேன்.



தொடர்ந்துவந்த 25 ஆண்டுகளும் பல்வேறு இடர்களுக்கும் இடையூறுகளுக்கும் மத்தியில் தமது சொந்த நேரத்தினையும் பணத்தினையும் செலவழித்து கழக செயற்பாட்டினை முன்னெடுத்துச்சென்று இன்று 25 ஆவது ஆண்டு வெள்ளி விழாவினை சிறப்புற கொண்டாடுவதற்கு காரணமாக இருந்த கடந்தகால மற்றும் தற்போதய நிர்வாகக்குழு உறுப்பினர்களின் தன்னலமற்ற உயரிய சேவையினையும் இந்த சந்தர்ப்பத்தில் பாராட்டி அவர்களின் சேவை கழகத்திற்கும் மக்களுக்கும் தொடர்ந்திருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்

கழகத்தின் வளர்ச்சி மற்றும் அறப்பணி என்பது நன்கொடையாளர்களினது மனமார்ந்த உதவிகளிலேயே தங்கியுள்ளது. அந்தவகையில் கடந்த 25 ஆண்டு காலமாக கழகத்தினால் நயினாதீவிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் தேவையறிந்து முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற அனைத்து அறப்பணிகளுக்கும் தொடர்ந்து ஆதரவளித்துவரும் உறவுகளுக்கும் நன்கொடையாளர்களுக்கும் மற்றும் வெள்ளிவிழா மற்றும் மலர் வெளியீடு என்பன சிறப்பாக இடம்பெற மனமுவந்து ஆதரவளித்த அனுசரணையாளர்கள், விளம்பரதாரர்கள் , நன்கொடையாளர்களுக்கும் கழகத்தின் பொருளாளர் என்ற ரீதியில் எனது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதோடு உங்களின் உதவிகளும் ஊக்குவிப்புக்களும் என்றும் கழகத்தின் வளர்ச்சிக்கும் எதிர்கால செயற்பாட்டிற்கும் உந்துசக்தியாக இருக்கும்.

கழகத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வின் ஓர் மைல் கல்லாக பிரித்தானியாவாழ் நயினை இளைஞர்களையும் யுவதிகளையம் உள்வாங்கி நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் பயணிக்கத்தொடங்கியுள்ளது. எமது குழந்தைகள் வேறுபட்ட சூழ்நிலையில் வேறுபட்ட கலாச்சாரத்தில் பிறந்து வாழ்ந்து கல்விகற்று தமது எதிர்கால வாழ்வினை அமைத்துக்கொள்ளத் தயாராகிவரும் இன்றய காலகட்டத்தில் சூழலுக்கும் சூழ்நிலைக்கும் இசைந்து வாழும் அதேவேளை எமது கலை கலாசாரம் பண்பாட்டு விழுமியங்களை பாதுகாத்து அடுத்துவரும் சந்ததிகளுக்கும் கொண்டுசெல்லக்கூடிய ஓர் களமாக நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தினை பயன்படுத்த வைப்பதே இனிவரும் காலத்தில் கழகத்தினது இன்றியமையாத பணியாக இருக்கும். இந்த சிந்தனையின் அடிப்படைத் தாற்பரியத்தினைச் சரிவரப் புரிந்துகொண்டு எமது குழந்தைகளை கழகத்தின் இளையோர் செயற்பாடுகளில் இணைந்து செயற்பட ஊக்கப்படுத்துவதனூடாக எங்கள் குழந்தைகளும் எமது எதிர்கால சந்ததியும் நயினைத் தாயின் குழந்தைகளாக வாழ்வை வளம்படுத்த பெரும்பணியாற்ற முடியும்.

அத்துடன், இனிவரும் காலங்களில் எமது இளையோரின் உதவியுடன் எம்மாலான அறப்பணிகளை பிரித்தானிய சமூகத்திற்கும் விரிவுபடுத்துவதனூடாக எமது கழகத்திற்கான அங்கீகாரத்தினை மேலும் வலுப்படுத்த முடியும்.

பிரித்தானியாவாழ் நயினை மக்களையும் நலன்விரும்பிகளையும் ஒன்றிணைத்து நயினாதீவிற்கும் ஏனைய மக்களுக்கும் சேவையாற்றி இன்று தனது 25ஆவது ஆண்டில் கால்பதித்து பெருமையுடன் நிமிர்ந்து பயணிக்கும் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் இன்னும் பல்லாண்டுகாலம் பிரித்தானியாவாழ் நயினை மக்களின் சக்தியாக, அடையாளமாக இருந்து நயினாதீவிற்கும் பிரித்தானிய மக்களுக்கும் சேவையாற்றவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

நன்றி

திரு யோகராசா ஜயகாந்

## Message from NMWA Youth Team

We are proud that the Nainativu Manimekalai Welfare Association London has continued with their service and contribution to society since it's establishment 25 years ago. Having been one of the first established foreign Nainativu welfare charities, it is truly impressive that they have seen 25 years. All the members have always worked tirelessly contributing a lot of their own time to ensure that they can give their bit to the wider community, and this has always been inspiring to see as a 2nd generation. Although this charity is named, the Nainativu Manimekalai Welfare Association, they have never limited their charitable work to just our homeland. They have raised money to provide substantive contributions to those affected by the Tsunami in 2009 and more recently, provided care packages to those affected by the COVID lockdowns. Not limiting their charity to one cause has allowed their passion and drive to remain youthful.

As well as being a charitable organisation, their annual events and sports day gatherings have also been an opportunity for us to meet our fellow kith and kin, all of us who can trace our roots to Nainativu.

Their passion for this charity to not only act as a support to society but also act as a medium for Nainativu descendants to remain connected was evident in their wanting for younger generations to become more involved in the charity. The younger members have not only been welcomed but have also been given a lot of space to come up with suggestions and to handle events in their own ways. We want to thank the NMWA for honouring us with the opportunity to be part of their organisation and look forward to being able to contribute the best we can in the coming years.







## விழாக்குழு தலைவரின் வாழ்த்துச் செய்தி

இன்று வளர்ந்து நிழல்பரப்பி நிற்கும் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் என்ற விருட்சத்திற்கு இருபத்தைந்து வருடங்களிற்கு முன்னர் வித்திட்டு நீரூற்றி விழாவெடுத்த நாள் இன்றுபோல் என் மனக்கண்ணின்முன் நிழலாடுகின்றது. பிரித்தானியாவிலுள்ள நயினாதீவினை சேர்ந்த மற்றும் அதனை சார்ந்த மக்களை ஒன்றுசேர்த்து ஒருகுடையின் கீழ் கொண்டுவந்த பெருமை கழகத்திற்கே உண்டு. இடர்கள் எதுவரினும் கழகத்தினை பாதுகாத்து வளர்த்தெடுப்பதிலும் அதன் செயற்பாடுகளிலும் இணைந்துபயணிக்கும் வாய்ப்பானது எனக்கும் கிடைத்தமையினை நான் இன்றும் பெருமையாக கருதுகின்றேன்.

கழகம் தனது 25 ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாவினைக் கொண்டாட தீர்மானித்தபோது அந்த விழாக்குழுவிற்கு என்னை தலைவராக தெரிவுசெய்தமைக்கு இந்தசந்தர்ப்பத்தில் கழக நிர்வாகக்குழுவிற்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். வெள்ளிவிழாவினை சிறப்பிக்கும்முகமாக "மேகலை 25" என்ற பெயர் தாங்கி வெளிவரும் சிறப்பு மலரானது கழக வளர்ச்சியின் ஓர் ஆவணப்படுத்தலாக, எதிர்கால சந்ததிக்கான வழிகாட்டியாக உங்கள் கைகளில் தவழும் என்பதில் எனக்கு எந்தச்சந்தேகமும் இல்லை. வெள்ளிவிழா சிறப்புமலர் சிறப்புடன் வெளிவர அல்லும்பகலும் உழைத்த மலர்க்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள். உங்களால் அரவணைக்கப்பட்டு வளர்ந்துநிற்கும் கழகத்தின் வெள்ளிவிழா சிறப்புற ஆதரவளித்த, உழைத்த அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியயும் வாழ்த்துக்களையும் தெதிவித்துக்கொள்கிறேன்.

நன்றி

திரு அ சச்சிதானந்தராஜா

## கழக காப்பாளரின் வாழ்த்துச் செய்தி



நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் வெளியிடும் வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். புலம்பெயர் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தொண்டு நிறுவனம் கால்நூற்றாண்டு காலம் தன்னைத் தக்க வைத்துக் கொள்வதென்பது இலகுவான காரியமன்று. 1995 ஆம் ஆண்டு கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இன்றுவரையும் செயலாற்றிய நிர்வாக சபை உறுப்பினர்களினதும், அங்கத்தவர்களினதும், நலன் விரும்பிகளினதும் அர்ப்பணிப்புடன் கூடிய தன்னலமற்ற சேவையும் கடின உழைப்பும் இது சாத்தியப்படுவதற்குக் காரணமாயிற்று. இவர்களுக்கு எனது நன்றியையும் பாராட்டுக்களையும் உரித்தாக்குகின்றேன்.

இளையோர் அமைப்பின் உதயம் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழக வரலாற்றில் ஒரு மைல்கல். அடுத்த தலைமுறையினர் காட்டும் ஆர்வம் வியக்க வைக்கின்றது. இளைய தலைமுறையினரை வாழ்த்தி வரவேற்போம். அவர்களுடன் இணைந்து பயணிப்போம். இந்த அவசர யுகத்தில் புலம்பெயர் நாடுகளில் வாழ்பவர்களுக்கு வாழ்க்கை ஒரு போராட்டமே. பல்வேறு சுமைகளுக்கிடையில் பொது வாழ்வில் ஈடுபட்டு பிறர் நலனுக்காக உழைப்பதென்பது பெரிய சவாலே. இருப்பினும் பலர் தங்கள் சங்கடங்களைப் பொறுத்துக் கொண்டு கழக முன்னேற்றத்துக்காகச் செயல்படுவது பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரிய விடயமாகும்.

வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு வாய்ப்பளித்த நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் பணிகள் சிறக்க நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பிகையின் திருவருள் துணைகொண்டு அவளின் திருப்பாதங்களை வணங்கி அவளருளை வேண்டிப் பிராத்திக்கின்றேன்.

நன்றி

திரு. மு. வே. பூபாலசுந்தரம்.
இளைப்பாறிய ஆசிரியர்






## கழக காப்பாளரின் வாழ்த்துச் செய்தி



நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் முன் சிரம் தாழ்த்தி இந்த வாழ்த்துரையை உங்கள் முன் வைக்கிறேன்.

1995ம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்து ஆரம்பித்த கழகம், ஆரம்பத்தில் தொட்டிலில் ஒரு குழந்தை வளர்வதைப் போன்று நயினை அபிமானிகள் அரவணைப்பில் வளர்ந்து பின்பு நடக்கத் தொடங்குவது போன்று 1998ல் பதிவு செய்யப்பட்ட தொன்று நிறுவனமாக (Charity Organisation) கால் பதித்து இன்று 25ம் வயதை எட்டி ஒரு முழுமையான அறிவாற்றல் மிக்க இளைஞன்-யுவதி போல் எங்கள் முன் காட்சி அளித்துக் கொண்டு பிரமாதமாக நிற்பதை நினைக்கும் போது எமது மனம் அளவற்ற பெருமை அடைகிறது.

கழகம் ஆரம்பித்த நாள் முதல் பொதுசன தொடர்பாளராக, தலைவராக, செயலாளராக அடியேன் பங்கேற்றமை இன்று என் கண்முன் நிற்கின்றது. எமது கழகம் தொடர்ந்தும் பணியாற்றித் தனது 50ஆவது விழாவையும் மிகச் சிறப்போடு கொண்டாடும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

மேலும், 25 வருடங்கள் நயினை மக்களோடும், அவர்களது கணவன்மார்-துணைவியரோடும் (நயினை சாராதவர்களாக இருந்தும்) மற்றும் அபிமானிகள், நிறுவனங்கள் ஏனைய நல்மனம் படைத்தவர்களின் அனுசரணையோடு கட்டி எழுப்பப் பட்ட இக்கழக வளர்ச்சிக்கு தொடர்ந்தும் தூண்களாக இருந்து தமது நல்லாசிகளையும், அனுசரணைகளையும் வழங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

இக்கழகம் தொடர்ந்து பல ஆண்டு செயற்பட்டு ஒரு பாரிய நிறுவனமாக வளர்ந்து எமது கலை, பண்பாடு, கலாசாரம் என்பவற்றை பறைசாற்ற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

நன்றி
திரு. தி. சந்திரபாலன்
Bsc(Eng) HDNS.Chartered Engineer



## கழக காப்பாளரின் வாழ்த்துச் செய்தி



தமிழ் மக்கள் இன்று உலகளாவிய ரீதியில் பரந்து வாழ்கின்றனர். எம் மக்களின் கலை, கலாசாரத்தினை முன்கொண்டு செல்வதில் கழகங்கள் முக்கிய இடம் பெறுகின்றன என்பதில் சந்தேகமில்லை. எமது கழகம் இலை மறை காயாக இருக்கும் எத்தனையோ கலைஞர்களை ஊக்குவித்து, வெளிநாட்டு கலாசாரத்திற்கு மத்தியில் எமது கலை கலாசாரம் எந்த வகையிலும் பின் தங்கியது இல்லை என்பதை நிரூபித்து வருவதன் மூலம் பலரின் வாழ்த்துக்களைப் பெற்று வருகின்றது. 1995ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வெள்ளி விழாக்காணும் எமது கழகத்தின் பயணத்தில் நானும் ஒருவனாக இருப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கழகம் கடந்த காலங்களில் பல செயல் திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்தி உள்ளமையை இம் மலரின் மூலமாக அனைவரும் அறிந்து கொள்ளலாம். இக் கழக விதையை ஊன்றியவர்களுக்கும் இதுவரை பேணி வளர்த்தவர்களுக்கும் இனி மேலும் பேணி வளர்க்கப் போகின்றவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். எமது கழகமானது கலை, கலாசாரம் என்று நின்று விடாமல் விளையாட்டுத் துறையையும் ஊக்குவித்து, இளைஞர்கள் அமைப்பு ஒன்றையும் உருவாக்கி எமது அடுத்த சந்ததியினரையும் உள்வாங்கிப் பயணிக்க தொடங்கி உள்ளமையையிட்டு மிக்க மகிழ்ச்சி.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு.
திரு. அ. பஞ்சானந்தராஜா.
பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே.

## கழக கணக்காய்வாளரின் வாழ்த்துச் செய்தி



நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் இவ் வருடம் தனது 25வது ஆண்டு விழாவை நடாத்துவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். அலைகடல் தாண்டி வாருங்கள். நயினையின் புகழைப் பாடுங்கள் என்ற குறிக்கோளைக் கொண்டு அங்கத்தவர்களினது விடாமுயற்சி மற்றும் தன்னம்பிக்கையால் கழகம் 25வது ஆண்டைத் தாண்டி லண்டன் மாநகரத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றது. நானும் அதில் ஒரு துளியாக இருப்பதையிட்டு பெருமை அடைகிறேன்.

கழகம் கல்வி, கலாசார, விளையாட்டுப் போட்டி, ஒன்று கூடல் அதையும் தாண்டி மரம் நடுதல் போன்ற நிகழ்வுகளை தங்களால் இயன்ற அளவு நயினை உறவுகளுக்குச் செய்து வருகின்றனர். சிறுதுளி பெரு வெள்ளம் என்பதற்கு அமைய உங்களால் இயன்ற உதவிகளைச் செய்து கழகம் இன்னும் பல நூற்றாண்டுகளைத் தாண்டி வளர ஊக்கமும், ஒத்துழைப்பும் கொடுப்பீர்கள் என வாழ்த்துகிறேன்.

கழக உறுப்பினர்கள் தங்கள் மகத்தான நேரத்தை ஒதுக்கி அல்லும் பகலும் கழக வளர்ச்சிக்காக உழைக்கின்றனர். இது இலகுவான காரியம் அல்ல. வாழ்க உங்கள் தொண்டு என வாழ்த்துகிறேன். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" நாம் சில சாதனைகளைப் படைக்க விரும்பினால் சில சமயம் சில வேதனைகளைத் தாங்கவும் தயாராக வேண்டும். அப்போது தான் வெற்றி நிச்சயம்.

வாழ்க நயினை மக்கள் என வாழ்த்துகின்றேன்.

நன்றி
திரு. தி. குகதாசன் FCMA. FCA.





## கழக உறுப்பினர்கள் சார்பாக வாழ்த்துச் செய்தி.



நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் 1995ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் உறுப்பினராக இணைந்தவுடன் பல தடவைகள் நிர்வாக சபை உறுப்பினராக பணியாற்றியுள்ளேன். இக்கழகம் ஒரு குழந்தை போல் உருவாகி தவழ்ந்து, வீழ்ந்து, எழுந்து நடந்து இன்று ஒரு இளம் பெண் போல் வளர்ந்து 25வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது. இந்தத் தருணத்தில் கழக உறுப்பினர்கள் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் சார்பில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இக் கழகமானது நயினாதீவிலும், இலங்கையின் ஏனைய பாகங்களில் இருக்கும் தமிழ் மக்களுக்கும் மென் மேலும் சிறப்பான சேவைகளை வழங்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி

திரு குணரெத்தினம் முரளீதரன்.
நிர்வாகசபை, ஆயுட்கால உறுப்பினர்.

## நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் – நயினாதீவு

## Nainai Manimekalai Welfare Association – Nainativu

**Reg No: J/V/VOP/2017/05**

### வாழ்த்துச் செய்தி



பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே.

உலகெங்கும் பரந்து வாழும் எம்மவர்கள் அவர் எங்கிருந்த போதிலும் பிறந்த மண்ணை மறக்காத நினைவுடையவர்கள். அவ்வகையில் லண்டன் மாநகரில் நம் மண்ணின் மகத்துவத்தினைக் காக்கும் வண்ணம் அயராது உழைத்து வரும் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் சிறப்புடனும் வளத்துடனும் மென்மேலும் வளர்ந்து சேவையாற்ற வேண்டும் என வாழ்த்துவதுடன் அயராது உழைக்கும் நிர்வாகத்தினருக்கு நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. பொ. அன்பரசன்.
தலைவர்.
நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம்.
நயினாதீவு. 02.

## நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் – நயினாதீவு

## Nainai Manimekalai Welfare Association – Nainativu

**Reg No: J/V/VOP/2017/05**



### வாழ்த்துச் செய்தி

நயினைத்தாயின் மடியில் தவழ்ந்து இன்னோரன்ன காரணங்களால் புலம்பெயர்ந்த எம் உறவுகள் தமது பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் தாம் பிறந்து வளர்ந்த மண்ணையும் மக்களையும் மறவாது அவர்களின் தேவை அறிந்து ஆற்றிவரும் உதவிகளுக்கு நாம் நன்றிபாராட்டாமல் இருக்க முடியாது.

அந்தவகையில் பிரித்தானியாவில் ஒன்றுசேர்ந்த எம் உறவுகள் தாய் மண்ணில் வதியும் உறவுகளின் தேவைகளை இனம்கண்டு உதவிட 25 ஆண்டுகளுக்கு முன்னர் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் ஓர் அமைப்பினை ஆரம்பித்தனர். கட்டுக்கோப்புடன் செயற்படத்தொடங்கிய இந்த அமைப்பினூடாக பிரித்தானியா வாழ் எம் உறவுகள் நயினை வாழ் மக்களுக்கு கல்வி, சுகாதாரம், சூழல் பாதுகாப்பு மற்றும் இடர்கால உதவிகள் என்று தேவையறிந்து உதவி வருகின்றனர்.

"அன்ன சத்திரம் ஆயிரம் கட்டல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்".

என்ற மகாகவி பாரதியாரின் வாக்கினை சிரமேல்கொண்டு நயினை மண்ணில் கல்விகற்கும் மாணவர்களின் கல்வியறிவினை வளம்படுத்த பல இலட்சம் ரூபாய்களை முதலிட்டு கல்விக்கூடம் ஒன்றினை நிறுவி அதனை நிருவகிக்க கிளை அமைப்பொன்றினை உருவாக்கி மாணவர்களுக்கு இலவச மேலதிக கல்வியினை வழங்கி வருவதுடன் புலமைபரீட்ச்சையில் சித்தியடையும் மாணவர்களின் கல்வி திறன்களை ஊக்குவிக்க கொடுப்பனவுகளையும் மேற்கொண்டுவருகின்றனர்.

இதனைவிட மண்ணின் இயற்கை வளத்தினை பாதுகாக்க மரநடுகை திட்டத்தினை முன்னெடுத்ததுடன் ஊரின் சுகாதார வசதியினை மேம்படுத்த வைத்தியசாலை நிர்மாணம் மற்றும் புனரமைப்பிற்கும் உதவிவருகின்றனர். அத்துடன் வெள்ள அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்டோருக்கு நிதிஉதவி வழங்கிவைத்ததுடன் COVID -19 நோய்த்தொற்று பரவல் காலத்தில் தமது இடர் நிலைமையினையும் பொருட்படுத்தாது எமது மக்களுக்கு தேவையான அத்தியாவசிய உலர் உணவுகளை ஏனைய புலம்பெயர் அமைப்புக்களுடன் இணைந்து வழங்கி மக்களின் மனதில் நீங்காத இடத்தினை பிடித்துள்ளார்கள்.

இவ்வாறு மக்கள் சேவையே மகேசன் சேவை என்று கடந்த 25 வருடங்கள் பணியாற்றி இன்று வெள்ளிவிழாக் கொண்டாடும் பிரித்தானிய நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து பயணிக்க எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தினை தந்த தாய்க்கழகத்தினருக்கு இந்த சந்தர்ப்பத்தில் நன்றிபாராட்டி வெள்ளிவிழா நிகழ்வுகள் அனைத்தும் சிறப்புடன் இடம்பெறவும் கழகம் மென்மேலும் சிறப்புற்று சேவையாற்றவும் மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு** பரராஜசிங்கம் சசிதரன்
செயலாளர்
மணிமேகலை முன்னேற்றக் கழகம் - நயினாதீவு -2





# நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் – நயினாதீவு

## Nainai Manimekalai Welfare Association – Nainativu

**Reg No: J/V/VOP/2017/05**



### செயல் வீரர்களுக்கு சொந்த ஊரில் நின்று ஒரு வாழ்த்தொலி.

அருளோசை கேட்கும் ஆன்மீகத் தலங்களோடு அழகாக அமைந்திருக்கும் எமது தீவின் உறவுகள் உலகின் எட்டுத் திசைகளிலும் பரந்து வாழ்கின்றார்கள். அவர்கள் எங்கிருந்தாலும் ஆன்மாவின் துடிப்பின் ஆழத்தில் என்றும் இருப்பது எம் ஊர் பற்றிய நினைவுகளே. எமது ஊரின் நினைவுகளில் இருந்து மீள முடியாத உறவுகள் தினமும் ஊரையும் உறவுகளையும் நேசித்து இங்குள்ள ஒவ்வொரு துறையையும் வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்காற்றுகின்றார்கள். அந்த வகையில் இருபத்தைந்து ஆண்டுகளாக எமது மண்ணுக்குச் சேவை செய்யும் நயினை மைந்தர்களின் அமைப்பே பிரித்தானியா நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம். கல்வி, கலை, கலாச்சாரம், வீதிகள், குளங்கள், வைத்தியத்துறை, விளையாட்டுத்துறை என சகல துறைகளிலும் இவர்கள் தங்களது கரங்களை உயர்த்தி உதவியிருக்கின்றார்கள்.

தூரநோக்குச் சிந்தனையோடு, துல்லியமான திட்டமிடலோடு அனுபவம் மிக்க பெரியவர்களின் ஆலோசனையோடு துடிப்புள்ள இளைஞர்கள் இணைந்து நின்று பல்வேறு சேவைகளை எமது ஊருக்கு அப்பாலும் செய்துவரும் இந்த மணிமேகலை முன்னேற்றக் கழகத்தினர் தங்களது வெள்ளி விழாவைக் கொண்டாடும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களை, அவர்கள் சேவைகளைப் பாராட்டி வாழ்த்துவதோடு, நானும் அவர்களுடைய அமைப்பின் ஊரின் ஒரு பிரதிநிதியாக இருந்து சிறு சேவை செய்ய வாய்ப்புக்கள் தந்தமைக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றிகளையும் கூறிக்கொண்டு, அனைவருக்கும் நயினை நாகபூஷணி அம்பாளின் அருளாசி என்றென்றும் கிடைக்க வேண்டும் எனப் பிராத்தித்து விடை பெறுகின்றேன்.

திருமதி கேசவராணி தியாகேசன்.
பொருளாளர்
நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம்.
நயினாதீவு. 02.





### வாழ்த்துச் செய்தி

**மணிபல்லவத்தின் மணிமேகலையே**
**உன்புகழ் என்றும் நிலைக்கட்டும்**

இந்துமா ஆழியின் எழில் முத்தாகத் திகழ்வது ஈழமணித் திருநாடு. இதன் வடபால் யாழ் பாடிப் பரிசுபெற்ற நன் நகராம் யாழ்ப்பாணம். யாழ். குடாநாட்டில் சப்த தீவுகளின் நடுநாயகமாக விளங்குவதுமணிபல்லவம் எனும் நயினாதீவு. சின்னஞ்சிறிய தீவானாலும் பென்னம் பெரிய புகழுடன் இன்றும் விளங்குவது அலைகடலோரத்தில் அன்னை நாகபூ'ணியின் அருளாட்சி.

பண்டு தொட்டு இன்று வரை கல்வி வளம் குறையாத தெய்வீகத் திருநகர். இன்றைய இளைஞர் நாளை நாட்டின் தலைவர்கள் சுவாமி விவேகானந்தர் ' அருள் வாக்கு. அவரின் வாக்கிற்கமைய எமது கிராம மண்ணில் கலை பயின்று படித்த இளைஞர் குழாம் திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற வாக்கிற்கமைய சொந்த மண்ணை விட்டுப் பறந்தனர் மேற்கத்தைய நாடு. தம் உடலுலைப்பால் தாமும் உயர்ந்து தம் நாட்டையும், தம் நாட்டின் கல்வித் தரத்தையும் மேலும் உயர்த்தத் திட்டம் தீட்டினர். நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் கல்விக்கூடத்தினை 2006ம் ஆண்டில் ஆரம்பித்தனர்.

முதன் முதலாக நெறிப்படுத்தி நின்றவர் நயினை மண் ஈன்றெடுத்த தவப்புதல்வன் ந. செல்வநாயகம். அன்று அவரின் உள்ளத்தெழுந்த கல்விக் கழகம் இன்று பல பேர் கொண்ட ஒரு தலை சிறந்த அமைப்பாகச் செயற்பட்டு வருகின்றது. கல்வியெனும் பயிரின் கலங்கரை விளக்காக நயினை மண்ணில் மூன்று பாட-சாலைகளுடன் நான்காவது பாடசாலையாக மணிபல்லவ முன்னேற்றக் கழகம் செயற்பட்டு வருகின்றது. தகுதிகாண் ஆசிரியர்களால் தரம் 1-11 வரை சிறந்த முறையில் கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது. இங்கு பயின்ற மாணவர்கள் பல்கலைக் கழகம் மட்டுமல்ல இலங்கை நிர்வாக சேவை மட்டம் வரை சென்றுள்ளனர். இத்தகைய ஒரு கல்விச் சமூகத்தை உருவாக்கிய பெருமை யாரைச் சாரும்? பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே' என்ற உண்மை உணர்ந்த இளைஞர் வட்டத்தையே சாரும்.

"அன்னையாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்ற புரட்சிக் கவிஞன் வாக்கினை உணர்ச்சி பூர்வமாக நிலைநாட்டி நிற்கின்றனர். எம் மணிபல்லவ முன்னேற்றக் கத்தின் நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை கொண்ட இவர்கள் "அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும் உள்அழிக்க லாகா அரண்" என்பதனை மனதில் உறுதியாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். மாணவர்களுக்கு இலவசக் கல்வி, ஆசிரியர் வேதனம் போன்றவை நியாயமாக வழங்கப்பட்டு வருகின்றது. மாணவர்களுக்கு பயிற்சிக் கொப்பிகள், எழுது கருவிகள் யாவும் மேற்படி கழகத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது.

நாட்டு இளைஞர் கல்வியை மட்டும் நேசிக்க வில்லை. சமூகத் தொண்டுகள் பலவும் ஆற்றி வருகின்றனர். இடருற்ற சமூகத்தை அணுகி ஆராய்ந்து வேண்டும் உதவிகள் இயற்றி வருகின்றனர். மேற்படி கழகத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களையும் பாராட்டிக் கௌரவித்தனர். "உள்ளத்தில் உண்மையொளி உண்டாகில் வாக்கினில் ஒளி உண்டாகும்" என்பதற்கமைய மணிமே-கலை முன்னேற்றக் கழகம் செய்து வரும் கல்விப்பணியாம் கடவுட் பணி மென்மேலும் சிறந்து, "கலையாத கல்வி, குறையாத வயது, கபடு வாராத நட்பு" பெற்று ஈழ மணித்திரு நாட்டில் நயினை மண்ணாம் மணிபல்லவத்தில் மணிமேகலையே உன் புகழ் என்றும் நிலைத்து ஐம்பெரும் காப்பியத்தில் ஒன்றாம் மணிமேகலையாய் என்றும் நிலைத்திருக்க அன்னையவள் நாகபூ'ணி அருளாட்சி நல்கட்டும்.

தெளிந்த நல்லறிவு, தூய சிந்தனை, விடா முயற்சியே வெற்றியின் திறவுகோல்.

செல்வி மு.இ.ஜெயலெட்சுமி
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர், நயினாதீவு



## வாழ்த்துச் செய்தி

**நயினை மண்ணுக்கோர் வரப்பிரசாதம்.**

சப்த தீவுகளில் சகல வளங்களும், மங்காத புகழும் சரித்திர வரலாறுடன் மிளிறும் நயினையின் பதியில் அமைந்து, மக்களின் சேவை நிலையமாக பணியாற்றிக் கொண்டிருக்கும் லண்டன் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் தனது இருபத்தைந்தாவது அகவையில் பிரவேசித்து வெள்ளிவிழாக் கொண்டாடுவதை அகமகிழ்ந்து வாழ்த்துபவர்களுள் யானும் ஒருவனாகின்றேன்.

வையத்துள் வாழ்வாங்கு வாழப்பிறந்த மக்கள் மனிதத்துடன் மண்ணில் மக்களாக வாழ வழி காட்டுவன, வாழ்வுக்கு உறுதுணையாக விளங்குவன இவ்வாறான மன்றங்களே. இவ்வகையில் கிராம மக்களுக்கு சேவையாற்றுவதே மகேசன் சேவையென எண்ணித் தனது சேவையின் உச்ச பயனை நேரடியாக மக்களுக்கு அள்ளி வழங்கும் கொடையாளர்களாக வலம் வந்து பல பணிகளை இம்மியும் பிசகாமல் தளர்வடையாது தொடர்ந்து ஆற்றிவரும் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் பணியை யாரும் போற்றாமல், பாராட்டாமல் இருக்கவே முடியாது.

தமக்கென பொருத்தமான நிலத்தை வாங்கி அதனுள் வசதியான பெரும் கட்டிடத்தை அமைத்து, நிர்வாகக் கூட்டமைப்பை ஏற்படுத்தி நயினை வாழ் மக்களின் கல்வி-கலை-கலாச்சார விழுமியங்களை வளர்த்து வருவதோடு நில்லாது எல்லோரும் சிறந்த கல்வியாளராகத் திகழ வேண்டுமென்பதற்காக பிள்ளைகளுக்கு இலவசமாகக் கல்வியைக் கற்பித்து வரும் சிறப்பு மிக்க சேவை மகத்தானது. இம்மன்றின் தன்னலமற்ற சேவை என்றும் மக்களுக்காகப் பல்கிப் பெருக எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்மன் அருளைப் பிராத்திக்கின்றேன்.

கோவில் போன்றதே இம்மன்றுகளும். கோவில்களில் மக்கள் இறைவனிடம் தம் தேவைகளைக் கேட்டு மனத் திருப்தியடைகின்றனர். அலுவலகங்களில் அதிகாரிகளிடமும், அலுவலர்கிடமும் தேவையானவற்றைக் கேட்கின்றார்கள். எம் தேவைகள் எவையென தாமாகவே அறிந்து உதவிக் கரம் நீட்டும் கழகங்களில் முதன்மையான முத்தாக விளங்கும் இம்மன்றின் சேவை தீவகமெங்கும் செறிந்து திகழட்டும்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"

என்ற பாரதியின் வாக்குக்கிணங்க தாயகத்தின் பல்வேறு சமய-சமூக-கல்வித் தொண்டுகள் புரிவதோடு, இளம் சமுதாயத்தின் ஒழுக்கக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஒழுக்க-பண்புமிக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்பலில் கூடிய கவனமெடுத்துச் செயற்படுவது இக்காலத்தின் தேவையாகும்.

இலண்டன் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தினரை மீண்டும், மீண்டும் நெஞ்சார வாழ்த்தி, பல வழிகளிலும் உதவிக் கொண்டிருக்கும் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் நன்றிகள் கூறித் தொடர்ந்து வாழ்வில் உயர்ந்து இறைசீர் வேண்டி வாழ்த்துகின்றேன். வாழ்க மன்றம்.

திரு ஐ திருவாசகநாதர்.
சிரேஷ்ட ஆசிரியர்.
நயினாதீவு 7





பிரதேச செயலகம், தீவகம் தெற்கு – வேலணை
ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය දිවයින දකුණ, වේලනෙයි
Divisional Secretariat - Islands South, Velanai

எனது இல / මගේ අංකය / My No: VE/DS/Me
உமது இல / ඔබේ අංකය / Your No:
திகதி / දිනය / Date: 18.06.2022

## வாழ்த்துச் செய்தி

யாழ் மாவட்டத்திலுள்ள சப்த தீவுகளின் நடுநாயகமாகவும் நாற்பக்கமும் அழகிய கடலாலும் சூழப்பட்ட தீவு நயினாதீவு ஆகும். இத்தீவு மணிபல்லவம், நாகதீபம், மணித்தீவு, பிராமணத்தீவு எனப்பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு விளங்குகின்ற இத்தீவு மணிமேகலை என்ற காப்பியத்துடன் தொடர்புடையது குறிப்பிடத்தக்கது. இக்காப்பியத்துடன் தொடர்புடைய பெயரினைக் கொண்ட **"நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம்"** 1995ம் ஆண்டு பிரித்தானிய வாழ் நயினை மக்களினால் உருவாக்கப்பட்டு நயினை வாழ் மக்களுக்கு மட்டுமன்றி இன்னலுறுகின்ற வன்னி, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களில் வாழுகின்ற மக்களுக்கும் யுத்தத்தினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நிதிப் பங்களிப்பு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இதுமட்டுமன்றி நயினைவாழ் மக்களுக்கு வீதிப்புனரமைப்பு, வைத்தியசாலைப் புனரமைப்பு, பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாடு. பகுதி நேர வகுப்புக்கள், பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான ஊக்குவிப்புத்தொகை வழங்குதல், மற்றும் கோவிட் காலப்பகுதியில் உலர் உணவு வழங்கல் போன்ற உதவிகளையும் வன்னியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட விழிப்புலன் இழந்தவர்களுக்கு ஆபுத்திரன் பண்ணை அமைத்துக் கொடுத்து எம் மக்களின் வறுமையைப் போக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பணியாற்றிவருகின்றமை கண்கூடு. இத்தோடு நின்றுவிடாது புலம்பெயர் தேசத்திலுள்ள நயினை வாழ் மக்களை ஒன்றினைத்து பல்வேறு நிகழ்ச்சிகளையும் நடாத்தி நயினை மக்களின் தொடர்புகளை மென்மேலும் வளர்த்து வருகின்றது.

இவ் அரும் பணியை 27 வருடங்களிற்கு மேலாக மேற்கொண்டு வரும் **"நயினை மணிமேகலை முன்னேற்றக் கழக"** உறுப்பினர்களை இப்பிரதேச செயலாளர் என்ற வகையில் நன்றியுடன் பாராட்டுவதில் பேருவகை கொள்கின்றேன்.

அள்ள அள்ளக் குறையாத அட்டசயபாத்திரம் போல "நயினை மணிமேகலை முன்னேற்றக்கழக சேவையும் தொடர வேண்டும்" என எல்லாம் வல்ல இறைவனை வேண்டிநிற்கின்றேன்.

"இரு கை கூப்பி கடவுளை வணங்குவதை விட
ஒரு கை நீட்டி உதவி செய்
இரு கை உனை வணங்கும் கடவுளாக"

திரு.க.சிவகரன்
பிரதேச செயலாளர்,
தீவகம் தெற்கு (வேலணை)

பொது / පොදු / General – 0212211586
பிரதேச செயலாளர் / ප්‍රාදේශීය ලේකම් / Divisional Secretary – 0212211560
தொலைநகல் / ෆැක්ස් / Fax – 0212229974
மின் அஞ்சல் / විද්‍යුත් තැපැල් / E-Mail – info@islandsouth.ds.gov.lk



வேலணைபிரதேச சபை.
වේලනයි ප්‍රාදේශීයසභාව
VELANAI PRADESHIYA SABHA.
வங்களாவடி,வேலணை, யாழ்ப்பாணம்
වංගලාවඩි,වේලනයි, යාපනය.
Vangalavady, Velanai, Jaffna.

எமது இல / මගේ:
உமது இல / ඔබේ අංකය / Your No:
திகதி / දිනය / Date: 05.03.2020

நயினையின் நாயகியாம் நாகபூசணித்தாயின் திருவடி தொழுது நலிந்தோரை நாடித் தேடி நலன் புரியும் மணிமேகலை முன்னேற்றக்கழகத்தின் வெள்ளி விழா மலர்தனிலே வாழ்த்தும் பொற் பாக்கியம் கிடைத்ததில் மகிழ்ச்சி.
அமுதசுரபியாம் நயினையில் தான் பிறந்த மணிமேகலை முன்னேற்றக்கழகம் தான் பிறந்த ஊருக்கும் பார் நிறைந்த தமிழுக்கும் ஆற்றும் பணியது எழுத்தறிவித்தலும் நிழல் தரு கா வமைத்தலும் இன்ன பிறவும் என எண்ணிலடங்காதவை.
'ஒருமைக்கண் தான்பெற்ற கல்வி ஒருவர்க்கு எழுமையும் ஏமாப்புடைத்து' என்னும் வையக்கவி வைத்த வாய்மொழிக்கமைய இப்பிறவியில் எவனொருவன் கசடு அறக் கற்கின்றானோ அந்தக் கல்வி இப்பிறப்பில் மட்டுமல்லாமல் எழுபிறப்பும் பயன் கொடுக்கும் என்பதறிந்து நயினை வாழ் மழலைகள் நல்லுள்ளத்தில் கல்வியெனும் வேட்கையை விதைத்து நல்லொழுக்கமென்னும் நீர்பாச்சி நல்வினையாற்றும் நயமான சேவை கொண்ட மணிமேகலையே நின்பணி நீண்டு சிறக்கவும் எம்மினக்கொழுந்துகள் விருட்சமாய் வியாபிக்கவும் எனதருமை வாழ்த்துக்கள்!
'வெட்டப் பட்ட மரங்கள் பட்டுப் போகும் முன்னே நட்டு வைப்போம் முன்னே புதிதாக ஒன்றை' என்னும் கைக்கூவின் கருத்துதொத்த சிந்தனையில் நயினையினை எழில் கொழிக்கும் நறும் சோலைகளாக்க முனைந்திடும் பார் விழித்திடும் மங்கையின் பேர் கொண்ட கழகமே! 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்' என்ற பொய்யா மொழிக்கமைய உன்னிடமே இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றே யான் கருதுகின்றேன். அதுவே நயினை வாழ் மக்களின் எண்ணமும் என்பதனை நீயறிக. முன்னகர்க!

தாய் வயிற்றில் பிறப்பதெல்லாம் பிறப்பல்ல
வையத்தில் வாழ்வதெல்லாம் வாழ்வல்ல
வாய்ப்பற்ற தளிர்களுக்கு எழுத்தறிவித்தலும்
தாய் மொழியின் தாய் மண்ணின்
வனப்பை பேணலும் பெருக்குதலும்
உற்ற வாய்ப்பெனப் பெற்ற
உன் பிறப்பும் உன் வாழ்வுமே
உண்மையானது.

நன்றி
இப்படிக்கு
நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி
கௌரவ தவிசாளர்
வேலணை பிரதேசசபை

தவிசாளர் / සභාපති – 021 221 1505
அலுவலகம் / කාර්යාලය – 021 221 1506





உ
சிவமயம்

# ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

## SRI NAGAPOOSHANI AMMAN KOVIL - NAINATIVU

பதிவு இல / Regd.No } HA/5/JA/567

தொலைபேசி / Telephone } யாழ்ப்பாணம் / Jaffna } 021 321 3024, 021 320 7785, 021 321 3025

நயினாதீவு
Nainativu.
Sri Lanka.

..../....../202.....

### வாழ்த்துச் செய்தி

பிரித்தானிய நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் தனது 25 வருட பூர்த்தியினைக் கொண்டாடுவது பெருமகிழ்ச்சி தருகின்றது. பிரித்தானியாவில் வாழும் எம்மவர்களது நலன்களையும், நயினைவாழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும் கவனத்திற் கொண்டு பணிகள் பல இக் கழகத்தினால் முன்னெடுக்கப்பெற்று வருகின்றமை மனதிற்கு மகிழ்வைக் கொடுக்கின்றது.

உயிரினங்கள் தனித்து வாழமுடியாது கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து வாழ்வதன் மூலம் தமது தனிமையை, வெறுமையை மறந்து ஒருவர்க்கொருவர் புரிந்துணர்வுடன் வாழவே மனிதன் வரலாற்றுரீதியாகப் பழக்கிக் கொண்டான். இதன்மூலம் தமது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குழுக்கள் மூலம் தீர்க்கப்பட ஏதுவாகின்றது இது பரந்து வளர்ந்து பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் வழியேற்படுகின்றது. அந்த வகையில் நயினாதீவிலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் ஒன்றிணைந்து தாம் வாழும் நாடுகளிலிருந்துகொண்டு தாம் பிறந்தமண்ணையும் திரும்பிப் பார்ப்பது சிறப்புக்குரியதாகும்.

கல்வி, மருத்துவம், இயற்கை அழிவு ஏற்படும் போதெல்லாம் முன்வந்து உதவும் அமைப்பாக யான் மணிமேகலை முன்னேற்றக் கழகத்தைப் பார்க்கின்றேன். எனினும் இன்றைய உடனடித் தேவையாக விடுப்பது சுற்றுச்சூழல் பராமரிப்பு, மது, பசுவதை ஒழிப்பு, கடல் அரிப்பதை தடுத்தல் என்பன மிக்க சவாலான உடனடிப் பணிகளாகத் தெரிகின்றது. காடழித்து பயிர் செய்த நிலங்கள் இன்று பயிரழித்துக் காடாக்கப்பட்டுள்ளன. முட்புதர்கள் மண்டி கிராமம் விஷ ஜந்துக்களின் வதிவிடமாகவும் சமூக விரோதநடவடிக்கைகளுக்கு உதவும் இடமாகவும் மாறியுள்ளமை கவலைக்குரியதாகும். இவற்றைக் கட்டுப்படுத்துவதில் புலம் பெயர்ந்து வாழ்கின்ற நம் மக்களின் பங்களிப்பு பெரும் பொறுப்பாக யான் கருதுகின்றேன்.

பிரித்தானிய நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் 25 வருடகாலப்பணிகளை மனமாரப் பாராட்டுவதுடன் இவர்களது பணி மேலும் மேலும் சிறக்க அம்பிகையின் அருள் வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

அன்பான
ப. க. பரமலிங்கம்
தலைவர்
அறங்காவலர் சபை




# David Benson Solicitors Ltd

28 Merton High Street, London
SW19 1DN

## Legal Practice Areas:

• Immigration • Civil Litigation • Criminal Law
• Employment Law • Family Law
• Housing & Debt and Property Law



Legal Aid Available
(Subject to Assesment)

உங்கள் சட்டத்தேவைகளுக்கான சரியான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்

Tel: **020 8540 8888** | Fax: **08701208384**
Email: **info@davidbensonsolicitors.co.uk**
**www.davidbensonsolicitors.co.uk**

Immigration & Asylum
Conveyancing Quality

Authorised and Regulated by
the Solicitors Regulation Authority

ESTD } 1960 Regd No } S236

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

வரையறுக்கப்பட்டது

"AMIRTHASURABHI MANDAPAM"
NAINATIVU - 2, SRI LANKA
Telephone 021 3213575

"அமுதசுரபி மண்டபம்"

"අමුදසුරබි"
නාගදීප-2, ශ්‍රී ලංකා
දු.ක : 021 3213575

නාගදීප ශ්‍රී නාගපූෂනි අමුදසුරබි අන්නදාන සභයි (සි/ස)
NAINATIVU SRI NAGAPOOSHANI AMIRTHASURABHI ANNADHANA SOCIETY LTD

02/06/2022

அம்பிகை தினம் தினம் அருளமுதை வாரி வழங்கும் நயினையம்பதிக்கு மணிபல்லவம் என்றொரு பெயரும் தொன்றுதொட்டு இன்று வரை வழங்கப்படுகின்றது. காப்பிய நாயகியான மணிமேகலை மணிமேகலாத் தெய்வத்தால் கொண்டுவரப்பட்டு இத்தீவில் விடப்பட்டதாக மணிமேகலை என்ற தமிழ் காப்பியம் செப்புகின்றது.

இத்தீவில் பிறந்தவர்கள் பெரும்பேறு பெற்றவர்கள். இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைச் சேர்ந்தவர்கள் இம் மண்ணைத் தரிசிக்க தினம் தினம் வருகை தருகின்றார்கள்.

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்தனவே என்ற கூற்றுக்கிசைந்து இப்பேருலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் இம் மண்ணின் மைந்தர்கள் தம் மண்ணையும் மக்களையும் நேசிக்கும் சமகால மன்னர்களாக விளங்குகின்றார்கள். கிராமத்தின் கல்விவளர்ச்சியிலும் சுகாதாரம் மற்றும் பொதுப்பணிகளிலும் தம்மை தன்னார்வத்துடன் ஈடுபடுத்தி உதவிக்கரம் நீட்டி இம்மண்ணில் வாழும் உறவுகளையும் மக்களையும் மகிழ்விக்கின்றனர்.

இவ்வகையில் பிரித்தானியாவின் லண்டன் மாநகரில் வாழும் நயினை மைந்தர்கள் ஒன்றுகூடித் தாய் மண்ணின் நலன்பேண பிரித்தானியாவில் நிறுவிய அமைப்பே நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் என்ற பெரு விருட்சமாகும். இன்றைக்கு 25 ஆண்டுகளுக்குமுன் முளைத்தெழுந்த வித்து இன்று பெரு விருட்சமாகி பிறந்த மண்ணுக்கும் ஈழத்தாய் நாட்டிற்கும் நிழல் வழங்கிப் பாதுகாத்து இன்று வெள்ளிவிழா காண்பதனையிட்டு மனமகிழ்வெய்துகின்றோம். நாடு சிறக்க நற்பணியாற்றும் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் பணிகள் சிறக்க மண்ணின் மைந்தர் அனைவரும் ஒருகுடையின்கீழ் பயணித்து வெற்றி பெற எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

வணக்கம்

திரு மதியாபரணம் அம்பிகைபாகன்
கௌரவ செயலாளர்.



நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம்
Nainativu Socio - Economic Education & Cultural Development Society
නයිනාතිවු සමාජ ආර්ථික අධ්‍යාපන හා සංස්කෘතික සංවර්ධන සංගමය

## வாழ்த்துப்பா

துணிவான இளைஞர்கூடி தூயநற் பணிகளாற்ற
மணிமேகலை மன்றம் மாநகரில் அமைத்திட்டீர்
அணியாகத் திரண்டெழுந்த ஆர்வமதை போற்றுகிறோம்
பூசணியாளின் துணைகொண்டு பொற்பாதம் தொழுதெழுந்து
மணிபல்லவத்தாய்க்கு மகத்தான சேவை செய்தல்
பணியாக நீர் கொண்டு பல்லாண்டு வாழியவே.

முன்னேற்றம் வேண்டி நற்பணிகள் பல செய்தீர்
என்நோற்றோம் யாமென்று இறுமாந்திருக்காமல்
சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச்
சங்கம் அமைத்திட்டொம்
சுமுக உறவுதனை உம்முடனே கொண்டபோது
சமமாக எம்முடன் கைகோர்த்துப் பணிபுரிந்தீர்
எமதூரின் வளர்ச்சிக்காய் இன்னும் பல பணி செய்வோம்.

ஆண்டு பல சென்றாலும் ஆடாது அசையாது
நீண்டபல பணிசெய்து நேசமுடன் எமையணைத்து
வேண்டுவன பல கொடுத்தெம் வேலையிலும் பங்கெடுத்து
பூண்ட பணிகளைப் பொன்னெழுத்தில் பொறித்திடலாம்.

# நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்

## NAINATIVU CANADIAN DEVELOPMENT SOCIETY

**Ontario non-profit charitable corporation No: 1284680**
**Date of Issue of Letters, Patent: March 1998**
**80 Nashdene Road, C-70, Toronto Ontario. M1V 5E4**

அலைகடல் நடு அமர்ந்து அருளாட்சி புரியும் அன்னை பராசக்தியின் உறைவிடமாம் நயினையம்பதியில் பிறந்து பல்கலைகள் பயின்று இன்று புலம் பெயர்ந்து பல்வேறு மேலைத் தேசங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் எம் உறவுகள் தம் இரு கண்களாம் சைவமும் தமிழும் தளைத்து ஓங்க பல்வேறு கலை கலாச்சார மன்றங்களை நிறுவி, அவற்றின் மூலம் தமது இளைய சந்ததியினருக்கு, எம் செம்மொழியாம் தமிழ் மொழியின் தொன்மையையும் சிறப்பையும் அதன் பால் வளர்ந்து வரும் கலை கலாச்சார விழுமியங்களையும் எடுத்து இயம்பி, பாரதி கண்ட கனவை னனவாக்கி உழைத்து வருவது யாவரும் அறிந்ததே. இந்த வகையில் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகமானது இலண்டன் மாநகரில் கடந்த கால் நூற்றாண்டு காலமாக எம் நயினை உறவுகளின் அயராத பங்களிப்புடனும் ஒத்துழைப்புடனும் செயற்பட்டு வருவது அறிந்து நாம் பேருவகை கொள்கின்றோம். ஒரு புலத்தில் இருந்து கொண்டு தாம் தடம்பதித்த தளத்திற்கும், தம் விடுதலை வேள்விக்காய் உழைத்த களத்திற்கும் தம்மால் இயன்ற பல்வேறு தூர நோக்குடனான செயற்பாட்டுத்திட்டங்களை முன் எடுத்து செயற்பட்டு வருவதோடு மட்டுமல்லாது தம் புலத்தில் வாழும் எம் உறவுகளின் இளம் சந்ததியினரையும் உள்வாங்கி பல்வேறு செயற்திட்டங்கள், கற்கை நெறித்திட்டங்கள், ஊக்குவிப்பு திட்டங்களை மேற்கொண்டு வருவதோடு ஆண்டுதோறும் கலை கலாச்சார விழா, ஒன்றுகூடல் நிகழ்வுகளை நடத்தி வெற்றி வாகையுடன் இன்று இருபத்தைந்தாம் ஆண்டில் தடம் பதித்துள்ளீர்கள். இந்த வெற்றி விழாவில் ஒரு சிறப்பு மலரை நீங்கள் வெளியிடுவதற்கு எடுத்த முடிவை நாம் மனதாரப் பாராட்டுவதோடு அந்த மலரில் புலம் பெயர்ந்து வாழும் சகோதர சங்கமான எமது சங்கத்துக்கும் ஒரு சிறுபதிவை இடுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு எமது மனமார்ந்த நன்றியைக் கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

எமது நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கமானது 1996ம் ஆண்டு கனேடிய சட்டத்திட்டத்துக்கு அமைய ஒரு இலாப நோக்கற்ற தொண்டர் (Charity) ஸ்தாபனமாக நிறுவப்பட்டு இன்று 24ம் ஆண்டில் தடம்பதித்துள்ளது கடந்த 24 ஆண்டுகாலமாக "தீபம்" கலை நிகழ்வை சித்திரை நிலவில் முத்தமிழ் விழாவாக கொண்டாடி வருகின்றோம். புலம்பெயர் தேசங்களில் அதிக எண்ணிக்கையான நயினாதீவு மக்கள் வாழ்கின்ற தேசமாக கனடா முத்திரை பதித்து நிற்கின்றது. இன்று 500க்கும் மேற்பட்ட குடும்ப எண்ணிக்கையானோர் எமது சங்க அங்கத்துவத்தை பெற்றுள்ளார்கள். ஆண்டுதோறும் புதிய உறுப்பினர்களை உள்வாங்கிக் கொண்டிருக்கின்றோம். வெகு விரைவில் 2000 குடும்ப எண்ணிக்கையை சங்க உறுப்பினராக சேர்த்துக் கொள்ளும் இலக்கை நோக்கி செயற்பட்டு கொண்டிருக்கின்றோம். எமது சங்கமானது ஒவ்வொரு ஆண்டும் பொதுக்கூட்டம் நடாத்தி ஆண்டறிக்கை கண்காய்வு அறிக்கை சமர்ப்பித்து அடுத்த ஆண்டிற்கான புதிய நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்யும் வழிமுறையை தவறாது சரியான முறையில் செயற்படுத்தி வருகின்றது. சங்க நிர்வாக உறுப்பினர்களின் தன்னலமற்ற சேவை மனப்பான்மையும், அர்ப்பணிப்பும் தான் எமது சங்கமானது சரியான பாதையில் தடம்பதிப்பதற்கு முக்கிய காரணியாகும்.

எமது சங்கமானது 22ம் ஆண்டில் கால்பதித்தபோது சங்கத்தின் நீண்ட நாள் கனவொன்று கைகூடியது. எமது சங்கத்துக்கு "நிரந்தர கட்டடம்" ஒன்றை வாங்கி அதற்குத் "தீபம் கலைக்கூடம்" என்று பெயரிட்டு அக்கட்டிடத்தில் தற்போது பல கலை கலாச்சார, சமூக பணிகளை செயற்படுத்தி வருகின்றோம் விடுமுறை நிமித்தம் கனடா வரும் எம் உறவுகள் எமது தீபம் கலைக்கூடத்துக்கு வந்து தமது ஆசிகளை தெரிவிக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

மன ஆரோக்கியத்துக்கு எமது கலை நிகழ்வுகள் எவ்வளவு முக்கியமோ அதே போன்று உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியமானது "விளையாட்டு" இதை முன்னிலைப்படுத்தி கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக, "கோடை கால ஒன்று கூடல், விளையாட்டுப்போட்டி" நிகழ்வை ரொரன்ரோவின் இயற்கை வனப்புமிக்க "மோனிங்சைட் பூங்காவில்" வெகு சிறப்பாக நடாத்தி வருகின்றோம். இதில் மறக்கமுடியாத நிகழ்வுகள் "முட்டி அடித்தலும்", "ஊர் கூடிக் கூழ்குடித்தலும்" ஆகும். இளம் சிறார்கள் மிகவும் விறுவிறுப்பாக உற்சாகமாக விளையாடி மகிழ்வதோடு புதிய நண்பர்களை உறவினர்களை அறிந்து கொள்ள நல்ல சந்தர்ப்பத்தை உருவாக்குகின்றது. கொட்டும் பனியும் கொளுத்தும் வெய்யிலும் வாட்டும் கனடா மண்ணில், கோடை இளவேனில் "தீபமும்" இதமான காற்றில் "ஒன்றுகூடல் நிகழ்வும்" ஒரு வரப்பிரசாதம் என்று தான் கூறவேண்டும்.

எமது சங்கமானது தளத்திலும், களத்திலும் பல பணிகளை கடந்த 24 ஆண்டுகாலமாக செயற்படுத்தி வந்துள்ளது. முக்கியமாக வறுமை நிவாரண கொடுப்பனவு, வைத்திய செலவு உதவி கொடுப்பனவு, கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவு, சல்லிவரவை மயான பராமரிப்பு, பாதை புனரமைப்பு, வைத்தியசாலை உபகரண கையளிப்பு, மணிபல்லவ கலாமன்றத்துக்கு அறை மலசல கூடம் அமைத்து கொடுத்தமை போன்ற செயற்பாடுகளை எமது தாய் மண்ணுக்கு செய்து இன்றும் செய்து வருவதோடு. சுனாமி ஏற்பட்டபோதும், இறுதி போர் காலகட்டத்திலும் களத்தில் பல பங்களிப்புகளை வழங்கி எம் தேசத்தின் கண்ணீரைத் துடைத்தோம். கனடா மண்ணில் உயர்தமை தொழில் திறன் பெற்ற எம் மழலைச் செல்வங்களை

ஊக்குவித்து தீபம் நிகழ்வில் "Gold Medal" கொடுத்து கௌரவித்து மகிழ்கின்றோம் வேறு தேசங்களில் இருந்து இங்கு வரும் எம் உறவுகளை தீபம், ஒன்று கூடல் நிகழ்வுகளில் கௌரவ விருந்தினர்களாக அழைத்து விருது வழங்கிக் வௌரவிக்கின்றோம்.



# நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்

## NAINATIVU CANADIAN DEVELOPMENT SOCIETY

**Ontario non-profit charitable corporation No: 1284680**
**Date of Issue of Letters, Patent: March 1998**
**80 Nashdene Road, C-70, Toronto Ontario. M1V 5E4**

எம் தாய் மண்ணின் கல்விமான்கள் சமையத்தலைவர்கள் கனடாவுக்கு வருகை தரும் சமையத்தில் அவர்களுக்கு உரிய கௌரவம் அளித்து கனேடிய சங்கத்தின் சார்பில் "விருது" பொற்கிளி" என்பன வழங்கி கௌரவித்து வருகின்றொம்.

எமது சங்கம் 20ம் ஆண்டில் கால்பதித்த போது, எமது மண்ணைச் சேர்ந்த யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் மா. வேதநாதன் அவர்களை பிரதம விருந்தினராக வரவழைத்து கௌரவித்து அவரது சிறப்புரையைக் கேட்டு மகிழ்ந்தோம்.

இன்றைய காலகட்டத்தில் புலம் பெயர் தேசங்களில் நிறைந்த வேலைச்சுமை, குடும்ப சுமைகளிற்கு மத்தியில் இப்படியான பொது அமைப்புகளை முறையாகச் செயற்படுத்தி வெற்றி காண்பது என்பது இலகுவானதொன்றல்ல. இருந்தபோதிலும் எமது சங்க நிர்வாக உறுப்பினர்கள் 'சங்கம்' என்று வரும்போது ஒருமித்த குரலில் நின்று ஒன்றுபட்டு செயற்பட்டு இடர்கள், சோதனைகளை எல்லாம் வெற்றி கண்டு அடுத்த ஆண்டில் எமது கால் நூற்றாண்டு வெற்றி விழாவுக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்ற உறுதி பூண்டு நிற்கின்றார்கள்.

நயினை மணிமேகலை முன்னேற்ற கழகம் எமக்கு ஒரு வயதுக்கு மூத்த சங்கம், இன்று இருபத்தி ஐந்தாவது ஆண்டில் கால்பதித்து சிறப்பான கலை நிகழ்வை இலண்டன் மாநகரில் அரங்கேற்றி அதில் ஒரு "சிறப்பு மலரை" வெளியிடுவதில் நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம் பேருவகை கொள்கின்றது.

வாழ்க தமிழ்! வளர்க எம் கலைகள்!

நன்றியுடன்
நயினாதீவு கனடியர் அபிவிருத்திச் சங்கம்
தொகுப்பு: முத்தையா ரவீந்திரன் (பத்திராதிபர்)

கோ. சுபாஸ்சந்திரபோஸ் (தலைவர்)

ந. யாகசொரூபன் (செயலாளர்)

ச. உமைமாறன் (பொருளாளர்)

2020-03-12

# “வாழ்வாங்கு வாழ்ந்துய்ய வாழ்த்துவமே!”





ஐக்கியமாய் இங்கிலாந்தில்
அம்பாளின் நயினையுளீர்
ஆர்வமுடன் விழாவெடுத்து
அகமகிழ்ந்து நிற்கின்றீர் !
முக்கியமாய் பத்தாண்டு
முடிந்துள்ள ஆர்வமொடு
முடுக்கிவிட்டுப் பெருவிழாவாய்
முன்னெடுத்தீர் வாழ்த்துகிறேன்.
எக்கணமும் எம்நயினை
ஏற்றத்தை எண்ணிடுவீர் !
எவ்வூரும் எம்மூராய்
எண்ணிநிதம் வாழ்ந்தவர்நாம்.
மக்களெலாம் எம்மவராய்
மனமொன்றி மதித்தவர்நாம்
மற்றவரின் பசிபோக்கி
மகிழ்ந்திட்டு இருந்தவர்நாம்
அருளதனை வேண்டிநிதம்
அம்பாளைப் பணிந்திட்டு
அதிஉப்பு உவர்நிலத்தில்
அரும்பயிர்கள் வளர்த்தவர்நாம்
பொருள்தேடித் திரைகடலைப்
பொழுதெல்லாம் கடந்தவர்நாம்
புண்ணியத்தைச் சந்நிதியில்
பூரிப்பாய்(ப்) பூரித்தவர்நாம்
விறுவிறுப்பாய்(ப்) பெருவிருப்பாய்
விழாவெடுத்து மண்பற்றை
விநயமுடன் கூடிநின்று
வெளிக்காட்டி நிற்கின்றீர்
சுறுசுறுப்பாய(த்) தமிழ்வளரத்
தூயபணி செய்திடுவீர் !
சுதந்திரமாய்த் தமிழீழம்
சுடரப்பணி ஆற்றிடுவீர் !
இந்தவிருப்பு எப்போதுமே
இருந்திட்டு எழுச்சியுடன்
இறுமாந்து செம்மாந்து
எல்லோரும் செயற்பட்டு,
வந்தவினையும் வல்வினையும்
வலுவிழக்க வழிகோலி
வாழ்வாங்கு இவ்வுலகில்
வாழ்ந்துய்ய வாழ்த்துவமே !

**நயினைக் கவிஞர்**
**அமரர். நா.க. சண்முகநாதபிள்ளை**





**நயினாதீவு அபிவிருத்திக் கழகம் – பிரான்ஸ்**
**Association de Développement de Nainativu - France**
*Chez : Maison de la Vie Asso. - 18 Boîte N° 59 - 15, Passage Ramey - 75018 Paris*
*Email : adnainativufrance@hotmail.fr / Facebook : Adnf Nainativu*

**திகதி : 20.12.2019**

## நயினாதீவு அபிவிருத்திக் கழகம் - பிரான்ஸ்

இக்கழகமானது 10-11-2007 ம் ஆண்டு பிரான்ஸ் வாழ் நயினாதீவு மக்கள் ஒன்றிணைந்து தாம் பிறந்த மண்ணுக்கும், அங்கு வாழ்கின்ற மக்களினதும் மாணவ சமுதாயத்திற்குமாக தங்களால் முடிந்தளவிற்கு அவர்களின் முன்னேற்றத்திற்கு கரம் பற்றி நிற்கும் வகையில் ஒன்று சேரும் முகமாக நயினாதீவு அபிவிருத்திக்கழகம் பிரான்ஸ் அமைப்பினை பிரான்ஸ் வாழ் நயினாதீவு மக்கள் கழகமாக முழுமனதோடு அமைத்துக் கொண்டனர். இக்கழகமானது பிரான்ஸ் அரசின் Association சட்டத்தின் கிழ் 19-01-2008ம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு தனது பணிகளை ஆரம்பிக்கத் தொடங்கியது.

**கழகத்தின் செயற்பாடுகளானது பின்வரும் விதிமுறைகளின் அடிப்படையில் இயங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.**

விதிமுறை பிரிவுகள்

1. அங்கத்தவர்
2. நிர்வாகம்
3. நிதி
4. கழகத்தின் செயற்பாடுகள்
5. கழக விதிமுறைகள்

பிரான்ஸ் வாழ் நயினைதீவைப்பிரதிநிதித்துவப்படுத்தும் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாரும் கழகத்தின் அங்கத்தவர்களாக இணைக்கப்பெற்று மாதந்த சந்தாப்பணம் மூலம் அங்கத்தவர்களாக உறுதி செய்யப்படுவர் இவ்வாறு இணையப் பெற்ற அங்கத்தவர்களினால் தெரிவு செய்யப்படும். போஷகர்கள், தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர், உபபொருளாளர், நிர்வாக சபை உறுப்பினார்கள், கணக்காய்வாளர், உபகணக்காய்வாளர் என்ற நிர்வாகப் பொறி முறையின் கீழ்கழகம் வழிநடாத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களின் பதவிக்காலம் 2 வருடங்களாகவும் ஒருவர் 2 தடைவைக்கு மேல் தொடர்ச்சியாக பதவியில் தொடர முடியாது.

அங்கத்தவர்களிடமிருந்து பெறப்படும் சந்தாப்பணம் வருட இறுதியில் நடைபெறும் முத்தமிழின் சங்கமம் நயினைச்சுடர் கலைமாலை விழாமூலம் பெறப்படும் விளம்பர வருமானம் அதிஷ்டலாபச்சீட்டு வருமானம், அன்பளிப்புக்கள் மூலம் கிடைக்கப் பெறும் நிதிகளைக் கொண்டு கழகப்பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது இதன் செயற்பாடனது கழகத்தின் நயினாதீவு இணைப்பாளர் மூலம் அங்குள்ள தேவைகள் கோரிக்கைகள் அடிப்படையில் அவரால் அவசியமும் அவசரமானதுமாக கருதப்படுகின்றவற்றை பொதுக் கூட்டத்தின் மூலம் அங்கத்தவர்களை கூட்டி விவாதித்து குறிப்பிட்ட காலங்களில் செய்ய வேண்டியவற்றை குறிப்பிட்ட செலவுகளுக்குப்பட்டதாக அமையப் பெற்று அங்கத்தவர்களின் 2 /3 ஒப்புதலைப் பெற்றுக் கொண்டு கழகப்பணியானது விரைந்து செயற்ப்படுத்தப்படும். மனித நேயப்பணிகளும் விரிவு படுத்தப்பட்டு நயினாதீவுக்கு

*Déclaré à préfecture de police - PARIS (Loi du 1 er Juillet 1901 - Art5) N° SIRET : W 751 18 44 60*



அப்பால் வடபகுதியில் செயற்படவும் இடமளிக்கப்பகின்றது.

கழகத்தின் வருடாந்த வரவு, செலவு, மற்றும் கலைமாலை விழா நிகழ்ச்சி வரவு செலவுகள். ஒவ்வொருவருட இறுதியிலும் குறிப்பிட்ட ஆண்டிற்கான கணக்கு விபரங்கள் பொருளாளரால் தயாரிக்கப்பட்டு, அதனை கணக்காய்வாளரின் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு பற்றுச்சீட்டுக்களுடன் யாவும் சரியாக அமைந்துள்ளது என கணக்காய்வாளரின் ஒப்புதல் பெற்று வருட இறுதிக்கான பொதுக்கூட்டத்தில் பொருளாளரால் அங்கத்தவரின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் பூரண ஒப்புதல் பெற்று நிறைவு செய்யப்பட வேண்டும். நூறு யூரோக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பெரும்பாலும் வங்கியூடாக செயல் படுவதுடன் நூறு யூரோக்கு மேல் கையிருப்பில் பணம் பொருளாளரினால் வைத்துக்கொள்ள இடமளிக்காது அவற்றை தாமதமின்றி கூடிய விரைவில் கழக வங்கிக்கணக்கில் வைப்பு செய்து விடவும் இடமளிக்கப்படுகிறது.

இவ்வாறாக கழகப்பணிகள் வருடா வருடம் தேவைகளின் அடிப்படையில் தொடர்ந்து செல்லும் இதுவரையில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளாதவர்களும் இணைந்து செயற்படுகின்ற நிலையில் கழகம் மென் மேலும் வளர்ந்து அதன் பணிகள் நயினாதீவிற்கும் மக்களிற்கும், மாணவ சமுதாயத்திற்கும், ஏனைய பகுதிகளிற்கும் பரந்து விரிந்து செயற்படும் என்று கூறிக்கொள்வதுடன் இதுவரையில் கழகமானது செயற்படுத்தியுள்ள நற்பணிகள் செயற் திட்டங்களையும் தெரிவித்துக் கொள்வதில் நயினாதீவு அபிவிருத்திக் கழகம் பெருமகிழ்வு கொள்வதுடன் புலம்பெயர் தேசத்தில் பிறந்த மண்பற்றுடனும் பாசத்துடனும் செயற்பட்டு வருவதையிட்டு பெருமிதமடைகின்றோம்.

**நயினாதீவு அபிவிருத்திக்கழகம் பிரான்ஸ் இன்றுவரை ஆற்றிய நற்பணிகளும் மனிதநேயப் பணிகளும்**

2008 - 2019 - மூன்று பாடசாலைகளுக்கும் கணனி, 1 பிறிண்டர் நூலகப்புத்தகங்கள், ஆறு சனசமூக நிலையங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள்.

2010 - 2015 - ஐந்து முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், சீருடைகள், கல்வி உபகரணங்கள் ஆசிரியைகளுக்கான சேலைகள்.

2012 - 2013 - மூன்று முன்பள்ளிகளுக்கான மலசலகூடம் அமைத்தது, மூன்று பேருக்கான வைத்திய உதவி.

2014 - 2015 - பல்கலைக்கழகத்திற்கு தெரிவான நான்கு மாணவர்களுக்கான உதவித்தொகைகள், நாகபூசணி வித்தியாலய இரண்டு தொடர் மலசலகூடம் (ஆண், பெண்) கண்ணீர் அஞ்சலிகள், அண்ணா முன்பள்ளிக்கான தண்ணீர்ப் தொட்டி.

2016- 2017 - ஊடக வேந்தன் எம். குமரன் கௌரவிப்பு திருமதி நந்தினி திருலோகநாதன் மருத்துவ உதவி, செயற்பாட்டாளர்கள் கௌரவிப்பு. ஸ்ரீ ஞானவைரவர் பயணிகள் பாதுகாப்பு சேனைக்கான படகு, உபகரணங்கள் வழங்கியது. திருமதி. அன்ரன் வெனிஸ்மேகலா உதவித்தொகை.

2017 - 2018 - நயினாதீவு வைத்தியசாலை புனரமைப்பிற்கான நிதியுதவி (ஜேர்மனி செஞ்சிலுவை சங்கம் ஊடாக)

2018- 2019 - வெள்ள அனர்த்த உதவி கிளிநொச்சி மாவட்டம் உமையாள்புரம்.

நன்றி

Association de développement de Nainativu - France
Déclaré à Préfecture de Police - Paris
(Loi du 1er Juillet 1901 - Art 5)
Chez : Maison de la Vie Asso. - 18, Boîte N°59
15, Passage Ramey 75018 Paris

**நயினாதீவு அபிவிருத்திக் கழகம் - பிரான்ஸ்**
*Chez : Maison de la Vie Asso. - 18 Boîte N° 59,*
*15, Passage Ramey - 75018 Paris*

*Déclaré à préfecture de police - PARIS (Loi du 1 er Juillet 1901 - Art5) N° SIRET : W 751 18 44 60*

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு ஒற்றுமையே பலம்"

சக்தியும் சிவமும் ஆகி அத்தனையும் அவளே ஆகி
நித்திலம் ஆளும் தேவி நிறைந்தருள் புரியும் தீவில்
சித்திகள் நிறைவாய் தரும் சித்தார்த்த பகவான் ஒளிர
பக்தியின் மார்க்கம் கூறி மக்காவின் மகானும் அருள
குத்திய சிலுவை ஞானி குறைவில்லா தத்துவம் சொல்ல
பக்தியால் நான்மதமும் போற்றி வாழும் வாழ்க்கை
முத்தியை தரும் என்பதே சித்தர்கள் அருளும் உண்மை.

அலைகடலின் நடுவில் அருளலையின் ஒளியில் அவதரித்த எங்கள் நயினாதீவின் சொந்தங்கள் அனைவருக்கும் முதலில் எங்களது அன்பு கலந்த வணக்கங்கள். புலம் பெயர்ந்து வந்தும்,எங்கள் புலன் பிறந்த ஊரைவிட்டு பெயராது அங்கேயே நிற்க,எம்மை சுரந்து ஆட்டுவிப்பதும் ஆள்வதும் அன்னை அவள் செயலே.

பிறந்து புரண்டு தவழ்ந்து எழுந்து நகர்ந்து உலகெங்கும் பறந்து (பரந்து) வாழும் எம் சொந்தங்கள் எங்கு சென்றாலும் பிறந்த மணித்திருநாட்டை, பிறந்த ஊரை மறவாத பிள்ளைகளாய் வாழ்வது தனிச்சிறப்பு. பிறந்த ஊரின் வளர்ச்சிக்காய் அவர்கள் சிந்திப்பதும், ஒற்றுமையாய் ஒன்றிணைந்து பல்வேறு துறைசார்ந்து சேவையாற்றுவதும் சேவையாற்ற முன்வருவதும் பாராட்டுக்குரியது. அந்தவகையில் செயல்படும் புலம்பெயர் வாழ் எமது ஊர் உறவுகள் ஒன்றிணைந்த கழகங்கள், சங்கங்கள், மன்றங்களின் பணியை வரலாறு நிச்சயம் போற்றும் என்பது நிதர்சனமானது.

ஊருக்கும்,உறவுகளுக்கும்,நாட்டுக்கும் சேவையாற்றி உயர்ந்து நின்று தனது இருபத்தைந்தாவது ஆண்டுவிழாவை கொண்டாடும் இந்த பொன்னான வேளையில் பிரித்தானியா மணிமேகலை முன்னேற்ற கழகத்தை எங்கள் கழகத்தின் சார்பில் வாழ்த்துவதோடு, அவர்கள் தங்களது வெள்ளி விழா மலரில்,சுவிஸ் நயினாதீவு அபிவிருத்திகழகத்தின் இதுவரையான செயல்பாட்டு ரீதியான ஆவணப்படுத்தல் தகவல்களை ஒரு வரைபாக தந்துதவுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க இந்த கட்டுரையை வழங்கி எங்களது தார்மீக ஒத்துழைப்பை நல்கின்றோம்.

சுவிஸ் வாழ் நயினைமைந்தர்களின் ஒருங்கிணைப்பில் நயினாதீவு உறவுகளை ஒன்றிணைத்து 1997 ம் ஆண்டுஉருவாக்கப்பட்டு நயினாதீவு அபிவிருத்தி கழகம் சுவிஸ் என்று பெயரிடப்பட்டு ,சுவிஸ் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட எங்களுடைய அமைப்பு இன்று இருபத்திமூன்றாவது ஆண்டில் தனது தடத்தை பதித்து தொடர்ந்தும் பணியாற்றி வருகின்றது. ஆரம்பத்தில் எங்களுடைய கழகத்தில் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் ஒரு சில நயினை நலன்விரும்பிகள் இணைந்திருந்தார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

தூரநோக்கு சிந்தனையில் உருவாக்கப்பட்ட எங்களது செயல்பாட்டு கொள்கையில் ஊரின் கல்வி வளர்ச்சி,வைத்திய உதவிகள்,குடிநீர் விநியோகம்,மற்றும் குடிநீர் வசதிகளை மேம்படுத்துதல்,வீதிகள் சீரமைப்பு ,பசுமை புரட்சி, குளங்கள் திருத்தம் ,கால்நடைகளை பாதுகாத்தல், விளையாட்டுத்துறையை மேம்படுத்துதல் , சுயதொழிவாய்ப்புக்கு உதவுதல் ,உட்பட புலத்தில் எங்களது உறவுகளை ஒன்றிணைத்தல் ,புலத்தில் எங்களது இளையோரின் கல்வி கலை கலாசார செயல்பாடுகளுக்கு உதவியாக இருத்தல் ,என்பன முக்கிய குறிக்கோள்களாக இருந்தன. இதில் பல சேவைகளை நிறைவேற்றி இருக்கின்றோம் என்பதில் மன நிறைவுகொள்கின்றோம்.

கல்வி வளர்ச்சிக்கான எங்களது சேவைத்தொடக்கம் பாலர் பாடசாலைகளில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டு, பாலர்பாடசாலை சிறுவர்களுக்கான போசாக்கு உணவு கொடுப்பதில் இருந்து பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான, ஊதிய கொடுப்பனவு வரை எங்களது கழகம் தொடங்கிய காலத்தில் இருந்து இன்றுவரை செய்துவருகின்றது.





அத்துடன் ஐந்தாம் வகுப்பு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கான ஊக்குவிப்பு தொகையும் தொடர்ச்சியாக கொடுத்துவருகின்றோம். ஊர் பாடசாலைகளில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகி செல்லும் மாணவர்களுக்கும் ஊக்குவிப்பு தொகை வழங்கி உதவியிருக்கின்றோம். அத்துடன் ஊரில் உள்ள மூன்று பாடசாலைகளிலும் தொண்டராசிரியர்களாக கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான கொடுப்பனவை தொடர்ச்சியாய் செய்துவந்திருக்கின்றோம். அவர்களில் பலர் இன்று நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்களாக பல பாடசாலைகளில் கடமையாற்றுகின்றார்கள். இன்றும் நிரந்தர நியமனம் பெறாத தொண்டராசிரியர்களுக்கான கொடுப்பனவை செய்துவருகின்றோம்.

அத்துடன் தேவையறிந்து நாகபூசணி வித்தியாலயத்தின் மதிலை கட்டிக்கொடுத்திருக்கின்றோம். கணேச கனிஷ்ட வித்தியாசாலைக்கு கழிவறை திருத்தம் உட்பட சில உட்கட்டமைப்பு திருத்தவேலைகளுக்கு உதவியிருக்கின்றோம். அத்துடன் பாடசாலைகளின் விளையாட்டுத்துறைக்கு அவ்வப்போது தேவையான சில உதவிகளை செய்துவந்திருக்கும் எங்களது கழகம், மகாவித்தியாலய விளையாட்டு மைதான சுற்றுமதிலையும் கட்டிகொடுத்திருக்கின்றது.

வைத்திய துறைக்காக எமது கழகம் ஓரளவு தனது சேவையை செய்திருக்கின்றது. ஊர் வைத்தியசாலைக்கு தேவைப்படும் உபகரணங்களை அவ்வப்போது வழங்கிவந்திருக்கும் அதேவேளை நயினாதீவில் மிகக்கடுமையான நோயாக கருதப்படும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இருதய சத்திர சிகிச்சை செய்தவர்களுக்கும், நுரையீரல் பாதிப்புக்குள்ளானவர்களுக்கும், அவர்களின் நோய் உறுதிப்படுத்திய சான்றிதல்களோடு முறைப்படி உதவி கோரிய அனைவருக்கும் ,எங்கள் கழகத்தின் நிதிநிலைமைக்கு ஏற்ப ஒரு சிறுதொகைப்பணமாக ஒரு இலட்சம் ரூபாய் உதவியை அவர்களுக்கு உடனடியாக வழங்கி இருக்கின்றோம். இதுவரை இருபத்தைந்துக்கும் மேற்பட்ட உறவுகளுக்கு இந்த மருத்துவ உதவியை செய்திருக்கின்றோம். இதைவிட புதிதாக நயினாதீவு மருத்துவ மனை கட்டுவதற்காக முன்னெடுக்கப்படும் முயற்சிக்கு கழகத்தில் சார்பாக இல்லாமல் ஒன்றிணைந்த சுவிஸ் உறவுகளின் உதவியோடு ஒரு கணிசமான தொகையை கழகத்தின் வங்கி கணக்கு ஊடாக வழங்கியிருக்கின்றோம்.

ஊரில் முக்கிய நீண்டகால பிரச்சனையாக இருப்பது குடிநீர் ஆகும். இந்த குடிநீர் தேவையானது எம் மக்களின் யாழ் நோக்கிய இடம்பெயர்வுக்கும் ஒருமுக்கிய காரணியாக இருந்தது என்பது மறுக்கமுடியாது . இந்த குடிநீர் தேவையை ஓரளவு பூர்த்தி செய்ய எமது கழகம் சில முன்னெடுப்புகளை செய்தது. முதலில் ஊரில் குடிநீர் இருக்கும் பிரதேசத்தில் ஒரு நன்னீர் காணியை கொள்வனவு செய்து ஒரு நன்னீர் தேக்கத்தையும்,நன்னீர் கிணற்றையும் விசாலப்படுத்தி ஊர் பொதுமக்கள் பாவனைக்கு சுதந்திரமாக அனுமதித்து உதவியது. காலத்தடத்தில் ஊரில் இருக்கும் நன்னீர் வளம் போதாது இருந்ததால், ஊரில் பல்வேறு இடங்களில் பாரிய கொள்கலன்களை வைத்து வேலணை சாட்டி நன்னீர் ஊற்றில் இருந்து , இயந்திர பௌசர்கள் மூலம் பெரும் நிதிச்செலவில் தண்ணீர் கொண்டுவந்து ஊரின் நன்னீர் தேவையை பூர்த்திசெய்ய எமது கழகம் நடவைடிக்கை எடுத்து செயல்படுத்தியது. சில ஆண்டுகள் இந்த சேவையை எம்மால் சிறப்பாக செய்ய முடிந்தது. ஆனால் பாவனையாளர்கள் தேவையற்ற விடயங்களுக்கும் இந்த நீரை பாவித்து எங்களை மனக்கவலை கொள்ள செய்ததும்,அதே நேரத்தில் ஊரில் பெய்த மழையால் ஓரளவு நீர் தேக்கம் உருவானதும் ,நாங்கள் அந்தப்பணியை தொடர்ந்து செய்வதில் இருந்து பின்வாங்க வைத்தது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகின்றோம். மீண்டும் ஊரில் பாரிய அவசர குடிநீர்த்தேவை ஏற்படும் வேளையில் எங்கள் சாட்டித் தண்ணீர் சேவையை தொடர தயாராக இருக்கின்றோம்.

நீண்ட கால நோக்கில் ஊரில் தண்ணீரை சேமிக்க ஊரில் உள்ள பெரிய குளங்களை ஆழப்படுத்தி தண்ணீரை சேமிக்கும் ஒரு பாரிய திட்டம் எங்களிடம் இருந்தாலும் அந்த திட்டத்தை செயல்படுத்தும் அளவுக்கு நிதிப்பலமும் ஊரில் இருக்கும் உறவுகளின் ஆத்மபலமும் இதுவரை எங்களோடு ஒத்துவராத காரணத்தால் அந்த திட்டம் இன்றும் பேசுபொருளாகவே இருக்கிறது என்பதை உறவுகளுக்கு மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த திட்டத்துக்கு பிரித்தானிய மணிமேகலை முன்னேற்ற கழகமும் ஏனைய புலம்பெயர்கழகங்களும் ஊரில் இருக்கும் நலன்விரும்பிகளும் உறவுகளும் ஒரு பொது ஒற்றுமையின்பால் முன்வருவார்களாக இருந்தால் எமது கழகம் காத்திரமான பங்களிப்பை வழங்கி இந்த பெரும்பணியை முன்னெடுக்க தயாராக இருக்கின்றோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ளவிரும்புகின்றோம்.

காலத்தின் தடத்தில் மிகப்பெரிய போர் ஒன்றை சந்தித்த எமது தேசத்து உறவுகள் சொல்லில் வடிக்கமுடியாத பெரும் துன்ப துயரங்களை சந்தித்தார்கள். முள்ளிவாய்க்கால் முடிவில் வன்னிப்பகுதியில் அகப்பட்ட எமது ஊர்

## நயினாதீவு அபிவிருத்திக் கழகம் - சுவிஸ்லாந்து

உறவுகளும் மிகப்பெரிய இழப்புக்களை சந்தித்தார்கள். போரின்வடுகள் தரும் சொல்லெணாத்துயரங்களை என்றுமே மறக்கமுடியாது. ஆனால் அந்த நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிய பொழுதுகளையும் என்றுமே மறக்கமுடியாது. போரினால் உறவுகளை பிரிந்து ,அங்கங்களையும் உடமைகளையும் இழந்து நமது ஊருக்கு திரும்பிவந்த உறவுகளுக்கு உதவ நாங்கள் எங்கள் கழகத்தின் சார்பில் ஒரு அவசர வேண்டுகோளை சுவிஸில் விடுத்திருந்தோம். அந்தவேளையில் கழக அங்கத்தவர்கள் என்றில்லாது சுவிஸ் வாழ் நயினை உறவுகளில் பெரும்பாலானவர்கள் இந்த உறவுகளுக்கு உதவும் பெரும் பணியில் தங்கள் பாரிய பங்களிப்புகளை உடனடியாக வழங்கியிருந்தார்கள்.கழகம் அந்த துயர் தோய்ந்த நேரத்தில் எம்மோடு இணைந்திருந்து உதவிய அனைத்து அன்புள்ளங்களையும் இன்றும் என்றும் நன்றியுடனேயே பார்க்கிறது. இந்த பேருதவியால் போரினால் பாதிக்கப்பட்டு எமது ஊருக்கு வந்திருந்த மக்களுக்கு நாங்கள் ஒரு பாரிய உதவியை செய்யக்கூடியதாக இருந்தது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் அந்த அவசர தேவைக்காக உதவிய உள்ளங்களுக்கு மீண்டும் நன்றிகளை கூறிக்கொள்கின்றோம்.

நிரந்தர வருமானம் அற்ற ஏழைக்குடும்பத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க சில குடும்பங்களுக்கு சுய தொழில் வாய்ப்புக்காக ஊக்குவிப்பு தொகையாக அவர்கள் உத்தேசித்த சுயதொழிலுக்கு ஏற்ற வகையில் எங்கள் பங்களிப்பை வழங்கியிருக்கின்றோம். தொடர்ந்தும் உரிய முறையில் சுயதொழில் செய்வதற்கான முறையான உதவி விண்ணப்பங்கள் வந்தால் உதவ தயாராக இருக்கின்றோம். விவசாயத்துறையை ஊரில் மீண்டும் வளர்ச்சிப்போக்கிற்கு கொண்டுவர அந்த துறைசார்ந்த உதவிகளை வழங்க எங்கள் கழகம் என்றும் தயாராக இருக்கிறது என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவிக்கின்றோம்.

காலத்தின் தேவையும் ஊரில் வாழும் உறவுகளின் நலன்சார்ந்தும் எங்கள் கழகம் ஊரில் பல முன்னெடுப்புகளை செய்துவந்திருக்கும் அதேவேளை புலத்தில் நாங்கள் வாழும் நாட்டில் இதுவரை மூன்று பந்த பாச ஒன்றிணைப்பு விழாக்களை செய்து ஊர் மக்களின் கலை கலாசார நிகழ்வுகளை மேடை ஏற்றியிருக்கின்றோம். சுவிஸில் வாழும் எம் எதிர்கால சந்ததியினருக்கான எதிர்கால நலன்சார்ந்த முன்னெடுப்புக்களை செய்துகொண்டிருக்கின்றோம். புலத்திலும் சில ஆக்கபூர்வமான செயல்திட்டங்களை இனிவரும் காலங்களில் ஆற்றுவோம் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் உறுதியாக கூறிக்கொள்கின்றோம். செய்யும் செயலை ஒரு பதிவாக்கி சமூகத்துக்கு சொல்லிக்காட்டும் தன்மையை ஒருபோதும் எங்கள் கழகம் கொண்டிருக்கவில்லை. எங்களுடைய செயலை ஒரு ஆவணப்பதிவாக்க வேண்டும் என்று எங்களைப்போன்று பல்வேறு துறைசார்ந்து ஊருக்கு உதவிய ஒரு அமைப்பு கேட்டுக்கொள்ளும்பொழுது எங்களால் மறுக்கமுடியவில்லை. ஆதலால் ஆவணப்பதிவுக்காக இந்த தகவல்களை வழங்குகின்றோம் என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் கூறவிழைகின்றோம்.

"ஒற்றுமையே பலம் ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு" என்ற எங்கள் கழகத்தின் தாரக மந்திரத்துக்கு ஏற்ப உலகெங்கும் வாழும் எங்கள் நயினை உறவுகள் அனைவரும் ஒன்றிணைந்து வந்தால் எந்தவொரு மிகப்பெரிய இலக்கையும் இலகுவாக அடைந்து வெற்றிப்பாதையில் பயணிக்க முடியும் என்பதை கூறிக்கொள்வதோடு ,எமது ஊர் எமது ஒற்றுமையான சேவையின் மூலம் மேன்மை அடையும் என்பதையும் கூறிக்கொள்கின்றோம்.

எந்தவொரு கழகமாக , சங்கமாக , மன்றமாக ,ஒன்றியமாக இருந்தாலும் அதன் தாபகர்களை போற்றி அந்த மூலவேர்களை மதித்து ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணக்கருவை சுவிஸ் கழகத்தின் சார்பில் விதைத்து , இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் வெள்ளிவிழாக்காணும் இந்த பொன்னான நேரத்தில் இதுவரை உங்கள் கழகம் செய்த மிகப்பெரிய சேவைகளையும் ,உதவிகளையும் ,செயல்திட்டங்களையும் பாராட்டி வாழ்த்தி மேன்மேலும் உங்கள் கழகம் வளர்ச்சிபெற்று பொன்விழா , மணிவிழா , பவளவிழா ,முத்துவிழா ,நூற்றாண்டுவிழா என விழாக்கள் கண்டு, காலங்களை கடந்தும் எம் பிறந்த மண்ணின் பெருமையாய் நிலைத்திருக்கவேண்டும் என வாழ்த்தி விடைபெறுகின்றோம்.

"நன்றே செய்வோம் அதை இன்றே செய்வோம்"

நன்றி வணக்கம்

வாழ்த்தி மகிழும்
நயினாதீவு அபிவிருத்திகழகம் சுவிஸ்.






# நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் வரலாறு

தமிழ் ஈழத்தில் 1983 ஆம் வருட முதல் நிகழ்ந்த யுத்த சூழ்நிலை தமிழ்பேசும் பிரதேசங்களில் பாரிய சமூக பொருளாதார கல்வி கலாசார பாதிப்பை ஏற்படுத்தியது. அங்கு வாழ்ந்து கொண்டிருந்த மக்களிடையே அச்சஉணர்வும் எதிர்காலம் பற்றிய எண்ணங்களும் பல்வேறு சமூக மாற்றங்களை ஏற்படுத்தின. பொருளாதார வளத்தையும் பாதுகாப்பையும் கல்வித் தேவைகள் என்பனவற்றையும் தேடிப் பெற வேண்டும் என்ற எண்ணக்கரு சுய நோக்காகவும் குடும்ப நோக்காகவும் மேலோங்கி நின்றது. இதன் எழுச்சி ஊர் மக்களின் பரந்துப்பட்ட இடப்பெயர்ச்சிக்கு வழிவகுத்தது.

கல்வியால் கலாசாரத்தில் சீர்பெற்றிருந்த கிராமம் தன் மக்களை இழந்து புதியதொரு சமூக வரவுடன் கிராம சிந்தனையற்ற விழிப்புணர்வற்ற மக்களால் நிரப்பப்பட்டது. ஊரைவிட்டு அகன்றவர்கள் பிறிதொரு சூழலில் வாழ்ந்து வந்ததுடன் தாம் பிறந்த மண்ணென்ற சிந்தனையற்று கிராம பற்றற்றவர்களாக வாழத்தலைப்பட்டனர். இதற்கு உந்து சக்தியாக வெளிநாட்டு பணவரவும், சுகபோக வாழ்வும் ஒன்று சேர நயினாதீவு என்ற வளமிக்க கிராமம் பொலிவிழந்து செயலிழந்து எடுப்பார் கைப்பிள்ளையாக மாறிவிட்டது என்பதே நிதர்சனம்.

பழங்குடிகள் என்று சொல்லக்கூடிய ஒரு சிறு தொகுதியினரே ஊரில் வாழ்ந்து கொண்டிருக்க பெரும்பான்மையினர் கொழும்பு மற்றும், யாழ்ப்பாணம் பட்டினங்களில் வாழ்கின்றனர். கிராமத்தில் வலுவான பொது அமைப்புக்கள் இன்றி கிராமத்தேவைகள் வெளிக்கொணர முடியாத ஆற்றலற்றவர்களே எஞ்சியுள்ளனர். ஒரு கால கட்டத்தில் ஊர் மக்கள் யாழபபாணம், கொழும்பு செல்வதானால் திருகோணமலைக்குக் கடற்பிரயாணம் செய்து அங்கிருந்தே பிற இடங்களுக்கு செல்ல முடியும். ஊர் மக்களது உணவுத்தேவைகள் மற்றும் வைத்திய சேவைகள் யாவும் திருகோணமலை பயணத்தின் ஊடாகவே பெறவேண்டியிருந்தது. இலங்கைக் கடற்படையின் இறுக்கமான நிர்வாகமே நயீனாதீவில் அமுலிலிருந்தது.

இத்தகைய இறுக்கமான சூழ்நிலையில் நாட்டில் யுத்தம் படிப்படியாக பல்வேறு பரிணாமத்திற்கு மாறியது. சமாதானத்திற்கான ஏக்கமும் அழிவுகளும் அதிகரிக்கவே அரசாங்கங்கமும் போராளிகளும் 02.02.2002இல் ஒரு யுத்த நிறுத்தத்தை அறிவித்து நிலைமைகளில் தளர்வு ஏற்படலாயிற்று.

இந்த நிலையில் தான் கொழும்பில் வாழ்ந்துக்கொண்டிருந்த எம்மவர் அப்போதைய சூழலில் என்ன வகையில் கிராமத்தைக் கட்டியெழுப்பலாம் என்று சிந்தித்து ஒரு அமைப்பை உருவாக்கி அதன் மூலம் ஆற்றக்கூடிய பணிகளை மேற்கொள்ளலாம் என்று இலங்கை நிர்வாக சேவை சிரேஷ்ட அதிகாரியும் அமைச்சுச் செயலாளருமான திரு.ப.க.பரமலிங்கம், ஓய்வு நிலை அதிபர் திரு.ப.ந.உருத்திரலிங்கம், பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் திரு.ஆர்.ஆர்.பி.ஸ்ரீதரசிங் ஆகிய மூவரும் அமைப்பாளர்களாகக் கொண்டு அக்கறையுடைய எம்மவர்களை அழைத்து 2002ம் வருடம் கார்த்திகை பூரணை





தினத்தில், கொழும்பு திரு. வி.கே.ரி. சிவானந்தனுக்குச் சொந்தமான ஆதமல்லி மண்டபத்தில் ஒன்றுகூடி எடுத்த முடிவு தான், நயீனாதீவு சமூகப்பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் உதயமாகும்.

இச் சங்கத்தின் நோக்கங்கள் இச் சங்கத்தின் பெயருக்கேற்ப நயீனாதீவின் சமூகப்பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்தியை நோக்கி எல்லா வகையான முயற்சிகளையும் முன்னெடுப்பதென்பதாகும். அப்போதைய காலக்கட்டத்தில் தீவின் முக்கிய தேவைகள் முன்னுரிமைப்படுத்தி செயற்படத்தீர்மானிக்கப்பட்டது. திரு. ப. க. பரமலிங்கம் அவர்கள் தலைமையில் 15 உறுப்பினர்களைக் கொண்ட செயற்குழு தெரிவுசெய்யப்பட்டது. முன்னுரிமைப்படுத்தப்பட்டு அடையாளங்காணப்பட்டுச் செயற்படுத்தப்பட்டவை பின்வருமாறு,

1. ஆலங்குள வீதி – புனரமைத்து பஸ் போக்குவரத்திற்கேற்ப சீர்செய்யப்பட்டு பெருவீதியாக்கப்பட்டது.
2. கிராம வைத்தியசாலை தள அமைப்பை மாபில் ஓடுகள் பதித்தும், படுக்கை வசதிகளை ஏற்படுத்தியும் கொடுக்கப்பட்டது.
3. பாடசாலை ஆசிரியர்கள் பற்றாக்குறையை நீக்கியும், வாசிப்பு வசதிகளுக்காக நூல்நிலையங்களைப் புனரமைத்து புத்தகங்கள் வழங்கப்பட்டன.
4. வைத்திய அதிகாரிகளை நிரந்தரமாக கிராம வைத்தியசாலைக்கு நியமிக்க ஆவண செய்யப்பட்டது.
5. 5ம் தரம் மற்றும் கல்விப் பொதுத்தராதரப் பரீட்சையில் திறமையாக சித்தி பெற்று பல்கலைக்கழகம் புகுந்த ஏழை மாணவர்களுக்கு மாதாந்தம் ரூபாய் 2000 வீதம் பல்கலைக்கழக கல்விக்காக வழங்குதல். இக்கொடுப்பனவானது நயீனாதீவு மகா வித்தியாலயத்திலிருந்து சித்தியடைந்தவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.
6. குடிநீர் பிரச்சினையை குறைக்கும் முகமாக 3 நன்னீர்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.
7. கணேசா சனசமூக நிலையத்திற்கு கழிப்பறை வசதி செய்து கொடுக்கப்பட்டது.
8. மர நடுகையை ஊக்குவிக்குமுகமாக பிரதேசசபை நயீனா தீவு மூலம் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.
9. கிராம உட்புற வீதிகளைச் சீர் செய்வதற்கான பிரேரணைகளை உள்ளூராட்சி திணைக்களத்தினூடாக முன்னெடுத்து செயற்படுத்தப்பட்டு வருகின்றன.
10. கணேசா கனிஷ்ட மகா வித்தியாலயத்திற்காகத் தேவைப்பட்ட காணியை எமது சங்க உறுப்பினர் நிதியுதவியுடன் கொள்வனவு செய்து கொடுக்கப்பட்டது.
11. நயீனா தீவு பிரதேச சபை அலுவலகத்திலுள்ள நூல்களைப் பாதுகாக்கு முகமாக 2 பாரிய புத்தக அலுமாரிகள் வழங்கப்பட்டன.
12. நயீனா தீவின் முக்கிய வீதிகளுக்குரிய பெயர்க் கற்கள் அமைத்து வழிகாட்டிகள் அமைக்கப்பட்டன.

13. பாடசாலை மாணவர்களது பரீட்சைக் காலங்களில் அவர்களுக்கு வேண்டிய உசாத்துணை புத்தகங்களை வழங்கப்பெற்றன.
14. ஊருக்கு வெளியேயும் ஊரிலும் வாழும் மக்களிடையே நல்லுறவையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துமுகமாக காலத்திற்குக்காலம் ஒன்று கூடல் நிகழ்வுகளை நடாத்துதல். கொழும்பில் நான்கும் நயினாதீவில் ஒன்றும் ஏற்கனவே நடாத்தப்பட்டுள்ளன.
15. நயினாதீவு அம்பாள் ஆலய முகப்புத் துறைமுகம் நவீனமயப்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வலுவாக முன்னெடுத்து அதை நிறைவேற்ற வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் ஏற்படுத்தப்பட்டு எல்லோருடனும் கலந்து பேசி வெற்றியும் அடைந்தோம்.
16. சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பசுமைத் தீவு என்ற தொனிப் பொருளில் பாரிய நிழல்தரு மரநடுகை இயக்கமொன்று ஆலயங்கள் பொது ஸ்தாபனங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுத்தப்பட்டது.
17. நயினாதீவு மகாவித்தியாலய வகுப்பறைகளை வர்ணநிறம் தீட்டி பொலிவு பெறச் செய்ததுடன் இருமாடிக் கட்டடிங்கள் இரண்டு அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கான அடிக்கல் கல்வி அமைச்சின் செயலாளராலும் எமது சங்கத்தலைவரும் பழைய மாணவருமான திரு.ப.க.பரமலிங்கத்தினால் நாட்டப் பெற்றது.
18. நயினாதீவு மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் செப்பனிடுவதற்காக ரூபா பத்து இலட்சம் நிதி உதவியை கல்வி அமைச்சினூடாகப் பெற்றுக் கொடுத்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு எமது சங்கம முற்பணம் வழங்கி மைதானம் சீரமைக்கப்பட்டது.
19. நயினாதீவு நாகபூஷணி வித்தியாசாலை கணினி அறை அமைத்துக் கொடுக்கப்பட்டது.
20. நயினாதீவு கலாமன்றத்திற்கான மண்டப மேடை எமது சங்க நிதி உதவியுடன் சீர் செய்யப்பட்டு நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டது.
21. நயினாதீவு மக்கள் எங்கிருந்தாலும் அவர் வாழ்விலும், மறைவிலும் ஒரு மனதுடன் வாழ்வோம் என்ற எண்ணக்கருத்தை வளர்த்து தலை நகரில் நடைபெறும் கிராம மக்களது தனிப்பட்ட மற்றும் பொதுவான எல்லா நிகழ்விலும் எமது சங்கம் துணையாக நின்று செயற்பட்டு வருகின்றது.

இன்று எமது கிராமம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அவை பின்வருமாறு முன்னிலைப்படுத்தப்படுகின்றன

1. கடல் அரிப்பைத் தடை செய்தல்.
2. சுற்றுச் சூழல் பாதுகாப்பும், சுகாதார வாழ்வின் மேம்படுத்துதலும்.



நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம்
Nainativu Socio - Economic Education & Cultural Development Society
නයිනාතිවු සමාජ ආර්ථික අධ්‍යාපන හා සංස්කෘතික සංවර්ධන සංගමය

3. வைத்தியசாலைக்கு நிரந்தர M.B.B.S வைத்தியரது சேவையும், பல் மருத்துவர் சேவையும், மேலதிகமாக விசேட மருத்துவர்கள், குறிப்பாக வாரம் ஒருமுறை, நயினாதீவிற்கு வருகை தந்து விசேட நோயாளர்களுக்கான சிகிச்சை வசதிகள் வழங்குதல்.
4. கைவிடப்பட்ட நிலையிலுள்ள வீடுகள், வளவுகளை உரிமையாளர்கள் பராமரிக்க நடவடிக்கை எடுத்தல்.
5. சிறுநீர்க் குளங்களைப் பராமரித்தலும் மேலும் மழை நீர் சேகரிக்கும் திட்டங்களை அமுல்படுத்துதலும், பயிர்ச் செய்கையை ஊக்குவித்தலும்.
6. படகுப் போக்குவரத்தை நவீன மயப்படுத்துமுகமாக உரிமையாளருடன் கலந்து பேசி அதனை முன்னெடுத்தலும், சுற்றுலாப்பயணிக்களுக்கான கவர்ச்சிகரமான போக்குவரத்தை ஏற்படுத்துதலும்.
7. நயினாதீவு தெற்கு வங்களாவடி துறைமுகத்தை மீள அமைத்து போக்குவரத்துச் சேவையை விரிவுபடுத்தல்.
8. குறிகாட்டுவான துறைமுக நவீனமையப்படுத்தப்பட்டு அல்லைப்பட்டி குறிகாட்டுவான வீதி காபெட் வீதியாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுத்தல். இக்கோரிக்கை அரசாங்கத்தினால் ஏற்கப்பட்டுள்ளது.
9. நயினாதீவில் பெயரளவிலுள்ள பொது அமைப்புகள் முறையான நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வரவும் அர்ப்பணிப்புள்ள நிர்வாகிகளை தெரிவு செய்தலும்.
10. 75 வருடங்களைப் பூர்த்தி செய்யும் நயினாதீவு மகா வித்தியாலயத்தின் பவளவிழாவை 2020ம் ஆண்டு சிறப்புறக்கொண்டாடி ஆசிரிய மாணவர் பெற்றோரிடையே கல்வி விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

இவையாவும் முறையாகவும் அர்ப்பணிப்புடன் செய்யப்படவேண்டுமாயின் நயினை மக்கள் எங்கெங்கு வாழ்ந்தாலும் ஒரு மனதுடன் ஒன்றுகூடியும், கலந்துரையாடியும் முன்னெடுக்கப்படுத்தல் வேண்டும். கருமங்களை ஆற்ற வேண்டுமென்ற தீவிர சிந்தனையும், நாம் பிறந்த பூமி என்ற பற்றும் மேலோங்கி நிற்கின்ற போது எதையும் சாதிக்கலாம். ஒரு சிறிய தீவு, அழகான தீவு, பண்பான மக்கள் சான்றோர் வாழ்ந்த - வாழும் தீவு என்ற பெருமையை நாம் ஏற்படுத்துவதன் மூலம் பொலிவிழந்த கிராமம் நவீன கட்டமைப்புடன் வீறுகொண்டெழ வேண்டியது காலத்தின் தேவையாகும். இதுவே எமது சங்கத்தின் கருப்பொருளும், எதிர்பார்ப்புமாகும்.

ப.க.பரமலிங்கம்

தலைவர்

# Socio-economic Information of Nainativu And Proposals fo Development

**1. Location and Physical Feature**

Nainativu village i:5 located 40k.m. from Jaffna town in North West. It is a small Island with total extent of 4.0sq. k.m. It is a naturally beautiful island with small beaches and other inland features. It does not have more inland water area. Only very few minor ponds are located in all part of the island.

**2. People and Culture**

The total population of this Island is 4,450 (estimated population at end of 2004). Tamils are majority community (95%) and the Muslims (5%) and very few Sinhalese also living in the vi I !age.

Majority of Tamils (around 98%) are Hindus and the balance (02%) are Christian. Muslims follow Islamic religion and the remaining few Sinhalese are Buddhist. All four religious institutions are functioning well. The community in Nainativu are much tied with their religious belief, at the same time they are living well integrated and in harmony.

The island has a very old historical background. The population are good literate but. most of them are in poverty. There are number of rural organizations also functioning well for a long per;od of time.

| | | |
|---|---|---|
| Community Centres | - | 09 |
| Rural Development Societies | - | 02 |
| Fishermen Co-operative Societies | - | 02 |
| Farmers Co-operative Societies | - | 01 |
| Religious Societies | - | 06 |

While the community adapt new development and facilities, is still maintains old tradition and culture.

**3. Administration**

Nainativu belongs to the Velanai (Islands South) Divisional Secretariat Division in the Jaffna District and the Island is divided into three Grama Niladhari Division. Namely:-

Nainativu North GS Division
Nainativu Center GS Division
Nainativu South GS Division

For Local Authority Administration, Nainativu is coming under Velanai Pradeshiya Sabha and its Sub-office is functioning at Nainativu itself. The village is under Government control right throughout.



**4. Education**

Though Nainativu is located in difficult area and having limited facilities for student population. However, the education standard in this village is better than that of the neighbouring villages in the educational zone.

**i. Pre-schools**

Although there are 05 pre-schools functioning in different locations in Nainativu and four of these are maintained by Community Centers and one scho.ol operated under one rural development society out of 5 pre-schools, 3 schools have proper buildings and 2 schools occupy community center buildings in the mornings in the week days. All of these pre schools do not have any other physical facilities other than class room accommodations.

**11. School Education**

Three . Government schools are functioning in Nainativu. The total student population in this Island is 600. The details are given below :

| | Name of school | Classes available | No. of students |
|---|---|---|---|
| 1. | Nainativu Maha Vidyalayam | Year 06- Year 13 | 175 |
| 2. | Nainativu Sri Ganesha Vidyalayam | Year 01- Year 11 | 280 |
| 3. | Nainativu Nagapoosani Vidyalayam | Year 01 - Year 05 | 150 |

In Nainativu, GCE ,VL classes are available only for Commerce and Arts streams. The students, who want to continue their studies in science and mathematic fields in AIL move to schools in Jaffna town. Private tuition centers are also functioning. The students in Nainativu actively participate in their education activities and perform well in open exams.

**iii. Higher Education**

There is no higher education facility closer to the village for school leavers. However, number of youths continue their higher studies possibly in Jaffna and other part of the Island. Proportionately, few students gain university admission and graduate in different field of studies every year and similarly to other institutions as well. (Technical Colleges, Teacher Education, Training Colleges, Vocational Training Institution etc.,)

This situation has resulted in excellent human resources created from this village for long period. Due to the employment opportunity, most of them are living mostly in Jaffna and Colombo.

**5 Health**

One government hospi, li (Central Dispensary and Maternity Home) is functioning for many years. In last two decades, due to the conflict situation and the logistic problem, there are shortage of medical staff and medicines. However, the hospital is functioning continuously with limited medical

and paramedical staff and with limited medicine and very limited medical equipment and facilities. The community health functions also practiced with limited number of trained Family Health Officers. Health awareness programmes are conducted by relevant authorities.

However, for any serious illness, like child birth heart ailment, surgery and in the case of accidents the patients are to be transported to the Jaffna Teaching Hospital, which is located 40k.m. away from Nainativu. It normally takes 90 minutes travel including 20 minutes by boat and it is only possible during day time, provided ambulance services are available immediately. Otherwise it takes long time about two to three hours at high cost.

**6 Energy, Transport and Communication**

As it is a small Island in remote area and affected by conflict for more than 30 years, the village has very less infrastructure facilities of what the people need. The people still manage with the available basic infrastructure facilities. The rural roads are in very deplorable condition due to lack of maintenance.

**i. Energy**

The electrici1y supply is provided by operating a power generator owned by CEB. The power supply is available every day. Around 300 families (25%) have electricity connection and supply.

Most of the families use kerosene oil for lighting. The fuel distribution in the village is done by MPCS and private entrepreneurs. Few families use L.P. Gas for cooking purpose in the village. Tractors, two wheel tractors, bullock-carts and human energy are used for transport of goods for agricultural and construction proposes.

**ii. Transport**

For travel to Nainativu from Jaffna Town, first land transport mode to be used for 38k.m. to Kurikadduvan Jetty and then 2k.m. sea travel by boat to Nainativu. Bus service (only one bus in service) is available for one route crossing the island. For other inland areas, two wheel tractors, three wheelers and Bicycles are in use.

The same transport chain is in practice for passengers as well as goods. Most of the hardware materials, food items and other consumable items are transported from Jaffna Town and products from Nainativu transported to Jaffna Town. Difficulties are experienced in transporting goods and patients for treatment from and to Nainativu. . Recently Road Development Authority is operating a ferry service between Kurikadduvan - Nainativu and vise versa but this is undependable for various reasons.



**iii. Communication**

One post office is located in Nainativu and functioning well for long time and it delivers collection and delivery of mails. Telephone and money transaction services are also provided by this post office.

From recent ears the population in Nainativu have telecommunication access to other part of the country as well as other countries from their village. Still it is expensive and difficult to have resident telephone connection.

**7. Water Supply**

There is no proper water supply scheme in Nainativu, but drinking water is the main and burning problem for the community living in Nainativu. The underground water available in this village is limited to a small area. In dry season, around 90% of families are deprived of drinking water and have to walk daily to collect drinking water from wells in the limited area. The Pradesha Sabah sometime supply drinking water brought from Velanai by bowser.

The open dug well water have developed salainity and water in almost all the wells are brackish and not fit for consumption and other household needs.

**8. Employment**

The population in Nainativu are engaged in many sectors for their employment and income. The average income level in Nainativu is low when compared with urban sector. The employment distribution among major sector in Nainativu and it's characteristics are described below

**i. Agriculture (10%)**

The farming activities are conducted by the people in small scale for their livelihood. The cultivation is possible only for three months in monsoon season.(October -- December) In this background, few crops such as red onions, chillies and few variety of vegetables are only cultivatable in this village.

In off season, the farmers are engaged in other employment such as labour or small business.

**ii. Fisheries (50%)**

Fishermen in Nainativu are involved in small scale fishing activities using traditional fishing methods. They use small boats. The fisherman do not have investment for large scale deep see fishing and depend on financial investors from Jaffna and the catch in this area is transported to Jaffna by the investors.

**iii. Small Business (08%)**

Some people are engaged in business activities in the village. It includes retail shops, contracts, service type employment and middlemen job. However, all are in small scale invest-

ments and limited working capitals.

**iv. Skilled and Unskilled Labour (10%)**
Around 10% of the population in Nainativu are engaged in labour work permanently. Most of them are unskilled labour and others are engaged mainly in masonry and carpentry. There is no big workshop established in this village.

**v. State Sector (10%)**
A fair number of people employed in state sector organizations at various levels. They are employed within the island as well as neighbouring villages and other_ areas. Though the family members are working outside the village, the families are living in Nainativu.

**vi. Emigrant Workers and Entrepreneurs (10%)**
Due to lack of employment opportunity within the village and investment opportunity for entrepreneurs a certain number of people are employed out side the village and in foreign countries. The entrepreneurs have established their business in C)ther towns in the Jaffna Peninsula.

These people are living for their income earning purpose and visit Nainativu during temple festival seasons.

**vii. Others (02%)**
The remaining small group of people are engaged in other job not described above. Most of them are seasonal employment.

**Opportunities available for Development**

**1. Tourism**
Nainativu is a popular place for spiritual tourism among Hindus and Buddhist all over the world. Indelible glory and eternal preeminence to Nainatuvu is the Nagapooshani Amman Temple there. Pilgrims from all parts of Sri Lanka, South and North India visit this Island. for worship almost every day. It is estimated that at least 3,000 - 5,000 pilgrims visit every day and this number includes Hindus and Buddhists. There is a Buddhist Temple in this Island. The Buddhists believe that Buddha set his foot at Nainativu. Large number of people visit the Nagapooshani Amman Temple during the 15 days grandeur festival season when Ambal goes in her chariot blessing her devotees. Devotees throng at this temple disregarding the difficulties they come across as they sail through the rough seas in motorlaunches and sail boats.



**2. Fishing Industry**
Nainativu is surrounded by deep sea and there is ample opportunities for fishing. Local fishermen are engaged in fishing are exploited by Capitalists (Mudalali) as they give financial support and provide transport from Nainativu -Jaffna. The local residents are deprived of the supply for their daily meals. Majority of the residents depends on Sea food as there is no-cultivation of vegetables due to shortage of water and the unfavourable soil condition. Deep sea fishing could be developed by proper training and with the support of the Government Institutions.

Problems Identified
**Drinking Water Supply :**
As the Island is facing continuous drought between the month of February to October every year, the water levels in the wells got dry and people face immense hardship to satisfy their basic need for drinking water as well as household needs. A scientific study should be done for uninterrupted water supply through out the year. The National Water Supply and Drainage Board has embarked on a project recently to overcome this problem.

**Sea Erosion :** There is an acute sea erosion, as a result sea water infiltrate into the wells. The infiltration of sea water into the land area is a major problem affecting cultivation of food crops and the growth of trees such as Mango, Banana and other fruit trees. This small island is loosing its land area and it is feared that if the situation is not averted sooner this holy island might disappear from the geographical map.

**3. Health Problems**

The Divisional Hospital has no permanent Medical Officer. Retired Asst. Medical Practitioners are sent to deal with patients. This is not a satisfactory arrangement. The hospital need a permanent Medical Officer who is fully qualified and stationed in the hospital itself for service throughout day and night. There is no Dental Service though there is a cadre and the necessary equipments which are donated by people. The living quarters of the Paramedical Officers are in dilapidated conditions and not fit for human occupation. These short comings should be settled as early as possible.

**Sea Transport**
There are about fifty mechanical boats operating between Nainativu and Kurikadduvam except for four or five boats all other boats are fishing boats converted as passenger boats. The conditions of these boats is far below the standard and not suitable for transport of human beings. The boats are owned by private individuals and the owners are least worried about the passengers and their convenience. The Government must ensure that the boats are, fit for transport and that they are modernized to satisfy the basic need of passengers. The tourists often express their dissatisfaction over this state of affairs, but the authorities

have failed to solve this problem. The Government has spent a large amount of money to modernize the Ambal Jetty but the sea transport still remains in a poor state. This will not encourage tourism.

**Rehabilitation of Village Roads**

Condition of some village roads in the Island is in a deplorable state. They have not been maintained for well over 50 years. Listed below are some roads which need immediate attention for rehabilitation :-

i. Lane leading from Ambal Kovil South Lane upto First_ Cross Street - Length 01 Km - Location Ward No. 1.

ii. Lane leading from Makkitharai lane up to Alankulam Road - OlKm - Ward 2.

iii. Lane leading from Main Road upto Kaaddu Kanthasamy Kovil Road - 01 1/2Km - Ward No. 05.

iv. Lane leading from 3rd Cross Street upto Main Road - 1 1/2Km :._ Ward No. 05.

v. Meenadchi Amman Kovil South Lane- l/2Km- Ward 07.

vi. Lane from Vankalavady upto Malaiadi - Iyappan Temple - 01 Km - Ward No. 06.

**Tree .Planting and Environment Protection**

Global warming is a major issue that has received the attention of International Organizations. The effect of this is largely felt at Nainativu. The average rainfall has failed during the past 05 - 06 years. There is unbearable heat especially in this Island whereas the neighbouring Island Analaitivu has a favourable weather condition through out the year.

It is noted that the adverse weather condition in Nainativu is due to lack of trees to neutralize the warning conditions. Large number of trees were felled. The Electricity Board cleared the tall trees which provided shades and neutralized the climate condition. There is no planned tree planting and after care to protect them. There is no awareness among the people and the authorities concerned pay very little attention towards this. There is massive scope for tree planting and environmental protection. There is also large scale extraction of sea sand and water conserved in small ponds is bailed out for various purposes ignoring the advice consequences the people would face.

Prepared presented by
PK Paramalingam,
President - Nainativu Socio-Economic Education & Cultural Development Society





Pungudutivu Welfare Association (UK)
புங்குடுதீவு நலன்புரிச் சங்கம் (ஐ.இ)

Mr Sivasamy Premrajeenth
**President**

Mr Vellupillai Venukumar
**Vice President**

Mr Seevaratnam Sivasurathan
**Secretary**

Mr Thiru Thirunavakarasu
**Assistant Secretary**

Mr Kurumoorthy Barathithasan
**Treasurer**

Mr Sockalingam Ananthalingam
**Assistant Treasurer**

Mr Sivapathasuntharam Jeyathasan
**Sport Coordinator**
**Committee Members:**
Mr. K.Kumaran
Mr. T. Sivapalan
Mr. K. Sivananthan
Mr. K. Sivatheeswaran
Mr. R.Sivaganesh
Mr. N. Nimalan
Mr. N.Karna
Mr K. Murugathas
Mrs Gowry
Mr S. Sivatheepan
Mr K.Sivakumar
**Youth Forum :**
Mr Thian Thirugnanasampanther
**President**
Mr.V.Ravindrakumar
Ms.M.Karunalingam
Ms.T.Yogalingam
**Trustees & Founder Members**
Dr S Shanmugalingam
Mr T Manmatharajah
Mr S Karunalingam
Mr S Kirubananthavel
Mr S Mohanansuntharam
Mr S Premananthan
Mr M Sivapalan
Mr K Vakan

Pungudutivu Welfare Association (UK)
99 Drake Road,
Rayners Lane,
Harrow,
Middlesex HA29DZ

*புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே*
*ஒப்புரவின் நல்ல பிற. (குறள் 213:)*

விளக்கம்: **“தேவர்கள் உலகத்திலும் இப்பூவுலகிலும், உழைக்க முடியாதவர்க்கு உதவுவது போன்ற வேறு நல்ல செயல்களைப் பெறுவது கடினம்.”**

என் அன்பிற்கும் பாசத்திற்குமுரிய என் அயலூர் உறவுகளே!, "மேகலை" என்ற வெள்ளி விழா மலரினூடாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் இன்று தனது சேவையில் 25 வருடங்களை முடித்து நிற்பதை பெருமையுடன் பார்க்கிறேன். கைமாறு கருதா மழை தரு மேகமாய் நீங்கள் செய்திடும் உதவிகள் வாழ்விழந்து,வலுவிழந்து வாடிய பயிராய் வாழும் நம்மவர்க்கு பேருதவியாக அமைகிறது. உங்கள் சேவை தொடர மனதார வாழ்த்துகிறேன்.
தொன்று தொட்டு புங்குடுதீவும் ,நயினாதீவும் பல்வேறு வேலைத் திட்டங்களில் இணைந்து செயற்பட்டதை நாம் அறிவோம்.அதற்குதாரணமாக பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் மற்றும் சாட்டி நீர் விநியோகம் என்பவற்றை கூறலாம். இது தவிர பல்வேறு சமய கலாச்சார இணைப்புக்களும், திருமண உறவுகளும் நம்மிருவருக்குமிடையே அதிகளவு நடை பெறுவதையும் நாம் அறிவோம். நான் நினைக்கிறேன் இவ்வுறவு கோவலன் காலத்திலிருந்தே நடந்திருக்கிறது. ஏனெனில் கோவலன் மனைவி கண்ணகியினை நாங்களும், கோவலன் துணைவி மாதவி -மகள் மணிமேகலையை நீங்களும் போற்றி வருவது வரலாறு.
எனவே என் அன்பிற்குரிய சொந்தங்களே, நாங்கள் இணைந்து செயற்பட வேண்டிய நேரமிது. ஏனெனில் நம்மைப் போன்ற சிறுதீவுகளின் அபிவிருத்தி என்பது மிகவும் சவாலான விடயமொன்று. அதற்கு காரணம் என்னவெனில் குறைந்த சனத்தொகை, குறைந்த கல்வியறிவுடையோர்,போதிய சுகாதாரமின்மை,போதிய போக்குவரத்துதின்மை,குறைந்தளவு தொழில்சார் அறிவு ,போதியளவு குடிநீர் இன்மை என்று பட்டியல் நீண்டு செல்கிறது.இவை எல்லாவற்றிக்கும் தீர்வு காண வேண்டுமெனில் புங்குடுதீவு - நயினாதீவு இணைந்து தனி பிரதேச சபையினை கோரவேண்டும். அவ்வாறு கோரும் பொழுது போதியளவு நிதியினை பெறமுடியும் .இதன் மூலம் ஓரளவு அபிவிருத்தியினை காண முடியுமென நான் நம்புகிறேன். எனவே இணைந்திடுவோம் தமிழராய் மட்டுமின்றி உறவுகளாகவும்.

நன்றி

சிவசாமி -பிறேம் றஜீந்த்.
தலைவர்
(புங்குடுதீவு நலன் புரிச் சங்கம்-பிரித்தானியா)

PWA UK is a registered charity in England and Wales - No. 1141097





## டென்மார்க்கிலிருந்து வாழ்த்துரை.



நயினாதீவு இலங்கையின் வட-பால் அமைந்து உலகெங்கும் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் அன்னை நாகபூசணியின் உறைவிடமாகும். மணிமே-கலை வலம் வந்தபுத்த பீடிகையின் காப்பியக்கதை சொல்லும் சான்றாக பௌத்தவிகாரையும் ஏனைய இஸ்லாமிய கிறிஸ்தவ மதபீடங்களும் அமையப்பெற்ற சர்வமதசந்நிதி எமது தாய்மண். இந்த மண்ணிலே பிறப்பது எல்லோருக்கும் கிடைக்கும் வாய்ப்பல்ல அது தவத்தின் பேறு. சமய வரலாற்றுடன் நிமிர்ந்த கோபுரங்களுடன் அலைகடல் தாண்டி வரும் பக்தர்களுக்கு பாம்புக்குடையின் பாகமாய் அமர்ந்து வேண்டிய வரமெல்லாம் கொடுத்து வரும் அன்னை தாயவளின் மடியிலே வந்துதித்த மாந்தர்கள் கல்வி வளம் குன்றாத கலைச்செல்வம் மிக்கவர்கள். துரதிர்ஷ்டவசமாக நாட்டின் போர்ச்சூழல் காரணமாக எம்மக்களில் பெருந்தொகையானோர் வெவ்வேறு நாடுகளுக்குச் சிதற வேண்டிய சூழல் உருவாகிற்று.

தக்கன் மகள் சிவன் பாகத்தாள் தாட்சாயினியின் உடல் பாகங்கள் விழுந்த இடமெல்லாம் பூலோகத்தில் சக்தி பீடங்களாக மாற்றி வழிபாடு நடக்கின்றன.அதில் ஒன்றுதான் எம் அன்னை புவனேசுவரி பீடம். இவ்வாறு போற்றிப் புகழ் பாடும் மண்ணிலே உதித்த மக்கள் தாங்கள் வந்தமர்ந்த மண்ணிலே தத்தமது சக்தியை நிலைநாட்டத் தொடங்கினார்கள். அந்த வகையில் தமக்கென ஒன்று சேரவும் கலாச்சார விழுமியங்களை வெளிப்படுத்தவும் வரும் கால சந்ததியினரிக்கு தமிழை கலையை வளர்க்கவும் தாம்பிறந்த மண்ணிற்கு தம்மாலான ஆக்க பூர்வ பங்களிப்பைச் செய்யவும் பிரித்தானிய நாட்டில் 1995 ல் உருவாக்கப்பட்டதே நயினை மணிமேகலை முன்னேற்றக்கழகம்.

இக்கழகம் தவழ்ந்து தத்தி நடை போட்டு நிமிர்ந்து இன்று எழுந்து வீறு நடை போட்டு 25 அகவை நிறைவில் புன்சிரிப்புடன் வலம் வந்து கொண்டிருக்கின்றது. புலம்பெயர் தேசத்தில் எத்தனையோ கழகங்கள் வந்தவழி தெரியாமல் மறைந்து போயுள்ள நிலையில் இக்கழகத்தை நேர்ப்படுத்தி வளம் குன்றாது பாதுகாத்த அனைத்து தலைவர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் அங்கு வாழ் நயினை மக்களுக்கும் முதற்கண் நன்றியையும் வாழ்த்துக்களையும் இத்தருணம் தெரிவித்து மகிழ்கின்றேன்.

இக்கழகமானது லண்டனில் அதன் வருடாந்த சிறப்பு நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக செய்து வரும் அதேவேளை தாம் பிறந்த மண்ணிலும் தரமான எதிர்கால மாணவச் செல்வங்களை உருவாக்கவெண்டுமென்ற தொலைநோக்கு பார்வையுடன் எமது ஊரில் மூன்று பாடசாலைகள் இருந்தும்











வீதி தோறும் இரண்டொரு பள்ளி என்ற மகாகவி பாரதியாரின் பாட்டிடை வரிகளுக்கு உதாரணமாக இன்னுமொரு பிரத்தியேக கல்வி நிலையத்தை நிறுவி அயல்தீவு மாணவர்களும் வந்து கற்கையை மேற்கொள்ளும் வகையில் இயங்கி வருவது பெருமைக்குரியதும் பாராட்டுதலுக்குரியதுமாகும்.

இவற்றிற்கெல்லாம் மேலாக இவர்களின் மனிதாபிமான செயற்பாடுகளான வளம் குன்றிய வன்னிமக்களுக்கு உதவுதல் கால்நடைவளர்ப்பு மரம் நடுதல் போன்ற இதரசெயற்பாடுகள் நாட்டின் தேவைகருதிய கையை எடுத்து வணங்க வேண்டிய முயற்சிகளாகும். நாளை ஒவ்வொரு மரமும் நிழல் தரும்போது அதனை உதாசீனம் செய்தவர்களும் ஒதுங்குவார்கள் என்பதை கவனத்திற்கொண்டு மேன்மேலும் இப்பணிகள் சிறப்பாகத் தொடர எனது நல்வாழ்த்துக்கள்.

அடுத்ததாக நான் மணிமேகலையுடன் எப்படி தொடர்பானேன் என்பதுபற்றி 30 வருடத்திற்கும் மேலாக டென்மார்க் நாட்டில் தமிழ்ப்பணியில் ஆசிரியராக கடமையாற்றி கலைத்துறையில் பல நிகழ்வுகளை நடாத்தி வரும் நான் 2016 2017 மணிமே-கலை முன்னேற்றக்கழகத்தின் பொங்கல்விழாவில் எனது நாடகக்குழுசமேதம் பங்கு கொண்டு கண்ணகி, தமிழ் அவமானமல்ல அடையாளம், பிரளயம் ஆகிய மூன்று நாடகங்களை வழங்கி அவர்கள் விழாவைச்சிறப்பித்து பெருமகிழ்வடைந்தேன். அந்நிகழ்வில் நிற்கும் பொழுது நயினை மண்ணில் உண்மையான மேகலை அரங்கில் ஒரு நிகழ்வை நடாத்தியது போன்றஉணர்வே என்னுள் ஏற்பட்டது. அது மட்டுமல்ல அவர்கள் எம்மை உபசரித்த விதம் நமது சொந்த மண்ணுக்கே உரிய பண்பாடு எம்மை திகைக்க வைத்தது.அந்த நினைவாக சில நிழற்படங்கள் இணைத்துள்ளேன். இது காலம்காலமாக ஆவணப் படுத்தலுக்காகவும் ஞாபகப்படுத்தலுக்காகவுமே பதிவிட்டுள்ளேன்.



நயினை மணிமேகலை முன்னேற்றக்கழகமானது நல்வழிப்பாதையிலே சென்று கொண்டிருப்பதை நம் கண்ணுடாகக் கண்டு மகிழ்கின்றோம். நம் காலில் கல்லடி பட்டால் காலையோ கல்லையோ புரட்டிப் போடுவதில்லை வலிகளைத்தாங்கிக் கொண்டே அடுத்த அடி நகர்கின்றோம். இது புலம்பெயர் தேசத்தில் யதார்த்தம் எனினும் எல்லாவற்றையும் தாண்டி இன்று நீங்கள் இளையோர் அணியுடன் புயல் வேகத்தில் புறப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் வெற்றி நிச்சயம். வீறு நடை போட்டிடுவீர் வாழ்க உங்கள் மணிமேகலை முன்னேற்றக்கழகம். வளர்க இளையோர் அமைப்பு என்று அகமகிழ்வுடனும் அன்புடனும் 25 ஆண்டு நிறைவுநாளில் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

அன்புடன்
ஆசிரியர்: கலை தில்லைநாதன்
கவின் கலைத்தமிழ் பரடேசியா டென்மார்க் -- 12.03.2020

# VELANAI ONRIYUM – UK

**Members: 2019-21**

**Chairperson**
Mr V Ilansei

**Secretary**
Mr T Kalaiventhan

**Treasurer**
Mr A Jeyagugan

**Assist. Chairperson**
Mrs P Arulrajah

**Assist.Secretary**
Mrs M Jegatheeswaran

**Assist. Treasurer**
Mr S Sivachandran

**Committee Members**
Mr T Sivakumaran
Mr B Kajendran
Mrs K Arulan
Mrs C Gajanrajh
Mr S Mugunthan
Mr P Sri
Mr G Gnananthan
Mr S Satheesan
Mr K Ramachandran

## வாழ்த்துச்செய்தி

நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் இவ்வாண்டு தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடுவதையறிந்து மகிழ்வடைகின்றேன். இதனை முன்னிட்டு வெளியிடப்படும் வெள்ளிவிழா மலருக்கு நான் சார்ந்த கிராமிய ஒன்றியமான வேலணை ஒன்றியம் பிரித்தானியா சார்பாக ஓர் வாழ்த்துச் செய்தியை இங்கு பதிவிடுவதில் மனநிறைவடைகின்றேன்.

கடந்த அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக எம் தாயகத்தில் நடந்துவரும் இனமுரண்பாடுகளினால் நம்மில் பலர் குடிபெயர்ந்து உலகின் பல நாடுகளிலும் சிதறுண்டு வாழ்ந்து வருகின்றோம். இவ்வாறு நாம் புலம்பெயர்ந்து வந்தாலும் எம் நாட்டை எம் மக்களை எம்மூரை மறவாது இங்கு சங்கங்கள் பல அமைத்து எம் புலத்து மக்களுக்கு பல பயனுள்ள உதவிகளைச் செய்து வருகின்றோம். இந்த வகையில் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம்இ கடந்த 25 வருடங்களாக புலத்தில் வாழ்கின்ற நயினை மக்களின் முன்னேற்றத்திற்கு பல வழிகளிலும் உதவி வருவதும் இங்குள்ள ஊர் மக்களை ஒன்றுகூட்டி விழாக்களை நிகழ்த்திவருவதும் பாராட்டுதலுக்குரியதே.

இன்று யாழ் தீவுப்பகுதிகளில் மிகவும் குறைவான மக்களே வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் பெரும்பான்மையானோர் பொருளாதரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளார்கள். விவசாயம்- மீன்பிடித்தல்- சிறுகுடிசைக் கைத்தொழில்கள் என்பன முடங்கப்பட்ட நிலையில் உள்ளன. கல்வியின் தரமும் மருத்துவ வசதிகளும் குறைவாகவே உள்ளது. இப்பேர்ப்பட்ட சூழலில் இம் மக்களுக்கு புலம்பெயர்ந்து வாழும் எம் மக்களின் ஆதரவும் உதவியும் நிறையவே தேவைப்படுகின்றது. இதனை நன்குணர்ந்து பணியாற்றி வரும் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் சேவைகள் பாராட்டுதலுக்குரியது.

நயினையில் அமைந்துள்ள புகழ்மிக்க நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தை தரிசிக்க பல்லாயிரக் கணக்கான மக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து வருடந்தோறும் சென்று வருகின்றார்கள். இவ்வாறு வரும் மக்களுக்கு கடற்சிற்பிகள் பனம்பொருட்கள் போன்ற உள்ளூர் பொருட்களை ஊர் மக்கள் விற்பனை செய்வதற்கு கூடுதலான உதவிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் ஊரவர் ஒரு சிலரின் வருமானத்தையும் கூட்டமுடியும்.

வெள்ளிவிழாக் கண்டிடும் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் விழா சிறப்பாக நடந்திடவும் சங்கத்தின் பணி சிறப்புடன் தொடர்ந்திடவும் வாழ்த்துகின்றேன்.

**எம் ஊரின் அபிவிருத்தியினூடே எம் ஊரவரின் உயர்விற்கு வழியமைப்போம்**

நன்றி..
அன்புடன்

வேந்தனார் இளஞ்சேய்
தலைவர்
வேலணை ஒன்றியம் பிரித்தானியா
12.03.2020

**37,Ladywood Road,Surbiton, KT6 7PB**

**Chairperson:** 07855558019 **Secretary:** 07930543057 **Treasurer:** 07932745331



# நெடுந்தீவு ஒன்றியம், ஐக்கிய இராச்சியம்

## வாழ்த்து செய்தி

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனிசிறந்தனவே" என்பதனை உலகெங்கும் சிதறிவாழும் புலம்பெயர் இனங்களெல்லாம் அனுபவித்து அறிந்துள்ளார்கள். அதனை மெய்ப்பிக்கும் முகமாக எமது மக்கள் தாம் புகலிடம் தேடிய நாடுகளில் தமது ஊர் சார்ந்த அமைப்புக்களை உருவாக்கி தாம் பிறந்து வளர்ந்த மண்ணிற்கும் மக்களுக்கும் தமிழ் இனத்திற்கும் தம்மாலான உதவிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

அந்தவகையில் மத, வரலாற்று ரீதியாக பல்வேறு சிறப்பம்சங்களை கொண்டதும் சர்வமத சந்திதியாக விளங்குவதுமான நயினாதீவினை சேர்ந்த பிரித்தானியா வாழ் மக்கள் தமது தீவின் வரலாற்றுடன் தொடர்புடைய மணிமேகலையின் பெயர் தாங்கி "நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம்" என்ற அமைப்பினை கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னதாகவே உருவாக்கி தமது ஊருக்கும், தமிழ் இனத்திற்கும் உதவி வருகின்றார்கள். தமது செயற்பாடுகளால் சிறப்புற்று இன்று வெள்ளிவிழாக்காணும் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தினை வாழ்த்துவதில் அயற்தீவு ஒன்றியமான எமது ஒன்றியம் பெருமகிழ்வடைகின்றது.

நயினாதீவிற்கும் நெடுந்தீவிற்கும் இடையில் வரலாற்று ரீதியாக மட்டுமன்றி திருமண உறவுகளினூடாகவும் நெருங்கிய தொடர்புண்டு. நெடுந்தீவானது ஆழ்கடல் நடுவே நீண்ட தூரத்திற்கப்பால் இருந்தாலும் எமது கடல் பயணப்பாதையில் என்றும் காணக்கிடைப்பது நயினாதீவே.

புலம்பெயர் தீவக அமைப்புக்களான எமது அமைப்புக்கள் தீவகத்தின் கல்வி, சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் இணைந்தது செயற்படவேண்டும் என்ற அன்பான வேண்டுகோளினையும் இந்த சந்தர்ப்பத்தில் முன்வைத்து உங்களின் நோக்கம், பணி, செயற்பாடுகள் மேலும் சிறக்கவும் வெள்ளிவிழா மலர் சிறப்புற வெளிவரவும் வெள்ளிவிழா நிகழ்வுகள் சிறப்புற இடம்பெறவும் பிரித்தானியா வாழ் நெடுந்தீவு மக்களின் சார்பில் மனதார வாழ்த்துகின்றோம்.

நன்றி
அன்புடன்
சு. இரட்ணராசா
தலைவர்
நெடுந்தீவு ஒன்றியம்
ஐக்கிய இராச்சியம்

Karai Welfare Society(UK)
காரை நலன்புரிச்சங்கம் (UK)
127 Cassiobury Drive, Watford, Herts WD17 3AH, UK
Tel 01923 226000, Fax 01923 238289, email: info@karainagar.org
www.karainagar.org Charity No 1126413

பங்குனி 09, 2020

**"மணிமேகலை" மேன்மேலும் மணிமகுடம்சூட வாழ்த்துக்கள்.**

வெள்ளிவிழா காணும் **நயினை மணிமேகலை முன்னேற்ற கழகத்திற்கு** எமது சிரம்தாழ்த்திய வாழ்த்துக்கள்,

"'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே -அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்த்து
சிறந்ததும் இந்நாடே - இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தியென்
வாயுற வாழ்த்தேனோ?

வாழ்க உங்கள் சமூகப் பணி,

உங்கள் சேவை மேன்மேலும் மெருகுற எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரேஸ்வரரை வேண்டி வாழ்த்துகிறோம்.

உங்கள் அழைப்புக்கு நன்றி.

வணக்கம்

பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கம்

President: Mr M Yogarajah 07881 650 375
Secretary: Mr J Nadarajah 07590 189 831
Treasurer: Mr R Tharsan 07414 618 368



**வாழ்க மணிமேகலைக முன்நேற்றக் கழகம்!**

நயினை மணிமேகலை முன்நேற்றக் கழகம் இன்று வெள்ளிவிழாக் காண்கிறது. அந்த மகிழ்வான நிகழ்வைப் பதிவுசெய்கிறது இந்தச் சஞ்சிகை. அதில் என்னையும் எழுதவைத்த அன்பு உள்ளங்களுக்கு முதலில் நன்றி.

உபசரிப்பு, விருந்தோம்பல் ஆகிய பண்புகளில் தன்னிகரற்ற அமைப்பு இது. அதை ஆரம்ப காலத்திலிருந்தே ஆண்டுதோறும் அவதானித்து வருகிறேன். முதலாவது விழாவுக்கு என்னை அழைத்த நிகழ்வு முந்தநாள் போல இன்னும் பசுமையாக நினைவில் உள்ளது. அதற்குள் அத்தனை ஆண்டுகள் ஓடிவிட்டனவா என்று நம்பமுடியவில்லை.

நிகழ்ச்சிகளில் நகைச்சுவை கலந்த நாடகங்கள், சிந்திக்க வைக்கும் சிறப்புச் சொற்பொழிவுகள், கலகலப்பான கவியரங்கங்கள், பலரும் விரும்பும் பட்டிமண்டபங்கள் எனப் பல நிகழ்வுகள் அன்று பார்த்தவை, இன்றும் மனத்திரையில் ஓடுகின்றன. நிகழ்ச்சி நிறைவாகும்போது நமது வயிறும் நிறைவாக அதிசுவையான அமுது!

புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் பிறந்த மண்ணை மறக்காத நயினை மக்கள் தங்கள் ஊருக்கு நல்லதைச் செய்ய உருவாக்கிய இந்த நிறுவனம் தொடர்ந்தும் நற்பணி செய்யவேண்டும் என்பதே நம் பேரவா. வாழ்க நயினை மணிமேகலைக் கழகம், வளர்க அவர்கள் தொண்டு.

அன்புடன்
திரு. கு. ஜெகதீஸ்வரம்பிள்ளை
கழகத்தின் அபிமானி

யா/நயினாதீவு மகா வித்தியாலயம்
J/NAINATIVU MAHAVIDYALAYAM
යා /නයිනාතීවු මහාවිද්‍යාලය
Nainativu,
Sri Lanka

TP: 0213207588 email: nainativumv@gmail.com

## "வாழ்த்துச் செய்தி"

நயினாதீவு மணிமேகலை முன்னேற்றக்கழகம் பிரித்தானியா- மலர்ந்து 25 ஆண்டுகள் பூர்த்தி அடைந்து வெள்ளிவிழாக் கண்டு நிற்பதையிட்டு யான் பெருமகிழ்வு அடைகின்றேன். கல்வி, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றையும் கடந்து சமய, சமூக, அறப்பணிகளையும் ஆற்றிய பெருமை இக்கழகத்திற்கு உண்டு. அந்த வகையில் நயினாதீவு மாணவர்களின் கல்வியை கருத்தில் கொண்டு மணிமேகலை கல்வி நிலையத்தினை 30.06.2001ல் ஸ்தாபித்து தனது கல்விப்பணியினை இன்று வரை ஆற்றிவருகின்றது.

மணிமேகலைத் தெய்வத்தின் பெயரைத்தாங்கி நிற்கும் இக்கழகம் தான் பிறந்த மண்ணின் பெருமையை தொடர்ந்து பேணிக்காப்பதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன் சொந்த மண்ணை விட்டு புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்தாலும் "பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவை யாவிலும் நனி சிறந்தனவே" என்று பாடிய மகாகவி பாரதியாரின் வாக்கிற்கு அமைய வாழ்ந்து காட்டிவரும் நயினாதீவு மணிமேகலை முன்னேற்றக்கழகத்தினரின் செயற்பாடுகள் தொடர வேண்டும் என்றும் இதன் மூலம் எமது கிராம மக்கள் சிறப்புற்று வாழவேண்டும் என்றும் தங்களின் பணி மென்மேலும் சிறப்புற்று விளங்க வேண்டுமென்றும் மனதார வாழ்த்துகின்றேன்.

"வாழ்க நின் பணி வளர்க நின் தொண்டு"

திரு.வீ.ஓங்காரலிங்கம்,
அதிபர்,
யா/நயினாதீவு மகா வித்தியாலயம்.

V. Ongharalingham
Principal
J/Nainativu Maha Vidyalayam
Nainativu










யா/நயினாதீவு
# ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்
J/NAINATIVU
# SRI GANESHA KANISTA MAHAVIDYALAYAM
යා/ නයිනාතිවු
# ශ්‍රී කනේස කනිස්ඨ මහාවිද්‍යාලය

நயினாதீவு | Nainativu

திகதி: 06/02/2020.

## வாழ்த்துச் செய்தி

வெற்றிநடை போட்டு வெள்ளிவிழாக்காணும் நயினை மணிமேகலை முன்னேற்றக்கழகமானது (இலண்டன்) தனது இருபத்தைந்தாவது அகவையை கொண்டாடுவதனையிட்டு அதற்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் எமது பாடசாலைச் சமூகம் சார்பில் பெருமை கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

நயினை மண்ணின் மைந்தர்கள் வெளிநாடு சென்று வாழ்ந்தாலும் தனது ஊரையும் உறவையும் ஆழமாக நேசித்ததோடு மாத்திரம் அல்லாமல் இவ்வூர் மேம்பாடு அடையும் நோக்கோடு நயினை மணிமேகலை முன்னேற்றக்கழகம் (லண்டன்) என்னும் அமைப்பினை நிறுவி அதில் வெளிநாட்டு நயினை உள்ளங்களை ஒன்றிணைத்து நயினை மண்ணில் கல்வி, கலை சமய, பண்பாட்டு, பொருளாதார விழுமியங்களை மேம்படுத்தும் நோக்கோடு பல்வேறு அபிவிருத்திப் பணிகளை கடந்த இருபத்தைந்து வருடங்களாக அரும்பணி செய்வதையிட்டு எமது பாடசாலைச் சமூகம் சார்பில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறிப்பாக நயினாதீவிலுள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டை விருத்திசெய்யும் நோக்கோடு மணிமேகலை முன்னேற்றக்கழகத்தின் பெயரில் கல்வி நிறுவனமொன்றை அமைத்து மாணவர்களுக்கு இலவசமாக கல்வி புகட்டுவதோடு ஆசிரியர்களுக்கான வேதனத்தையும் வழங்கி ஊக்கப்படுத்திவருவது பாராட்டத்தக்க விடயமாகும். "தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும்" என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க இக்கழகமானது மென்மேலும் மேன்மையுற்று நற்பணி செய்திட வாழ்த்துவதோடு. நயினை செம்மணத்தம்புல ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானின் அருளை வேண்டுகின்றேன்.

அதிபர்

திரு.சின்னையா சிவேந்திரன்
SLPS-III
(B.A Hon's, M.A Spe in. Geog,
PGDE (Merit), MEd)

Mr.S.Siventhiran
Principal
J/Nainativu Sri Ganesha
Kanista Maha Vidyalayam





யா/நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம்
J/ NAINATIVU SRI NAGAPOOSHANY VIDYALAYAM
02 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
T.P.No : 021 300 3797
Ward No.02,
Nainativu.
Email : nagapoosany09019@gmail.com

## வாழ்த்துச் செய்தி

வெள்ளி விழாக் காணும் நயினாதீவு மணிமேகலை முன்னேற்றக் கழகத்தினை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன். பாடசாலைகளுக்கு இணையான வளங்களைக் கொண்டு எமது பிரதேச மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் அரும்பாடு பட்டுச் செயற்படும் நிர்வாகத்தினருக்கும், உள்நாட்டு உறவுகளுக்கும், வெளிநாட்டு உறவுகளுக்கும் பாராட்டுதல்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பணிகளைத் தொடர்ந்து செயற்படுத்தி எமது பிரதேச மாணவர்கள் உயர் நிலை-லகளைப் பெற வழிவகை செய்ய வேண்டுமென வேண்டிக் கொள்கின்றேன். உங்கள் பணிகளுடன் எமது பாடசாலைச் சமூகம் தொடர்ந்து இணைந்திருக்கும் என்பதை அறியத்தருவதுடன் எங்கள் அனைவரையும் நயினை நாகபூ'ணி அம்பாள் வழிப்படுத்தி அருள் பாலிக்கத் தாயவள் பாதம் பணிந்து வணங்குகின்றேன்.
நன்றி.

திரு. ந. முருகவேல் (SLPS 3)NDT(SC)Bed
அதிபர்.
யா-நயினாதீவு ஸ்ரீ நாகபூ'ணி வித்தியாலயம்
நயினாதீவு.





# கழக அங்குரார்ப்பணம்
# 16/07/1995



16-7-1995 அன்று திரு. திருமதி சுவாமிநாதன் குடும்பத்தினர்
மங்கள விளக்கேற்றி கழகத்தினை அங்குரார்ப்பணம் செய்து வைக்கின்றார்கள்















அம்பாள் கோவில் இறங்குதுறை



பௌத்த கோவில் இறங்குதுறை



தெற்கு (பங்களாவடி) இறங்குதுறை



நயினை மணிமேகலை கழகத்தினர் லண்டனில் நடத்திய விழா!



## நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் நோக்கங்களும் செயற்திட்டங்களும்

திரு அ.பஞ்சானந்தராஜா, திரு சு. வரதன், திரு சோ. சற்குணநாதன், திரு க. புவனேஸ்வரா, திரு மா. சுரேந்திரன் மற்றும் திரு க குகராசா ஆகிய நயினை மைந்தர்களின் சிந்தனையால் கருக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டு பிரித்தானியா வாழ் நயினை மக்களின் ஓர் பொது அமைப்பாக அங்கத்தவர்களினால் தெரிவுசெய்யப்படும் நிர்வாகக்குழுவினால் 16/07/1995 அன்று முதல் செயற்பட்டு வருகின்றது.

திரு மா.சந்திரபாலன், திரு அ.பஞ்சானந்தராஜா, திரு இ.சதாசிவம், திரு கு.முரளிதரன், திரு இ.குலநாதன் ஆகியோர் கொண்ட குழுவின் முயற்சியால் கழகத்திற்கான யாப்பு 1995 இல் உருவாக்கப்பட்டது.

பிரித்தானிய தொண்டு நிறுவன ஆணைக்குழுவில் (Charity Commission) 10/03/1998 அன்று திரு இ.சதாசிவம் அவர்களின் முயற்சியால் பதிவு செய்யப்பட்டது.

பிரித்தானிய வருமான வரி திணைக்களத்தில் (HMRC) 02/2019 அன்று திரு யோ. ஜயகாந் அவர்களின் முயற்சியால் பதிவு செய்யப்பட்டது.

**நோக்கங்கள்**

1. பிரித்தானியாவில் பரந்து வாழும் நயினை உறவுகளை ஒன்றிணைத்தல்.
2. நயினாதீவிலுள்ள மக்களின் கல்வி சமூக கலாச்சார பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றத்திற்கு உதவுவதனூடாக அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துதல்.
3. அவசரகால நிலமைகளின்போது நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் மக்களுக்கு உதவுதல்.

**செயற்றிட்டங்கள் - பிரித்தானியா**

1. பிரித்தானியாவிலுள்ள நயினை உறவுகளை ஒன்றிணைக்க வருடாந்தம் கலை விழா, பொங்கல் விழா மற்றும் விளையாட்டு விழாக்களை நடாத்தி வருகின்றது.
2. பிரித்தானியாவிலுள்ள நயினை இளையோரை கழக செயற்பாடுகளில் ஒன்றிணைக்க இளையோர் ஒன்றுகூடல்களை ஏற்பாடு செய்து ஊக்கப்படுத்துகின்றது.
3. COVID-19 நோய்த்தொற்று பரவல் காலத்தில் பிரித்தானிய வைத்தியசாலை பணியாளர்களுக்கு அவசரமாக தேவைப்பட்ட முகக்கவசம் மற்றும் கையுறைகளை கொள்வனவு செய்ய வைத்திய சாலைகளுக்கு உதவும் Imperial Health Charity என்ற தொண்டு நிறுவனத்தினூடாக பிரித்தானிய சுகாதார சேவைக்கு நிதிப்பங்களிப்பினை கழகம் வழங்கியது.
4. COVID-19 நோய்த்தொற்று பரவல் காலத்தில் பிரித்தானியாவில் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவ Barnardo's என்ற தொண்டு நிறுவனத்திற்கு நிதியுதவி செய்தது.

5. COVID-19 நோய்த்தொற்று பரவல் காலத்தில் மக்களின் விழிப்புணர்விற்காக "COVID-19 உம் எதிர்காலமும்" என்ற இணையவழி (Zoom) கருத்தரங்கொன்றினை பிரித்தானியாவிலும் தாயகத்திலும் உள்ள நயினை மண்தந்த வைத்திய அதிகாரிகளை ஒன்றிணைத்து செயற்படுத்தியது.

6. COVID-19 நோய்த்தொற்று பரவல் காலத்தில் பிரித்தானிய தேசிய அதிஷ்டலாப சீட்டிழுப்புச் சபை (National Lottery) இன் சமூக உதவு நிதியினைப் (Community Fund) பெற்று பிரித்தானியாவில் அகதி அந்தஸ்த்துக்காக விண்ணப்பித்து உணவிற்காக சிரமப்பட்ட பல்வேறு நாடுகளை சேர்ந்த மக்களுக்கு உதவியதுடன் கிங்ஸ்டன் என்ற இடத்திலுள்ள உணவு வங்கிக்கும் உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து வழங்கியது.

<u>செயற்றிட்டங்கள்- நயினாதீவு</u>

1. வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டினை கருத்தில் கொண்டு அவர்களிற்கு இலவச மாலை நேர மேலதிக வகுப்புக்களை நடாத்துவதற்காக கழகம் நயினாதீவு இரண்டாம் வட்டாரத்தில் காணியினை கொள்வனவுசெய்து வகுப்பறைகள் மற்றும் கணனி அறை என்பவற்றை நிர்மாணித்து மாணவர்களுக்கு இலவச மேலதிக வகுப்புக்களை தொடர்ந்து நடாத்தி வருகின்றது. இந்த திட்டமானது நயினாதீவின் கல்வி வளர்ச்சியினை நோக்காக கொண்டு கழகத்தினால் முன்னெடுக்கப்படும் ஓர் முக்கியமான பெரிய திட்டமாகும்.

2. பிரதான வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்த காலத்தில் ஆலங்குளம் வீதி புனரமைப்பிற்கு கொழும்பில் இருந்து செயற்படும் நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாச்சார அபிவிருத்திச் சங்கத்திற்கு நிதிப் பங்களிப்பு செய்யப்பட்டது.

3. நயினாதீவில் பசுமை புரட்சியொன்றினை ஏற்படுத்தி இயற்கை சூழலை பாதுகாக்க ஊரின் பல பகுதிகளில் நிழல் மர நடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

4. நயினாதீவில் வைத்திய வசதியினை மேம்படுத்த சேர்மனிய செஞ்சிலுவை சங்கம் ஒன்றின் அனுசரணையுடன் புதிய வைத்தியசாலை அமைப்பதற்காக நிதிப்பங்களிப்பு செய்யப்பட்டது.

5. நயினாதீவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் வாழ்வாதாரமிழந்த மக்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

6. ஒவ்வொரு ஆண்டும் புலமைப்பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு அவர்களின் பெயரில் ஊக்குவிப்புத்தொகையை வங்கியில் வைப்பிலிட்டு வழங்கி வருகின்றது.

7. COVID-19 நோய்ப்பரவல் காலத்தில் எம் உறவுகளிற்கு உலர் உணவுப் பொதிகளை வழங்க ஏனைய நயினாதீவு புலம்பெயர் கழகங்களுடன் இணைந்து நிதி வழங்கி உதவியது.

8. நயினாதீவு வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியினை புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



<u>செயற்றிட்டங்கள்- ஏனைய பிரதேசங்கள்</u>

1. 2004 திசம்பரில் சுனாமி பேரனர்த்தம் ஏற்பட்டபோது "வெண்புறா" என்ற தொண்டு நிறுவனத்திற்கு நிதியுதவி செய்ததன் மூலம்பாதிக்கப்பட்ட தமிழ் உறவுகளுக்கு கழகம் உதவியது.

2. வன்னியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு விழிப்புலனிழந்தவர்களின் வாழ்வாதாரத்திற்காக வன்னி விழிப்புலனற்றோர்சங்கத்திற்கு "ஆபுத்திரன்" என்ற பெயரில் பல ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய மற்றும் கால்நடை பண்ணை ஒன்று அமைத்துகொடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது கழகத்தினால் நயினாதீவிற்கு வெளியே தமிழ் மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு முன்னெடுக்கப்பட்டதோர் பாரிய திட்டமாகும்.

3. வன்னியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களுடன் தேவையானபொருட்களை வவுனியாவில் செயற்படும் "தமிழ் விருட்சம்" என்ற தொண்டு நிறுவனத்தினூடாக கழகத்தினால்வழங்கப்பட்டது.

4. மட்டக்களப்பில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி மக்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையினூடாக பாய்கள் மற்றும் போர்வைகள் கழகத்தினால் வழங்கப்பட்டது.

5. COVID19 நோய்த்தொற்று பரவல் காலத்தில் வன்னிப்பகுதியில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வவுனியாவில் செயற்படும் "தமிழ்விருட்சம்" என்ற தொண்டு நிறுவனத்தினூடாக பால்மா மற்றும் சத்துணவுப் பொதிகளை கழகத்தினால் வழங்கப்பட்டது.







அண்மையில் ஆலங்குளம் வீதியானது நயினாதீவு சமூக, பொருளாதார, கல்வி, கலாசார அபிவிருத்திச் சங்கத்தினரால் இலண்டன், கனடா மற்றும் வெளிநாடுகளில் வாழும் நயினை மக்களின் பாரிய பங்களிப்புடனும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு யாழ்மாவட்ட அரச அதிபர் திரு.கே.கணேஸ் அவர்களினால் 2005ம் ஆண்டு ஆனி மாதம் 18ம் திகதியன்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது

# நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் கல்வித்திட்டம்

நயினாதீவு மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்த கழகம் ஆவன செய்ய வேண்டும் என்ற கருத்து 2005ம் ஆண்டு நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் உபதலைவராக இருந்த அமரர் திரு ந. செல்வநாயகம் அவர்களினால் முன்மொழியப்பட்டது. இந்த முன்மொழிவு கழகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கழகத்தின் ஒப்புதலுடன் அதற்கான காணி நயினாதீவு 2ஆம் வட்டாரத்தில் தனியாரிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு கழகத்தின் பெயரில் உறுதி மாற்றப்பட்டு அமரர் திரு ந. செல்வநாயகம் அவர்களினால் கழகத்திற்கு கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்க மூன்று வதுப்பறைகளைக்கொண்ட கட்டடத்தொகுதியொன்றைக் கட்டவேண்டுமென கழகத்தால் தீர்மானம் எடுக்கப்பட்டது. இத்திட்டத்தினை முன்னெடுக்க வங்கி கணக்கு திறக்கப்பட்டு மக்களின் நிதிப்பங்களிப்புடன் பணம் வைப்பிடப்பட்டு 2005 ஆம் ஆண்டு பிற்பகுதியில் நிர்மாண பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டு முற்பகுதியில் ஏறக்குறைய £5,500 செலவில் மூன்று வகுப்பறையுடனான கட்டடத்தொகுதி நிர்மானிக்கப்பட்டது.

கழகத்தின் இந்த கல்வி திட்டம் சிறப்புடன் இடம்பெற நயினாதீவில் உறுதுணையாக இருந்து செயற்பட்ட அமரர்கள் திரு. துரைமணி, திரு சி சிவானந்தன் மற்றும் தற்போது ஆசிரியையாக பணிபுரியும் செல்வி சௌத்தரி நாகமணி ஆகியோரின் உதவியுடன் 2006 ஆம் ஆண்டிலிருந்து திரு க ஜீவசீலன் ஆசிரியரை முதன்மை ஆசிரியராகக்கொண்டு, பாடங்களுக்கு திறமை வாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களை முதன்மைப் பாடங்களாகக் கொண்டு கழக உறுப்பினர்களின் நிதிப்பங்களிப்புடன் நடைபெற்று வந்தது. எனினும் அன்றைய போர் சூழ்நிலை மற்றும் தொடர்புச்சிக்கல்கள் காரணமாக கழகத்தின் கல்விக்கூடத்தில் இடம்பெற்றுவந்த கல்விச்செயற்பாடுகளில் தேக்கநிலை ஏற்பட்டு இயங்காத முடியாத நிலைமை உருவானது.

அதனைத்தொடர்ந்து 2015 ஆம் ஆண்டு திரு தி. ஜீவேந்திரனை தலைவராகக்கொண்ட நிர்வாகசபைக் கூட்டத்தில் கல்விக்கூடம் சேதமுறுவதாகவும்,வேலிகள் அறுக்கையின்றி இருப்பதாகவும்,கல்விப்பணி தொடர கழகம் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி நிர்வாகசபையின் ஒத்துழைப்புடன், திரு தி ஜீவேந்திரனின் £3,750.00 நிதிப்பங்களிப்பில் கல்விக்கூடத்தின் கட்டப்பகுதி புனரமைக்கப்பட்டு, வேலிகள் அறுக்கை செய்யப்பட்டு, முன் மதிலும் கட்டப்பட்டது. கல்விப்பணியினை ஆரம்பிக்க திரு க ஜீவசீலன் ஆசிரியரை மீண்டும் அணுகியபோது அவர் அதற்கு மனமுவந்து ஒத்துழைப்புத்தந்தார். அந்தவகையில் கழகத்தின் கல்விப்பணியானது கழக உறுப்பினர்களின் நிதி பங்களிப்புடன் சிறப்புற நடைபெற்று வந்ததுடன் எமதூர் மாணவர்களுடன் எமது அயற்தீவு மாணவர்களும் பயன்பெற்றனர்.

கழக கல்விக்கூடத்தில் கல்விச்செயற்பாடுகள் சிறப்புடன் இடம்பெறவே மாணவர்களின் வரவு அதிகரித்தது. கல்விச்செயற்பாடுகளை மேலும் சிறப்பாக முன்னெடுக்க மூன்று வகுப்பறை போதுமானதாக இருக்கவில்லை என்பதுடன் மாணவர்களுக்கான மலசலகூடவசதி மற்றும் தண்ணீர்வசதி என்பனவும் இல்லாதிருந்தது. மாணவர்கள் தங்கள் கற்றல் செயற்பாடுகளை வெளியில் இருந்து மேற்கொள்ளவேண்டி இருந்தது. மாணவர்களின் வகுப்பறை இடப்பற்றாக்குறையினை திரு க ஜீவசீலன் ஆசிரியர் அவர்கள் கழக நிர்வாகத்திற்கு தெரியப்படுத்தினார். அதனைத்தொடர்ந்து இதுவிடயம் தொடர்பில் கழக நிர்வாகசபையினரால் ஆராயப்பட்டு புதிய கட்டடத்தொகுதியினை கணனி வசதிகளுடன் நிர்மானித்து, மலசலகூட வசதி மற்றும் தண்ணணீர் வசதி என்பன ஏற்படுத்தி கல்விப்பணியானது மென்மேலும் சிறப்புற இடம்பெற ஆவன செய்யவேண்டுமென தீர்மானங்கள் எட்டப்பட்டு அனைத்து அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடன் நிதிபங்களிப்பிற்காக எமது உறவுகளை நாடியபோது நிதிப்பங்களிப்பு தந்ததோடுமட்டுமல்லாது நல்லறிவுரைகளையும் கூறி ஊக்கப்படுத்தினார்கள்.

அவர்கள் அனைவரது நிதிபங்களிப்புடனும் ஆதரவுடனும் புதிய கட்டடத்தொகுதியை வகுப்பறைகள், 10 கணனி வசதிகள் கொண்ட கணனி அறை, சிறிய நூலகம், மலசலகூடம் என்பவற்றை கொண்டதாக 2016 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டதுடன் வகுப்பறைகளுக்கு புதிய தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த கல்விக்கூட விரிவாக்கல் திட்டத்திற்கு கழகம் £32,000.00(LKR 6,797,152) இனை நன்கொடைகளில் இருந்து செலவு செய்தது. கல்விப்பணி இடையூறின்றி தொடரவேண்டும் என்ற உயரிய நோக்கில் எமது பிரித்தானிய தாய் கழகத்துடன் இணைந்து பயணிக்க நயினாதீவில் சேய்க்கழகம் ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்ற கருத்து கழக நிர்வாகசபையில் முன்வைக்கப்பட்டபோது எமது ஊரில் சமூக சேவையில் ஈடுபடும் அன்பர்களை இனம்கண்டு அவர்கள் இணைத்து நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் - நயினாதீவு என்ற பெயரில் அமைப்பினை உருவாக்கி, அதற்கான யாப்பினை உருவாக்கி, கழக யாப்புக்குட்பட்டு வேலணை பிரதேசசெயலகத்தில் பதிவுசெய்ததுடன் கல்விக்கூடத்தை தனியார் கல்விக் கூடமாக பதிவுசெய்து (பதிவு இலக்கம்: j/v/cop/2017/05) செயற்படுத்திவருகின்றோம்.

திரு ஜீவசீலன் ஆசிரியரை தொடர்ந்து ஓய்வுநிலை ஆசிரியர் திரு ஐ திருவாசகநாதர் அவர்களையும் அதனை தொடர்ந்தது ஓய்வுநிலை ஆசிரியை செல்வி இ ஜெயலெட்சுமி அவர்களை முதல்மை ஆசிரியராக கொண்டும் கழக கல்விககூடத்தில் கல்விப்பணி கழக உறுப்பினர்களின் நிதி பங்களிப்புடன சிறப்புற நடைபெற்று வந்ததோடுமட்டுமல்லாது, ஐந்தாம் வகுப்பு உயர் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான ஊக்குவிப்புத்தொகையாக LKR 25,000 தினையும் வழங்கி வருகின்றோம்.

COVID -19 நோய்த்தொற்று பரவல் காரணமா தனியார் கல்விறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் அரச அறிவுறுத்தல்களுக்கமைய கழக கல்விக்கூடத்தின் கற்பித்தல் செயற்பாடுகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. நிலைமை சீரடைந்ததும் கற்பித்தல் செயற்பாடுகல் மீள ஆரம்பிக்கப்படும் அதேவேளை மாணவர்களும் பாடசாலை இடைவிலகியோரும் பயன்பெறக்கூடியவகையில் செயற்திட்டத்தினை விரிவுபடுத்துவதற்கான முன்மொழிவுகளை ஆராய்ந்துவருகின்றோம்.

நயினாதீவு மக்களின் கல்வித்தரத்தினை உயர்த்துவதற்கு கழகம் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புவதுடன் நயினாதீவிலுள்ள மாணவர்களும் பெற்றோர்களும் சிந்தித்து பயன்பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.






# நயினாதீவு கல்வித்திட்டத்தின் செயற்பாடுகள்

































## வன்னி ஆபுத்திரன் பண்ணைத் திட்டம்

தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற தேசவிடுதலைப் போரில் பாதிக்கப்பட்டு விழிப்புலனலிழந்த 268 மாற்றுத்திறனாளிகளை உள்வாங்கி யூன் மாதம் 2013 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, அந்த மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்த "ஆபுத்திரன்" பண்ணை திட்டமானது நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தினால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விசுவமடு என்ற இடத்தில் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. போரின் வடுக்களை தாங்கிநிற்கும் எம் தமிழ் உறவுகளுக்கு உதவுவதற்கு கிடைத்த ஓர் அரிய வாய்ப்பாக கருதி இந்த திட்டத்தினை செயற்படுத்த கழகம் முழுமூச்சுடன் செயற்பட்டது.

இந்த திட்டத்தினை செயற்படுத்த தேவையான நிதியினை சேகரிப்பதற்கு 30/01/2016 அன்று கழகத்தினால் நடாத்தப்பட்ட பொங்கல் விழாவில் அதிஷ்டலாப சீட்டிழுப்பு நடாத்தப்பட்டு மக்களின் பெரும் ஆதரவுடன் £13,000 சேகரிக்கப்பட்டது. இந்த நிதியுடன் கழக உறுப்பினர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் நன்கொடைகளையும் சேர்த்து விசுவமடு பகுதியில் 32 பரப்பு காணியினை குத்தகை அடிப்படையில் கொள்வனவுசெய்து விவசாய கால்நடை பண்ணைக்கான அனைத்து வசதிகளுடன் பண்ணையினை அமைத்து 25/06/2016 அன்று “ஆபுத்திரன்” பண்ணையானது கழகத்தினால் திறந்துவைக்கப்பட்டதுடன் 10 பசு மாடுகளும் கொள்வனவு செய்து பண்ணைக்கு வழங்கப்பட்டது.இந்த திட்டத்தினை முன்னெடுப்பத்தில் எமது கழகம் காட்டிய ஆர்வத்தினையும் வேகத்தினையும் கருத்தில்கொண்டு பிரித்தானியாவில் ஈலிங் பகுதியிலுள்ள ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய நிர்வாகம் வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்திற்கு ஏற்கனவே ஒதுக்கீடு செய்திருந்த £6,000 இனை ஆபுத்திரன் பண்ணைக்கு பசு மாடுகளை கொள்வனவுசெய்ய தந்துதவியமையினை இங்கு நன்றியுடன் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

இந்த பண்ணையினை நிர்மாணிப்பதற்கு £18,000.00 (LKR 3,8000,667) கழகத்தினால் செலவு செய்யப்பட்டதுடன் கழகத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைவாக மேலதிக பசுக்கொள்வனவு மற்றும் பண்ணை பராமரிப்புச்செலவீனங்களுக்காக £17,060.00 (LKR 2,985,154) வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் வங்கிக்கணக்கில் கழகத்தினால் வைப்பிலிடப்பட்டதுடன் ஆபுத்திரன் பண்ணையானது வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது. வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினுள் நிர்வாகம் மற்றும் பண்ணை பராமரிப்பு என்பவற்றில் இடர்பாடுகள் காணப்படுகின்றபோதிலும் தமது அங்கத்தவர்கள் பயன்பெறக்கூடிய வகையில் விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளை முடிந்தவரை பண்ணையில் தொடர்ந்து முன்னெடுத்துவருகின்றது.



## வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்திற்கான ஆபுத்திரன் பண்ணைத்திட்டம்



# நயினாதீவு நிழல் மரநடுகைத்திட்டம்





# கழகத்தின் இடர்கால உதவிகள்



நயினை மான்மியம்
(வரகவி க. நாகமணிப்புலவர்)

### கடவுள் வணக்கம்

வாலறிவோ ருணரமுத மத்தியிற்கற் பகஞ் சூழ்ந்த மணித்தீபத்தின்
ஏலுறு நற் கடம்பமர் கொல் லையிற்சிந்தா மணிப்பீடத் திருந்த தோற்ற
மாலறு மெய் யடியவர்கண் டின்புறுவானயினைதனின் மணிப்பீடத்தில்
ஓலிடுகற்பனை கடந்ததே யமர் நாகபூடணியென் னுளத்த ளாமாவ்

### தல விசேடம்

குலந்திகழ் வுறுமேழ் வரைகளும் மருங்கிற்
குலவுற நாப்பணெவ் வுயிருங்
கலந்திடு முமையோர் பங்கர் வீற்றிருக்கும் கயிலைமால்
வரையது கடுப்ப
வலந்தரு மணலை யெழுனயே காரை
மண்டை வேலயையெடு புன்னகை
பொலந்தரு நெடுவாஞ் சத்த தீவங்கள்
புடையுறப் பொலிவது நயினை

பவக்கடற் கிடைவீழ்ந்து அலமருவோரைப்
பாது காத்தின்பமே பயக்கும்
சிவத்திடைப் படரும் பச்சிளங் கொடிதான்
திருப்பதத் துணமலரெனவே
உவப்புறத்தனைச் சூழாழிமேல் நாவா
யொழிதர மறவி நோயுற்றக்
தவிப்பவர் யாகைக் குறுபுணைமானத்
தங்குமந் நயினையாந் தவமே

### மூர்த்தி விசேடம்

எழுதரு மறையுங் கடந்த நாயகி நன்று
இருந்தருள் செய்யுமித் தலத்திற்
பழுதறுஞ் சைவ தந்திர முறையாற்
பத்தியோடவளடி பரவி
அமுத கண்ணோடு மெய்யரும்ப நாத்தழும்பு
வகங்குழைந் தென்பெலா முரகத்
தொழுத கையொடு நின்றனு தினம் போற்றும்
தொண்டர் தம பெருமையார் சொல்வார்.

பேற்றதா லன்னை பெறு முயிர னைத்தும்
பேணலா லன்னை பெற்றிடுவோர்
உற்றவா லன்னை விரும்பிள வனைத்தும்
உதவா லன்னை யெக் கலையும்
சொற்றவா லன்னை யுலகொடு வானுந்
தொழுதலா லன்னை யென்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலா லன்னை
பராபரை நாகபூஷணியால்.





## நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்.



நயினை மணிமேகலை முன்னெற்றக் கழகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
பொன்மாலைப் பொழுதில் பிறந்தவளே.
மணிமேகலைக் கழக பெண் அணங்கே.
வெள்ளிவிழா கண்டு வாழ்க... வாழ்கவே!!
நிலத்திலே வேரோட புலத்திலே விழுது விட்டு
முத்தமிழோடு நற்பணியாற்றியே
நானிலம் போற்றிட நீ வாழ்கவே!
ஆதித்தன் அப்புலியோடு
ஐம்பூதம் உள்ளவரை
பெயரோடும் புகழோடும்
நீ வாழ்கவே!
கருநாகமடி அமர்ந்த
நாகம்மை அருளோடு
ஊரோடும் உறவோடும்
கரம் கோர்த்து நீ வாழ்க.. வாழ்கவே!!!

இருபத்தைந்து வயதினைப் பூர்த்தி செய்து இன்று வெள்ளிவிழா கொண்டாடுகின்றது நயினை மணிமேகலை முன்னெற்றக் கழகம். இவ்வேளை எமக்கு நினைவுகள் பசுமையாக வந்து போகின்றது. பெறுநோக்காடு கண்டு, பெற்றெடுத்து, பாலூட்டி, சீராட்டி, மடிமீது தூங்க வைத்து, தோளிலே சுமந்து, முதுகிலே உப்பு மூட்டை தூக்கி, முடி தடவி, உச்சி முகர்ந்து, தவழ்ந்து விழுந்து பின் எழுந்து நடந்து பூந்தாடி, ஊஞ்சல் ஆடி, பூப்படைந்து, தாவணிப் பருவம் கடந்து, மங்கையாகி நிற்பது கண்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

### பொன்மாலைப் பொழுதில் பிறந்தது கழகம்

1995ம் ஆண்டு ஓர் பொன்மாலைப் பொழுது 75 புநுழுசுபுநு சுழுயுனு ல் உள்ள திரு. கந்தப்பு புவனேஸ்வரா அவர்களின் வீட்டின் வரவேற்பு அறை. இப்போதும் பசுமையாக கல் ஓவியமாக அந்த வரவேற்பு அறை காட்சி தெரிகின்றது. கிழக்கு, தெற்குப் புற சுவர்களை ஒட்டியவாறு சிவப்பு நிற சோபாக்கள், தென்மேற்கு மூலையில் மீன்தொட்டி, வடமேற்கு மூலையில் தொலைக்காட்சி பெட்டி, வடக்கு சுவரோடு வாசலின் அருகே குளிர்சாதனப் பெட்டி, மேற்கே சிவப்பு நிறத்தில் நீண்ட திரைச்சீலை. இதுவே அன்று புவனேஸ்வரா அவர்களின் வரவேற்பு அறையின் தோற்றம். அந்த சோபாக்களில் திரு. சுப்ரமணியம் வரதன், திரு. கந்தப்பு புவனேஸ்வரா, திரு. கந்தசாமி குகராசா ஆகியோர் அமர்ந்து கதைத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஊரிலே அன்றைய காலத்தில் சனசமூக நிலையம், சந்தையடி, கோவிலடிகளில் கூடிக் கழித்து மகிழ்வது போன்று அன்றைய பொழுதுகளில் இங்கு எமது ஊர் இளைஞர்கள் வெவ்வேறு இடத்தில் வசித்தாலும் ஒன்று கூடி மகிழ்வது 75 புநுழுசுபுநு சுழுயுனு இல் தான்.

ஊரின் பசுமையான நினைவுகளை பகிர்ந்து கதைக்கும் வேளை மேலே இருந்து இறங்கிவந்த திரு. சோமசுந்தரம் சற்குணநாதனும் இணைந்து கொள்ள, வீட்டு அழைப்பு மணி அடிக்கின்றது. கதவைத் திறக்க, பக்கத்துத் தெருவில் வசித்த திரு. அம்பலவாணர் பஞ்சானந்தராஜாவும் இணைந்து கொள்ள உரையாடலின் சத்தம் அதிகரிக்கின்றது. சத்தம் பெரிதாக கேட்டதால் இரவு வேலை முடித்து வந்து தூங்கிக் கொண்டிருந்த



திரு. மாணிக்கம் சுரேந்திரனும் தூக்கம் கலைந்து மேலே இருந்து இறங்கிவந்து உரையாடலில் இணைந்து கொள்கின்றார்.

எங்கள் ஊரைப் பற்றிய உரையாடலில் ஊருக்கும் எம் உறவுகளுக்கும் உதவுவோம் என்ற உறுதி பிறக்கின்றது. அதை எப்படிச் செய்வது என்ற போது தான் இங்குள்ள உறவுகளை ஒன்றிணைத்து ஒரு அமைப்பினை முதலில் உருவாக்குவோம் என்ற கரு உருவாகி உருக்கொள்கின்றது.

சிவனின் நெற்றியில் இருந்து சரவணப் பொய்கையில் விழுந்த பொறி ஆதிசக்தி அணைக்க, அது அழகான குழந்தை முருகனாக உருவாக, கார்த்திகைப் பெண்களால் வீரனாக, தீரனாக வளர்க்கப்பட்டது போன்று, அறுவர் சிந்தனையில் இருந்து பிறந்த பொறி 75 புநுழுசுபுநு சுழுயுனு இன் வரவேற்பு அறை என்ற பொய்கையில் விழ, அந்த அறுவரும் பன்னிரு கரங்களால் அணைக்க, நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம் என்ற குழந்தையாக அது பிறக்க, கார்த்திகைப் பெண்களைப் போல் காலத்துக்குக் காலம் மாறிமாறி வந்த நிர்வாகசபை உறுப்பினர்களும், உறவுகளும் சீராட்டி பாராட்டி வளர்க்க இன்று பெருவளர்ச்சி அடைந்து இருபத்தைந்து வருடம் தொட்டு வெள்ளிவிழா காண்கின்றது எமது நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம்.

எந்த திட்டமிடலும் இன்றிச் சந்தித்த இடத்தில் கருவாகி உருவான திட்டம் என்பதால் மீண்டும் ஒருமுறை திட்டமிடலோடு கூடி செயற்படுத்த வேண்டும் என்ற உறுதியோடு அதற்கான கால நேரம் உறுதிப்படுத்தப் பட்ட தீர்மானத்துடன் அன்று அந்த இளைஞர்களின் பொன்மாலைப் பொழுது கடந்து போனது.

### மீண்டும் கூடிய அறுவர்

திட்டம் இட்டபடி அறுவரும் அதே இடத்தில் மீண்டும் கூடுகின்றார்கள். ஆனால் இப்போது வரவேற்பு அறையில் அல்ல. கிழக்குப் புறத்தில் உள்ள அறையில் ஒன்று கூடுகின்றார்கள். உறவுகளை எல்லாம் ஒன்றிணைத்து, அங்கே உறவுகளால் உத்தியோக பூர்வமான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதே எமது விருப்பமாக இருந்தது. அதற்கு முதலில் உறவுகளை நேரடியாக சந்தித்து விளக்கி ஓரிடத்தில் கூட்ட வேண்டும். இக்கழகம் தொடங்கும் நோக்கம், செயற்திட்டங்கள் என்ன என்ற பல்வேறு தரவுகளை தயார்படுத்தி அங்குரார்ப்பண கூட்டத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என பலவாறாகத் திட்டமிடப்பட்டது. இவை எல்லாவற்றையும் செயற்படுத்த பணம் தேவை. என்ன செய்வது என்ற போது, அந்த அறுவரும் தலா 100 பவுண்கள் முதலில் போடுவது என்றும், அங்கத்தவர்களிடம் 2 பவுண்கள் அறவிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இக் கழகமானது முதலில் 600 பவுண்களோடு ஆரம்பிக்கப்படுகின்றது.

கழகத்தின் ஆரம்பப் பணிகளை அந்த அறுவரும் தமக்கள்ளேயே பிரித்தெடுத்தக் கொள்கின்றார்கள். புரிந்துணர்வு நட்பின் அடிப்படையில் திரு. பஞ்சானந்தராஜாவை தலைவராக்கி அவரின் கீழ் இயங்கத் தொடங்குகினார்கள். கழகத்திற்கான ஆரம்ப யாப்பை தயாரிக்கும் பொறுப்பினை திரு. பஞ்சானந்தராஜாவிடமும், கழகப் பெயர் நோக்கம், செயல் திட்டமிடல்களை திரு. வரதன் அவர்களிடமும் கழக முத்திரை (டுழபழ) வடிவமைப்பு, துண்டுப்பிரசுரம், அங்கத்துவ விண்ணப்பப் படிவம் மற்றும் இதர அச்சுப் பதிப்புக்கள் தொடர்பான விடயங்கள் திரு. புவனேஸ்வரா மற்றும் சற்குணநாதனிடமும், கழக கணக்கு வழக்குகளை திரு. சுரேந்திரனிடமும் ஒப்படைக்கப்படுகின்றது. உறவுகளின் வீடுகளுக்குச் சென்று அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கான பணிகள் செய்யும் போது, தேவைப்பட்ட போக்குவரத்து வசதிகளை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு திரு. குகராசாவிடம் மற்றும் திரு. புவனேஸ்வரா ஆகியோரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. ஏனெனில் அவர்கள் இருவரிடமே அப்போது கார்கள் இருந்தது.

### அங்கத்தவர்கள் சேர்ப்பு

கழகத்துக்கான ஆரம்பப் பணி முடிந்தது. அங்கத்தவர்களைச் சேர்க்க வேண்டும். இப்பணிதான் எமக்கு சிக்கலாகவும், சிரமமாகவும் இருந்தது. காரணம் இன்றுபோல் அன்று உறவுகளைச் சந்திக்கக் கூடியதற்கான கொண்டாட்டங்கள் இல்லை. மிகக் குறைந்தளவான உறவுகள் என்பதுடன், திக்கொன்றும் திசையொன்றாகத் தொடர்புகள் அற்று வாழ்ந்தோம். அவர்கள் பற்றிய விபரங்களும் இல்லை. இப்போது போல் அதீத தொலைதொடர்பு வசதிகளும் இல்லை. வீட்டு தொலைபேசிகளும், தெருவோர தொலைபேசிகளுமே எமக்கு உதவி செய்தது. கைத்தொலைபேசி என்பது அப்போது வசதி படைத்தோரிடமே இருந்தது. இத்தனை இடர்பாடுகள் இருந்தும் இளமைத் துடிப்பும் செய்துமுடிக்க வேண்டும் என்ற வெறியும் அம்மனின் வழிகாட்டலுமே அனைத்தையும் சாத்தியமாக்கியது.

நிலத்திலே விதையாக விழுந்த நாம் நாற்றாக எழுந்து நிற்கும் போது, நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேர்கள் அறுபட அடிவேர் நிலத்தோடும், அறுபட்ட சிறிய வேர்களுடனும் அதனுடன் ஒட்டிய மண்ணாக புலத்திலே தூக்கி எறியப்பட்டோம். மண்ணின் நினைவுகளுடனும் புரிந்தும் புரியாத மொழி,

புதிய காலநிலை, புதிய கலாச்சாரப் பண்பாடுகள் இவற்றுக்கு மத்தியில் அறுபட்ட வேரோடு வீழ்ந்த நாம் வேரூன்றி தளிர்விட துடித்த ஆரம்ப காலப்பகுதி அது. அந்த நிலையிலும் எமது முகமும் முகவரியுமான சமூக, பண்பாட்டு, கலாச்சார உணர்வுகள் தொலைந்து விடக்கூடாது என்பதற்காகவே இத்தனை சிரமத்தின் மத்தியிலும் உறவுகள் வீடுகளுக்குச் சென்று அங்கத்தவர்களாக்கும் பணியைத் தொடங்கினோம்.

இப்போது எங்களிடம் இருந்த கேள்வி யாரிடம் முதல் போவது? யாரை முதல் அங்கத்தவர்களாக சேர்ப்பது? நாங்களே முதல் அங்கத்தவர்களாக பதிந்து இருக்கலாம். இருப்பினும் முதல் அங்கத்தவராக எமது சின்னம் சிறுதீவுக்கு என்றும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கும் எங்கள் முகமும் முகவரியுமாக முகப்பிலே அமர்ந்திருக்கின்ற குமரிவழி பெருங்கிழவியான அன்னை நாகம்மையையும் அவள் முகவரியான பப்பரவன்சல்லியையும் பநிந்து, முதல் அங்கத்தவராக சேர்த்துக் கொண்டோம் (இப்போதும் அங்கத்துவர் பதிவேட்டில் உள்ளது).

எத்தனையோ சிரமத்துக்கு மத்தியிலே அங்கத்தவர்களை £2.00 இனை அங்கத்துவப் பணமாகப் பெற்றுக்கொண்டு ஒன்றிணைத்தோம். அவ்வேளை எங்கள் உறவுகள் தந்த ஆதரவும், உற்சாகமும், ஆலோசனைகளும் எமக்கு மென்மேலும் ஊக்கத்தைத் தந்ததால் சீக்கிரமாகவே அங்குரார்ப்பணக் கூட்டத்தைக் கூட்டி உத்தியோக பூர்வமான முழுமையான நிர்வாக சபையை தெரிவு செய்ய முடிந்தது.

16.07.1995 அன்று மாலை Wimbledon ATC Hall ல் திரு. பஞ்சானந்தராஜா தலைமையில் திரு. திருமதி. குகானந்தன் தம்பதிகளின் புதல்விகளின் தேவாரத்துடனும், திரு. திருமதி. சாமிநாதன் தம்பதிகளின் மங்கள விளக்கேற்றலுடனும், திரு. மு. வே. பூபாலசுந்தரம் ஆசிரியரின் ஆசியுரையோடும் கூட்டம் ஆரம்பமானது.

அங்கே எமது நோக்கங்கள், திட்டங்கள் யாவற்றையும் விளக்கி, இவற்றைத் தெரிவு செய்யப்படும் நிர்வாக சபை நடைமுறைப்படுத்தும் படியும் வேண்டினோம். அவ்வேளை திரு. பஞ்சானந்தராஜா அவர்களால் கொண்டு வரப்பட்ட யாப்பில் கழகத்தினை உருவாக்கிய அறுவரும் தொடர்ந்து ஆயுட்காலம் வரையும் நிர்வாக சபையில் இருப்பார்கள் எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. மாற்றுக் கருத்துகள் முன் வைக்கப்பட்டன. ஊரை முன் உதாரணம் காட்டி, ஆயுட்கால அங்கத்தவர்களைத் தவிர நிர்வாகப்பதவிகள் எதுவும் ஆயுட் காலமாக இருக்கக்கூடாது என்ற பொதுசபையின் விருப்புக்கு ஏற்ப முடிவு எடுக்கப்பட்டது. அப்போது விளக்கமழித்த திரு, பஞ்சானந்தராஜா அவர்கள் பதவிகளுக்காக அல்ல. கழகத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏதுவான ஆலோசனைகளை வழங்கவே தான் அப்படிக் குறிப்பிட்டதாகவும் வேறு எந்த நோக்கமும் இல்லை என்று மிகத் தெளிவான விளக்கத்தினை பொதுசபைக்கு கொடுத்தார்.

கழகத்தின் பெயர் தொடர்பிலும் வாதப் பிரதி வாதங்கள் முன்வைக்கப்பட்டது. கழகப் பெயரைச் சூட்டிய திரு. சு. வரதன் அவர்களால், கழகப் பெயரின் ஒவ்வோர் வார்த்தைகளுக்கும் தெளிவான விளக்கம் கொடுக்கப் பட்டதனைத் தொடர்ந்து பொதுச்சபை அதனை அங்கீகரித்தது.

கழக இலச்சினையில் ஆரம்பத்தில் நோக்கம் - ஊக்கம் - ஆக்கம் என்ற மூன்று வார்த்தைகள் இருந்தது. பின்பு அவை நீக்கப்பட்டு 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்ற சொற்பதம் பதிவு செய்யப்பட்டது.

ஊரின் நீர்வளத்தை மேம்படுத்துவதற்காக குளங்களைத் தூர்வாருவது, பிரதான தெருக்களில் மரங்களை நடுவது என்றும் அத்தோடு நமது ஊர்க் கவிஞர்களின் கவிதைகளைத் திரட்டிப் பதிப்பிப்பது என்றும் எண்ணினோம். ஆனால், அந்நாளில் நாட்டின் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளால் அது சாத்தியப் படவில்லை. ஆனால், நிலைமை மாற்றமடைய ஊரில் மரநடுகைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை பாராட்டுதற்குரியது.

16.07.1995 அன்று இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கழகத்தின் அதிகார பூர்வமாக முதலாவது நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. அதில், திரு. அ. பஞ்சானந்தராஜா அவர்களை தலைவராகவும் திரு. சு. வரதன் அவர்களை செயலாளராகவும் திரு. மா. சுரேந்திரன் அவர்களை பொருளாளராகவும் கொண்டு முதலாவது நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது.முதலாவது நிர்வாக சபைத் தெரிவுடன் அன்றைய பொதுக் கூட்டம் இனிதே நிறைவு அடைந்தது.

கழகம் தனது முதலாவது வெளியீடாக நயினாதீவு நாகபுஷணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா அன்று Wimbledon பிள்ளையார் கோவிலில் திரு. தயானந்தன் (தயா அண்ணா) செய்யும் பூஜை வழிபாட்டில் நயினை சாம்பவி பாலன் எழுதிய 'மண்ணின் பெருமையும் தல வரலாறும்' என்ற ஊரைப் பற்றிய கையேட்டு சிறுநூலை வெளியிட்டுவைத்தது.

கழகம் தனது முதல் நிகழ்வாக இலண்டனுக்கு வருகை தந்த எமது ஊரைச் சார்ந்த குருமணி பரமேஸ்வரக் குருக்களுக்கு பாராட்டுவிழாவினை நடாத்தியது. தலைவர் திரு. பஞ்சானந்தராஜா தலைமை தாங்க, பண்டிதை புனிதவதி அம்மையார், திரு. மு. வே. பூபாலசுந்தரம் ஆசிரியர், திரு. பாலகிருஷ்ணன் ஆகியோர் சிறப்புரை



ஆற்ற, லண்டனில் உள்ள அனைத்து ஆலய குருமணிகளுக்கும் கழகம் பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கி கௌரவித்தது.

புதிதாக நிர்வாக சபையில் காலம் குறுகியதாக இருந்த போதிலும் கலை விழா ஒன்று செய்வதன் மூலமாக மக்களை ஒன்றிணைத்து கழகத்தை முன்னெடுத்துச் செல்வதென்றும் அவ் விழாவை, வருடா வருடம் நடாத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு விழாக்கள் செய்யும் போது கழகத்துக்கு நிரந்தரமாக கழகக் கீதம் தேவைப்பட்டது.

நமது ஊரில் பல திறமையான கவிஞர்கள் இருந்த போதிலும் அக்காலச் சூழ்நிலையில் தொடர்பு கொள்வது சிரமமாக இருந்தது. அத்தோடு காலமும் குறுகியதாக இருந்தது. ஆகவே, அந்தப் பொறுப்பை நிர்வாக சபை உறுப்பினராக இருந்த செல்வி. சுபத்திரா பூபாலசுந்தரத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவரும் அதைப் பொறுப்பெடுத்து மதிப்புக்குரிய. திரு. ஜெகதீஸ்வரம்பிள்ளை அவர்களிடம் கழக கீதத்தினை எழுதிப் பெற்று, இந்தியாவைச் சார்ந்த புகழ்பெற்ற கர்நாடக இசைப்பாடகி திருமதி. சுதா ரகுநாதன் அவர்கனால் இசையமைக்கப்பட்டு அவர் குரலிலேயே பாடி, அதை முழுமையாக்கித் தந்தார். அதுவே இன்றும் கழக விழாக்கள் மற்றும் நிகழ்வுகளில் பாடப்படுகின்றது.

முதலாவது நிர்வாக சபையிலே திரு. சற்குணராசா, திருமதி. கிருஸ்ணலதா ஆகியோர் தலைமையில் கலாச்சாரக் குழுவும், மலர்க்குழுவும் உருவாக்கப்பட்டதுடன் கரைபோட்டு நடந்தால் தான் ஆற்றுக்கு அழகு என்பதைப் போன்று, ஒரு அமைப்பு உரமாகவும், திடமாகவும் இருப்பதற்கு யாப்பு முக்கியமானது. அந்தவகையில் திரு. சந்திரபாலன் தலைமையில் திரு. முரளதரன் திரு. வரதன், திரு. குகராசா ஆகியோரை உள்ளடக்கிய யாப்புக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

சுமார் ஆறுமாத இரவு பகல் உழைப்பினால் கழக யாப்பு உருவாக்கப்பட்டு, அது நிர்வாக சபையில் முன்வைக்கப்பட்டு, திருத்தங்களும், சேர்ப்புகளும் செய்யப்பட்டு பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டு இப்போதைய கழக யாப்பு அதிகார பூர்வமாக்கப்பட்டது,

கழகத்தை உருவாக்கினாலும் இந்த நாட்டில் தொண்டுநிறுவனமாக பதிய வேண்டியது கட்டாயமாகும். அப்படிப் பதிந்தால் தான் அது பெறுமதியுடையதாக இருக்கும். எனவே, தமிழில் நாம் எழுதிய யாப்பை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து பல சிக்கல்கள் சிரமத்துக்கு மத்தியில் கழகத்தை பிரித்தானிய நாட்டின் ஓர் தெண்டுநிறுவனமாக பதிவு செய்து, அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்த பெருமகனார் அமரர் திரு. சதாசிவம் ஐயா என்பதை இங்கு நாம் குறிப்பிட்டே ஆக வேண்டும். கழகம் இன்று ஓர் பதிவுசெய்யப்பட்ட தெண்டுநிறுவனமாக பதிவெண்ணோடு இருப்பதற்கு அவரே காரணமாகும்.

## கழகம் கண்ட முதல் வெற்றி

கழகத்தின் நோக்கத்தில ஒன்று வருடா வருடம் கலாச்சார விழாவினை நடாத்துவது என்பதுடன், இங்கு வாழும் எம் சிறார்களின் திறமைகளை இனம் கண்டு, அவர்களுக்கு மேடையமைத்துக் கொடுத்து அவர்கள் திறமைகளை வெளிக் கொணர்வது ஆகும். கழகக் கலாச்சார விழாவின் நதி மூலம் இதுவாகத் தான் இருந்தது. அன்று இங்கு வாழ்ந்த உறவுகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது. அதிலும் எம் சிறார்களும் விரல் விட்டு எண்ணும் அளவுக்கே இருந்தார்கள். அதனால் தேடிச் சென்று அழைத்து வந்து மேடையேற்றினோம். இப்போது இங்கே பெயரோடும். புகழோடும் வலம்வரும் பல கலைஞர்கள், வித்வான்கள் சிறுவர்களாக இருந்த போது கழகம் இனங்கண்டு, களம் கொடுத்து ஊக்குவிக்கப்பட்டவர்களே. ஆதனால் கழகம் பெருமை கொள்கின்றது. இதுதான் கழகம் கண்ட முதல் வெற்றி ஆகும்.

கழகத்தின் முதலாவது கலாச்சார விழா மிகக் குறுகிய காலத்திலேயே தனது அயராத உழைப்பினால் 23.12.1995 இல் HOLY CROSS SCHOOL. NEW MALDEN இல் திரு. திருமதி. சந்திரசேகரம்பிள்ளை தம்பதியினர் பிரதம விருந்தினராக விளக்கேற்றி ஆரம்பிதிது வைக்க, பிரபல அறிவிப்பாளர் திரு. விமல் சொக்கநாதன் நிகழ்ச்சிகளை தொகும்துவளங்க முத்தமிழ் விழாவாகப் பெருமையாகக் கொண்டாடியது. அது இலண்டன் பத்திரிகைகளிலும் வெளிவந்து பாராட்டுப்பெற்றது. கழக முதலாவது கலாச்சார விழாவில் பிரித்தானியாவில் வாழும் நம் சிறார்களின் திறமைகளை வெளிப்படுத்தி, தம் கொள்கை வழி நின்று தனது முதலாவது வெற்றியைத் தன் வசப்படுத்திக் கொண்டது கழகம்.

## கழகம் சார்பான நயினாதீவின் பிரதிநிதிகள்

கழகமானது தனது திட்டங்களை ஊரில் முன்னெடுப்பதற்கு அங்கே தமக்கான பிரதிநிதிகள் தேவைப்பட்ட போது, திரு. அ. தியாகராசா, திரு. க. குகதாசன் மற்றும் திரு. சோ. தில்லைநாதன் ஆகியோருடன் தொடர்பு கொண்டு எங்களின் ஆவல்களை வெளிப்படுத்தியபோது எந்தவித மறுப்பும் இன்றி பெருமையுடன்

எமது செயற்றிட்டங்களை செயற்படுத்த முன்வந்தார்கள். அவர்களால் கழகம் சார்பான வங்கிக் கணக்கும் திறக்கப்பட்டது. போர்க்கால சூழ்நிலை, போக்குவரத்துச் சிரமம், வெளியே சென்று வீட்டுக்குத் திரும்ப முடியுமா என்ற பாதுகாப்பற்ற சூழ்நிலையில் அவர்களின் பணி பாராட்டத்தக்கது என்பதுடன் எமது விருப்பப்படி, கழகப் பணிகளை முன்னெடுத்துச் சென்ற இப் பெரியவர்களின் பணிகளை வார்த்தைகளால் மதிப்பிட முடியாது.

சுனாமி பேரழிவின் போது, ஊரைச்சாராத மக்களுக்கு அவலங்கள் ஏற்படும் போது உதவிக்கரம் நீட்ட வேண்டும் என்ற கழக யாப்புக்கு அமைய, அன்று சுமார் □2,000 இனை வெண்புறா அறக்கட்டளைக்குக் கழகம் வழங்கியது. நயினாதீவு சமூக, பொருளாதார கல்வி, கலாச்சார அபிவிருத்தி சங்கம் (கொழும்பு) கேட்டுக்கொண்டதால் ஆலங்குள வீதி புனரமைப்புக்கென்று சுமார் □3,500 பவுண்கள் வழங்கியது. இதுபோன்று பாடசாலை சமூகத்த்துக்கும் ஏனைய வழிகளிலும் கழகம் தனது பங்களிப்பைச் செய்தது.

**கழகத்தின் கல்வித் திட்டம்**

கழக நிர்வாக சபைக்குள் உபதலைவராக வந்த அமரர். திரு. ந. செல்வநாயகத்தினால் முன்மொழியப்பட்ட திட்டமான கல்வித்திட்டத்தினை கழகம் முன்னெடுத்தது. ஊரின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலக் கல்வியை இலவசமாக வழங்குவதே இதன் நோக்கமாக இருந்தது. அமரர். திரு. ந. செல்வநாயகம் அவர்கள் தனியாரிடம் இருந்து காணியைத் தனது சொந்தப் பணத்தில் கொள்வனவு செய்து, அக்காணியைக் கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கினார். அதன் பின்பு கழகம் அத்திட்டத்தை துரிதப்படுத்தும் நோக்கில் அதற்கான தனிப்பட்ட வங்கிக் கணக்கை திறந்து, மக்களிடம் பணம் திரட்டி வைப்பில் இட்டு, அக்காணியில் மூன்று வகுப்பறைகளைக் கொண்ட புதிய கட்டிடத்தை நிர்மானித்து, கல்வித்திட்டத்தை சீரான முறையில் செயல் படுத்தியது. எனினும், அன்றைய போர்ச் சூழ்நிலையும், தொடர்புகொள்வதில் காணப்பட்ட சிக்கல்களும் காரணமாக கல்வித்திட்டத்தில் தேக்கங்கள் ஏற்பட்டு இயங்காத நிலைக்குத் தள்ளப்பட்டது. இக் கல்வித் திட்டப்பணியில் திரு. செல்வநாயகம் அவர்கள் ஊக்கம் எடுத்த போது, ஊரில் அன்றைய இக்கட்டான சூழ்நிலையிலும் அமரர்களான திரு. துரைமணி, திரு. சி. சிவானந்தன் ஆசிரியர், செல்வி. சௌந்தரி நாகமணி ஆகியோர் ஒன்றிணைந்து கட்டிடத்தை அழகுற அமைத்ததுடன், கல்வித திட்டம் நல்லமுறையில் இயங்கவும், அயராது பாடுபட்ட பெருமக்கள் என்பதை இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

நாட்டில் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் 2015 இல் தெரிவுசெய்யப்பட்ட கழகத்தின் நிர்வாகக்குழுவானது பிரித்தானியா வாழ் உறவுகளின் உயரிய பங்களிப்புடன் மேலும் புதிதாக வகுப்பறைகளையும் கணணி அறை, நூலகம் என்பவற்றை அமைத்ததுடன் நயினாதீவில் கிளை அமைப்பொன்றினை உருவாக்கி பிரதேச செயலகத்தில் பதிவுசெய்து ஓர் நிர்வாகக்குழுவின் உதவியுடன் கல்வித்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

**கழகம் காப்பாற்றப்பட்டது**

கழகம் இடைப்பட்ட காலத்தில் செயற்பாடின்றி இருந்தமையினால் பிரித்தானிய தொண்டுநிறுவன ஆணைக்குழுவில் இருந்து கழகத்தின் முனனாள் தலைவர் திரு. பஞ்சானந்தராஜா அவர்களுக்கு ஓர் கடிதம் வந்தது. அக்கடிதத்தின் சாராம்சம் இதுதான். கடந்த இரு வருடங்களாக கழகச் செயற்பாடுகள் எதுவும் இல்லை என்றும், இரண்டு வருடக் கணக்கு வழக்குகள் ஒழுங்கான முறையில் சமர்ப்பிக்கப் படவில்லை என்றும், அதனால் குறிப்பிட்ட கால வரையறைக்குள் தங்களுக்குச் சரியான பதில் கிடைக்காவிட்டால் கழகம் தொண்டுநிறுவன ஆணைக்குழுவின் பதிவில் இருந்து நீங்கப்படும் என குறிப்படப்பிட்டிருந்தது. திரு. பஞ்சானந்தராஜா அவர்கள் இதுவிடயம் தொடர்பில் என்னுடன் கலந்து ஆலோசித்தார். அவசரக் கூட்டத்தை கூட்டி, ஆலோசித்து, புதிய செயற்திறன் உள்ள நிர்வாகத்தை தெரிவு செய்து, சரியான பதில்களை தொண்டுநிறுவன ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைப்பது என்று முடிவு செய்தோம். திரு. பஞ்சானந்தராஜா அவர்கள் தனது சொந்தப் பணத்தில் ATC HALL இனைப் கூட்டத்தினை நடாத்துவதற்காக பதிவு செய்தார். நானும் திரு. பஞ்சானந்தராஜா அவர்களும் இரவு இரவாக கூட்ட அழைப்பிதழ் தயாரித்து, சகலருக்கும் அனுப்பிவைத்தோம்.

கழகத்தின் பொதுச்சபை கூடி புதிய நிர்வாகசபையினை தெரிவுசெய்து கழகத்தின் செயற்பாடுகளை மீள ஆரம்பித்தனூடாக தொண்டுநிறுவன ஆணைக்குழுவின் பதிவு காப்பாற்றப்பட்டது. மீண்டும் கழகம் ஆரம்பகால எழுச்சித்துடிப்போடு, தைப்பொங்கல் விழா, விளையாட்டு விழா என்பவற்றை நடாத்திவருவதுடன் ஊரில் கல்வித்திட்டமானது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தவிர கிளிநொச்சியில் யுத்தத்தினால் விழிப்புலனிழந்தவர்களுக்கான பாற்பண்ணை ஒன்றினை அமைத்துக் கொடுத்துள்ளதுடன் பல்வேறு நிவாரண மற்றும் நலப்பணிகளை மேற்கொண்டுவருகின்றது.





# Nainativu - A Brief Background

- Nainativu is a historic beautiful small island in the north of Sri Lanka
- It is approximately 4 square kilometres (4.1L x 1.2W)
- The total population of the island is around 2,500
- There are three Grama Niladhari divisions and one local government sub office
- There are three government schools on the island
  - Nainativu Maha Vidyalayam (Secondary School up to GSC A/L)
  - Nainativu Sri Ganesha Kanista Mahavidyalayam (Secondary School up to GCE O/L
  - Nainativu Nagapooshani Vidyalayam (Primary School)
- There is a Divisional Hospital and a Ayurvedic Hospital
- There is a second class Post Office
- There are a number of Saiva Temples including the world famous Nagapooshani Amman Temple
- There is a Buddhist Temple, a Islamic Mosque and a St Antony's church
- The main focus for Nainativu citizens is to educate their children
- Main contributors to the economy are farming, retail and fishing
- Transport from the mainland to Nainativu is by boat or ferry
- Local modes of transport are by bicycles, motorbikes and three wheelers

  (10 -15 years ago, carts were the main mode of transport)





# Why Nainativu is popular in Sri Lanka and other parts of the world

Nainativu Nagapooshani Amman Temple is one of the 64 Sakthi Peedams (the only one in Sri Lanka) and has links with both India's and Sri Lanka's history

The Buddhist temple has links with the second visit of Buddha to Sri Lanka

Although Nainativu may have a small population, of those that had the privilege of education almost one in every family are educated to a high standard

## Nainativu : A Beautiful Island in the North of Sri Lanka



# History of NMWA





- NMWA was established in 1995 in New Malden
- Members involved in the establishment of NMWA were;
  - Mr Subramaniam Varathan
  - Mr Ambalavanar Panchandarajah
  - Mr Somasundaram Satkunanathan
  - Mr Kanthappu Puvaneswara
  - Mr Kanthasami Kugarasa
  - Mr Manikkam Surendran




# History of NMWA

- NMWA Registered as a Charity at Charity Commission UK on the 10th of March 1998
- NMWA Registered with the HMRC on 02nd of April 2019
- We have 56 Life Members, 18 Yearly Members and 13 Senior Members

# Objectives of NMWA

- To be activate and bring together the people of Nainativu living across the United Kingdom
- To act as a forum to promote and better the living standards of the people of Nainativu in their Social, Cultural, Economic and Technical Activities.
- To offer help and support to Tamil's living in other-parts of Sri Lanka in the event of emergencies e.g flooding, natural hazards etc.

# Executive Committee of the NMWA – 2019/21

- President - Mr S Varathanathan
- Secretary - Mr T Jeevendran
- Treasurer - Mr Y Jayakanth
- Vice-President - Mr K Ganesapathy
- Asst-Secretary - Mrs S Sharmini
- Asst-Treasurer - Mr A Sachithananantharajah
- Public Relegation Officers
  - Mr N Krishna
  - Mr A Yasothararajah
  - Mr S Amirthalingam
  - Mr K Mathibalan
  - Dr K Manoranjan
  - Mr K Sotheeswara
- Editor - Mr S Nishanthan

Other Committee Members

Mr R Kulanathan
Mr K Muraleetharan
Mr G Edwin
Mr G Ketheeswaran
Mr K Puvaneswara
Mr K Rameshwaran
Mr S Vitheyaruban
Mr S Kugendran

# Events Organized by NMWA in the UK for Nainativu People, Friends and Well-wishers

- NMWA organises events every year to give the younger generation the opportunity to perform and come together.
  - Cultural event under the name of Mekalai (மேகலை)
  - Tamil Heritage Festival (Thaipongal Festival)
  - Sports Day

## Cultural Night - Mekalai (மேகலை) Publications










## Cultural Night











## Tamil Heritage Festival – Pongal Festival






## Pongal Festival













# Sports Day and Summer Get Together

- In 2015, NMWA organised a Sport Day and Summer Get Together to give an opportunity for our children to play together, be active, meet parents and build a sense of community amongst our people. We attempt to host sports days every year from here onwards.



# Youngsters Gathering - December 2016



# NMWA facilitated for "Nainai Cricket 2019"




- Nainai cricketers arranged a cricket match on 04/08/2019 and NMWA facilitated to arrange the cricket match at Beverley Park, New Malden



# Projects in Nainativu

- Since being founded in 1995 NMWA has funded and run a range of projects in Nainativu as well as other parts of Sri Lanka. These include:
- Nainativu Road Development Project
- Educational Project
- Vanni Farm Project for Visually Handicapped
- Planting Trees in Nainativu
- Nainativu Hospital Project
- Relief for Flood Affected People in the North and East of Sri Lanka

## Nainativu Alankulam Road Development Project

- During the war time, the main road of Nainativu was blocked by the Sri Lankan navy and people used Alankulam Road for access to the South of Nainativu.
- Roads in Nainativu were not maintained by the local authorities for a long time and the condition of the Alankulam road got worse
- Considering the importance of the development of Alankulam Road, Nainativu Socio Economic Education and Cultural Development Society- Colombo initiated the Alankulam Road Development Project.
- NMWA contributed £5,000 for the development of Alankulam Road considering the importance of this road as an accessible pathway for our people.
- The usage of this road is normally high during the Nagapooshani Amman temple festival season.

## Alankulam Road Development











## Nainativu Educational Project

Considering the importance of education for children who cannot afford it, our charity has decided to establish a tuition centre to provide free tuition classes for those students in Nainative.

Accordingly, our charity purchased land in Nainativu and built a tuition centre in 2006. However, due to the escalation of the war situation in Sri Lanka, we were not able to continue the project.

The building was renovated in 2015 and started free tuition classes for poor students in Nainativu in July 2015.

We added more classrooms to cater the increased number of students and established separated computer room for free computer education for the students.

We raised donations from members and well wishers for the project and we spent around £35,000 for the project.

The monthly payment for the staff and centre maintenance paid by the charity with donations from committee members of the charity atm.

The success of the project is identified by the increase in the number of students and by the increase in the number of students passing their year 5 scholarship exam and other government exams.

Two students who studied at our tuition class obtained marks above the district cut out.

We have a plan to establish a library and start vocational training courses for school leavers in the future.

## Nainativu Educational Project
















# Planting Trees in Nainativu

- Our charity has decided to plant trees in Nainativu to safeguard the water resources and soil of Nainativu.
- Accordingly, we planted a vast number of trees in Nainativu and a considerable amount of trees grew well. However, we had difficulties maintaining the trees until a certain level of growth.
- Mr Perinpanathan (Nathan Annan) has been very helpful with our Tree Planting projects and he is currently planting trees in Nainativu with the support of NMWA
- Considering the maintenance issue, we contacted community centres in Nainativu with a WIN-WIN proposal and all community centres agreed to the proposal and with their support we aim to plant trees all over the island and look to do this soon.
- We have plans to expand our tree planting project to the costal areas to safeguard our village from marine erosion.

# NMWA Helped War Affected Visually Handicapped People in Vanni, Sri Lanka

- Our charity established Aputhiran Farm for Visually Handicapped People in Vanni, Sri Lanka. This project was designed with two phases:
- Initial: We spent around £36,060 to provide infrastructure facilities and purchase cows so that the milk could be sold, and the profits would go to help the visually handicapped in Vanni.
- Present: Now, we have decided to handover the project to the Association for Visually Handicapped people to operate the farm with the income received from the farm and get support from other donors for the next stage.

## Planting Trees in Nainativu



## Apithiran Farm Project



# Nainative New Hospital Project

- Nainativu Hospital is a Divisional Government Hospital. However, the hospital building, and facilities are not maintained properly by the government
- There are no permanent doctors or nurses in the hospital.
- There was a proposal given by Germany Red Cross to build a New Hospital with all facilities and the support of donations from charities and the German Government.
- Accordingly, we contributed £17,500 to the Germany Red Cross.
- However, the Germany Red Cross were unable to secure support from the German Government to build a new hospital in Nainative, Sri Lanka.
- Therefore, they have decided to collect funds from other donors and complete the new hospital project stage by stage. Initially, they plan to build OPD.
- We are waiting until 31 December 2019 to decide whether to go ahead with the project. The Germany Red Cross need at least another € 150,000 to build the OPD.

## Present Condition of Nainativu Hospital










## Relief for Flood Affected People in the North and East of Sri Lanka

- There was a heavy flood in the North and East of Sri Lanka in December 2019 and NMWA has decided to help the flood affected people in the North and East of Srilanka.
- We gave £2,500 (LKR 591,250) to donate goods for war affected people.
- LKR 391,250 worth of goods distributed among the flood affected people in North of Sri Lanka through Tamil Virudcham Organization.
- LKR 200,000 worth of gods distributed among the flood affected people in East of Sri Lanka through the Tamil National Alliance Member of Parliament Mr Seeniththamby Yogeswaran.

## Relief for Flood Affected People in the North and East of Sri Lanka











## Future Project Proposals for the Development of Nainativu

- Continue with educational development in Nainativu
- Continue planting trees and safeguarding our water resources and soil
- Help local youths with sports development
- Protect our village from marine erosion
- Provide vocational training for school leavers
- Promote organic cultivation in Nainativu

## Proposals for supporting local communities in the UK

- Blood Donation
- Support local charities and their activities
- Organizing charity walk's every year for fund raising to help the local community



## What we expect from our youngsters

- Become a life member of NMWA
- Spend some time on our charity activities
- Organise events with the guidance of senior members
- Promote and maintain cordial relationships among members and families
- Encourage our people to participate in events and projects
- Expand existing activities and projects as well as new projects in the UK and Nainativu
- Promote "NMWA" as the identity of Nainativu citizens living in the UK.
- Work as a team, achieve our objectives and handover our charity with clear visions to the next generation

## NMWA 25th Anniversary Celebration

United Kingdom

- Musical Show with super singers in the UK
- Badminton Tournament
- Soft Ball Cricket Tournament
- Tamil SA competition
- 25th Anniversary Magazine

Nainativu

- Musical Show
- Continue to plant trees within each ward in Nainathivu
- Cricket Tournament
- SA competition






# NAINAI MANIMEKALAI WELFARE ASSOCIATION

## 2019 –2021

## NEW ADMINISTRATIVE COMMITTEE ELECTED ON 29 SEPTEMBER 2019



| Name | | | Designation |
|---|---|---|---|
| Mr | S | Varathanathan | President |
| Mr | K | Ganesapathy | Vice- President |
| Mr | T | Jeevendran | Secretary |
| Mrs | S | Sharmini | Ast- Secretary |
| Mr | Y | Jayakanth | Treasurer |
| Mr | A | Satchithanantharajah | Ast- Treasurer |
| Mr | K | Sotheeswara | Public relations officer |
| Mr | N | Krishna | Public relations officer |
| Mr | A | Yasotharajah | Public relations officer |
| Mr | T | Amirthalingam | Public relations officer |
| Dr | K | Manoranjan | Public relations officer |
| Mr | S | Nishanthan | Editor |
| Mr | G | Edwin | Committee Member |

| Name | | | Designation |
|---|---|---|---|
| Mr | K | Muraleetharan | Committee Member |
| Mr | G | Ketheeswaran | Committee Member |
| Mr | K | Mathipalan | Committee Member |
| Mr | K | Rameswaran | Committee Member |
| Mr | K | Puvaneswara | Committee Member |
| Mr | S | Vithiyarooban | Committee Member |

| Name | | | Designation |
|---|---|---|---|
| Mr | S | Kugendran | Committee Member |
| Mr | R | Kulanathan | Committee Member |
| Mr | M | Chandrapalan | Patrons |
| Mr | V | Poopalasundaram | Patrons |
| Mr | A | Panchandarajah | Patrons |
| Mr | T | Kugathasan | Internal Auditor |

# NMWA YOUNGSTERS COMMITTEE REPRESENTATIVES

| Title | First name | Surname |
|---|---|---|
| Mrs | Anusiya | Thishanthan |
| Mr | Piranaava | Amirthalingam |
| Mr | Lavanan | Ayngaran |
| Miss | Laksitha | Sivakumaran |
| Miss | Sajani | Kuganarul |
| Miss | Vithusiga | Krishnaa |

# NAINAI YOUNGSTERS GET TOGETHER

- With the aim of giving the opportunity to take part in NMWA activities, we arranged a get together for the Nainai youngsters on 22 December 2019.
- Youngsters' active committee was selected by the young members to work with the administrative committee of the NMWA.







# NAINAI FAMILIES NEW YEAR GET TOGETHER

- We organised a get together for Nainai families with the request of our youngsters on 04 January 2020.
- This was a very enjoyable night for youngsters and adults alike.

# COMMUNITY FUND FROM SOUTHERN CO-OP

- We submitted an application to the Co-op community fund and we have been granted £1,000 to support our local community.
- The Co-op also supplied water bottles, drinks and selective food items for our get-together organised in January 2020.

The co-operative food

southern coop

## WHAT WE HAVE DONE OVER THE PAST YEAR:
### CONTINUED PROVISION OF FREE TUITION CLASSES IN NAINATIVU



### CONTINUED PROVISION OF FREE TUITION CLASSES IN NAINATIVU

- We transferred £2,899.19 ( Approximately Rs 680,000) from 16 July 2019 – 15 July 2020 for the free education of children in Nainativu.
- Two students from our tuition centre passed year 5 scholarship exam in 2019 and we have deposited Rs 25,000 for their future education.
- We also distributed study materials and stationary to all year 5 students who studied at our tuition centre.





## FLOOD DONATION – VANNI & BATTICALOA

- We have donated £1,654.33 (Rs 391,250) as a relief fund for flood affected people in Vanni in December 2019 through Tamil Virudcham.
- We have donated £845.67 (Rs 200,000) as a relief fund for the flood affected people in Batticaloa through Honourable Parliamentarian Mr Yogeswaran.

## FLOOD RELIEF FUND - NAINATIVU

- We have donated £3,389.25 (Rs 838,023.00) to help families who lost their livelihood due to the “Puravi” cyclone and flood.
- Members of our sister organisation in Nainativu identified affected people with the help of Grama Niladharies and helped them.
- Our Sister organisation in Nainativu distributed Rs 850,000 among the affected people based on the damage of their livelihood.





## COVID 19 & ACTIVITIES OF THE NMWA

- We have had a difficult time in 2020 carrying out our annual activities and hosting special events due to the COVID 19 Pandemic.
- We cancelled our Silver Jubilee celebration and events.
- We cancelled our annual sports day.
- However, we have tried to help our people as much as possible during this testing time. Our Covid related activities are outlined in the next few slides.
- We would like to thank all members and well wishers who supported us during this pandemic.
- We have also helped people in the UK by donating to food banks and hospital charities for PPE

## COVID 19 RELIEF FUND - NAINATIVE





- We transferred £4228.29 (Rs 1,000,000.00) to Nainative to distribute dry foods in Nainativu during the COVID 19 pandemic with the collaboration of Nainativu Development Association, France and Nainativu Canadians Development Society.
- Members of our sister society in Nainativu were actively involved in this relief activity and distributed dry foods for all

## COVID 19 RELIEF FUND- VANNI



- We have donated £1,000 to Tamil Virudcham, Vavuniya, Sri Lanka to distribute milk powder to the children in Vanni who have been affected by the COVID 19 pandemic.

## COVID 19 RELIEF FUND - UK

Imperial Health Charity HELPING OUR HOSPITALS DO MORE

Believe in children Barnardo's

- We donated £350 to the Imperial Health Charity on 27 April 2020 for PPE to help NHS staff to save the lives of people affected by COVID 19
- We donated £150 to Barnardo's, a UK charity to help children by providing food. Barnardo's is helping children and their families across the UK and those who have faced abused, the most vulnerable, the forgotten and the neglected.

## NATIONAL LOTTERY COMMUNITY FUND PROJECT









- We submitted a project proposal to the National Lottery Community Fund to help people who are not allowed to take employment in the UK.
- Our aim was to help people during the COVID-19 pandemic
- The National Lottery approved our project and granted £1,250.
- We helped asylum seekers who came from various countries by distributing Gift Cards worth of £465.
- We also donated £709.32 worth of goods to Kingston Food Bank to help vulnerable people. Mr Thay Thayalan, Councillor of Royal Borough of Kingston Council helped us for the success of the project.

## Nainativu Tuition Project

- Due to the COVID-19 pandemic, the Tuition is closed since April 2020 and the tuition classes will start when the Sri Lankan government allows private tuition classes to restart .

## Nainativu Hospital Development Project

- Nainai Sri Nagapooshani Amman Temple Trusty Board approved to mange the Nainativu Hospital development project of the Germany Red Cross to save the administrative cost of the donated fund.
- We allocated £ 2,503.84 (Rs 633,500) to renovate the Maternity Ward of the Nainativu Hospital. The project has not yet started and the allocated fund is in our Nainativu NMWA Account.

## SPORTS DAY & GET TOGETHER - 2021

- Due to the COVID-19 pandemic, we were not able to organize the Sports Day in 2020.
- We decided to organize the Sports Day and Get Together in 2021 with the support of our youngsters.
- We organized the Sports Day and Get Together on 29/08/2021 at Beverley Park New Malden with the amazing support of the youngsters.
- Our members, friends and well-wishers participated in the event and all had a good time after longtime.













## NMWA - 25TH ANNIVERSARY CELEBRATION (SILVER JUBILEE)

- We decided to celebrate our Silver Jubilee on 11 April 2020 at Dorking Hall with a grand musical show.
- Due to the COVID 19, we were unable to host this event.
- We would like to take this opportunity to thank all members and well-wishers who worked with us to organise this event.
- We will celebrate our 25th anniversary when the situation normalises once more.

## NEW PROJECTS IN 2021-2023

- Any project proposals from Nainativu will be considered on a priority basis and our administrative committee will decide on funding of the projects.
- Before funding the projects, our administrative committee will appoint a team of professionals to do a feasibility study of the project to identify the sustainability of the project with the support of the beneficiaries.
- We will support the local community by identifying their requirements
- Establishing NMWA Football Team and Cricket Team in the UK with the support of our youngsters.

## THANKS TO ALL AND CONGRATULATION FOR THE NEW ADMINISTRATIVE COMMITTEE OF THE NMWA FOR THE PERIOD OF 2021-2023

Thanks to all of those who have donated and supported us during 2019-2021. As a charity we rely on the hard work and support of our members. None of the things we have achieved would have been possible without your support. We helped our community in Sri Lanka and contributed and extended our services in the UK even during the COVID-19 pandemic. We believe that the New Administrative Committee of the NMWA will extend our services for the betterment of our community in the UK and Sri Lanka.

## நயினாதீவுக்கான அழகிய கடல் பயணம்



## மேகலை இருபத்தைந்து



இருபத்தைந்தில் வெள்ளிவிழா
காணும் - மேகலையே
நயினை நாகம்மை
அவள் தாழ்பற்றி - வாழ்த்துகிறோம்.
காலக் கொடுமையால்
புலம் பெயர்ந்த - நிலையில்
கடல் கடந்திட்ட போதும்
வந்த வழி மறவாது நம் மண்ணை
கொட்டும் பனிதனிலே
லண்டன் மாநகர்தனிலே
நாடியவர் பணியாது மணிமேகலை என்னும்
நங்கை அவள் பெயர் வைத்து
அண்டைய நிலத்தில் ஊண்றிய மேகலையே
நாற்றிசையும் விரிந்தோங்க
சீர் பெருக வளர்ந்து இங்கு
தணியாத கலை ஆர்வ மிகுதி பெற அரங்கேற்றி
நம் சிறார்களுக்கு முத்தமிழ் கலை வளர்த்த தாயே
இருபத்தைந்து வருடங்கள் கலை நிகழ்ச்சிகளை
எம் கலைஞர்களுடன் மேடை கண்ட மேகலையே
பண்டைத் தமிழ் மரபை பண்போடு காத்து வந்தாய்
நம் மண்ணில் எம்மவர் நிலை கண்டு
உதவிக்கரம் நீட்டிய - தாயே
கல்வி தான் உன் பணி என - நயினை மண்ணில்
கல்விக் கூடத்தை அமைத்த மேகலையே
தகாத பல இடர் கண்டு நம் மக்கள் - கேட்கும்
கேள்விக்கு பதிலுரை கூறி வளர்ந்த கழகம் அல்லவா
கடுகளவு தான் சொன்னேன்
மலையளவு புகழுண்டு எம் மணிமேகலையில்
கலை வாழ்வில் பல மைல்கள் தாண்டியும்
கற்தூணாக நிற்கும் மணிமேகலையே
அலை கடல் சூழ் நயினை நாகபூசணி அன்னை
அருளாசி தனைப் பெற்று
கலைப் பணிகள் தொடரவே
ஆண்டு பல்லாண்டு வாழியவே.

சுபம்

**நயினை அமுதன்.**








தீவகம் தெற்கு பிரதேசசபை
உப அலுவலகம் - நயினாதீவு



நயினாதீவு பிரதேச சபை
நூலகம்



நயினாதீவு சந்தைக்
கட்டடத் தொகுதி



தொலைத்தொடர்பு கோபுரம்
நயினாதீவு



மேகலை அரங்கு - நயினாதீவு



ஸ்ரீ கணேச கலையரங்கு



நயினாதீவு சத்தியசாயி நிலையம்



ஸ்வாமி பரமாத்மானந்தா தியான மண்டபம்





# நயினாதீவின் தொன்மை ஒரு வரலாற்றுப் பார்வை



நயினாதீவு அளவால் சிறியதெனினும் தொல் புகழாற் தலை சிறந்த தீவாக விளங்குகின்றது. மேனாட்டு நாகரிக அலைகளால் ஏற்றுண்டு போகாது சைவத்தையுமு தமிழையும் பேணிவளர்த்து வாழந்து வந்தவர்கள் தீவுப்பகுதி சைவ நன்மக்கள் என்றே கூறலாம். சரித்திர காலத்திற்கு முன் தொட்டே பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த பெரும் புகழ் உடையது நயினாதீவு. இத்தீவின் பல்வேறு பெயர்களை அறிந்து கொள்வது அதன் வரலாற்றை அறிந்து கொள்ளுதலில் ஒரு பாகம் ஆகும்.

‘ நயினாதீவு எனச் சிறப்புப் பெயர் இலங்கையில் விஜயன் வந்து சேர்வதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிக முதிர்ச்சியுள்ளதாக வாழ்ந்து வந்தனர் எனக் குறிப்பு காணப்படுகிறது.‘ இந்நாகர் வாழ்ந்தனர் என்ற பெருமையினை இன்றும் நினைவுறுத்துவதாகவே நயினாதீவு, நாகர் கோவில் என்ற சொற்பதங்கள் காணப்படுகின்றது. இத் தலத்திற்கு நாகதீவயின, நாகதீவு, மணிநாகதீவு, மணி பல்லவதீவு, மணித்தீவு, பிராமணத்தீவு, ஹார்கம், சம்புத்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம், நாகேச்சரம் முதலிய பல பெயர்கள் உள்ளன.

நயினாதீவுக்கு வழங்கப்பட்ட மிகப்பழைய பெயர் நாகதீவு என்பதே மிகவும் பொருத்தமாகும். நாகர்களின் ஆதிக் குடியிருப்பாலும், நாகங்கள் அதிகமாக வாழ்ந்ததாகவும், நாக வழிபாட்டினாலும் நாகதீவு என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். பிறிதொரு காலத்தில் வட இலங்கை முழுவதுமே நாகதீவு என்று அழைக்கப்படலாயிற்று. பின்னர் இப்பெயர் இலங்கை முழுவதற்கும் இடப்படலாயிற்று.

நயினாதீவுக்கு வழங்கப்படும் பெயர்களுள் நயினாதீவு எனும் பெயர் வரக் காரணத்தை நோக்கலாம். மாநாய்கன் என்ற வைசியர் ஒருவர் மதுரையில் இருந்தார். அவர் தான் நாகபூசணிக்கொரு சிறந்த ஆலயத்தை நயினாதீவு வடகீழ் திசையில் கட்டுவித்தார் என மதுரை வைசியர்களிடமிருந்து பெற்ற ஏடுகள் தெரிவிக்கின்றன. நயினார் பட்டர் என்ற அந்தணரையும், கண்ணப்பன் எனும் வேளாளரையும் மாநாய்கன் என்ற வைசியர் தான் நயினாதீவுக்குக் கொண்டு வந்தார். அப்போது நாகதீவென்றே அழைக்கப்பட்டது. அறிவில் சிறந்தவராகவும், அரசினர் தொடர்புடையவராகவும் நயினார் பட்டர் இருந்தமையால் அவருடைய ஞாபக சின்னத்தை பிற்காலத்தவர் விரும்பி நினைப்பதற்காக நாக நயினாதீவு என மாற்றி அமைத்தார். நயினார் பட்டரின் செல்வாக்கும் அவர் சந்ததியாரின் செல்வாக்கும் விருத்தியடைய நாக எனும் பதம் நீக்கப்பட்டு நயினார் தீவு என அழைக்கப் படலாயிற்று. நயினார் பட்டருடைய 20ம் தலைமுறையினரான இளையதம்பி உடையார் காலத்தில் பட்டர் மரபினர் நாகபூஷணிக்கும் பூஜை செய்வதை விடுத்து அரசாங்க சேவையிற் சேர்ந்தார்கள். பின்பு பட்டர் மரபினருடைய செல்வாக்கொழிய நயினார்தீவு என்ற சொல்லில் ‘ர்‘ விடப்பட்டு நயினாதீவு ஆகியது.

**‘நச்சு வழி நாட்டியஞ் செய்வோர்கள் தானும் நாக நயினாதீவில் வாழ்வோரும்‘**

என வையாபாடலில் நாக நயினாதீவு என்ற பெயரே சூட்டப்பட்டிருந்ததைக் காணலாம். நாகர் தாங்கள் வழிபடாற்றிய நாகத்தை நாக நயினார், நாக தம்பிரான் என்று போற்றியிருத்தல் வேண்டும். ஆகவே, அத்தெய்வம் கோவில் கொண்டு எழுந்தருளிய தலம் நாக நயினார் தீவு பின்பு நயினாதீவு எனப் பெயர் பெற்றதாகவும் கூற இடமுண்டு.

மேலும், பூந்தோட்டம் என்ற பெயர் இத்தீவிற்கு வழங்கப்பட்ட புராதனப் பெயராகும். இந்தியாவிலுள்ள சிதம்பர கோவிலுக்கு வேண்டிய பூக்களைப் பெறுவதற்கு நயினாதீவுத்தில்லை வெளியில் ஒரு பெரிய பூந்தோட்டம் அமைக்கப்பட்டு பூக்கள் சிதம்பரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. தில்லைக் கோவிலுக்கு வேண்டிய பூக்கள் பெறப்பட்டதன் காரணமாக இப் பூந்தோட்டம் தில்லைப் பூந்தோட்டம் என அழைக்கப் படலாயிற்று. பின்பு இந்தியாவில் தேவையான பூக்கள் கிடைத்தமையால் இத்தோட்டம் கைவிடப்பட்டு பூமரங்கள் அழிந்து போனதுடன் பரந்த சமவெளியானமையால் தில்லை வெளி என அழைக்கப்படுகிறது. இப்பகுதி தற்போது பிடாரி கோவில் இருக்கின்ற பகுதியாகும். தில்லை வெளி 200 பரப்பளவுடையதாக இன்றும் காணப்படுகின்றது.

நயினாதீவுக்கு மணிபல்லவம் எனும் பெயருமுண்டு. ஒரு சிறுதீவு காவேரிப்பூம் பட்டினத்திலிருந்து தெற்கே முப்பது யோசனைத் தொலைவிலுள்ளது. அங்கு தன்னைத் தரிசிப்பவர்களுக்குப் பழம் பிறப்பின் செய்தியைத் தெரிவிக்கும் புத்த பீடிகை ஒன்றும் கோமுகி எனும் பொய்கையும் இருந்தன. மணிமேகலை தன்னுடைய பழம் பிறப்பை இந்த புத்த பீடிகையால் உணர்ந்தாள். அமுதசுரபி என்னும் பாத்திரத்தை தீவதிலகையின் உதவியால் இக்கோமுகியிலே பெற்றாள் என்று கலைக் களஞ்சியம் தொகுதி 8ல் கூறப்பட்டுள்ளது. எனவேதான் இப்பெயர் கி.பி. 2ம் நூற்றாண்டளவில் உள்ள பெயராகும்.

இத்தீவுக்கு வழங்கப்படும் பெயர்களுள் மணித்தீவு, மணி நாகதீவு என்ற பெயர்களுமுண்டு. மணி என்ற சொல் இப்பெயர்களில் நாகரத்தினத்தையே குறித்து நிற்கின்றது. நூகரத்தினத்தை வாங்க வந்த வைசியர்களினால் இப்பெயர்கள் அழைக்கப்பட்டதாக மதுரை வைசியர்களது பழைய ஏடுகள் கூறுகின்றன. அடுத்து, இத்தீவுக்கு வழங்கப்படும் பெயர்களாக நாவலந்தீவு. நரித்தீவு, சம்புத்தீவு போன்ற பெயர் வரக் காரணத்தை நோக்கலாம். சம்பு என்ற சொல் சிவன், நாவல், நாவலந்தீவு, நரி என்பவற்றைக் குறிக்கும். சம்புத் தீவிலுள்ள அரிய நாவலின் நறுங்கனியை உண்பதற்காக இலங்கை மன்னன் கொழும்புத்துறை மூலம் சம்புத்தீவுக்கு வந்தார் என்று மகாவம்சம் கூறுகின்றது. இந் நாவற் கனியுடைய சம்புத்தீவு நயினாதீவே என்று போனர் ஆசிரியர் தமது சரித்திர நூலில் கூறியுள்ளார்.

நரித்தீவு என்ற பெயரும் இத்தீவுக்கு இருந்ததாக அறியப்படுகிறது. ஆங்கிலேயர் இலங்கையை வெற்றி கொண்ட போது இலங்கையில் சத்திய வேதத்தைப் போதித்து வந்த பல்டேயஸ் பாதிரியார் எழுதிய இலங்கைச் சரித்திர நூலில் நயினாதீவு என்றால் நரிகள் வாழுந்தீவு என்ற பொருள் உடையது எனக் குறிப்பிட்டார். பாதிரியார் நயினாதீவு எப்படி ஏற்பட்டது என்று யாரையாவது வினாவி இருக்கலாம். அதற்கு விடையாக சம்புத்தீவு என்று பழங்காலத்தில் அழைக்கப்பட்டது என்று கூறி இருக்கலாம். சம்பு என்றால் என்ன என்று பாதிரியார் கேட்டிருக்க வேண்டும். யாரோ ஒருவர் சம்பு என்றால் நரி என்று விடை கூறி இருக்கலாம். அந்நியரான பாதிரியார் அக்கருத்தை உடனே தன் குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொண்டார் போலும்.



அடுத்ததாக இத்தீவுக்கு வழங்கப்படும் பெயர்களுள் நாகதீபம் என்பது யாழ்ப்பாணக் குடா நாட்டைக் குறிப்பதாகக் கூறுவர். ஆனால், தீபம் என்ற சொல் தீவு என்ற பொருள் உடையது. யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு தீவு அல்ல. அது நான்கு பக்கமும் கடலாற் சூழப்படவில்லை. ஆகவே, நாகதீவே நாக தீபமாகும். நாகதீப இச்சொல் சிங்களச் சொல்லாக விளங்கலாம். யாழ்ப்பாணம் ‘யாப்பனய’ என்பது போல நாகதீபம் ‘நாகதீப’ என அழைக்கப் பட்டுள்ளது. நாகதீவு என்ற பெயர் நயினாதீவுக்கே உரியதாகும். மலாயக் குடா நாட்டிலுள்ளோர் சிங்கப்பூரின் பெயரால் தம்மைப் புலப்படுத்திக் கொள்வது போன்று யாழ்ப்பாணக் குடா நாட்டிலுள்ளோரும் தம்மை நாகதீவின் பெயரால் புலப்படுத்திக் கொண்டனர். யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு நாகதீவு என்னும் பெயர் பொருந்தாது என்று சென்னைப் பெரியார் வி.பி. அவர்கள் 1928 யூன், யூலை ஒற்றுமை இதழில் அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள். இந்தியாவில் இருந்து பிராமணர்களை அழைத்து வருவதற்காக யாழ்ப்பாண நாட்டின் பல பாகத்திலிருந்து சென்றவர்களுள் நாக நயினாதீவில் வாழ்வோரும் சென்றார்கள் என்று வையாபாடல் கூறுகின்றது. பகவான் புத்தர் தரிசித்த காலத்திலுள்ள நாமம் அதுவே. அக்காரணம் பற்றியே பௌத்தர்கள் இன்றும் அதனை நாகதீபம் என்றே அழைக்கின்றனர்.

‘நாகதீபமும் யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த சின்னங்களும்’ என்ற கட்டுரையில் டாக்டர் போல் பீரிஸ் அவர்கள் நாகர் கோவில் தொடக்கம் நயினாதீவு வரையுள்ள யாழ்ப்பாணக் குடாநாடு அல்லது தமிழ்ப் பட்டினம் முழுவதுமே நாகதீபம் என்றழைக்கப் பட்டது எனவும் பிற்காலத்தில் நாகதீவயின என ‘நமபொத்த’ எனும் நூலிற் கூறப்பட்டிருப்பது இப்பொழுதுள்ள நயினாதீவையே குறிக்கும் எனவும் கூறியுள்ளார்கள். முற்காலத்தில் நயினாதீவில் இறைவன், இறைவி சந்நிதியும் ஒரே ஆலயத்தில் வெவ்வேறாக இருந்தன. அப்பனும் அம்மையும் கோவில் கொண்டருளி இருந்த ஆலயமே நாகேஸ்வரம் என அழைக்கப்பட்டது. இவ் ஆலயப் பெயரே ஊர்ப் பெயராக வழங்கி வந்திருக்கின்றது.’

வல்லிபுரக் கோவிற் பொற்சாசனத்தைப் பற்றி எழுதிய தொல்பொருட் பகுதி அதிபர் டாக்டர் பரணவிதான அவர்கள் நாகதீபம் எங்கே உள்ளது என்பதைப் பற்றிய ஆராட்சி சந்தேகங் கொள்வதற்கிடமின்றிச் செய்து விட்டது இச்சாசனம். அதன்படி யாழ்ப்பாணமே நாகதீப என வழங்கப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்கள். இக் கொள்கையினையே இலங்கையின் சரித்திரச் சுருக்கம் எழுதிய எச். டபிள்யு. கொட்றிங்டன் அவர்களும் சூளவம்சத்தை மொழி பெயர்த்த கைகர் என்பவரும் ஏற்றுக் கொண்டனர்.

ஆனால், வித்துவான் சி. குமாரசாமி அவர்கள் இலங்கையின் வடபாகம் முழுவதும் நாகதீபம் எனக் குறிப்பிடப்பட்டது என்கின்றனர் வரலாற்று அறிஞர்கள். எனினும், இப்பொழுது நயினாதீவே நாகதீபம் என்ற பெயரால் வழங்கப்படுகிறது. மணிமேகலைக் காப்பியம் குறிக்கும் மணிபல்லவம் நயினாதீவே என்பதற்கு ஐயமின்றி இன்றும் தோம்புகளில் புத்தபள்ளம், புத்தகோவில் வளவு, படகுத்துறை போன்ற பெயர்கள் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். இவற்றை மணிமேகலை அகச்சான்றுகளுடன் தொடர்பு படுத்தி நோக்கின் இவ் உண்மை புலனாகின்றது.

அடிக்குறிப்புகள்


1. தேர்த்திருப்பணிச் சபையார் - 1957. ‘நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேர்த்திருப்பணிச் சபை மலர்’ நயினாதீவு ப.16
2. பாலசுந்தரம். இ. - 1990. நயினாதீவு இடப்பெயர்வு ஆய்வு. மணிபல்லவம், மணிபல்லவ கலாமன்றம். ப.24-25
3. சரவணபவன். ஐ. 1962. ‘நயினாதீவு வரலாற்றுப் பின்னணி’ கோமுகி மணிபல்லவ கலாமன்றம். ப. 20
4. பாலசுந்தரம். இ. மு. கூ, நூ. ப. 25
5. குமாரசாமி. சி. - 1980. ஆபுத்திரனும் அமுத சுரபியும்.

   பக்கம் இடப்படவில்லை.


**1.3 நயினாதீவின் தொன்மை பற்றிய சான்றுகள்**

மணிபல்லவம் என அழைக்கப்படும் நாகதீபமானது சப்த தீவுகளுக்குள்ளே மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இத் தலத்தில் எழுந்தருளி இருக்கும் நாகபூசணி அம்பாள் ஆலயமானது மிகவும் வரலாற்றுத் தொன்மை மிக்க ஓர் ஆலயமாகும். இவ் ஆலயத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு எமக்கு ஆங்காங்கே இலக்கியங்களும், தொல்பொருட் சாசனங்களும், கல்வெட்டுகளும், ஐதீகங்களும் தெரிவிக்கின்றன. ஆனால், இத்தீவினைப் பற்றி அறிவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. ஆயினும், நேரடி ஆய்வின் மூலம் இத் தீவினைப் பற்றி அறிய முடிகின்றது.

அந்தவகையில் நயினாதீவின் தொன்மை பற்றி அறிந்து கொள்வதற்கு தொல்பொருட் சாசனங்களான நயினாதீவு சிலாசாசனம், சீனத்துச்சாவடிகள், பௌத்த விகாரை, கற்சில்லு என்பவற்றினூடாகவும் இலக்கியங்களான வெடியரசன் வரலாறு, படகுதுறை என்பவற்றினூடாகவும் மற்றும் ஐதீகங்களான மணிமேகலா தெய்வம், நாகம் அர்ச்சனை செய்தது என்பவற்றினூடாகவும் அறிய முடிகின்றது.

அதாவது, நாகபூஷணி அம்பாள் கோவிலின் கீழைக் கோபுர வாயிலில் இந்தச் சிலாசாசனம் காணப்படுகிறது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசகர் 1922ம் ஆண்டு மாசி மாதம் நயினாதீவுக்கு சென்றபோது சானக்கல்லைப் புரட்டிவித்து பின்னர் திரு. லோசன் எனும் பிரதிமைப்படக் காரரைக் கொண்டு கல்லை நன்றாக உரஞ்சிக் கழுவிப் புகைப்படம் எடுத்துக் கொண்டு திரும்பினார். இப்படத்தை முதலியார் இராசநாயகம் சுவாமியிடமிருந்து பெற்று முழுச் சாசனத்தையும் தெளிவாக வாசித்துத் தமது ‘புராதன யாழ்ப்பாணம்’ எனும் நூலிற் பதிப்பித்தார். யாழ்ப்பாணச்சரித்திரத்தை இவ்விரு அறிஞர்களின் உதவியால் இந்தச் சாசனத்திலுள்ள வரலாற்றுக் குறிப்பு தமிழகத்துக்குக் கிடைத்துள்ளது.

இச் சிலாசாசனமானது மாகபராக்கிரமபாகுவால் 12ம் நூற்றாண்டில் பழைய எழுத்துகளில் செதுக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு, நயினாதீவு ஆகியவற்றை அடுத்துள்ள கடற்பகுதிகளில் கப்பல்கள் அடிக்கடி சேதமுற்றன என்பன இதனால் அறியக் கிடக்கின்றன. மேலும், வருடந்தோறும் 60 கப்பல்கள் சேதமடைவதாக ஜோன் எனும் கிறிஸ்தவப் பாதிரியார் ஒருவர் குறிப்பிட்டுள்ளார் என முதலியார் இராசநாயகம் எடுத்துக் காட்டியுள்ளார். நயினாதீவின் தென்பகுதி மலையடி என்று அழைக்கப் படுகிறது. ஊர்காவற் துறையிலிருந்து நெடுந்தீவுக்குச் செல்லும் வத்தைகள் ஏழாற்றுப் பிரிவினையும் மலையடியை அடுத்துள்ள கொந்தளிப்பான சமுத்திரத்தையும் தாண்டிச் செல்ல வேண்டும். நாவாய்கள் தம்முடன் மோதும் அலைகளினால் மேலெழும்பிக் கீழே விழும்போது அவற்றினுள்ளே இருக்கும் பிரயாணிகள் பெரும் கஷ்டப்படுவது வழக்கம். இரண்டு தீவுகளுக்குமிடையே செல்லும் ஏழு கடற்பகுதிகளையும் ஏழு ஆறுகளாகக் குறிப்பிடும் மரபினை ஆதாரமாகக் கொண்டு ஏழாற்றுப் பிரிவு என்ற பெயர் ஏற்படலாயிற்று. அம்பிகையின் சந்நிதியை அடைய

முன்னர் ஏழாற்றுப் பிரிவினைக் கடத்தல் வேண்டும். நெடுந்தீவுக் கடலில் கப்பல்கள் சேதமடைவது சர்வ சாதாரணமென்பதற்கு வைபவமாலையுடையார் குறிப்பிட்டிருப்பதும் தக்க சான்றாகும். ‘ வட இலங்கையைச் சங்கிலி அரசன் ஆட்சி புரிந்த காலத்தில் நாற்பத்தொன்பது வன்னியர்மார் தென்னாட்டிலிருந்து மரக்கலமேறி வருகையில் நெடுந்தீவுக் கடலில் அமிழ்ந்து போயினர்’ என்ற குறிப்பும் காணப்படுகிறது.

நயினாதீவு தொன்மை பற்றி அறிய உதவும் தொல்பொருட் சாசனங்களுள் சீனத்துச் சாடிகளும் முக்கியமானதாகும். சில ஆண்டுகளுக்கு முன் பப்பரவன் சல்லி என்னுங் காணியில் கிணறு ஒன்று தோண்டிய போது அழகான சில சாடிகள் கண்டெடுக்கப்பட்டன. இவற்றுள் சிலவற்றை 1937ல் கொழும்பு நூதன சாலைக்கு அனுப்பி வைத்த பொழுது அவை சீன தேசத்து சாடிகள் எனவும் 12ம் நூற்றாண்டிற் செய்யப்பட்டவையாக இருத்தல் கூடும் எனவுங் கூறிப்பிட்டுள்ளார். எனவே, 12ம் நூற்றாண்டில் நயினாதீவுக்கும் சீனாவுக்கும் தொடர்பு இருந்ததைப் புலப்படுத்துகிறது.

மற்றும், நயினாதீவிற் பழைய விகாரை ஒன்று இருந்தது. இவ்விகாரை இருந்த இடம் புத்த கோயிலடி என்று அழைக்கப்பட்டு வருகின்றது எனக் கூறப்படுகின்றது. இதுவும் நயினாதீவின் தொன்மை பற்றி அறிய உதவும் ஆதாரமாகும். இவ் விகாரை இருந்த இடத்திற்கு அண்மையில் ஒரு பொய்கை இருந்த அடையாளம் உண்டெனவும் அதுவே. கோமுகி எனப்பட்டதெனவும் கூறுவர்.

இவற்றை விட கோவில் வீதியில் ஒரு கற்சில்லும், இரண்டு பீரங்கிகளும் கிடக்கின்றன. இந்தப் பீரங்கிகள் ஒல்லாந்தர் காலத்தன வாயிருந்தல் கூடும். இவை இத்தீவின் அயலிலுள்ள ஆழ்கடலில் இருந்தெடுக்கப்பட்டன. கற்சில்லு கப்பல்களின் நங்கூரமாய் உபயோகிக்கப்பட்டிருத்தல் கூடும். போத்துக்கீசர் ஆட்சிக் காலத்தில் கடலுள் உருட்டி விடப்பட்ட தேர்களின் சில்லுகளில் ஒன்றாக இருக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர். ஒல்லாந்தர் காலத்திலும் ஆங்கிலேயர் காலத்திலும் நயினாதீவை அடுத்த கடலில் சங்கு குளித்தல் நடைபெற்றது. இதனால் அரசாங்கத்துக்குப் பெரும் ஊதியம் கிடைத்து வந்தது. முன்னர் குறிப்பிட்ட காலத்திற் சங்கு குளிப்பதற்காக தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த முஸ்லீம்கள் வணங்கும் பொருட்டு ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. அதன் அருகில் முஸ்லீம் பெரியார் ஒருவருடைய சமாதியும் உண்டு.

அடுத்ததாக, நயினாதீவின் தொன்மை பற்றி அறிய உதவும் இலக்கியங்களாக வெடியரசன் வரலாறு, படகுதுறை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அதாவது, தென்னாட்டிற் கற்புக்கரசி கண்ணகி வாழ்ந்த காலத்தில் தீவுப் பகுதிகளை வெடியரசன் எனும் அரசன் ஆண்டு வந்தான் என வெடியரசன் நாடகம் கூறுகின்றது. இந் நாடகம் நவாலியூர் வைரவி இராமு என்பவரால் 1844ம் ஆண்டளவில் அரங்கேற்றப்பட்டது. ஸ்ரீ கிருஷ்ணனுடைய வலது தொடையில் உதித்தவன் குகன் ஆவான். அவனுக்கு வெடியரசன் என்ற பட்டத்தையும் கருடக் கொடியையும் நீலகேசி எனும் பெண்ணையும் கொடுத்து நாகநகரை அரசாளும் படி வைத்தார் என்றும், காகுந்தி புதல்வனான மீகாமன் சோழவரசனுடைய கட்டளைப்படி மாநாய்கன் எனும் வணிகேசன் மகள் கண்ணகியின் பாதச் சிலம்பு செய்தற்கேற்ற நாகரத்தினம் வாங்க நயினாதீவு என்று சொல்லப்படும் நாகதீவை நோக்கி வந்தான். அத்தீவு வெடியரசனுடைய ஆளுகைக்குட்பட்டது. வெடியரசன் நெடுந்தீவிற் கோட்டை கட்டி தீவுப்பகுதியை ஆண்டு வந்தான். வெடியரசனின் மாலுமி மீகாமனையும் சேனையையும் கரையில் இறங்காதபடி தடுத்து, அவன் வரவை வெடியரசனுக்கு அறிவிக்க அவன் தன் சமூகத்திற்கு மீகாமனை அழைக்கின்றான்.

அவன் வந்து நாகரத்தினம் கேட்க, வெடியரசன் வெகுண்டு மீகாமனைப் போருக்கு அழைத்து, பின் மீகாமன் வெடியரசனை சிறை செய்கிறான். மீகாமன் நாகரத்தினம் கிடைக்குமோ என்ற ஐயத்தினால் பிராமணன் ஒருவனிடம் சாத்திரம் கேட்க, வெடியரசனைக் கொண்டு அரவத்திடம் நாகரத்தினம் கிடைக்குமென கூற மீகாமன் அப்படியே செய்து நாகரத்தினத்தைப் பெற்று சோழதேசஞ் செல்ல, வெடியரசனும் தம்பிமாரான விளங்குதேவன், போர்வீரகண்டன், ஏரிலங்குருவன் ஆகியோரும் வீர நாராயணனின் ஈமக் கடன்களை முடித்துக் கொண்டு தத்தம் இருப்பிடம் ஏகுகின்றார்கள்.

இவ் வரலாற்றினையே ‘நசையாத நாகதீவில் நாகத்தின் மணி வாங்கக் கசிவான மனதுடனே கடுகவுமையழைத்தோங் கான்’ எனக் கண்ணகி வழக்குரை காதை அடிகள் குறிப்பிடுகின்றன. கடல் சூழ் இலங்கைக் கஜபாகு மன்னன் அரசாண்ட காலத்தில் நிகழ்ந்த கண்ணகியின் வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட கதையொன்றினைப் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் நாடகமாக இயற்றுமிடத்து, தாம் செவி வழிகேட்டு வந்த செய்தியைக் கொண்டே இயற்றினராதல் வேண்டும். இவர் வாழ்ந்த காலத்தில் நாகதீவு, நயினாதீவு என்றே வழங்கப்பட்ட தென்பதற்கு ஐயமில்லை.

கல்வி என்னும் பல்கடலில் வீழ்ந்த மக்கள் இவ்வாறு நாகதீபத்தைப் பற்றி ஆராய்ந்து முடிவு கட்டாதிருந்த போதிலும் பௌத்த பொது மக்களும், சைவப் பொது மக்களும் நயினாதீவு தான் நாகதீவு என்றும் புத்தர் தரிசித்த புனித தலம் எனவும் தற்காலத்தில் கூறுகின்றனர்.

மகாவம்சத்தில் நாகதீபம் என்று குறிப்பிடப்படும் வட இலங்கையில் நாகர்கோவில், புத்தூர், பொன்னாலை, செம்பியன்பற்று, மருதடிச் சேனையூர் முதலிய இடங்களில் நாகர் வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. பாரத தேசத்தின் ஒரு பகுதிக்கும், இலங்கைக்கும், வட இலங்கைக்கும் வழங்கிய நாகதீபம் என்ற பெயர் மருவிப் போலும் இன்று நயினாதீவு என ஒரு தீவினைக் குறிக்கிறது. எவ்வாறாயினும், பண்டைய நாகதீபத்தின் எச்ச சொச்சமாக மட்டும் விளங்குவதால் நயினாதீவு முக்கியம் பெறவில்லை. பண்டைய நாக வழிபாட்டின் எச்சமாக மட்டுமன்றி நாக ஈஸ்வரி வழிபாட்டின் சங்கமத்தின் சின்னமாக விளங்குவது இதன் பழமைக்கும், பாரம்பரியத்துக்கும் அசைக்க முடியாத சான்றாகும்.

நயினாதீவின் தொன்மை பற்றி அறிய உதவும் இலக்கிய ஆதாரங்களுள் யாழ்ப்பாணச் சரித்திர நூலும் குறிப்பிடத் தக்கதாகும். நெடுமுள்ளி என்னும் சோழவரசன் யாத்திரை காரணமாக மணிபல்லவத்துக்கு வந்து மீலிவளை என்பவளை மணந்து அதன் பேறாகத் தொண்டைமான் இளந்திரயனைப் பெற்றாளெனக் கூறுகிறது. அத்துடன், பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுணன் நாகவழி பாடாற்றி மணிபுரத்துக்கு வந்து நாக கன்னியை மணஞ் செய்து பப்பிரவாகன் என்ற புத்திரனைப் பெற்றானெவும், பப்பிரவாகனது பெயரே பப்பிரவாகன் சல்லியென ஸ்ரீ நாகபூஷணி ஆலயம் அமைந்த இடமென அறியக் கிடக்கின்றது.

நயினாதீவு பண்டைக் காலத்தில் சிறந்த துறைமுகமாகவும் விளங்கியது எனச் சரித்திரம் பேசுகின்றது. அந்நிய நாடுகளுக்குக் கப்பல்கள் செல்லும் பாதையில் நயினாதீவு இருக்கின்றமையால், தமிழ்நாட்டு கப்பல்களும் அந்நிய நாட்டுக் கப்பல்களும் இத்துறையில் தங்கியே சென்றிருக்க வேண்டும். இத்தீவின் மேற்குக் கடற்கரையில் படகுதுறை என்ற பெயரால் ஓர் இடம் இன்றும் அழைக்கப்படுகிறது. மேற்குப் பகுதி ஆழமாகவும் பெரிய கப்பல்கள் போக்கு வரவு செய்யக் கூடியதாகவும் இருக்கின்றது. நாகபூஷணி அம்மன் கோவிலில்



உள்ள சிலாசாசனம் இக் கொள்கையை வலியுறுத்துகின்றது.

புத்தர் பெருமான் கி. மு. 523 ற்கும் கி. மு. 483 ற்கும் இடையில் தமது யாத்திரை காரணமாக நாகதீவைத் தரிசித்து நாகசபை பிணக்குகளை தீர்த்துள்ளார். சாவக நாட்டு மன்னன் புத்தரது பாத பீடிகையைத் தரிசிக்க மரக்கலமேறி வந்தானென மணிமேகலை கூறும். பர்மாவிலிருந்து தர்மசோக மகாராசா புத்திர சோகத்தால் வருந்தி நாக வழிபாடாற்றி புத்திரப் பேறடைய நாக தீவுக்கு வந்தாரெனக் கூறுவதிலிருந்து நயினைத்தீவின் தொன்மை பற்றி அறிய முடிகின்றது.

இறுதியாக நயினா தீவின் தொன்மை பற்றி அறிவதற்கு ஐதீகங்களும் குறிப்பிடத் தக்க பங்கு வகிக்கின்றது. முன்னொரு காலத்தில் நயினாதீவிலுள்ள அம்பிகையை ஒரு நாகம் பூசித்து வந்ததாம். ஒருநாள் அந்த நாகம் அர்ச்சனை செய்தற் பொருட்டு பூக்கள் கொய்து கொண்டு நயினாதீவுக்கு வடபால் உள்ள புளியந்தீவு எனும் சிறுதீவிலிருந்து மீளும் வழியில் ஒரு கருடன் அதனைக் கொல்லும் பொருட்டு எதிர்த்து வந்தது. கருடனைக் கண்டு அஞ்சிய நாகம் நயினைக் கடற்கரைக்குச் சமீபத்திலிருந்த கல் ஒன்றினைச் சுற்றிக் கொண்டிருந்தது. கருடனும் அந்த நாகத்தைக் கொல்லாமலும் அதனை விட்டு அகலாமலும் அதற்கெதிரே இருந்த கல்லொன்றின் மீது இருந்தது. இங்ஙனம் இவையிரண்டும் பகைமையைக் கொண்டிருந்த சமயத்தில் கடல் வழியாக மரக்கலத்தில் சென்ற வைசிகன் ஒருவன் அந் நாகத்தின் பயத்தைக் குறிப்பால் உணர்ந்து மரக்கலத்தை நிறுத்தி அக்கருடனை விலகும்படி கேட்டான். ‘ உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து நாகம்மாள் கோவிலுக்குக் கொடுப்பாயானால் விலகுவேன்’ என்றது கருடன். வணிகனும் அங்ஙணமே செய்தான். நாகமும் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்தது. வணிகனும் தனது நாட்டிற்குத் திரும்பினான். நடந்தவை எல்லாவற்றையும் தன் மனைவியிடம் கூறினான். அன்றிரவு வணிகனும், மனைவியும் நித்திரை கொள்ளும் போது ஒரு பேரொளி தோன்றி அவர்களுடைய கண்களைச் சிறிது நேரம் கூசச் செய்தது. பின்பு அவர்கள் எழும்பிப் பார்த்த போது நாகரத்தினக் கற்கள் அவ்வறையில் இருப்பதைக் கண்டார்கள். நயினை அம்பிகையின் திருவருள் இருந்தவாறென்னேயென அவர்கள் வியப்புற்று நயினாதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டு நயினையின் வட கிழக்குக் கரையோரத்தில் ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்குச் சிறந்ததோர் ஆலயம் கட்டுவித்தார்கள். ஏழு வீதிகளும், கோபுரங்களும் அமைத்தார்கள். செப்புத் தேர்களும், பவளத் தேர்களும் செய்வித்தார்கள். நயினார் பட்டர் எனும் பிராமணக் குருவைப் பூசகராக நியமித்தார்கள். நயினாதீவின் கடலோரத்தில் கடலுக்குள் இன்னும் பாம்பு சுற்றிய கல், கருடனிருந்த கல் ஆகிய இரு கற்கள் காணப்படுகின்றன. இன்னும் மக்கள் மத்தியில் இக் கர்ண பரம்பரைக் கதை வேரூன்றியிருக்கின்றது.

இப்புனித ஆலயம் சரித்திர காலத்திற்கு முற்பட்ட நாக வழிபாட்டை எடுத்துக் காட்டும் சின்னமாக அமைந்துள்ளது. இக் கருத்தின் பிரகாரம் இலங்கையில் இப்புனித ஆலயத்தைப் போன்ற தொன்மை வாய்ந்த ஆலயம் பிறிதொன்றில்லை. எனலாம். ‘மூலஸ்தான விக்கிரகத்தின் அமைப்பைப் பார்த்தால் அது ஆயிரம் வருடங்களுக்கு முந்தியதாகப் புலப்படுகிறது. ஆனால், நாகப்பிரதிஷ்டை இதற்கு முன்னால் ஏற்பட்டிருக்கலாம்.’ ‘மூலஸ்தான விக்கிரகத்துக்குப் பின்னர் உள்ள நாகபடம் பயங்கரமானது. சீறுவது போல் இருக்கிறது.’ என காரைக்குடி எம். செல்லக் கண்ணு ஸ்தபதியார் குறிப்பிட்டுள்ளார்.’ இந்து மதச் சரித்திரத்தில் நாகபாம்பு ஓர் உன்னத ஸ்தானத்தை வகித்தது. ‘நயினாதீவில் மூலஸ்தானத்தில் அம்மன் உருவம் போல் இருப்பது பழைய நாகப்பிரதிஷ்டையே. ‘ இது மிகவும் தேய்ந்து அம்மன் உருவம் போலத் தெரிகிறது. இதற்குப் பின்னால் ஐந்தலை நாகப்பிரதிஷ்டை ஒன்றுண்டு. இந்தியாவிலும் நாக வழிபாட்டுக்கே பிரத்தியேகமாகவுள்ள இவ்வளவு புராதன கோவிலைக் காண்பதரிது. கலப்பற்ற தூய்மையான நாக வழிபாட்டுப் பண்பினை நயினாதீவில் காணலாம். சரித்திர காலத்துக்கு எட்டாக் காலந் தொடக்கமுள்ள கோவில் இது என்பது புலனாகிறது’ என்று இத்தலத்தைத் தரிசித்த தென்னிந்திய சிற்ப சாஸ்திர வல்லுநர் திரு. எம். நரசிம்மன் தமது கருத்தை வெளியிட்டிருக்கின்றார்.’ உயிருள்ள நாகபாம்பு வழிபாடு கூட நயினாதீவில் இருந்ததெனச் செல்வி. சி. எவ். கோர்டன் கம்மிங் குறிப்பிட்டுள்ளதாக வண. ஜேம்ஸ் காட்மன்’ எடுத்துக் காட்டியுள்ளார்.

அத்துடன் மணிமேகலா தெய்வம் இத் தீவுகளைப் பாதுகாத்து வந்ததென்ற ஐதீகம் ஒன்றுண்டு. மணிமேகலா தெய்வமானது அரக்கர் வதை பண்ணாதபடி இந்திரன் ஏவலாலே சில தீவுகளைப் பாதுகாத்துக் கொண்டிருந்தது. கோவலன் தன் குலத்தவன் ஒருவனை இத்தெய்வம் கடலிற் பாதுகாத்த நன்றிக்காக தன் புதல்விக்கு மணிமேகலை என்று பெயர் இட்டான். இவ் மணிமேகலா தெய்வமே மணிமேகலையை உபவனத்திலிருந்து மணிபல்லவங் கொண்டு சென்று புத்த பீடிகைக் காட்சியால் பழம் பிறப்புணர்த்திற்கு என மணிமேகலை என்னும் காப்பியம் கூறுகின்றது. இவ்வாறாக நயினாதீவின் தொன்மையினை தொல்பொருட் சாசனங்கள், இலக்கியங்கள், ஐதீகங்கள் என்பவற்றினூடாக அறியக் கூடியதாக உள்ளது.

அடிக்குறிப்புக்கள்


1. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் - 21.10.1977. நயினாதீவுச் சிலாசாசனத்தைச் சுட்டிய சில குறிப்புகள் - ஈழகேசரி
2. மயில்வாகனப் புலவர். பு. ஆ. - யாழ்ப்பாண வைபவமாலை. ப. 60
3. Ceylon by Bertolacci – pp 274-276
4. இராமலிங்கம். மு. - ஈழத்தில் இயற்றப்பெற்ற நாடகங்கள், வெடியரசன் நாடகம், வெள்ளவத்தை, இந்துசாதனம்.
5. இராமலிங்கம். மு. - 04.10.1943 வெடியரசன் நாடகம், வெள்ளவத்தை, இந்துசாதனம்.
6. சிற்றம்பலம். க. - 1983 நாகேஸ்வரி வழிபாடு. திருக்குட முழுக்கும் பெருவிழா மலர். நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில். பக்கம் இடப்படவில்லை.
7. சாது எழுதியது. - 11.03.51 நயினாதீவில் திகழும் நாகபூசணி அம்மன் ஆலயம். வீரகேசரி.
8. The Religious Associations of this Island are probably much earlier than the date of the Buddha – Nagadipa and Buddhist Remains in Jaffna, By Dr.P.E Peiries, Rasch.No. 70.p.13.
9. Hinduism in Ceylon – By Rev.James Cartman.p.84.


நன்றி

திருமதி. ஷர்மினி சஞ்சீவன்
வரலாற்றுத்துறை சிறப்பு பட்டதாரி
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்
ஆய்வுகூட உதவியாளர், தேசிய சுகாதார சேவைகள் (NHS) பிரித்தானியா
3 ஆம் வட்டாராம் நயினாதீவு




**1995** இல் நடைபெற்ற கலாசார இரவின் சில துளிகள்






**1996** இல் நடைபெற்ற கலாசார இரவின் சில துளிகள்




# 1997 இல் நடைபெற்ற கலாசார இரவின் சில துளிகள்






# 1998 இல் நடைபெற்ற கலாசார இரவின் சில துளிகள்




**1997** இல் நடைபெற்ற கலாசார இரவின் சில துளிகள்






**1998** இல் நடைபெற்ற கலாசார இரவின் சில துளிகள்




















**1999 இல் நடைபெற்ற கலாசார இரவின் சில துளிகள்**


















**2000 இல் நடைபெற்ற கலாசார இரவின் சில துளிகள்**




**2001** இல் நடைபெற்ற கலாசார இரவின் சில துளிகள்






**2003** இல் நடைபெற்ற கலாசார இரவின் சில துளிகள்




**2004** இல் நடைபெற்ற கலாசார இரவின் சில துளிகள்






**2008** இல் இடம்பெற்ற கலாசார நிகழ்வுகள



**2015 இல் இடம்பெற்ற கோடைக்கால நிகழ்வுகள்**





**2016 இல் இடம்பெற்ற நிகழ்வுகள்**



**2017 இல் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வுகள்**





**2018 இல் இடம்பெற்ற நிகழ்வுகள்**



**2019 இல் இடம்பெற்ற நிகழ்வுகள்**





**2020 இல் இடம்பெற்ற உறவுகளின் ஒன்றுகூடல்**



**2021 இல் இடம்பெற்ற கோடைக்கால விளையாட்டு விழா**





# நயினாதீவின் கல்வி வரலாறு

## - ஒரு நோக்கு -

### அமைவிடமும் தொன்மைச் சிறப்பும்

இலங்கையின் வட பால் அமைந்துள்ள சப்த தீவுகளின் நடுநாயகமாகத் திகழ்வது, நாகபூஷணித் தாயின் அருள் சுரக்கும் நயினையம்பதி. கடலன்னையின் அரவணைப்பில் கண்வளர்ந்து அருளன்னையின் ஆலயமணி ஓசையில் புலர்ந்து உலகில் தனக்கென தனியொரு வதிவிடப் பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குவது இம் மணித்தீவு. “மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிது” என்பதற்கேற்ப சிறிய தீவாக இருப்பினும் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிலிருந்தே அறிஞர்கள், கவிஞர்கள், புலவர்கள் இங்கு வாழ்ந்துள்ளமையால் கல்வி மேம்பாட்டிலும் சிறப்புண்டு. “கண்ணுடையோர் என்போர் கற்றோர்” என்று கூறுவார் வள்ளுவப்பெருந்தகை. கல்வியானது அறியாமையைப் போக்கி அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை வளர்த்து ஒழுக்கசீலர்களான மக்களை உருவாக்கவல்லது. அத்தகைய கல்வியிலும் ஒழுக்கத்திலும் பண்பாட்டிலும் நயினை மக்கள் மேம்பட்டு, மற்றையோர் வியக்கும் வகையில் உள்ளனரென்றால் அதற்கு அடிப்படையாக அமைந்த இக்கிராமத்தின் நீண்ட கல்விப் பாரம்பரியத்தையும் வளர்ச்சியையும் அதற்காக அர்பணிப்புடன் பணியாற்றியவர்களையும் நோக்குவதில் பெருமையடைகின்றோம்.

### குடியியல் பண்பும் தொழிலும் கல்வியும்

நயினையில் வாழ்ந்த பழம் குடிமக்கள் தமிழர்களாகவும் சைவ சமயத்தவர்களாகவும் வாழ்ந்ததால் தாய்மொழிப்பற்றும் இறைநம்பிக்கையும் உடையவர்களாக இருந்தனர். அவர்களது பிரதான தொழில் விவசாயமாகும். இவர்கள் தமது ஓய்வு நேரங்களில் கல்வி அறிவையும் வளர்த்து வந்தனர். நாற்று நடுதல், ஏற்றம் இறைத்தல், களை பிடுங்குதல் போன்ற வேளைகளில் இசையோடு கூடிய பாடல்களைப் பாடினர். இப்பாடல்களை மீண்டும் மீண்டும் பாடி மகிழ்ந்தனர். இப்படியாக செவிவழிக் கல்வி அக்காலத்தில் வளர்ந்தது. வீடுகளில் பாரதம், இராமாயணம், போன்ற நூல்களை வாசிக்கத் தெரிந்த ஒருவர் வாசிக்க அயலவர்கள் கூடியிருந்து கேட்பர். எழுத வாசிக்கத் தெரியாத நயினை முதியவர்கள் பலர் பாரதம், இராமாயணச் செய்யுள்களை பிழையின்றி மனனம் செய்து வைத்துள்ளமையை இன்றும் நாம் காணலாம்.

நயினைக் கல்வியில் அடுத்தபடியாக அமைவது திண்ணைப் பள்ளிக் கூடங்களும், புராண படனக் கலாசாரமுமாகும். பாடசாலைகள் ஏதுமற்ற காலத்தில் இப்பகுதி அறிவறிந்த பெரியோர்கள் தம் வீட்டுத் திண்ணையில் தம்மிடம் வரும் பிள்ளைகளுக்கு கல்விபோதித்தனர். வேதனம் ஏதுமின்றி எழுத்தறிவித்தலைப் புண்ணியமாகக் கருதிப் பணியாற்றி வந்தனர். இத்தொண்டு புரிந்தவர்களில் முக்கியமானவர்கள் திருவாளர்கள் வேலாயுதர், வே.வைரமுத்து (தம்பிப்பரியாரியார்), சு.வீரகத்தியர், சிவகுரு ஆறுமுகம், கந்தப்பண்டாரம், சின்னத்தம்பி என்போர் நினைவுகூரத்தக்கவர்கள். அவர்கள் தொண்டு வாழ்க. குருகுலக்கல்வி முறையிலான கல்வி நல்ல பண்பாட்டுடன் வளர்ந்தது. ஆசிரியர் வீடு சென்று ஆசிரியருக்குரிய பணிவிடைகளைச் செய்து உடனுறைந்து கற்பதே குருகுலக் கல்வி முறை. இக்கல்விமுறையினால் இலக்கணம், இலக்கியம், கணிதம் என்பன பற்றிய விளக்கமான அறிவு மாணவர்களுக்கு ஏற்பட்டது.

நயினையில் ஆலயங்கள் பலவற்றில் அக்காலங்களில் கந்தபுராணம், வாதவூரடிகள் புராணம் என்பன படித்து பயன் சொல்லும் மரபு இருந்தது. அதன் மூலம் கல்வி அறிவையும், இலக்கிய ரசனையையும், இறை பக்தியையும் வளர்த்த பெருமை இக்கிராமத்து மூதறிஞர்களையே சாரும்.

### திருச்சபை பாடசாலை

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1881-1900) வட்டுக்கோட்டையை தலை மையகமாகக் கொண்டு விளங்கிய அமெரிக்க கிறிஸ்தவ திருச்சபையினர் இன்று மகாவித்தியாலயம் இயங்கு மிடத்திற்கருகில் ஒரு தேவாலயத்தையும், மடாலயங்களையும் அமைத்து சமயப்பணி செய்தனர். இவர்களால் ஆரம்பத் தமிழ் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டது. இதன் அதிபராக யாழ்ப்பாணத்திலிருந்து வந்த கிறிஸ்தவ ஆசிரியர் ஒருவர் கடமையாற்றினார். உதவியாசிரியர்களாக உள்ளூர் பிரமுகர்கள் சிலரும் கடமையாற்றினர். அவ்வாறு பணியாற்றியோரில் ஒருவர் ஆசிரியர் கார்த்திகேசு அவர்களின் தந்தையார் நா.கனகரெத்தினம் அவர்கள். திருச்சபையினர் தமது சமய வளர்ச்சியையே நோக்காகக் கொண் டிருந்தனர். ஒரு சிலர் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். எனினும் அதில் நிலைத்திருக்கவில்லை. பொது மக்களின் ஆதரவு இப்பாடசாலைக்கு கிடைக்கவில்லை. தில்லையம்பல வித்தியாசாலையின் ஆரம்பத்துடன் இப்பாடசாலையின் வகுப்புக்கள் மூன்றாம் வகுப்பு வரை குறைந்து நாளடைவில் நலிவடைந்து செயலற்றது. இப்பாடசாலையில் கல்விகற்ற சிலர் ஆங்கில அறிவுள்ளவர்களாகத் திகழ்ந்தார்கள். எனவே அக்காலத்தில் ஆங்கிலக் கல்விக்கு இப்பாடசாலை உதவியுள்ளது எனலாம்.

### தில்லையம்பல வித்தியாசாலை

கிறிஸ்தவப் பாடசாலைகளில் நடைபெற்ற மத மாற்றத்தை கண்டித்து ஆறுமுக நாவலரின் பிரசாரங்கள் தீவிரமடைந்திருந்த காலம் இது. குடாநாட்டின் பல பாகங்களிலும் சைவப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. நயினாதீவிலும் 19ஆம் நூற்றாண்டின் இறுதித் தசாப்தத்தில் ஆரம்பிக்கப்பட்ட சைவப்பாடசாலை தில்லையம்பல வித்தியாசாலையாகும். இதன் தாபகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரியார் சின்னக் குட்டியார் அவர்கள். அவர் தனது நண்பர் நயினைப் பெரியார் கதிரேசு அவர்களின் வேண்டுகோளுக்கமைய காலம் சென்ற தன் புதல்வன் தில்லையம்பலத்தின் பெயரால் இவ்வித்தியாலயத்தை நிறுவினார் என்பர். இதற்கான நிலத்தை திரு.மு.செல்லப்பா என்னும் வள்ளல் நன்கொடையாக அளித்தார். இக்காணி தற்போது நயினை மகா வித்தியாலய விளையாட்டுத்திடலுக்கு சற்று வடக்குப் புறமாக உள்ளது. பெரியார் சிவனடியார் அவர்களும் அவர் பின் அவரின் மகன் சட்டத்தரணி பொன்னம்பலம் அவர்களும் பாடசாலை முகாமைத்துவத்தை பார்த்து வந்தனர். கிராமத்தின் மாணவர்கள் இங்கு தம் கல்வியைத் தொடந்தனர்.

தில்லையம்பல வித்தியாலயத்தில் வித்துவ சிரோன்மணி கணேசையர் (புங்குடுதீவு சிவ ஸ்ரீசோமசுந்தரக் குருக்கள்) தலைமை ஆசிரியராக இருந்து அரும் பணியாற்றினார் இவர் பின் வேலணை தம்பு வாத்தியார் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில் 8ஆம் வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்பட்டது. சிறந்த சைவ ஆசார சீலரான இவரைப் பின்பற்றிய மாணவர்கள் சிறந்த ஒழுக்க சீலராகத் திகழ்ந்தனர். மாணவர்களின் தொகை பெருக உள்ளூர் பிரமுகர்கள் சிலரும் தற்காலிக ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். ஆரம்பத்தில் திருவாளர்கள் மு.பரமலிங்கம், கா.கந்தையா, என்போரும் பின்னர் ச.வைத்திலிங்கம், த.கதிரேசு, ப.சுந்தரம்பிள்ளை, வை.சடையப்பசுவாமி, மு.நாகலிங்கம், திருமதி. வை.இராசம்மா, செல்விகள் க.நாகம்மா, ச.சிவக்கொழுந்து ஆகியோரும் ஆவர். முதன்மை ஆசிரியர் தம்பு அவர்கள் ஆர்வமுள்ள படித்த இளைஞர்களை ஒன்று திரட்டி ஓய்வுவேளை களில் புராண படனம், பயன் விரித்தல் போன்ற துறைகளில் பயிற்சிகளை வழங்கினார். அமரர்களான திருவாளர் ப.கந்தசாமி, க.மாணிக்கம், த.அமர்தலிங்கம், கா.ஆறுமுகம் போன்ற புராண படனப்பரம்பரை தோன்றிற்று தம்பு வாத்தியார் நயினை மக்களின் மனத்தில் என்றும் நீங்காத இடத்தினைப் பெறுகிறார்.

தில்லையம்பல வித்தியாலயம் இவ்வாறு விருத்தியடைந்து வருகையில் முகாமையாளர் சட்டத்தரணி சி.பொன்னம்பலம் அவர்கள் 1926ஆம் ஆண்டு பாடசாலையின் முகாமைத்துவத்தை யாழ்ப்பாணம் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்தார். சங்கத்தினால் புலோலியூர் வே.விசாகர் அவர்கள் முதன்மை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். கல்வித் தகைமை உடைய உதவி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். தகைமை பெற்றிருந்த மு.நாகலிங்கம், செல்வி க.நாகம்மா, என்போர் நிரந்தர ஆசிரியர்களாக ஏனையோர் இளைப்பாறிக் கொண்டனர். விசாகர் அவர்களது சேவை மாணவர்



களாலும், பெற்றோராலும் புகழ்ந்து பேசப்பட்டது என அறிய முடிகிறது. 1928ஆம் ஆண்டு திருவாளர் ச.நா.கந்தையா அவர்கள் தலைமை ஆசிரியரானார். நயினை மக்களால் பெரிய உபாத்தியாயர் என அழைக்கப்பட்ட இவரது காலப்பகுதி நயினைக் கல்வி வளர்ச்சியில் பொற்காலமெனப் போற்றத்தக்கது. கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றிச் சித்தியடையத் தொடங்கினர். இப்பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டது.

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயம்

1938ஆம் ஆண்டு தில்லையம்பல வித்தியாலயம் ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயமாக பெயர் மாற்றம் செய்து பதிவுசெய்யப்பட்டது. உள்ளூர் ஆசிரியர்கள் திருவாளர்கள் வே.கந்தையா, செ.தில்லையம்பலம், செல்வி. சீதேவிப்பிள்ளை ஆகியோர் உதவி ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். மாணவர் தொகை அதிகரிக்கவே ஆசிரியர்கள் பெற்றோர்கள், நலம் விரும்பிகள் முயற்சியால் தற்போது வித்தியாலயம் அமைந்துள்ள காணி கொள்வனவு செய்து உறுதியான கட்டடம் அமைக்கப்பட்டு 1941ஆம் வருடம் இயங்கத் தொடங்கியது. ஏறத்தாள ஒரு கால் நூற்றாண்டுக்கு முன் ஆசிரியர்களாக உதித்த அனைவருமே அதிபர் உயர் திரு.ச.நா.கந்தையா அவர்களின் மாணவர்களே. நயினைத்தீவின் கல்வி வளர்ச்சியில் அவர் ஓர் கலங்கரை விளக்கு எனலாம். பல ஆண்டுகள் அதிபராகப் பணியாற்றிய இவர் காலத்தில் வித்துவான்கள், பண்டிதர்கள், சைவப் புலவர்கள், பேரறிஞர்கள் உருவானார்கள். அவர்கள் இன்று நம்மிடையே இல்லாத விடத்தும் அவர்கள் வளர்த்துவிட்ட விழுதுகள் எம் தீவகத்தின் கல்வி விருட்சத்தை தாங்கி நிற்கின்றனர். 1942ஆம் வருடமே சி.பா.த பரீட்சைக்கு இவ்வித்தியாலய மாணவர் தோற்றினர். நயினாதீவு மக்களின் கல்விக் கண்ணை திறந்து விட்ட பெருமை ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயத்துக்கு உரியது. 1946இல் நயினாதீவின் கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலை உதயத்துடன் இவ்வித்தியாலயத்துக்கு வகுப்புகள் படிப்படியாகக் குறைந்து 5ஆம் வகுப்பு வரை நடத்தப்படலாயிற்று. 1960இல் இப் பாடசாலையை அரசு பொறுப்பேற்றது. இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக அதிபர்களான திருவாளர்கள் ச.ந.கந்தையா (1938-1951), (1956-1961) எஸ். பொன்னுத்துரை (1952-1955) கே.கணபதிப்பிள்ளை, செ.ஜயாத்துரை (1961-1970) க.சி.தருமலிங்கம் (1971-1972), நா.விசுவலிங்கம் (1972-1978), நா. கந்தசாமி (1978-1983), தா.பாலசிங்கம் (1983-1986), நா.பத்மநாதன்(1986-1990), சி.வை.சபாரத்தினம் (1991-1997) ஆகியோர் நற்சேவையாற்றியுள்ளர்.

பண்டிதர் நா.கந்தசாமி அவர்கள் அதிபராக இருந்த வேளை பாடசாலைச் சுற்றாடலை ஓர் அழகிய சோலையாக்கியுள்ளார். சி.வை.சபாரத்தினம் அதிபராக இருந்தபொழுது பாடசாலையின் மேற்குப் புறமான காணி அன்பர் க.மாணிக்கம் அவர்களிடமிருந்து இரண்டு பரப்பு அன்பளிப்பாகவும் மிகுதிக் காணி பெற்றோர் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்புடனும் வாங்கப்பட்டது.

திருவாளர்கள் க.கிருஷ்ணசாமி, வி.தனி நாயகம் திருமதிகள் க.பாலசிங்கம், ப.அகிலாண்டேஸ்வரி என்போர் இவ்வித்தி யாலயத்தில் கற்பித்த நல்லாசிரியர்களில் சிலர்.

13-10-1997ஆம் ஆண்டு முதல் அதிபர் திரு.சோ.குகனேசன் அவர்கள் சிறந்த முறையில் பாடசாலையை வழிநடத்தி வந்தார். 03-05-2010 முதல் இவர் நயினாதீவு மகா வித்தியாலய அதிபராகவும் திரு.சொ. பகீரதன் அதிபர் ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலயத்துக்கு அதிபராகவும் கடமையேற்றுள்ளனர்.

பாடசாலையின் பௌதீக வளங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் சுற்றுமதில் திணைக்களத்தினதும், சுவிஸ் நயினை அபிவிருத்திக் கழகத்தின் உதவியுடனும் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்து வருவதுடன் சிறப்பாக கற்பித்தல், கற்றல் செயற்பாடுகள் நடை பெறுகின்றன.

### நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்.

நயினாதீவுக் கிராமத்தின் வடபகுதியிலிருந்த தில்லையம்பல வித்தியாலயத்துக்கு தென் பகுதி மாணவர்கள் வெகுதூரம் நடந்து வரவேண்டியிருந்ததாலும் தில்லையம்பல வித்தியாலயத்தின் மாணவர் தொகை அதிகரித்ததாலும் தென் பகுதிப் பெற்றோரின் பெரு முயற்சியால் 1929இல்

உருவாக்கப்பட்டதே கணேச வித்தியாசாலையாகும். நாகமணிப் புலவராலும் அவரது சகோதரர்களாலும் உவந்தளிக்கப்பட்ட பெருநிலப் பரப்பிலே இப்பாடசாலை உதயமாயிற்று. திரு.இ.கணபதிப்பிள்ளை அவர்களும் வடபால் உள்ள நிலத்தை நன்கொடையாகக் கொடுத்துள்ளார். பெரியார் ப. இராமசந்திரன் அவர்கள் தனது சொந்த வளங்களையே பயன்படுத்தி பாடசாலை உருவாக முன்னின்றுழைத்தார். உளளூர் ஆசிரியர்களே ஆரம்பத்தில் பணியாற்றினர். குறுகிய காலத்தில் அதாவது 1929இல் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திடம் பாடசாலை ஒப்படைக்கப்பட்டது. முதல் அதிபராக வேலணை க.செல்லையா உபாத்தியாயர் நியமனம் பெற்றார். 1932ஆம் ஆண்டு வரை ஐந்தாம் வகுப்பு ஈறாகக் கற்கும் ஓர் ஆரம்பப் பாடசாலையாக இயங்கியது. 1933ஆம் ஆண்டு புங்குடுதீவு திரு.வி.செல்லையா என்பவர் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றார். தற்காலிகமான கொட்டிலாக இருந்த பாடசாலையை பெற்றோர் மாணவர் களின் உதவியுடன் 1600 ச.அடி கொங்கிறீற் கட்டடம் அமைக்கப் பெற்றது. அதிபரின் பெரு முயற்சியால் வருடம் ஒவ்வொரு வகுப்பாக உயர்ந்து 1936இல் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் ஒரு கனிஷ்ட வித்தியாலயமாகிற்று. 1938இல் இவர் மாற்றலாகிச்சென்றார். இன்றும் இவர் பணியை கிராமத்துப் பெரியோர்கள் நினைவு கூருகின்றனர். இவரின் பின் இடைக்காடு ஞா.சுப்பிரமணியம் என்பவர் 1940இல் தலைமையாசிரியரானார். வகுப்புகள் சி.பா.த.வகுப்பு வரை உயர்த்தப்பட்டது. அவ்வருடம் பரீட்சைக்கு தோற்றிய 9 மாணவர்களில் 8பேர் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்தனர். சில ஆண்டுகள் நயினாதீவின் சிரேஷ்ட பாடசாலை வரை வகுப்புகள் உள்ள ஒரே வித்தியாலயமாக விளங்கியது.

1945இல் எழுவைதீவு திரு.ந.பசுபதிப்பிள்ளை அவர்கள் தலைமை ஆசிரிய ரானார். இவ்வாண்டிலேயே இலவசக் கல்வி முறை அறிமுகமானது. நயினாதீவு ஆங்கிலப் பாடசாலையின் உதயத்துடன் இங்கு வகுப்புக்கள் 5 வரையாகக் குறைக் கப்பட்டது. 1949ஆம் ஆண்டு திரு.வி.இராமசாமி அவர்கள் தலைமை ஆசிரியரானார். 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். 1952இல் புலமைப் பரிசில் பரீட்சையில் 9 மாணவர்கள் சித்தியடைந்தனர். 1952 - 1956 வரை பெரிய உபாத்தியாயர் என்று எல்லோராலும் மதிப்புடன் அழைக்கப்படும் நயினை திரு.ச.நா. கந்தையா அவர்கள் அதிபரானார். இவரே நயினை ஆசிரியர் அனைவருக்கும் எழுத்தறிவித்த குருவாக விளங்கியவர். 1956 -1970 ஆண்டு வரை திரு.செ.தில்லையம்பலம் அவர்கள் அதிபராகச் சிறந்த சேவை யாற்றியுள்ளார். 1960இல் பாடசாலையை அரசு பொறுப்பேற்றது. உளளூர் ஆசிரியர்களின் சேவை மாணவர்களுக்குக் கிட்டியது. மாணவரிடம் கல்வியையும் ஒழுக்கத்தையும் இரு கண் போல் வளர்த்தெடுத்தனர்.

1970 தொடக்கம் 1978 வரை சிறந்த நிர்வாகியான நயினை திரு.த.தியாகராஜா அவர்கள் அதிபரானார். 1972இன் மத்தியில் பாடசாலை புனரமைப்புச் செய்யப்பட்டது. 1972ஆம் ஆண்டு இது ஓர் கனிஷ்ட மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. இதற்கு முன்னின்று உழைத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் பின்னாளில் வித்தியாலயத்தில் அதிபராக இருந்தவராகிய பா.அ.ச. செயலாளர் திரு.கு.சாந்திலிங்கம் அதிபர் அவர்கள். அதிபர், பெற்றோர், ஆசிரியர்களின் முயற்சியால் பல கட்டடங்கள் ஆய்வு கூடங்கள் என்பன அமைக்கப்பட்டதுடன் பாடசாலையில் வர்த்தகப் பாடப்பிரிவும் உதயமாயிற்று. அக்காலத்தில் ஒன்றிணைந்த பாடத்திட்டம் செயற்பட்டது. வகுப்புக்கள் தரம் 10 வரை உயர்ந்தது. தே.க.பொ.த பரீட்சைக்குத் தோற்றி சிறப்பான தேர்ச்சிகளை மாணவர் பெற்றனர்.

1978 தொடக்கம் திரு.க.சி.தருமலிங்கம் அவர்கள் அதிபரானார். இவர் காலத்தில் வள்ளல் திரு.மு.இ.அம்பலவாணர் அவர்களால் அவர் பெயரில் ஒரு நூலகம் அமைக்கப்பட்டது. புதிய கட்டடங்கள் இரண்டு கல்வித்திணைக்களத்தால் கட்டப்பட்டது. 1983 - 1986இல் வித்துவான் ப.க.காமாட்சிசுந்தரம் அவர்கள் அதிபரானார். பாடசாலை பல துறைகளிலும் முன்னேற்றம் கண்டது. பாடசாலை முன்பக்க மதில் வே.க.த.தம்பிமுத்து அவர்களால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. 1987 - 1993 வரை மேற்கூறிய அதிபர்களின் காலத்தில் பிரதி அதிபராக பாடசாலையின் உயர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்த திரு.கு.சாந்தலிங்கம் அவர்கள் அதிபரானார். அவரது காலத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த.(சா.த) பரீட்சை என்பவற்றில் சிறந்த பெறுபேறுகள் பாடசாலைக்கு



கிடைத்தது. பாடசாலையின் முன்புறக்காணி விளையாட்டு மைதானமாக் குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியால் பல அன்பர்கள் மைதானத்திற்குரிய நிலத்தை நன்கொடையாக வழங்கினார். தொண்டர் திரு.வி.சபாநாதன் ஒரு பகுதிக் காணியை விலையாக வாங்கி பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தார். இவ்வாறு பாடசாலை விளையாட்டு மைதானம் பெறப்பட்டது. கணேச சனசமூக நிலையப் பாலர் பாடசாலைக்கு அருகிலுள்ள தனது காணியை திரு.க.பாராஜசிங்கம் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இக்காலத்தில் சுமார் 700இற்கு மேற்பட்ட மாணவர்கள் வரை கல்விகற்று வந்தனர். இவ்வித்தியாலயத்தில் நற்சேவையாற்றிய ஆசிரியப் பெருந்தகைகள் மாணவர்களால் என்றும் போற்றப்படுகின்றனர். திருவாளர்கள் நா.கணபதிப்பிள்ளை, வே.கந்தையா, க.பரநிருபசிங்கம், வே.தம்பிப்பிள்ளை, க.சோமசுந்தரம், பண்டிதர் சோமசுந்தரம், சு.சங்கரலிங்கம், சோ.தில்லைநாதன், இ.சிவபாதசேகரம், இ.கனகசபாபதி, வி.உதயகுமாரன், இ.திரவியநாதன், திருமதிகள் பா.உருக்குமணி, வீ.பரமேஸ்வரி, ந.பேரின்பநாயகி, து.சவுந்தலாதேவி, ந.சியாமளா ஆகியோர் இங்கு கற்பித்த நூற்றுக்கணக்கான நல்லாசிரியர்களில் சிலர். தரமுயர்த்தப்பட்ட கணேச வித்தியாலயத்தின் கல்வி வளர்ச்சி 70 - 80களில் வீறுநடை போட்டது எனலாம். திரு.கு.சாந்தலிங்கம் அவர்கள் ஓய்வுபெற நயினையின் முதற் பெண்ணதிபராக திருமதி தவமணி சபாநாதன் அவர்கள் (1993 - 1998) பதவி வகித்தார்.

இக்காலத்திலும் சகல பரீட்சைகளிலும், இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். இவரின் பின் திரு.ப.க.ஞானசுந்தரம் (1998 - 2000) அவர்கள் அதிபரானார். அனைவரையும் அன்போடு அரவணைத்து பாடசாலையின் உயர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருந்த வேளையில் அவர் இறைவனடி சேர்ந்தது அனைவரையும் சோகத்தில் ஆழ்த்திய நிகழ்வாகும். இவரின் பின் திரு.த. இலங்கைநாதன் அவர்கள் (2000) அதிபரானார். இவர்களிருவரது காலத்திலும் "ஞான கணபதி" செயற்பாட்டறை அமைக்கப் பட்டு திறந்து வைக்கப்பட்டது. கல்வி, விளையாட்டு, கலைத்திறன் எனச்சகல துறைகளிலும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை தொடர்ந்து பெற்றனர். 01.11.2000 முதல் திரு.க.கணேஸ்வரன் அதிபரானார். பாடசாலையின் வடக்கு மேற்கு மதில்கள் பழைய மாணவர் திரு.க.கேதீஸ்வரனாலும் தெற்கு மதில் திரு.அம்பலவாணர் சர்வானந்தராசா அவர்களாலும் கட்டுவித்துக் கொடுக்கப்பட்டது. பாடசாலையின் தென் கிழக்குக் காணி கொழும்பு நயினாதீவு சமூக பொருளாதார, கல்விகலாசார அபிவிருத்திச் சங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. 2007ஆம் ஆண்டு முதல் திரு.தி.சிவபாலன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்தி வருகின்றார். உபஅதிபர் திரு.க.ஜீவசீலன் மற்றும் உள்ளூர் வெளியூர் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையால் கணேச வித்தியாலயம் தன்பணியைச் செவ்வனே தொடர்கின்றது.

**நயினாதீவு மகாவித்தியாலயம்**

நயினைக் கல்வியின் இரு கண் போல இயங்கிய இவ்விரண்டு பாடசாலை களுக்கும் மேலாக ஒரு நெற்றிக்கண் போல் அமைந்ததே நயினையின் தற்போதைய மகாவித்தியாலயம். இது 1946இல் தோற்றம் பெற்றது. ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையின் ஆலயத்திற்கு தென்புறமாக இருந்த ஒரு மடாலயமே இதன் தோற்றிடம்.

இலவசக் கல்வியின் தந்தை என வர்ணிக்கப்படும் அக்காலத்துக் கல்வி யமைச்சர் ஊ.று.று.கன்னங்கராவால் இலங்கை எங்கணும் ஆங்கிலப் பாடசாலை களை உருவாக்க வேண்டும் என்ற திட்டத்தின்படி நயினையின் இப்பாடசாலை கனிஷ்ட ஆங்கிலப் பாடசாலையாக உருவாக்கம் பெற்றது. இதனால் வசதி படைத்த ஒரு வகுப்பினருக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆங்கிலக் கல்வி சகலருக்கும் கிடைக்க வழியுண்டாயிற்று. மடாலயத்தில் ஆரம்பமான பாடசாலையை 1947இல் நிரந்தர இடமான வட்டுக்கோட்டை திருச்சபையினரின் காணியில் அமைப் பதற்கு முன்னின்று உழைத்தவர்கள் திரு.த.அமிர்தலிங்கம் அவர்களும் (முன்னாள் கிராமத் தலைவர்) ஆ.நாகலிங்கம் அவர்களும் ஆகும். அக்காலச் சபாநாயகர் சேர் வை.துரைசாமி அவர்களின் உதவியுடன் உயரிய இந்நற்கருமத்தை ஆற்றியமைக்காக என்றும் நயினை மக்கள் இவர்களுக்கு நன்றியுடையவர் களாவார்கள்.

கனிஷ்ட ஆங்கில பாடசாலையின் முதல் அதிபராக எஸ்.அரசன் அவர்கள் 17-01-46இல் பதவியேற்றார். எனினும் ஒரு மாதத்தில் வித்தியாதரிசியாக பதவியுர்வு பெற்று அவர் செல்ல, கரவெட்டியைச் சேர்ந்த உயர் திரு.எஸ்.கந்தப்பு அவர்கள் 12.02.46இல் அதிபரானார். சரவணையூர் அ.அருளானந்த சிவம், செல்வி லீலாவதி முத்துச்சாமி என்போர் உதவி ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். புதிய அதிபரின் வருகையுடன் பாடசாலை தளிர் விடத் தொடங்கியது. பல்வேறு துறைகளிலும் தகுதிபெற்ற ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர். புதிய நிரந்தரக் கட்டடங்களும் ஆய்வுக்கூடங்களும் விளையாட்டு மைதானமும் அமைக்கப்பட்டு பாடசாலை வனப்புப் பெற்றது. வகுப்புக்களும் பொதுச் சாதாரண வகுப்புவரை இடம் பெற்றது. சாதாரணதரத்தில் கலை, வர்த்தக, விஞ்ஞானப் பிரிவுகள் செழிக்கத் தொடங்கின. நீண்ட காலம் அதிபராக இருந்த எஸ். கந்தப்பு அவர்களின் (12.02.46 --- 22.12.53) காலத்தில் மாணவர் தொகை ஆசிரியர் தொகை அதிகரித்ததுடன் பௌதீக வளத்தையும் பெற்று சிறந்த கல்விக்கு வழி சமைத்தார். இவர் தன் சேவையால் நயினைக் கல்வி வளர்ச்சியில் மக்களால் என்றும் போற்றுதற்குரியவராவார். இவரின் பின் காரைநகர் வி.சண்முகம் (1953 - 03-05-1956) அவர்களும், திரு.ரீ.கனகரத்தினம் (05.10.59 - 28.02.1966) அவர்களும், திரு.கே.சபா ஆனந்தர் (04.07.1966 - 06.12-1970) அவர்களும் அதிபர்களாக இருந்த காலங்களில் மகா வித்தியாலயத்தின் கல்வி நிலை மேம்பட்டு வந்தது. இல்லறஞானி இராமச்சந்திரா குடும்பத்தினரால் பாடசாலைக்கு நூலகம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இவர்களின் பின் நயினை மைந்தர் திரு.வே.விசுவலிங்கம் அவர்கள் 01.01.1971இல் இருந்து 12.07.1978 வரை அதிபராக இருந்தார்கள். இவரது காலத்தில் விஞ்ஞானம், வர்த்தகப் பிரிவுகளும் க.பொ.த.(உ.த) வகுப்பில் அறிமுகம் செய்யப்பட்டது. வர்த்தகப் பிரிவில் மாணவர்கள் அகில இலங்கை ரீதியாகவும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். சிறந்த நிர்வாகியாகிய வே.விசுவலிங்கம் அதிபர் காலத்தில் மகாவித்தியாலய கல்விநிலை உச்ச நிலையில் இருந்தது. நயினை மண்ணில் பிறந்து கல்விப் பணிக்காக ஊரிலேயே வாழ்ந்து அரும்பணியாற்றிய நல்லாசிரியர்களை மறப்பதற்கில்லை. திருவாளர்கள் வித்துவான் சி.குமாரசாமி, வித்துவான் ப.க.குகதாசன், ஐ.சரவணபவன், க.நாகேஸ்வரன், சி.நடேசபிள்ளை, பொ.நாகமணி, சி.இரத்தினசபாபதி, வே.பூபாலசுந்தரம், க. உருத்திரகுமாரன், திருமதிகள் பண்டிதை பா.புனிதவதி, லெட்சுமி பரராசசிங்கம், செல்விகள் க.சிவானந்தி, ந.இரத்தினேஸ்வரி, மு.இ.ஜெயலட்சுமி, திருமதி தி.யோகலெட்சுமி, திருமதி. நு. பேரின்பநாயகி, திருமதி. கு. சுந்தரேஸ்வரி, திருமதி.பூ. விசாலாட்சி இவர்களுடன் நூற்றுக்கணக்கான வெளியூர், உளளுர் ஆசிரியர்கள் சிறந்த சேவை யாற்றியுள்ளனர்.

அதிபர் வே.விசுவலிங்கம் அவர்கள் ஓய்வு பெற நயினைக் கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை 18.07.1978இல் அதிபரானார். கலைப் பணிக்கு அவரோர் வற்றாத அருவி. அன்பால் அணைத்து கல்வியை வளர்த்தவர் விளையாட்டு மைதானத்தின் தென்புறக் காணிகள் பெறப்பட்டன. 1980இல் பாடசாலையின் வடக்கு மேற்கு மதில்கள் பழைய மாணவர்களின் உதவியுடன் அமைக்கப்பட்டது. 1988இல் நயினாதீவு, அனலைதீவு, எழுவை தீவு பாடசாலைகள் எட்டையும் ஒன்றிணைத்த கொத்தணிப் பாடசாலை முறைமை நடைமுறைக்கு வந்தது. நயினாதீவு மகாவித்தியாலயமே அதன் ஆதாரப் பாடசாலையாக இருந்தது. கொத்தணிப் பாடசாலை அதிபராகவும் திரு.நா.க.சண்முகநாதபிள்ளையே கடமையாற்றினார். 1990இல் அவர் வேலணைக் கோட்டப் பணிமனைக்கு உ.க.பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்ல திரு.சோ.தில்லைநாதன் அவர்கள் 16.10.1990 முதல் நயினாதீவு மகாவித்தியாலய அதிபராகவும், கொத்தணிப் பாடசாலைகளின் அதிபராகவும் கடமையேற்றார். மகாவித்தியாலயத்தின் மேல்மாடிக் கூரை வேலைகள் ஊர் மக்களின் ஒத்துழைப் புடன் பூர்த்திசெய்து உபயோகத்திற்கு உகந்ததாக்கப்பட்டது. விளையாட்டு மைதானத்தின் வட கிழக்குப் பக்கமான காணி திரு.க.மாணிக்கம் அவர்களிட மிருந்து அன்பளிப்பாகப் பெறப்பட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட்டது. 1991 முதல் 1995 வரை யுத்தச் சூழ்நிலையில் தீகங்கள் யாழ் நிலப்பரப்புடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இதனால் யாழ் கல்வித் திணைக்களத்துடனான தொடர்புகளும் அற்றுப்போய் ஓர் இக்கட்டான காலகட்டமாக அமைந்தது. திருகோணமலையிலுள்ள மாகாணக் கல்வித் திணைக்களத்துடனும் கொழும்பு கல்வி அமைச்சினுடனும், நெடுந்தீவு கோட்டக்கல்வி அலுவலகத்துடனும் கடற்படையின் உதவியுடன் உயிர் அச்சுறுத்தலான கடல், விமானப்



பயணங் களை மேற்கொண்டு பாடசாலையின் அத்தியாவசியத் தேவைகள் (பாட நூல்கள், சீருடை, ஆசிரியர் வேதனம்) அனைத்தும் பெறப்பட்டன. க.பொ.த(சா.்.த), க.பொ.த(உ.்.த), தரம் 5

புலமைப்பரிசில் பரீட்சை என்பனவற்றையும் தீவகத்தின் கல்வி நிலை தொய்வுபடாது நடத்தப்பட்டது. இக்காலத்திலேயே நயினாதீவுப் பாடசாலை ஆசிரியர்களுக்கு இதுவரை கிடையாதிருந்த கஸ்ரப் பிரதேசப்படியும் கிடைக்க ஆவன செய்யப்பட்டது. நெடுந்தீவுக் கோட்டக் கல்வி பணிப்பாளர் திரு.இரா. சின்னத்தம்பி அவர்களின் பெரு முயற்சியால் தேசிய கல்வி நிறுவனத்தின் கிளை ஒன்று நயினாதீவு மகாவித்தியாலயத்தில் நிறுவப்பட்டது. சிரேஷ்ட விரிவுரையாளராக திரு.சோ.தில்லைநாதன் அவர்கள் பொறுப்பேற்று நடத்தினார். ஓய்வு பெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி வித்துவான் க.குகதாசன் அவர்கள் செல்வி சிவானந்தி கதிரேசு என்போர் விரிவுரையாளராகக் கடமையாற்றினர். பல பட்டதாரி ஆசிரியர்கள் தமது பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கையை இந்நிலையத்தின் ஊடாக நிறைவு செய்தனர். 1995இல் யாழ் பெரு நிலப்பரப்புடன் தொடர்புகள் ஏற்பட இந்நிலையம் மூடப்பட்டது. நெருக்கமான மேற்பார்வையும் கட்டமைப்பானதுமான கொத்தணிப் பாடசாலை முறை 1994இல் நீக்கப்பட்டது. தற்போது வேலணைக் கல்விக் கோட்டத்தினதும் தீவகக் கல்வி வலயத்தினதும் மேற்பார்வையில் எமது கிராமத்து பாடசாலைகளின் நிர்வாகம் நடைபெறுகின்றது. 24.11.1996இல் திரு.சோ.தில்லைநாதன் கோட்டக் கல்வி பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றார்.

1978ஆம் ஆண்டிலிருந்து 2010ஆம் ஆண்டு வரை க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியோரில் 1031 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அவர்களில் 71 மாணவர்கள் பல்கலைக் கழக அனுமதியைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

## நயினாதீவு மகா வித்தியாலயத்தில் பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர் விபரம்

| வருடம் | பெயர் (**Names**) | பீடம் (**Faculties**) |
|---|---|---|
| 1978 | த. ஸ்ரீஸ்கந்தராசா | கலை |
| | அ. சண்முகதா | வா்த்தகம் |
| 1979 | சு. இளமுருகன் | வா்த்தகம் |
| | ந. ஜெயசிவதாசன் | வா்த்தகம் |
| | கு. கனகேஸ்வரன் | கலை |
| | ந. தா்மகுலசிங்கம் | வா்த்தகம் |
| 1980 | க. கனகேஸ்வரன் | கலை |
| | மு. மகேந்திரன் | வா்த்தகம் |
| | மு. ரவீந்திரன் | வா்த்தகம் |
| | ச. மகேஸ்வரன் | வா்த்தகம் |
| 1981 | கே. சுசிலாதேவி | கலை |
| | போ. சதாரூபன் | முகாமைத்துவம் |
| 1982 | க. பொ.இ.குலசிங்கம் | வா்த்தகம் |
| | ந. ஜெயசண்முகபாமா | கலை |
| 1983 | வே. மகேந்திரராசா | கலை |
| | சா. வெற்றிவேற்பிள்ளை | கலை |
| 1984 | ச. இராதாகிருஷ்ணன் | வா்த்தகம் |
| 1985 | க. தவஈஸ்வரி | முகாமைத்துவம் |
| | வீ. அசோகன் | கலை |
| | சு. வரதன் | கலை |
| | அ. ரவீந்திரன் | கலை |
| 1986 | சி. கனகசபேசன் | முகாமைத்துவம் |
| | க. ரோகிணி | முகாமைத்துவம் |
| | இ. கமலவதனி | வா்த்தகம் |

| | | |
|---|---|---|
| 1987 | ந. வசந்தினி | வர்த்தகம் |
| | சா. கலைமகள் | கலை |
| | கி. கமலவேணி | கலை |
| | கி. சிவசக்தி | கலை |
| 1987 | இ. சுடர்மதி | கலை |
| | சு. சத்தியபாமா | கலை |
| 1988 | ப. நவசக்தி | கலை |
| | சு. நாகபூஷணி | கலை |
| | அ. நகுலேஸ்வரி | கலை |
| | ந. கணேசபாமா | கலை |
| | மு. அன்னலட்சுமி | கலை |
| 1989 | த. சசிதரன் | கலை |
| | ச. அனுபாமா | வே்டை |
| 1990 | Nil | |
| 1991 | Nil | |
| 1992 | இ. மகேஸ்வரி | கலை |
| | P. பிரியதர்சினி | கலை |
| 1993 | Nil | |
| 1994 | நா. தயாளசௌந்தரி | கலை |
| | சி. வாசன் | கலை |
| | ப. குகனேசன் | கலை |
| | ந. தயாளினி | கலை |
| | ச. நாகேஸ்வரி | கலை |
| | க. கோமதி | கலை |
| | பொ. பிரியதர்சினி | கலை |
| 1995 | இ. பொன்னம்பலம் | கலை |
| | பே. தவேஸ்வரன் | கலை |
| 1996 | சோ. தனலட்சுமி | கலை |
| 1997 | Nil | |
| 1998 | ச. சிவாஜினி | கலை |
| | வி. விமலாம்பிகை | கலை |
| 1999 | க. சசிதா | கலை |
| 2000 | Nil | |
| 2001 | த. பாலமுருகன் | கலை |
| | பா. வினோதினி | கலை |
| | கி. தனுவுயன் | கலை |
| | வி. விஜயவதி | கலை |
| 2002 | இ. கங்கேஸ்வரன் | கலை |
| | வி. சுதர்சனா | கலை |
| 2003 | ச. நிரஞ்சினி | கலை |
| | அ. அருளினி | கலை |
| | ப. வேணுகாராணி | கலை |
| 2004 | ப. குகப்பிரியா | கலை |
| | பு. ஷர்மிளா | கலை |
| | பு. ஜெயபாலன் | கலை |
| 2005 | Nil | |
| 2006 | க. சுஜாதா | கலை |



| | | |
|---|---|---|
| | ப. சுவர்ணலதா | கலை |
| | வி. ஜெயதீபா | கலை |
| 2007 | Nil | |
| 2008 | ம. கினித்தா | கலை |
| | சு. சஜிபா | கலை |
| 2009 | | |
| 2010 | ம. வஜிதரன் | கலை |

25.11.1996 முதல் சொ. பகீரதன் அதிபர் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று சிறப்பாக நடத்தி வந்தார். விஞ்ஞான கூடத்துக்கருகில் நூலகம் நவீனமயப்படுத்தி G.E.P II திட்டத்தில் 2003 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. செயற்பாட்டு அறை, கணினியறையென்பனவும் திணைக்களத்தால் நிறுவப்பட்டது. விளையாட்டு மைதானத்தின் வடக்கு, மேற்கு, கிழக்குப் பக்க மதில்கள் சுவிஸ்ஸிலாந்தில் இயங்கும் நயினாதீவு அபிவிருத்திக் கழகத்தின் உதவியுடன் கட்டுமான வேலைகள் நடந்தன.

03.05.2010 முதல் திரு.சோ.குகனேசன் அவர்கள் மகா வித்தியாலய அதிபராகவும் திரு.சொ.பகீரதன் அவர்கள் ஸ்ரீ நாகபூஷணி வித்தியாலய அதிபராகவும் மாற்றம் பெற்று கடமையாற்றி வருகின்றனர்.

மூன்று பாடசாலைகளும் கல்வியிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் (தமிழ், ஆங்கில தினப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் சாரணியம் போன்றன.) ஒன்றை யொன்று விட்டுக் கொடுக்காது முன்னேறியுள்ளன. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த(சா∴த), க.பொ.த(உ∴த) பரீட்சை என்பனவற்றில் நகரப் பாடசாலைகளுக்கு நிகராகப் பெறுபேறுகளைப் பெற்று வருகின்றன. விளையாட்டுப் போட்டி, தமிழ் மொழித் தினப்போட்டி என்பவற்றில் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் பலர் வெற்றிபெற்றுள்ளதோடு சிலர் தேசிய மட்டப் போட்டிகளுக்கும் தெரிவாகியுள்ளனரென்பதையும் குறிப்பிடலாம். சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கித் தந்த பெருமை நயினைப்பாடசாலைகளுக்குண்டு.

இவ்வித்தியாலயங்களில் கல்வியைப் பெற்ற பலர் (பல அமைச்சுக்களின் செயலாளராகப் பணியாற்றிய திரு.ப.க.பரமலிங்கம் திரு.க.சபாபதிப்பிள்ளை, திரு.நா.க.இராசலிங்கம் ஆகியோர் உட்பட) இலங்கை நிர்வாக சேவை உத்தியோ கத்தர்கள், நீதிவான்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வழக்கறிஞர்கள், கணக்காளர்கள், கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், மற்றும் அரச திணைக்களங்களில் பணியாற்றும் உத்தியோகத் தர்கள், அதிபர்கள், தொழிலதிபர்களென இலங்கையில் மாத்திரமல்லாது உலகெங்கணும் நல்நிலையில் வாழ்கின்றார்களென்றால் அதற்கு வித்திட்ட பெருமை நயினைப் பாடசாலைகளையே சாரும். அதற்காக உழைத்த மதிப்பார்ந்த அதிபர்கள், ஆசிரியப் பெருந்தகைகளை நயினைமக்கள் என்றும் போற்றி நிற்கின்றனர்.

**உதவும் உள்ளங்கள்**

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற எண்ணத்துடன் எம் கிராம மக்கள் தாம் எங்கு வாழ்ந்தாலும் தாய்மண் மீது கொண்ட பற்றுக் காரணமாக நயினாதீவு கல்வி வளர்ச்சிக்கு தம் பங்களிப்பை திறம்பட ஆற்றிவருகின்றனர். கொழும்பு நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கம், சுவிஸ்லாந்து நயினாதீவு அபிவிருத்திக் கழகம், நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம், நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம், ஐக்கிய இராய்ச்சியம் என்பன பாடசாலையின் தேவைகளை அறிந்து பௌதீக, கற்றல் தேவைகளை நிறைவு செய்வதுடன், மாணவர்களின் நலனோம்பும் செயற்பாடு களிலும், மேலதிக வகுப்புகள் நடத்துவதும் ஆசிரியர்களை, மாணவர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் மற்றும் விசேடமாக சித்தியடையும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில், பரிசில் என்பனவற்றை வழங்கி ஊக்குவித்து வருகின்றனர். பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய

மாணவர் சங்கம் என்பனவும் கிராமத்து மக்களும் பழைய மாணவர்களும் தனிப்பட்ட முறை யிலும் பாடசாலைக்களுக்கு உதவி வழங்கி வருகின்றனர். இவற்றிற்கு மேலாக

கல்வித் திணைக்களமும் வேண்டிய கற்றல், கற்பித்தல், பௌதீகத் தேவைகளையும் வழங்கிவருகின்றது. ஆரோக்கியமானபணிகள் நற்பேறுகளை நல்கவல்லன. நல்மனங்கொண்ட அனைவரும் பாராட்டு வதற்கு உரியவர்கள். அவர்கள் பணிகள் தொடர வாழ்த்துவோமாக.

**அவசியத் தேவைகள்**

புதிய கற்பித்தல் முறைகளுக்கமைய நயினாதீவில் கல்வி சிறந்த முறையில் வளர்ச்சியடைந்து வருகின்றது. இடப்பெயர்வின் காரணமாக மாணவர் தொகை தற்போது வேகமாக குறைந்து வருகின்றது. 1980இல் மூன்று பாடசாலைகளினது மாணர்வகளிது மொத்தத் தொகை 1200 ஆகவும் 2010இல் அது 600 ஆகவும் குறைந்துள்ளதை அவதானிக்கலாம். நாட்டின் போர்ச்சூழலும், தமது பிள்ளைகளினது சிறந்த கல்வி நிமித்தம் பெற்றோர் இடம் பெயர்வதும், தொழில் நிமித்தம் இடம்பெயர்வதும் காரணங்களாகலாம்.

நயினாதீவு மகாவித்தியாலயத்தில் தற்போது க.பொ.த உயர்தரத்தில் கலை வகுப்புக்கள் மாத்திரமே நடைபெறுகின்றது. இதனால் மாணவர்களின் திறனுக்கேற்ப உயர் கல்வியை பெறமுடியாதுள்ளது. நயினாதீவு பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்து கணித, விஞ்ஞான, வர்த்தகத் துறைகளில் கற்கவிரும்பும் மாணவர்கள் யாழ் நகர் சென்று தமது கல்வியைத் தொடர்கின்றனர். எமது கிராமத்திலே உயர் கல்வியைக் கற்க ஆவன செய்ய வேண்டும். அதற்குக் கல்வித் திணைக்களமும் பாடசாலை நிர்வாகமும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். ஆங்கிலக் கல்வி, கணனி கற்கை, தகவல் தொழில்நுட்பக் கல்வி என்பன மேம்படுத்தப்படல் வேண்டும். விளையாட்டு மைதானங்கள் சுற்று மதில் கட்டப்பட்டு சகல விளையாட்டுக்களுக்குமுரிய வசதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும். இவை உடனடித் தேவைகளில் சில.

நயினாதீவின் கல்வி வளர்ச்சிப் பாதையில் மிக நீண்ட வரலாற்றை என்னால் முடிந்தவரையில் ஆராய்ந்து தந்துள்ளேன். ஊரில் தற்போது வாழ்ந்துகொண்டிருக்கும் சில முதியவர்கள் வாயிலாகக் கேட்டவையும், பெரியவர்கள் எழுதிய கட்டுரைகளை வாசித்தறிந்தவையும் நயினாதீவுப் பாடசாலை அதிபர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட தகவல்களும் இக்கட்டுரை எழுது வதற்கு பெரிதும் துணைபுரிந்தன. வருங்காலச் சந்ததியினர் எமது கிராமத்தின் கல்விப் பாரம்பரியத்தினை அறிய இக்கட்டுரை ஓரளவேனும் உதவும் என நம்பி அமைகின்றேன்.

"ஓங்குக கல்வி"

திரு சோ.தில்லைநாதன் **J.PBA, Dip in Ed, SLPS-I**
ஓய்வுநிலை கோட்டக் கல்விப்பணிப்பாளர்
நயினாதீவு





## நயினையின் தனித்துவம்.



“எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்’ என்னும் கூற்றிற்கு இணங்க தீவுகளினுள்ளே தனக்கென ஓர் தனித்துவம் மிக்க வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டு மிளிர்ந்து கொண்டிருப்பது நயினாதீவு. அந்த வகையில் இது பல வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய ஒரு புராதனமான கிராமமாகும். இதற்கு மணிபல்லவம், மணித்தீவு போன்ற வேறு பெயர்களும் உண்டு, ”கடுகு சிறிதானாலும் காரம் பெரிது” என்னும் பழமொழிக்கு இணங்க இது அளவிற் சிறிய தீவாகக் காணப்பட்டாலும் அழியாப் புகழ் பெற்றதாக விளங்குகின்றது.

சுற்றி வரக் கடலால் சூழப்பட்ட இயற்கை எழில் மிகுந்த இச் சுந்தரத் தீவிலே அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடமாக விளங்கும் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் வீற்றிருந்து அருள்பாலிப்பது ஓர் சிறப்பு அம்சமாகும். இங்கு அலைகடல் தாண்டி அன்னையின் அருளைப் பெற மக்கள் அணைகடந்த வெள்ளம் போல் திரண்டு வருகின்றனர். இவ் அடியார்களின் பசி தீர்க்க அமுதசுரபி அன்னதான சபையும் இங்கு காணப்படுகின்றது.

“கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்பதற்கு இணங்க நயினையில் எத்திசை நோக்கிலும் ஆலயங்கள் காணப்படுகின்றது. அத்துடன் பௌத்தர்களின் புனிதத் தலமான நாக விகாரையும் இங்கு காணப்படுகின்றது. அத்துடன், இங்கு இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் ஆகிய நான்கு மத மக்களும் ஒற்றுமையாக வாழ்வதுடன் அவரவர்களுக்கு உரிய வணக்கஸ்தலங்களும் காணப்படுகின்றன.

“கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு” என்பதற்கு அடிப்படையாக நயினைச் சிறார்களுக்கு அறிவுச் சுடரேற்றும் நோக்கில் நயினாதீவு ஸ்ரீ நாகபூ‘ணி வித்தியாலயம், நயினாதீவு ஸ்ரீ கணேச கனி‘ட மகா வித்தியாலயம், நயினாதீவு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் தமது கல்விப் பணியை ஆற்றி வருகின்றது.

இது ஒரு சிறிய நிலப்பரப்பையுடைய தீவாகக் காணப்படுவதுடன் 1 தொடக்கம் 8 வட்டாரங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. நயினை வாழ் மக்களுக்கு மின்சார சேவையை வழங்குவதற்காக வைத்தியசாலையும் அஞ்சல் சேவையை வழங்குவதற்காக அஞ்சல் அலுவலகமும் காணப்படுகின்றன. நயினாதீவானது கடலால் சூழப்பட்டதாகக் காணப்படுவதனால் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள வாய்ப்பாக அமைகின்றது. அத்துடன் வயல்களும் காணப்படுவதனால் மக்கள் விவசாயத்திலும் ஈடுபடக் கூடியதாக உள்ளது. இவ்வாறு வியர்வை சிந்தப் பாடுபடும் மக்களின் வாழ்வு கிராமத்தை வளமாக்குகின்றது.

இயற்கை அன்னையின் எழிற் கரங்களால் வருடப்படும் அழகிய கிராமமான நயினையின் புகழைக் கூற வார்த்தைகள் போதாது.

“பல சான்றோரையும் சாதனையாளரையும் உலகிற்கு அளித்த
அலை கடல் சூழ் நயினையின் புகழ் கூற
சில சொற்கள் போதாது.”
“நயினையின் புகழ் உலகெங்கும் பரவட்டும்.
நயினை வாழ் மக்களின் வாழ்வு செழிக்கட்டும்.”

“எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்”
“கடுகு சிறிதானாலும் காரம் பெரிது”
“கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம”
“கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு”
“நயினையின் புகழ் உலகெங்கும் பரவட்டும்.
நயினை வாழ் மக்களின் வாழ்வு செழிக்கட்டும்”

செல்வி சர்விகா அமிர்தலிங்கம்





# நீ நினைந்தால்





**அமரர் நயினை**
**வித்துவான்**
**சி.குமாரசாமி பி.ஏ**

போற்றி என்று அனுதினமும்
புரிந்து நால்வே தமுந்துதிக்கத்
தோற்று முலகத் துயிரனைத்தும்
துன்ப மகன்று நிறைவுபெற
ஏற்று நயினை அமர்ந்தருளி
இலங்கு நாக பூஷணியே
சாற்று மடியார்க் கேதுதுயர்
தாயே சிறிது நீ நினைந்தால்

அன்னை யாகி யெவ்வுயிர்க்கும்
அருளு முணவும் படைத்தளித்துச்
சொன்ன அன்ன பூரணியாய்த்
துலங்கு நயினை தனிலமர்வாய்
இன்னங் குறைக ளெமக்குண்டோ
ஏதிங் கவலம் எங்களுக்கு
உன்ன வுன்ன உளமினிக்கும்
உமையே சிறிது நீ நினைந்தால்

நினைந்தால் நீயுன் திருவடியை
நினைந்து நினைந்து உருகுதற்கும்
புனைந்து புனைந்து ஏத்துதற்கும்
புகழ்ந்து புகழ்ந்து பாடுதற்கும்
நனைந்து நனைந்துன் திருவருளில்
நாயேன் என்றும் திளைப்பதற்கும்
வனைந்து வனைந்துன் திருத்தொண்டில்
வாழ அடியேற் கருள்காட்டாய்

கண்ணொளி இழந்தோர் மற்றும்
கர்மநோய் யுற்றோர் வாழ்வில்
புண்ணுளப் பட்டோர் நொந்தே
புலம்பிடப் புனர்வாழ் வீயும்
திண்மையும் திருத்த லத்தின்
செம்மையும் தேரும் கால
வண்மையும் வளமும் வாய்ந்த
மணிதிகழ் நாகம் மாளே!

"அம்மா உனையான் அடைவதெப்போ" ஆதரவு
இம்மா நிலத்தினிலே ஏதம்மா - அம்மாநின்
சீரடியைச் சேவிக்கச் சித்தச் சிறப்புற்றேன்
காரணியே! கண்ணே கனி.




# அகதி நிலை, ஆரம்ப முதல் இறுதி விண்ணப்பம்!

10 தொடக்கம் 20 வருடங்கள் வதிவிட தகமை விண்ணப்பங்கள் தொடர்பாக எங்களை நாடுங்கள். உங்களுக்கு என்ன இடர் வந்தாலும் சட்டத்துடன் அதனைச் சந்திக்க நட்புணர்வுடன் நாம் காத்திருக்கின்றோம்.

**Asylum applications from the initial to the final stage!**



நேசமுடன் உங்கள் கைகளை பற்றுகிறோம்

**Duncan Ellis Solicitors**

Legal Advisors & Commisioners for Oaths
The firm is regulated by Solicitors Regulation Authority (661060)

28 Years of experience
Mr. V. P. Lingajothy LLB (Hons) LLM, Msc ACILEX
Tel: 0208 544 9285 Mob: 07771 646 441

46 High Street, Collierswood, London, SW19 2BY

**We specialise in:**

- Asylum and Immigration Matters
- Human Rights Applications
- Appeals
- Detention and Bail
- Entry Clearance Application and Appeal
- Injunction & Judicial Reviews
- Work Permits
- EEA Application
- Student Visa, Visitors Visa
- PBS
- Naturalisation Applications
- Family Law
- Criminal Law
- Landlord and Tenant Matters
- Other Legal Matters

# கலை வளர்ச்சியில் மணிபல்லவ கலாமன்றம்



"அன்னை நாகம்மை அருளோச்சும் பூமிதனில்
முன்னர் மாதவி தன்புதல்வி கால்பதித்தாள் - அவள்
பின்னர் கலை விளங்க எழுந்த மேகலையே நின் கலைப் பெருமை
தன்னில் நிகரில்லா தரணிதனில் ஓங்கிடவே"
அன்னை அருள் கிட்டட்டும்

இந்துமா ஆழியின் எழில் கொழிக்கும் முத்தெனப் போற்றப்படுவது ஈழமணித் திருநாடு. ஈழத்திருநாட்டின் வடபால் யாழ் பாடிப் பரிசு பெற்ற நகர் யாழ்ப்பாணம் யாழ் நகரின் சப்த தீவுகளில் நடுநாயகமாக விளங்குவது நயினையம்பதி. ஆடற்கலையழகி மாதவி தன் புதல்வி மணிமேகலையாள் தடம்பதித்த புண்ணிய பூமியாதலால் மணிபல்லவம் என்ற சிறப்புப் பெயர் கொண்டது. இத்தகைய நயினைத் திருநகரில் கலை வளர்க்கவென உருவான கலாமன்றம் மணிபல்லவ கலாமன்றம்.

அக்கலாமன்றத்தின் கலை வளர்ச்சிப் பணி பற்றிக் கூறுவதென்பது வார்த்தைகளால் அளவிட முடியாத ஒன்று. அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் புவனேஸ்வரி பீடம் எனப் போற்றப்படுவது நயினையம்பதி. இங்கு அண்ட சராசரங்கள் அனைத்தையும் ஈன்றவளாகிய அன்னையவள் நாகபூஷணி எனும் நாமத்துடன் அருளாட்சி நடத்துகின்றாள். அன்னையவள் ஆட்சியில் நயினையம்பதி கலையுணர்வும், கவிதா சக்தியும், சிந்தனைத் திறனும் மிக்கோர் நிறைந்த நகராகத் திகழ்கின்றது. நாற்றிசையும் கடலலைகள் தாலாட்ட அன்னை நாகம்மை ஆட்சியுடன் புத்தர், அல்லா, யேசு வரை பல சமயங்களின் வழிபாட்டிடமாக சர்வமத சந்நிதியாக புகழ் பூத்து நிற்கின்றது.

மதவழிபாட்டுத் தலம் மட்டுமல்ல கலைகளின் பொக்கிஷமாகவும் கலை வளர்த்த பூமியாகவும் தலை நிமிர்ந்து நிற்கின்றாள் நயினை அன்னை, ஈன்றெடுத்த தவப் புதல்வர்கள் தமிழை உணர்ந்தனர். அதாவது தமிழ் என்றால் என்ன? அது எப்படிப்பட்டது என்பதனை அறிந்து கொண்டனர்.

"ஆதி சிவன் பெற்றுவிட ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர் வேதியன் கண்டு"

நிறை மேவுமிலக்கணம் செய்து கொடுக்க ஆன்ற மொழிகளினுள்ளே ஆரியத்திற்கு நிகராக வாழ்ந்தவள். மூவேந்தர் போற்றிய தமிழ் சங்கப் பலகையிலே இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழாக வளர்த்தவள் என்பதனைத் தெரிந்து கொண்டனர்.

இயற்றமிழ் என்பது தமிழில் மட்டும் பொதுமையில் இருவகை வழக்குகளிலும் இயங்குகின்ற வசனமும் செய்யுட்களுமாகும். இத்தகைய நூல்களான சீவகசிந்தாமணி, வளையாபதி, சிலப்பதிகாரம், குண்டலகேசி, மணிமேகலையாகிய ஐம்பெருங்காப்பியங்கள் அணிகலன்களாக தமிழை அழகுபடுத்தின. இசைத் தமிழென்பது பண்ணோடு கலந்து தாளத்தோடு கூடி இயங்கும் செந்தமிழ்ப் பாட்டுக்களும், கொடுந்தமிழ்ப் பாட்டுக்களும் இயன்ற இலக்கியங்களும் அவற்றின் இலக்கணங்களுமாகிய நூல்களின் தொகுதியாகும். இவற்றில் கீர்த்தனங்களும் வழிபாட்டுப் பாடல்களும் சிந்து, ஆனந்தக் களிப்பு, கும்மி முதலியனவும் அடங்கும்.

நாடகத் தமிழென்பது கரந்தனில் நூலெடுத்து படிப்பதற்கு அவகாசமற்ற வேலைக்காரருக்கும் படிப்பறிவற்ற பாமரர்க்கும் நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டது. அது கேட்போர்க்கும், காண்போர்க்கும் இன்பச்சுவை சொட்டும் வகையில் அமைந்தது. உலக இயல்பினை உள்ளவாறே புனைந்துகாட்டி மக்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவது நாடகத் தமிழ்.பண்டைக் காலக் கலைகளை உற்று நோக்குமிடத்து கலைத் தெய்வமாக விளங்கும் அம்பிகையை கலைமகளென்றே போற்றுகின்றனர்.

அத்தகைய கலைமகளின் வாழ்விடமாக அறுபத்து நான்கு சக்திபீடங்களின் ஒன்றான புவனேஸ்வரி பீடமாம் மணிபல்லவத்தில் ஓர் கலாமன்றம். இக் கலாமன்றம் கலை என்பது யாது? என்பதை உணர்ந்து அதாவது மனித உறவுகளையும் வாழ்க்கைக் குறிக்கோள்களையும் வகுத்து ஒழுங்குபடுத்துவதற்காகச் சமுதாயத்திடம் காணப்படும் நுட்பமான கவர்ச்சியுள்ள ஆற்றலுடைய கருவியே கலை என "இராதாமல் முகர்சி" குறிப்பிட்ட வரைவிலக்கணத்தை மனதிடை நிறுத்தினர் நயினை அன்னை பெற்றெடுத்த வாலிபமட்ட மைந்தர்கள்.



ஒரு நாடோ, நகரமோ, கிராமமோ முன்னேற்றமடைய வேண்டுமாயின் அந்நாட்டில் கலையென்னும் பயிரை சிறந்த உரமிட்டு பாதுகாத்துப் பேணி வளர்க்க வேண்டும். தம் நாட்டுக் கலைகளோடு மட்டும் நின்றுவிடாமல் பிறநாட்டுக் கலையூற்றையும் தெரிந்தெடுக்க வேண்டும். புரட்சிக் கவிஞர் பாரதி கூறுவதுபோல்,

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டேர்
அதை வணக்க செய்தல் வேண்டும்"

என்ற கூற்றையும் தலைமிசைக் கொண்டனர். கலாவதி என்பது அம்பிகையின் (1008) ஆயிரத்தெட்டுத் திருநாமங்களில்லொன்று. சதுஸ்ஷஸ்டி கலாமயீ என்பதே இச் சொற்றொடர். இத் தொடரானது கலைகளின் தெய்வீகச் சார்பினை துல்லியமாகக் கூறுகின்றது. எல்லாம் வல்ல பரம்பொருளே "தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே" என வர்ணிக்கப்படுகின்றார். அம்பலத்தே ஆடுகின்றான். எனவே கலைமகள் விளங்கவென ஆயிரத் தொளாயித்து அறுபத்திரெண்டில் (1962) மணிபல்லவமென்ற கலாமன்றம் உருவானது. கருவிலே திருவுடையது என ஆன்றோர் கூறுவர் அதேபோல் அதுவும் விளங்கியது.

சித்திரை – மாதம் இளவேனில் காலம் நயினையில் கலைவிழா எப்போ என்பது தான் உலகோர் கேள்வி. காவிரிப் பூம்பட்டனத்தில் இந்திரவிழா, இதனையும் விஞ்சியது மணிபல்லவத்தில் கலைவிழா, ஆரம்பத்தில் திறந்த வெளிமேடை கண்கவர் காட்சி மின்விளக்கு அலங்காரம் திடீர்த் தென்னை மரங்களின் மெல்லிய காற்று என்பவற்றின் இடையே விடிய விடிய கலைவிழா. உள்நாட்டு ரசிகப் பெருமக்கள் மட்டுமல்ல சப்த தீவுகளிலிருந்து மட்டுமல்ல யாழ் குடாநாடு முழுவதுமே திரண்டிடும் பெருவிழா. ஒருநாள் மட்டுமல்ல இருநாள் பெருவிழா சந்தையடி வாலிப வட்டத்தின் உணர்ச்சிமிகு பெருவிழா.

உள்நாட்டுக் கலைஞர்கள் வெளியூர்க் கலைஞர்கள் ஒன்றுகூடும் பெருவிழா இலக்கியச் சொற்பொழிவு, கவியரங்கம், நாடகமேடை, நடன அரங்கு, நகைச்சுவை மன்றம் எனப் பலவித நிகழ்வுகளினால் கலையரங்கு அதிரும், கண்டோர் மனம் மகிழும் சிறார்கள் மத்தியில் புதுவித உற்சாகம் பிறக்கும். தமிழ்ப் பெரும் அறிஞர்களான வித்துவான் சி.குமாரசாமி, பேராசிரியர் கா.சிவத்தம்பி, இரா சிவலிங்கம், வித்துவான் ப.க.குகதாசன் ஆகியோரின் இயற்றமிழ்ப் பேச்சுக்களால் பூரித்தாள் மேகலையாள். வித்துவான் ப.க.குகதாசன் அவர்களின் நகைச்சுவை ததும்பும் இலக்கண வரம்பு பிறழாத இயற்றமிழால் இறும்பூதெய்தியதோடு

"ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்ற பொய்யாமொழிப் புலவன் வாக்குக்கமைய தன்மைந்தர் சிறப்புக் கண்டவள், கவிஞர்கள் நா.க.சண்முகநாதபிள்ளை பசிக்கவி சி.பரராசசிங்கம் இளம்மிடுக்குடன் கவிபாடிப் பரிசு பெறும் கா.பொ.இ.குலசிங்கம் நகைச்சுவைக் கலைஞன் ப.க.ஞானசுந்தரமும் தமிழ்ப்பற்றுடன் கவிசமைக்கும் முற்போக்காளன் நா.சிவராஜசிங்கம் ஆகிய கலைஞர்கள் கவிமழையால் நனைந்தவள் மேகலையாள்.

நயினையின் மண்ணிற்கே உரித்தானது கலை. அதில் நாடகக் கலையை ரசிப்பதில் நயினை மக்கள் ஆர்வமோ அதிகம். பண்டைய நன்னாளில் நாடகத்திற்கே புகழ்பெற்ற பூமி இது. அந்த வகையில் உள்நாட்டு நடிகர்களும் வெளிநாட்டு நடிகர்களும் களம்கண்ட மன்றமிது. தமிழ் என்றால் கலை கலைகளின் உணர்ச்சி வடிவம் நாடகம் இதனை மேகலை அரங்கில் நிலைநாட்டினர். கலைஞர்கள் பலர் மேகலை அரங்கிலே மேடையேறிய 'ஒரே இரத்தம்' என்ற நாடகம் இன்றும் நயினை மக்கள் மனங்களில் நிலைத்து நிற்கின்றது. நயினை மண்ணில் இளங்கலைஞர் வித்துவான் ப.க.காமாட்சிசுந்தரம் அவர்களின் நகைச்சுவைப்பேச்சும் பாத்திரத்திற்கேற்ற ஒப்பனையும் நடிப்புத்திறனும் கண்டு உள்ளம் பூரித்தவள் நயினைக் கலாமன்றம் நகைச்சுவை நடிகர்கள் பொ.அரசரெத்தினம். க.கனகராசா, க.சந்திரன் போன்றோரின் விகடப் பேச்சுக்கள் சபையில் உள்ளோரைக் குலுங்க வைக்கும்.

இவ்வாறு திறந்தவெளியில் கலை ஒளி பரப்பிய கலாமன்றம் கன்னிப் பருவமெய்தினாள். கன்னிப் பருவம் கண்டால் பெற்றோர்கள் தம்மகளார்க்கு புதுமனை சமைக்கத் தொடங்குவர். அந்த வகையில் மணிபல்லவ கலாமன்றத்தின் பருவ வயதைக் கண்ட கலைரசனை மிக்க நயினை மண்ணின் வாலிபத்துடுக்குடைய மைந்தர்கள் மத்தியில் ஒரு புத்துணர்வு பீறிட்டது. திறந்த வெளியரங்கை நிரந்தர கலாமன்றமாக்க முன்வந்தனர். அலையெறிக்கும் கடலோரம் நாகபூஷணி கலைக்கூடத்தின் முற்றத்தில் கால்கோள் அமைத்தனர். வாலிபர்கள் முயற்சிச்கு கைகொடுத்தனர் கலைரசனை மிக்க சான்றோர்கள்.

அவர்கள் வரிசையில் திருவாளர்கள் ஆன்மீகப் பெருவள்ளல் க.இராமசாமிப்பிள்ளை (K.R) நாட்டுப்பற்று மிகு தலைநகர் வணிகர் இ.சிவசுப்பிரமணியம் (R.S.S), கலகலப்பும் பேச்சினால் கண்டோரை வியக்கவைக்கும் மு.க.பொன்னம்பலம் வாலிபமிடுக்குமிகு ச.கனகநாயகம், கல்விப்பணி, கடவுப்பணி, சமுதாயப்பணி கலைப்பணிகண்டு மனம் உவக்கும் மு.இ. அம்பலவாணர் அள்ளக் குறையாத அமுதசுரபி நிகர் கொடைப் பெருவள்ளல் வே.க. தம்பிமுத்து, கலாமன்ற உறுப்பினரும் தலைநகர் வர்த்தகரும் தற்பொழுது கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவருமான மு.கதிர்காமநாதன், நயினை மண்ணிற் பிறந்து ஜா-எலயிற் புகழ்பூத்த மு.இ.பரமலிங்கம், கலாரசிகனும் திரைப்பட உரிமையாளருமான சி.தியாகராஜா, (S.T.R) சமயப் பணியுடன் சமூகப்பணி இயற்றும் வவுனியா தலைநகர் வணிகர் செ.குகதாசன் ஆகியோரின் நிதி உதவியுடன் கன்னிப்பெண் மேகலையாள் புதுமனையில் நிரந்தரமாகக் குடியமர்ந்தாள்.

காலத்தால் அழிக்கமுடியாத சாதனைகள் பலபடைத்தாள். பள்ளிச் சிறார்கள் இளங்கலைஞர்களாக மாறினர். நயினை மண்ணின் மூலைமுடுக்கெல்லாம் கலை மணம் வீசியது. நயினையில் கலைவிழா, மேகலை அரங்கில் பெருவிழா என்றால் நயினையம்பதி இந்திரலோகம் போல் காட்சியளிக்கும் நயினை மணிபல்லவ கலாமன்றச் சிறப்பு சொந்த மண்ணோடு மட்டும் நின்றுவிடவில்லை எங்கெல்லாம் தமிழர் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சென்று ஒலித்தது ஒலிக்கின்றது ஒலிக்கும்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி – மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு"

என்ற வள்ளுவர் கூற்றிற்கேற்ப சுரந்தது கலை காலத்தால் அழிக்க முடியாத கலை. ஆயிரத்தித் தொளாயிரத்துத் தொண்ணூறிலே அகவை இருபத்தெட்டிலே கன்னியவள் மேகலையாள் மணவிழாக் காணும் பெருவிழாவாக விண்ணவரும் போற்றும் வகையில் கலைவிழா நடைபெற்றது. மணப்பெண் மேகலையாளின் மணவழக்கில் கண்திஸ்டி படிந்தது போல் நாட்டில் ஏற்பட்ட துர்ப்பாக்கிய நிலையில் தொண்ணூறுக்கு பிற்பட்ட காலப் பகுதியில் கலை விழா தடைப்பட்டது. மன்றச் செயற்பாடு மட்டும் இடம்பேற்றாலும் மேடைச் செயற்பாடு எதுவுமில்லை.

ஏற்கனவே கூறிஉள்ளேன் கலையழியாது காலமாற்றத்தாலும் கலையழியவில்லை. இரண்டாயிரத்துப் பத்தில் (2010) மீண்டும் புதுப்பொலிவு பெற்றாள். இரண்டாயிரத்துப் பதினொன்றில் மாணவர் மத்தியில் நாவன்மைப் போட்டி எழுத்தாற்றல் போட்டி கண்டதோடு முத்தமிழ் மன்றமும் அரங்கேறியது. யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து பாராட்டுரை வழங்கியதோடு மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கிக் கௌரவித்தார்.

மணிபல்லவ கலாமன்றம் எவ்வாறு கலை வளர்ச்சி கண்டதோ அதேபோல் அதனை உருவகித்த அன்றைய வாலிபர் கலைவிழாக் கண்டு நின்றதோடு அமையாது கலைமகள் அருட்கடாட்சத்தால் ஆசான் முதல் வைத்தியர் கணக்காளர் பொறியியலாளர் இவை மட்டுமன்றி ஆணையாளர் பதவியும் வகித்து சொந்த மண்ணிலும் பிறநாட்டிலும் பார்போற்றும் உத்தமர்களாய் புகழ் மாலையேற்று நிற்கின்றனர். இது மறைக்க மறுக்க முடியாத உண்மை.

எனவே அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடமதில் அறுபத்து நான்கு கலைகளின் வளர்ச்சிக்காய் அமைந்த மணிபல்லவ கலாமன்றம் இரண்டாயிரத்துப் பன்னிரெண்டிலே அகவை ஐம்பதில் பொன்விழாக் கண்டு பூரிப்படைந்து மீண்டும் புதுமணம் கமழ்ந்தது,

நலனோங்கு நாகம்மை
அருள் புரியும் நயினைமண்ணில்
கலையோங்கு எழுந்த கலாமன்றமே
நின் பெருமை விளங்கவெனில்
பார்போற்றும் நம் கலைஞர் பலர்
மேடையேறி கலை விளங்க
ஊர்போற்ற நும் தொண்டு
வாழி! வாழி!

செல்வி மு.இ.ஜெயலெட்சுமி
ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் நயினாதீவு



Pitlance Accident
Repair Centre UK Ltd
20A Cumberland Road, Stanmore HA7 1EL
Tel: 07885728191, 02082047486



• MOT Service
• Mechanical Repairs
• Body Work Painting
• Under Coating & Rustproofing
• Alarm and Stereos
• Complete Collision Services
• Wheel Balancing

# Uniqueness of Nainativu



**“எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்”**

*The head is the chief part of the eight-span body.*

This quotation is a palamozhi and it indicates that out of the seven sub-islands in Sri Lanka, Nainativu is the most unique one due to its rich and important background. In that way, many historical and primeval events have happened in this village. Nainativu is also known as Manipallavam and Manitivu.

**“கடுகு சிறிதானாலும் காரம் பெரிது”**

*The size of a thing does not necessarily indicate its potency.*

This palamozhi implies that even though Nainativu is seen as a small sub-island, the importance it has gained over many years cannot be forgotten. Nainativu is one of the islands situated in Jaffna, the Northern area of Sri Lanka. This island is well known for its authentic Hindu sanctuary dedicated to goddess Nagapoosani Amman and the mainstream Buddhist sanctuary Naga Vihara. This old Hindu sanctuary was erected thousands of years back. Later it was pulverized by the Colonial Portuguese in the year 1620 CE. In the year 1788, Nagapoosani Amman sanctuary was re-worked by the neighborhood residents.

Surrounded by sea naturally, this beautiful island has one of the 64 Sakthi Peetam temples, which is the Buvaneswari or Nagapooshani Peetam. The temple which it is in is the Nainativu Nagapooshani Temple. Here, many people pilgrimage worldwide to worship in this important temple. Lunch is served free as Annathanam by the Nagapoosani Amman Temple trusty at the Amuthasurabi hall every day. In the 5th century, Nainativu was mentioned in Silapathikaram, which is written by Ilango Adigal. This Amman sanctuary is cared for by a trusty board, where individuals used to be chosen by election. The board individuals are looking after the daily Poojas, yearly celebration, help for the meeting travellers, and support and maintenance of the sanctuary. Regularly thousands of devotees visit this island to worship the Amman God and the Lord Buddha in the nearby Vihara.

**“கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்”**

*Do not live in a village where there is no temple.*

In Nainativu there are temples all over the village, from North to South and East to West. Furthermore, there is an elaborate Buddhist temple called Naga Vihara. Nainatheevu is very diverse as it has Hindu, Buddhists, Muslims and Christians, who live in harmony and have their places of worship in Nainativu as well.

**“கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு”**

*The scholar is honoured wherever he goes.*

Sri Nagapooshani Vidyalayam, Sri Ganesha Mahavidyalaya and Nainativu Maha Vidyalayam are schools in Nainativu. Even though this is seen as a small village, there are 8 area zones. There are public facilities, such as electricians, a hospital and a post office. Also, as Nainativu is surrounded completely by sea, there are many fishmongers. Furthermore, there is a large area of fields so many people do harvesting and farming.

The beautiful village of Nainativu which lays in the arms of Mother Nature does not receive the amount of distinction it should have. The most visited island of Jaffna, Nainativu is an inadequately populated island that is covered in ancient religious texts, historical texts and boasts of sacred temples, proving to be an important site of pilgrimage for both, the Hindus, Buddhists and Muslims making it a social blend. A visit to this modest island would cause anybody to understand the significance of religion in Sri Lanka.

**“நயினையின் புகழ் உலகெங்கும் பரவட்டும் நயினை வாழ் மக்களின் வாழ்வு செழிக்கட்டும்”**

*May the distinction of Nainativu be known to the rest of the world, may all the people from Nainativu worldwide flourish in their lives.*

By Mr Piranaava Amirthalingam






# ஈழத்து இசை வளர்ச்சியில் நயினையம்பதி



ஞாலத்தின் முகமென விளங்குவதே நமது நயினையம்பதி உலக வரை படத்தை உற்று நோக்குவோர்க்கு இவை எளிதிற் புரியும். 'பொங்கிடும் நெடுந்திரைப் புணலி – நாற்றிசையும் பொருந்த நடுமேவி உலகில் புகழ் பெருகு நயினை மாநகரினில் இருந்து அருள் செய் புனித தாயே'' என அம்பிகையை வரகவி முத்துக்குமாரசாமி புலவர் போற்றுதல் காண்க. உயிரனைத்தும் சொற்றாதல் உலகொடுவானும் தொழுதலால் என்றென்றும் பற்ற தாம் கருணை பொழிதலால், அன்னை பராபரி நாகபூஷணி என்பார் மகாகவி நயினை நாகமணிப் புலவர், 'கற்பக் கன்று' என்பார் அருள்மிக முத்துச்சுவாமிகள்.

நம் கிராமத்தின் பெருமை நமக்குத் தெரிந்தும் தெரியாமலும் இருக்கலாம். ஏழு சமுத்திரங்கள் ஏழு தீவுகள் அங்கு வாழ்ந்தவர்கள் பற்றி நுண்மையான புதுமையான தகவல்கள் நிறையவே இன்று கிடைத்து வருகின்றன. சான்றாக இசைக் கிரந்தங்களின் கிடக்கை என்று போற்றப்படும் " சங்கீத கல்பத்ருமம்'' மிக அரிய பல உண்மைகளை கூறி நிற்பதைக் காணலாம். சப்த அரம் (ஏழ் நரம்பு) தோற்றம் பற்றிய விரிவில் சப்த தீவுகளும் அவற்றின் நடு நாயகமாக விளங்கும் 'மணித்துவீபமும்', 'மணித்தீவும்' உயர்ந்தளவில் காணலாம். பிராமி, வடமொழி, கிரந்தம், தமிழ் ஆகிய மொழிகளில் இவ்விடயங்கள் மிக நுட்பமாக ஆழமாக காணப்படுகின்றது இசை நரம்புகளில் மத்திமம் அல்லது மத்ரிய தானமாகவும் முக்கிய தளமாகவும் மணித்துவீபமும் அங்கு வதியும் இசையின் மூலதேவதையும் பெருமைப்படுத்தப்படுவதில் இருந்து நமது மண் இசைத் தோற்றத்தினதும் ஒலித் தோற்றங்களதும் மூலம் என்பதும் குண்டலியின் மூலபீடம் என்பதும் புலப்படும்படும்.

மணிநாகேஸ்வரரும் மணிநாகேஸ்வரியும் உலகில் உயிர் வர்க்கங்களில் செறிந்தும் நிறைந்தும் காணப்படுகின்றனர். மேலும் இங்கு போற்றப்படும் சக்தி இயற்கையின் மூலங்களையும் மூலவளங்களையும் ஆக்குபவளாகவும் அடங்குபவளாகவும் உடையவள் என்பதும் சுட்டப்படுகின்றது.

நமது மண்ணின் பல கலைஞர்களைக் காணும்போது ஒவ்வொருவரிடமும் ஒவ்வோர் மீத்திறன் மிகுந்து ஆற்றலை காணலாம். அரிது கிடைத்தற்கரிய மானுடப் பிறவியில் நயினையில் பிறக்கப் புண்ணியஞ் செய்தவர்கள் பலகோடி தவங்களை இயற்றியவர்கள் ஆவர். இதுவரை வாழ்ந்து சிவகதி பெற்றவர்கள். வாழ்பவர்கள் இனிமேல் தோன்றும் பாக்கியமுடையவர்கள் இப்பத்தியில் இடம்பெறுவர். நாதயோகீஸ்வரரான ஸ்ரீமுத்துச்சாமி தீக்ஷிதர் ஸ்ரீகாமக்ஷியின் கடாக்ஷத்தால் கங்கையில் இருந்து சரஸ்வதிதேவியின் திருக்கரத்தால் வீணையைப் பெற்றவர். ஸ்ரீகாமாக்ஷி இருத்தி மணிமாலையில் போக – யோக மோக்ஷம் - புரிந்தருள் ஸ்ரீமாதா புவனா த்ரியம்பகி மணி நாகபூஷணி – என தாயை போற்றி நிற்றல் காண்க. புவனமீரேழையும் பூத்தும் காத்தும், கரந்தும் விளையாடல் புரியும் அன்னை அருள் வியந்தவாறும் இருந்தவாறும் காண்க.

இராவணேஸ்வரனின் யாழின் இசையில் உருகிய சிவன் அவனுக்குத் வானூரும் தேரும், வானவரும் பெறற்கரிய வாளும் கொடுத்தார்.

இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தருக்கு உலகவர் சிவன் தாளமீந்த தமிழ் இசைக்கு பெருமை தந்தவர். வாதில் நின்ற அந்தர்க்கு 'அர்ச்சனை பாட்டே யாம் மண்மேல் - நம்மைச் சொற்றமிழ் இசையாற்பாடுக என்று கட்டளையிட்டவர் சிவன். எனவே இசையினதும் இசைத் தமிழினிதும் பெருமைக்கு ஈடு இணையில்லை என்பதை மேற்பார்த்தீர்கள்.



நயினை மண் தலை சிறந்த இயற்றமிழ் பேராசான்களையும் இசைத்தமிழ் பேராசான்களையும் கொண்டது. நயினை சுவாமி மற்றும் மகாகவி எனப் போற்றப்படும் வரகவி நாமணிப் புலவரில் தொடங்கி பசிக்கவி இளங்கவியாம் குலம் வரையும் பெரிய வாத்தியார், சின்னக் கந்தையா வாத்தியார், உள்ளிட்ட ஆசான்கள் பலரது ஆற்றுப் படையும் சுக்திரர் ஐயாத்துரை, பண்டிதர்கள் நா.கந்தசாமி முதல் பண்டிதர் வித்துவான்கள் க.குதாசன், பேராசான் சின்னக்குமாரசாமி, காமாச்சி சுந்தரம், பண்டிதை புனிதவதி, கவிஞர் நா.சண்முகநாதபிள்ளை, கஸ்தூரி என இவ்வறிஞர்கள் குழு பெரும்பாலும் ' இயற்றமிழாய்ந்த அறிஞர் பிறந்து வாழ்ந்து புகழ் படைத்ததும் நயினையம்பதியே. இசை வாண்மையில் புகழ் மிக்க சங்கீத பூஷணங்களாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புகழீட்டிய திருமதி கமலாம்பிகை செல்வலிங்கம், திருமதி பார்வதி குகதாசன், திருமதி தில்லைநாயகி கனகரெத்தினம், திருமதி நீலாதர்ஷி செல்வராசா, திரு.பாலசுப்பிரமணியம் திரு.N.V.M.நவரெத்தினம் என்பவர்களுடன் மகாலிங்கம் இராமநாதன் நுண்கலைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற கிருபாமணி இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பயின்று வெளியேறிய தி.கருணாகரன் BFA, திருமதி காதம்பரி இராஜேஸ்வர குருக்கள் BFA, சென்னைப் பல்கலைக்கழகத்தில் பயின்று வெளியேறிய கனகரெத்தினம் சாரங்கன் MA.M.Phil என்பவர்கள் யாவரும் நயினையம்பதியின் மைந்தர்கள் ஆவர். நயினையைச் சேர்ந்த திரு.ப.சிவராசா, வேலாயுதம் திரு.நடராசா போன்றவர்களும் வேறு தொழில்கள் புரிந்தாலும் இசைவாணன்களாகவே மிளிர்ந்துள்ளனர்.

இலங்கைத் தமிழ் மக்களின் கலைக் கேந்திரமான யாழப்பாணப் பல்கலைக்கழக கழகத்தில் கடந்த 30 ஆண்டுகளாக இசை விரிவுரையாளர்களாகவும், சிரேஷ்ட விரிவுரையாளராவும் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து இசைத்துறை வளாகத்தின் தலைவராகவும் விளங்கும் சங்கீத கலாநிதி N.V.M. நவரெத்தினம் (M.Pil Phd) ஈழத்தின் புகழ் பூத்த பாடகரும் நாடறிந்த இசைப் பேராசானும் ஆவார். இவர் 1973ஆம் வருடத்தில் பண்ணிசையில் அதி உயர்ந்த பட்டத்தைப் தமிழ் நாட்டில் பெற்றதுடன் இசைத்துறையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதலாம் தரப்பட்டதாரியாகவும் புகழ்பூத்த அகில இந்திய வானொலி பாடகராகவும் தெரிவு செய்யப்பட்டு இலங்கைத்திருநாட்டி ற்கும் நயினை மண்ணிற்கும் பெருமை தேடித் தந்துள்ளார்.

இவர் போல் இவரது குழந்தைகளும் அதி உயர் பாடகர்களாகவும் கல்வியாளர்களாகவும் விளங்குகின்றனர்.

இம்மண்ணில் விளைந்துள்ள அனைத்து இளம் வயதினரும் இவ்வாறான சிறப்பை இடைவிடா முயற்சியால் பெற முடியும் என்பதற்கு இசைப் பேராசான் N.V.M. நவரெத்தினம் அவர்களது சாதனை ஓர் எடுத்துக்காட்டு.

இம்மண்ணின் தலை சிறந்த பேரறிஞர்கள் மூவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மிகப்பெரிய மூன்று துறைகளை தலைமை ஏற்று வழி நடாத்தி வருவது நமது மண்ணுக்கு கிடைத்த மிகப் பெரிய நினைத்தற்கரிய பெருமை. இவை அருட்சக்தியின் பேராற்றலுக்கு சிறிய எடுத்துக்காட்டு எனலாம்.

நயினையம்பதியின் மரபுவழி இசை வாணவர்கள் என்றும் போற்றுதற்குரியவர்கள்.

"இசையால் வசமாகா இதயமெது''

டாக்டர் N.B.M. நவரெத்தினம் M.Phil, Phd,
முன்னாள் தலைவர் இசைத்துறை வளாகம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



**SCIENCE OF MEDITATIION**
**by Master Mr. Kula Ratnam.**

Meditation is the greatest gift which can be given by our own efforts to our own lives. It enables everyone to become one with the universal consciousness. We emerge from eternity to enjoy a brief journey of birth, growth and death. To understand and make sense of this journey, we have the Science of Meditation to help us.

Meditation, when approached like a science becomes easier to practice. There are three grand happenings in the practice of Meditation.

**The First Grand Happening:**
“When we are with the simple, normal, easy, natural flow of the breath, our mind becomes rather empty.”

**The Second Grand Happening:**
“When the mind is rather empty, huge amounts of cosmic energy floods into the physical body.”

**The Third Grand Happening:**
“When sufficient amount of cosmic energy enters the physical body, the result is a reasonable amount of activation of the Third-Eye experience.”

In simple language... **Meditation is “total cessation... or ending... of the restless thought- stream of the mind”.** A state, free from all stray and idle thoughts, **meditation** is the gateway to obtain cosmic energy and cosmic intelligent that surrounds us. **Meditation** means making our mind **‘rather empty’**. Once our mind is more or less empty, we have a tremendous capacity of receiving cosmic energy and cosmic information **surrounding** us. This leads to good health of h and absolute in thought processes leading to a joyous life!

Meditation is very easy to practice. It is very simple. One should immediately begin with the practice of ‘Anapanasati’ in which one needs to be mindful of one’s natural Breath.

In **‘Pali’** language,

**‘Ana’ means ‘In-Breath’, Apana’ means ‘Out -Breath’, Sati means’ Observe’.**

Breathing should be natural, without any effort on our part. There should not be any holding or stopping of the Breath. Whenever the mind wanders, one has to consciously cut the “stray thoughts” and mind bring one’s attention back again and again to the natural rhythm of breathing. Relax, and become the grand ‘observer’ of the breath! Stray thoughts should be brought to a halt as and when they keep arising “Observation” means, we are not influencing the Breath in any way with of our material senses or thought: we are simply observing it. Don’t do conscious breathing, don’t inhale or exhale consciously. Let inhalation or exhalation happened on its own. Just observe the normal breathing. This is the main Key, this the Way. Don’t go behind the thoughts: don’t cling to queries, questions or thoughts. Cut the thought and come back to Breath, observe normal breathing… be with your breath. Mantra chanting or any chattering inner or outer are the activities of the mind… so, it should be stopped.

Sleep is unconscious Meditation… Meditation is Conscious sleep. In sleep, we get limited Cosmic Energy… In Meditation, we get **abundant Cosmic Energy.** This energy enhances



the power of our body, mind and intellect. With this boosted Cosmic Energy through Meditation, we will be relaxed, healthy and happy.

Anyone can practice **Mediation** without necessarily holding on to any religious or mystical philosophy. Children can start as young as 6 years old and start their meditation. In fact, children take to meditation faster and an easier way compared to adults as children have such simple minds.

You can meditate **either on a floor or on a chair.** You can meditate in any place where ever you feel comfortable. Sit comfortably, **cross your legs and clasp your fingers and close your eyes.** Just relax… ***totally relax.***

One very natural query is, “For how long should one sit for meditation? Is there any thumb-rule that works for everyone?” Yes… there is!!

**Meditation for a minute corresponding to every one year of your age.** So, if you are 20 years of age, start with twenty minutes of meditation in a day; if you are 40 years of age, you need to meditate for forty minutes… and, if you are 60 years of age, sixty minutes of **meditation** in a day is sufficient.

One can meditate at any time of the day according to one’s own convenience. If a 50-year-old wants to break up his/her **meditation** session into two sessions of twenty minutes each during the day… it is okay initially.

**More Powerful Meditation**



**Group Meditation is three times more powerful than “Alone Meditation”.** It is even better if the group comprises of Senior Mediators”



**Full-Moon Meditation** (Meditation done on a full-moon day) **is three times more powerful than ordinary non full-moon meditation.**

**Nature Mediation** (meditation done in natural surroundings like mountaintop, lakes sides & etc.) **is tree times more powerful than ordinary “inside the four walls” meditation.**

**Music Meditation** is again three times more powerful. You can listen to your favorite classical **instrumental music.**

**Pyramid Meditation** (meditation under a pyramid) **is three times more powerful than “no -pyramid” meditation.**

**<u>Experiences during Meditation.</u>**

Depending on the intensity of your **meditation**, you may get many custom-made experiences. For example, a beginner in **meditation** may experience one or more of the following:

A feeling of **'lightness'** in the physical body… as if the body is non-existent

A feeling of **'heaviness'** in the head or any other part of the body.

One may **'see'** colours, one or more of them.

A feeling of mild to severe **'pain'**… especially in the lower back region.

A **'whirling sensation'** from within.

One may feel as if as one is **'floating'** in the air or flying like a bird.

Clear and 'vivid vision' may be seen of natural scenery or of places of worship or of deities or guru etc. These are known as **'third-eye vision'**

**<u>Benefits of Meditation.</u>**

Mind always stays in a peaceful and joyous state…

Memory power increases…

All work gets done with greater efficiency…

Sleep-time requirements get reduced…

Thought power gets tremendously boosted… Ability to discern 'right from 'wrong' gets sharpened…

Wasteful habits die a natural death…

Healing happens naturally…

Relationships become more meaningful and fulfilling…

Purpose of life is better understood…

For additional & more information contact:

Mr. Kula Ratnam – Mob:07984 028200, Email: spmeditation@yahoo.com

https://www.facebook.com/Surrey-Pyramid-Meditation-101488018092874/

http://beamaster.org.uk/

http://www.pssmovement.org/

http://www.pyramidvalley.org






சர்வமதச் சமரசச் சந்நிதி

(1)
நயினை எங்களின் தீவாகும் - அது
நாகம்மாள் வதிகின்ற வீடாகும்
புவியில் அருள்மிகு ஊராகும் - புகழ்
புனிதர்கள் பணிகின்ற புரியாகும்.
(நயினை)

(2)
அறிஞர் பலரின் இருப்பிடமாம் - உயர்
ஆற்றல் பெற்றவர் அருளகமாம்
நெறியில் நிற்பவர் நிலப்பரப்பாம் - நெடு
நீதி உரைப்பவர் நீள்நிலமாம்.

(3)
ஆத்ம பலம்மிக்க அருந்தீவாம் - அதன்
ஆற்றல் மிகப்பெரும் அருட்பேறாம்
கீர்த்தி பெறுமணி மேகலையாள் - பசி
தீர்த்த அமுத சுரபியூராம்.

(4)
புலமை மிக்கவர் கவிதைகளால் - தமிழ்
புதுமை பெற்றிடு புகட்பதியாம்
நலமாய் அடியவர் வழிபாடு - என்
நாளும் செய்திடு நல்லூராம்.

(5)
இந்து பௌத்தர் இஸ்லாமியர் - உடன்
ஏசு மதத்தவர் எனவாக
வந்து பணிகிற சர்வமதம் - தினம்
வணங்கும் சமரசச் சந்நிதியாம்.

(6)
மலையில் நாயனார் பிடாரியுடன் - மறு
மகமது பள்ளி புத்ததூபி
நிலையுள பிள்ளையார் மீனாட்சி - உடன்
நிறுவிய கந்த சாமியுள்ளார்.

(7)
காளிவீர பத்திரர் முருகன் - வெளி
காத்த நாகம்மாள் ஆலம்மாள்
சூழ வயிரவர் ஐயனார் - அவை
சூட்டும் காவலில் நயினை அன்னை

(8)
தீர்த்தக் கரைசிவன் முத்துச்சாமியார் - திருச்
சேர்ந்த சமாதிக் கோவிலுடன்
ஆர்க்கும் வல்லியப்பர் சல்லிவரவை - அவை
அமைந்து நயினையை அலங்கரிக்கும்.

(9)
ஏழு தீவிற்கும் நடுஅமர்ந்து - இடை
ஏழாற்றுப் பிரிவு தாலாட்ட
சூழும் கருடன் பாம்புஎனக் - கல்
சுயமாய நயினையைச் சீராட்டும்.
(நயினை)


ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவில்


நயினாதீவு றஜமா பௌத்த விகாரை

மொய்தீன் ஜும்மா பள்ளிவாசல்



அந்தோனியார் ஆலயம்



**நயினைக் கவிஞர்**
**அமரர். நா.க. சண்முகநாதபிள்ளை**





# DIABETES- AN INSIGHT

Late DR.N SIVANANTHAN MBBS; MRCOG.



சலரோகம் என்ற வியாதி தற்போது உலகில் பெருகிவரும் ஒரு பிரச்சனையாக உள்ளது. தென்கிழக்கு ஆசியாக்கண்டத்தில் வசிப்பவர்கள் குறிப்பாக இதனால் பாதிக்கப்படுகிறார்கள். இலங்கையர்களும் இதில் அடங்குவர். இவ்வியாதிபற்றி ஒரு தெளிவான விளக்கம் எம்மக்கள் மத்தியில் இருப்பது அவசியமானது. இக்கட்டுரையானது இதனை வாசிப்பவர்களுக்கு இலகுவான முறையில் கேள்வி பதில் வடிவத்தில் சலரோக வியாதிபற்றி எவரும் புரிந்து கொள்ளக்கூடியவகையில் அணுகி எழுதப்பட்டுள்ளது.

## சலரோகம் என்றால் என்ன ?

சாதாரணமாக இன்சுலின் என்று அழைக்கப்படும் ஓமோன் எமது இரத்தத்திலுள்ள குளுக்கோசின் அளவை கட்டுப்படுத்தி வைத்திருக்கும். இன்சுலின் உருவாகும் இடம் சதையி என அழைக்கப்படும் சுரப்பியாகும்.

பாண் அல்லது உருழைக்கிழங்கு போன்ற கொழுப்புச்சத்தான உணவையோ அல்லது இனிப்புப்பண்டங்களையோ நாம் உட்கொண்டால் அவற்றிலிருந்து குளுக்கோஸ் உருவாகும். அத்துடனல்லாது ஈரலும் குளுக்கோசை உண்டுபண்ணும்.

ஆகவே நாம் உண்டபின்பு எமது இரத்தத்திலுள்ள குளுக்கோஸின் அளவு அதிகரிப்பதினால் அவற்றை கட்டுப்படுத்துவதற்காக இன்சுலின் சுரக்கப்பட்டு குருதியில் சேரும்.

சில உடற் செய்கைகள் குளுக்கோஸினளவை குறைவடையச் செய்யும். உதாரணமாக நாம் உடற்பயிற்சி செய்யும் பொழுது குருதியில் உள்ள குளுக்கோஸின் அளவு குறைவடையத் தொடங்கும். இதனால் இன்சுலினின் அளவும் குறையும்.

### சலரோக நோயில் இருவகைகள் உண்டு.

1. *இன்சுலினில் சார்ந்துள்ள சலரோகம்*
2. *இன்சுலினில் சார்ந்திராத சலரோகம்*

<u>இன்சுலினில் சார்ந்துள்ள சலரோகம்</u>

சதையியில் உள்ள இன்சுலினை சுரக்கும் கலங்கள் முற்றுமுழுதாக அழிவடைந்த பின்பு உடம்பில் இன்சுலின் அறவற்ற நிலையில் இவ்வகையான சலரோகம் உருவாகும்.



<u>இன்சுலினில் சார்ந்திராத சலரோகம்</u>

சதையியில் இன்சுலின் சுரக்கும் கலங்கள் அதிகளவு பழுதடையாமல் இருந்தாலும் அவை சுரக்கும் இன்சுலினின் அளவு எமது உடம்பிற்கு போதாமல் இருக்கும். இவ்வகையான சலரோகத்தை நாம் உண்ணும் உணவை கட்டுப்பட்டால் வைத்துக்கொண்டு குளிசைகளை பாவிப்பதன் மூலமும் அல்லது இன்சுலினை எடுப்பதன் மூலமும் கட்டுப்படுத்தி வைத்திருக்கலாம்.

### சலரோக நோயின் அறிகுறிகள் என்ன ?

- தண்ணீர் தாகமெடுத்தல் அதிகரித்தல்
- அடிக்கடி சிறுநீர் கழித்தல் (கூடுதலாக இரவு நேரத்தில்)
- அதிகமாக களைப்பாக இருத்தல்
- உடலின் எடையளவு குறைதல்
- கண்பார்வை மங்கலாக தெளிவில்லாமல் இருத்தல்
- இனப்பெருக்க உறுப்பில் சொறிவு உண்டாதல் அல்லது அடிக்கடி வெள்ளை படுதல்.

சலரோக நோய் வகை ஒன்றிற்கு இவ் அறிகுறிகள் குறைவாக அதே நேரம் மெதுவாக ஏற்படுவதால் நாம் இவற்றை கவனிப்பது குறைவாக இருக்கும்.

சலரோக நோய் இரண்டிற்கு இவ் அறிகுறிகள் விரைவில் உண்டாகும்.

இவ்விருவகை நோய்களிற்கும் எவ்வளவு விரைவில் நாம் வைத்திய சிகிச்சையை நாடுகின்றோமோ அவ்வளவிற்கு இந் நோயால் ஏற்படும் மற்றைய பாதகமான சுகாதார கெடுதல்களை குறைக்கலாம்.

**வினா 1.**

*நீரிழிவு நோய் ஒரு தொற்றுநோயா?*

நீரிழிவு நோய் சதையி என்றழைக்கப்படும் உறுப்பிலுள்ள பீற்றா கலங்களிலிருந்து சுரக்கப்படும் இன்சுலினின் அளவு குறைவடையும் பொழுது ஏற்படும். இந் நோயானது ஒருவகை பரம்பரை நோயே தவிர தொற்று நோயல்ல.

**வினா 2.**

*குழந்தைகளுக்கு இந் நோய் ஏற்பட்டால் காலப்போக்கில் இந் நோய் மாறிவிடக்கூடியதா?*

குழந்தைகளுக்கு பொதுவாக ஏற்படக்கூடியது வகை 1 ஐ சேர்ந்த நீரிழிவு நோயாகும். இது உண்டாவதற்கான காரணம் சதையியிலுள்ள பீற்றா கலங்கள் அழிவடைவதன் காரணமாக இன்சுலினின் சுரப்பது தடைப்படும் பொழுது இவ்வகை நீரிழிவு நோய் உருவாகும்

தற்காலத்தில் இந் நோயைப் போக்குவதற்கு புதிதாக பீற்றா கலங்களை உற்பத்தியாக்குதலோ அன்றி செயற்கை முறையில் தோற்றுவித்தலோ கண்டுபிடிக்கப்படாததால் இது குழந்தைப்பருவத்தில் உருவாகினாலும் தொடர்ந்து அவர்களது வாழ்வுக்காலத்தில் இருந்து கொண்டேயிருக்கும்.

**வினா 3.**

*நீரிழிவு நோயுள்ள குழந்தைகள் உடற்பயிற்சி செய்யமுடியாதா?*

இதற்கு பதில் இக்கேள்வியின் எதிர்கேள்வியேயாகும். அதாவது உடற்பயிற்சி செய்வதன் மூலம் இந் நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். ஏனென்றால் உடற்பயிற்சியானது எமது குருதியிலுள்ள குளுக்கோசினளவை குறைக்கும். இந் நிலையில் உடற்பருமனும் குறைவதனால் சோர்வு நீங்கி உற்சாகமுண்டாகும். அத்துடன் நீரிழிவு நோயால் உருவாகக்கூடிய வேறுவகையான சிக்கலான நோய்கள் உண்டாவதற்கான வாய்ப்புகளும் குறையத் தொடங்கும். ஆனால் நாம் இதில் முக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டியது என்னவெனில் உடற்பயிற்சியின் முன்பும் பின்பும் குருதியை சோதித்து பார்ப்பதன் மூலம் அதிலுள்ள குளுக்கோசினளவை அதிகமாக

குறைவடையாமல் வைத்திருக்க வேண்டும். குளுக்கோசினளவு கூடுதலாக குறைவடைந்தால் hypoglycaemia உருவாகும்

**வினா 4**

*இன்சுலின் நீரிழிவு நோயை குணப்படுத்துமா?*

இன்சுலினை ஒழுங்காக பாவிப்பதன் மூலம் எமது இரத்தத்திலுள்ள குளுக்கோசினளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவுமேயல்லாது நீரிழிவு நோயை முற்றுமுழுதாக இல்லாமல் ஒழிக்க முடியாது.

**வினா 5**

*இன்சுலினை குளிசைகளாக எடுத்து நீரிழிவு நோயை கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியுமா?*

இன்சுலின் குளிசைகளாக தற்போதைய காலத்தில் இல்லை. ஆனால் வேறு சில வகை குளிசைகள் ஒவ்வொரு வகையில் இந் நோயை கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும். இதற்கு நீங்கள் உங்கள் மருத்துவரின் உதவியுடன் உங்களுக்கு தேவையான குளிசைகளை எடுப்பது சிறந்ததாகும்.

**வினா 6**

*நீரிழிவு நோயுள்ளவர்கள் காபோவைதிரேற்றுள்ள உணவை உட்கொள்ளுதல் கூடாதா?*

இது உண்மையல்ல. இதற்கு தேவையான ஆலோசனைகளை நீங்கள் Dietician இடம் அறிவுறுத்தல் பெற்று அதன்படி நீங்கள் உண்ணும் உணவை கட்டுப்பாடடில் வைத்திருக்க முடியும்.

**வினா 7**

*நீரிழிவு நோய் பெண்கள் தாய்மையடைவற்கு தடையாக இருக்குமா?*

நீரிழிவு நோயுள்ள பெண்கள் தாய்மையடைவதற்கு நீரிழிவு நோய் தடையாக இருக்காது. ஆனால் இந் நிலை வரும்போது கர்ப்பிணிப் பெண்கள் தமது குளுக்கோசினளவை மிகவும் கட்டுப்பாடடில் வைத்திருப்பதன் மூலம் ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்கலாம்.

**வினா 8**

*நாம் எடுக்கும் இன்சுலினின் அளவு கூடுகிறதென்றால் அதன் அர்த்தம் எமது நீரிழிவு நோயும் அதிகரிக்கின்றதா?*

நாம் கருத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில் எமது குருதியிலுள்ள குளுக்கோசினளவை கட்டுப்பாடடில் வைத்திருப்பது மிகவும் முக்கியமானது. அதற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அளவில் இன்சுலின் தேவைப்படும்.

**வினா 9**

*இன்சுலினை நாம் ஏற்றும்பொழுது கவனிக்க வேண்டியது என்ன?*

இன்சுலினை நாம் எமது கை காலிலுள்ள தொடைப்பபகுதி வயிறு அல்லது நாரிப்பகுதி போன்றவற்றில் ஏற்றும் பொழுது அதிலுள்ள தசைப்பகுதியில் தான் ஊசியை செலுத்தவேண்டுமேயல்லாது நரம்பை நோக்கியல்ல.

**வினா 10**

*நீரிழிவு நோய் உள்ளவர்கள் விருந்து வைபவங்களுக்கு போவதை தவிர்த்தல் நல்லதா?*

இது தேவையற்ற கவலையாகும். மனிதராகிய நாம் எல்லோருமே சில நேரங்களில் ஓய்வாக சந்தோசமாக உறவினர் நண்பர்களுடன் விருந்துபசாரங்களுக்கோ செல்வது தேவையானது ஒன்றாகும். இது நாம் வாழ்க்கையின் அழுத்தத்தை குறைக்க கூடியதாக அமையும் ஆனால் இவ்விருந்துபசாரங்களில் நாம் உண்ணும் உணவிலும் அதே நேரம் மதுவகைகள் பரிமாறப்பட்டால் அவற்றை எடுப்பதை தவிர்த்து விடுவது மிகவும் முக்கியமானதொன்றாகும்

❑•❑•❑•





# நயினாதீவு மக்களின் குடிப்பெயர்வும் புலம்பெயர்வும்



இலங்கையின் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்ட நிர்வாகத்துக்குள் உள்ளடங்கும் தரைத்தொடர்பற்ற நான்கு சதுர கிலோமீட்டர் பரப்பளவினை கொண்டதோர் சிறிய தீவாக நயினாதீவு இருப்பினும் இலங்கை தீவு முழுவதும் பெரும்பாலானவர்களால் தெரிந்து வைத்திருக்கப்படும் தீவாக அன்றும் இன்றும் விளங்குகின்றது. இவ்வாறு நயினாதீவு பிரபல்யம் பெறுவதற்கு சமய வரலாற்று காரணிகள் பெரும்பங்காற்றியிருப்பினும் நயினாதீவினை சேர்ந்தவர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் பல துறைகளிலும் புகழ் பெற்று விளங்கியமை இன்னுமோர் முக்கியமான காரணமாகும்.

இந்த தீவிலிருந்து ஒருபகுதி மக்கள் குடிபெயர்ந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு சென்றமைக்கு கல்வி வசதி வாய்ப்புக்களில் காணப்பட்ட சமமற்ற வளப்பரம்பல் மற்றும் சூழலியல் காரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருந்த அதேவேளை மக்கள் நாட்டில் புலம்பெயர்ந்தமைக்கு நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலையும் பொருளாதார காரணிகளும் செல்வாக்கு செலுத்தியிருந்தன.

## நயினாதீவு மக்களின் குடிப்பெயர்வும் அதன் விளைவுகளும்

ஆரம்ப காலங்களில் வேலை நிமித்தம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கடமையாற்றிய எம்மவர்கள் தனியே அறைகளில் வசித்து வந்ததுடன் அவர்களின் குடும்பங்கள் நயினாதீவிலேயே வசித்துவந்தன. இவ்வாறு வேலை நிமித்தம் சென்றவர்கள் வருடத்தில் ஓரிரு தடவை பெரும்பாலும் நயினாதீவு அம்பாளின் திருவிழா காலத்தில் விடுமுறை எடுத்து ஊருக்கு வந்து குடும்பத்தாருடன் களித்திருப்பர். இது தவிர நயினாதீவினை சேர்ந்த மாணவர்கள் யாழ்ப்பாணத்து பாடசாலை விடுதிகளில் தங்கி இருந்து கல்விகற்று வந்ததுடன் தமது பாடசாலை விடுமுறைக் காலங்களை நயினாதீவிலேயே பெற்றோருடன் களித்தார்கள்.

யாழ்ப்பாணத்திற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விரல் விட்டு எண்ணக்கூடிய நயினாதீவினை சேர்ந்த குடும்பங்களே குடிபெயர்ந்து வசித்துவந்திருந்த போதிலும் 1980 களின் பின்னர் குடிப்பெயர்வு வீதம் கணிசமாக அதிகரித்தது. மக்கள் கல்வி, வேலைவாய்ப்பு காரணங்களினால் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை கொழும்பு போன்ற இடங்களுக்கும் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் குடும்பங்களாக குடிபெயரத் தொடங்கினார்கள்.

இந்தக் குடிப்பெயர்வானது முதலில் யாழ்ப்பாணத்தினை நோக்கியதாக இருந்தாலும் பின்னர் அது யுத்தம் மற்றும் பல்வேறு காரணிகளால் வவுனியா, திருகோணமலை மற்றும் கொழும்பு போன்ற இடங்களுக்கும் விரிவடைந்தது. குடிப்பெயர்வுக்கு மேலே குறிப்பிட்ட பல்வேறு காரணிகள் காரணமாக இருப்பினும் பிரதான காரணியாக குழந்தைகளின் கல்வி வளர்ச்சியே காணப்பட்டது.

நயினாதீவில் சனத்தொகையினையும் அதன் குடிப்பரம்பலினையும் கருத்தில் கொள்கையில் அதிகம் கல்வியாளர்களைக் கொண்ட தீவு என்று சொன்னால் அது மிகையில்லை. அந்தவகையில் தமது குழந்தைகளுக்கு வளமான கல்வியினை பெற்றுக்கொடுக்க வேண்டும் மற்றும் பாடசாலை, பல்கலைக்கழக அனுமதிகளில் அதிகரித்த போட்டி நிலைமைக்கு தமது குழந்தைகளும் தயார்படுத்தப்படல் வேண்டும் என்ற ஆர்வம் நயினாதீவிலிருந்து மக்களை குடும்பங்களாக குடிபெயர வைத்தது. வளங்கள் அனைத்து பகுதிகளுக்கும் சமமாக பகிரப்படாமை மற்றும் யாழ்ப்பாண பெருநிலப்பரப்புக்கு சென்று தனியார் கல்வி வசதிகளை பெற்றுக்கொள்ளவதில்



போக்குவரத்து சிரமங்களை எதிர்கொண்டமை, இராணுவ சோதனைச் சாவடிகள் போன்ற யுத்
சூழ்நிலைமையின் நெருக்கடிகளும் மக்களை தங்கள் குழந்தைகளின் கல்விக்கா
குடும்பங்களாக குடிபெயர தூண்டிய புறக்காரணிகளாக இருந்துள்ளன.

இவ்வாறு நயினாதீவிலிருந்து மக்கள் குடும்பங்களாக குடிபெயரவே நயினாதீவின் சனத்தொ
வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. யாழ் பெருநிலப்பரப்பிற்கு குடிபெயர்ந்தவர்கள் ஆரம்பத்தி
அடிக்கடி ஊருக்கு வருகைதந்து தமது வீடு வளவுகளை பராமரித்துவந்ததுடன் சில
ஆலயங்களின் நிர்வாகங்களிலும் தொடர்ந்திருந்தார்கள். இருப்பினும் வவுனியா
திருகோணமலை, கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு குடிபெயர்ந்தோ
பெரும்பாலும் நாகபூசணி அம்பாளின் உற்சவ காலத்தில் வருகைதருவதனை வழக்கமா
கொண்டிருத்தார்கள்.

1991 ஆம் ஆண்டு யாழ் பெருநிலப்பரப்புடனான தொடர்பு யுத்த சூழ்நிலையினா
துண்டிக்கப்படவே நயினாதீவிற்கும் திருகோணமலைக்குமிடையிலேயே கப்பல் போக்குவரத்
தொடர்பு காணப்பட்டது. இந்த சூழ்நிலையில் யாழ்ப்பாணத்துக்கு குடிபெயர்ந்த எம்மவர்களு
அம்பாளின் உற்சவ காலத்தில் கூட ஊருக்கு செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டது. இந்
சூழ்நிலை எமக்கு பெரும் மன வருத்தத்தினை ஏற்படுத்தியதுடன் அதன் வெளிப்பாடா
அப்போது யாழ்ப்பாணத்தில் கா.பொ.த உயர்தரத்தில் கல்விகற்றுவந்த நயினை இளைஞர்க
சிலருடன் நானும் இணைந்து யாழ்ப்பாணத்திலுள்ள எம்மவர்களிடமும் வர்த்தகர்களிடமு
நன்கொடைகளை பெற்று நாகபூசணி அம்பாளின் தேர் திருவிழா அன்று உதயன் பத்திரிகையி
நடுப்பக்கத்தில் இரண்டு பக்கங்களுக்கு அம்பாளின் தேர் திருவிழா சிறப்பு பதிப்பொன்றினை
1992 முதல் 1995 வரை, காலத்தின் தேவை கருதி வெளியிட்டு வந்தோம். இந்த சிறப்பு பதிப்பி
யாழ்ப்பாணத்திலிருந்த எம்மவர்கள் பலரிடம் ஆக்கங்களை பெற்று வெளியிட்டதுடன் எம
முயற்சி அப்போது அனைவராலும் பாராட்டப்பட்டது. இந்த முயற்சி அம்பாளிட
போகமுடியவில்லையே என்ற ஆதங்கத்தில் இருந்த எமது மக்களுக்கும் ஏனைய அம்பா
அடியார்களுக்கும் அம்பாளின் தேர் திருவிழாவன்று அம்பாளை சிந்தித்திருக்க வழிசமைத்த
என்றால் அது மிகையல்ல. 1996 இல் யாழ்ப்பாண குடாநாடு முழுவதும் இலங்கை இராணுவத்தி
கட்டுப்பாட்டினுள் வந்ததும் மீண்டும் 1996 முதல் யாழ்ப்பாணத்திற்கும் நயினாதீவிற்கு
இடையிலான போக்குவரத்து தொடர்பு ஆரம்பித்து மக்கள் சென்றுவரக்கூடிய நிலை
ஏற்படவே எமது தேர்த்திருவிழா விசேட பதிப்பு முயற்சியினை நிறுத்திக்கொண்டோம்.

கல்வி வசதியை பெற்றுக்கொள்வதற்கான யாழ்ப்பாணத்தினை நோக்கிய குடிப்பெயர்வு 198
களில் அதிகளவாக இடம்பெற்றாலும் பெரும்பாலும் அனைவரும் வாடகைக்கு வீடுகளை பெற்
வசித்து வந்தார்கள். அந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக ஒரு வீட்டினை அமைப்ப
என்பது மிகவும் கடினமான காரியமாக இருந்தாலும் ஒரு சிலர் நிரந்தரமாக வீடுகளை கட்
வசித்த்துவந்தார்கள்.

இருப்பினும் 2000 ஆண்டுக்கு பின்னரான காலப்பகுதியில் நயினாதீவு மக்கள் யாழ்ப்பாணத்தி
காணிகளை வாங்கி சொந்தமாக வீடுகளை அமைத்து குடிபெயரத்தொடங்கினார்கள்
இவ்வாறான நிரந்தர குடிப்பெயர்வுக்கு அடிப்படை தேவைகளில் ஒப்பீட்டு ரீதியில் காணப்படு
குறைபாடுகள், நன்னீர் வசதி ஊரில் அருகிவருகின்றமை, காலநிலை மாற்றங்களால் ம
வீழிச்சி குறைவடைந்தமை, உள்ளூர் சேமிப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் புலம்பெய
உறவுகளின் உதவிகள் என்பன ஏதுக்காரணிகளாக இருந்துவருகின்றன. யாழ்ப்பாணத்துக்
குடிபெயர்ந்த நயினாதீவு மக்கள் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலைகளில் தம
குழந்தைகளை சேர்ப்பதில் வெற்றிகண்டுவிடுவதுடன் குழந்தைகளும் கல்வியி
சிறந்துவிளங்கி பல்கலைக்கழகம் வரை சென்று பல்வேறு துறைகளில் சிறப்புற்று விளங்
நயினாதீவு மண்ணுக்கு பெருமை சேர்த்தவண்ணமுள்ளார்கள்.

அரச தொழில் நிமித்தம் நயினாதீவினைச் சேர்ந்த பலர் இலங்கையின் பல பாகங்களிலும் வசித்
வந்தாலும் வர்த்தக நோக்கில் நயினாதீவு மக்கள் பலர் குடும்பங்களாக கொழும்பி

வசித்துவந்துள்ளனர். இவர்களே ஆரம்பத்தில் கொழும்பில் சொந்தமாக வீடுகளையும் வியாபார நிறுவனங்களையும் வைத்திருந்தார்கள். 1983 இல் இடம்பெற்ற இனக்கலவரத்தில் எமது உறவுகளின் வியாபார நிலையங்களும் தீக்கிரையாக்கப்பட்டு கொழும்பிலிருந்து எமது உறவுகள் குடும்பங்களாக வெறும் கையுடன் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தாலும் மீண்டும் மிடுக்குடன் தமது வியாபாரங்களை கொழும்பில் கட்டியெழுப்பினார்கள்.

1995 இல் இடம்பெற்ற யாழ்ப்பாண இடம்பெயர்வும் அதன் பின்னர் யாழ்ப்பாண குடாநாடு இலங்கை இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டமையும் யாழ்ப்பாணத்தில் வசித்த நயினாதீவு மக்களில் ஒருபகுதியினர் படிப்படியாக கொழும்பை நோக்கி குடிபெயர்ந்ததுடன் சொந்தமாக வீடுகளையும் மாடிக்குடியிருப்புக்களையும் வாங்கி வசித்துவருகின்றார்கள்.

இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு குடிபெயர்ந்த நயினாதீவு மக்கள் நயினாதீவுடனும் அங்கு வசித்துவரும் உறவுகளுடனும் உறவினை தொடர்ந்து பேணி வருவதுடன் ஆலயங்களின் உற்சவங்கள் மற்றும் மங்கல மற்றும் அமங்கல நிகழ்வுகளுக்கும் சென்று வருகின்றனர். இருப்பினும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு குடிபெயர்ந்த நயினாதீவு மக்கள் யுத்த சூழ்நிலை காரணமாக தரைவழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்ட நிலையில் கப்பல் மற்றும் விமான பயணங்களே பல்வேறு சிரமங்களின் மத்தியில் சாத்தியமாய் இருந்தமையினால் நயினாதீவினுடனான தொடர்பு என்பது அவசர நிமித்தம் அல்லது வருடத்தில் ஒருதடவை அதுவும் பெரும்பாலும் அம்பாளின் உற்சவ காலத்தில் என்ற நிலைமையே போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 2010 இல் யாழ் குடாநாட்டுக்கான தரைவழிப் பாதை திறக்கப்படும் வரை காணப்பட்டது.

நயினாதீவில் ஒப்பீட்டு ரீதியில் வசதி வாய்ப்புக்கள் காணப்பட்டபோதும் சில அடிப்படை தேவைகள் யுத்த சூழ்நிலை காரணமாக அரச இயந்திரத்தினால் பூர்த்திசெய்யப்படாமல் இருந்தது. இந்த சூழ்நிலையில் 2002 இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவே கொழும்பில் இருந்து தரைவழியாக நயினாதீவிற்கு சென்றுவரக்கூடிய நிலைமை உருவாகியது.

கொழும்பு என்பது இலங்கையின் தலைநகராக இருப்பதினால் வசதிகளும் வாய்ப்புக்களும் அதிகம். இவ்வாறான வசதி வாய்ப்புக்களுடன் கொழும்பில் வாழ்ந்துவரும் எம்மவர்கள் தாங்கள் எவ்வாறான வசதி வாய்ப்புக்களுடன் வாழ்ந்துவந்தாலும் தமது ஊரினையும் மக்களையும் என்றும் மறந்ததில்லை என்பதுடன் தான் நயினாதீவான் என்று சொல்வதில் பெருமையும் கொள்கின்றனர்.

அந்தவகையில் கொழும்பில் வசித்துவரும் எம்மவர்கள் தங்களுக்கு கிடைக்க கூடியதாக உள்ள வசதி வாய்ப்புக்களில் ஒரு சிறு பகுதியேனும் நயினாதீவில் வசிக்கும் எம் உறவுகளுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையில் 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திரு V.K.T சிவனந்தனுக்கு சொந்தமான ஆதமல்லி கட்டடத்தில் ஒன்றுகூடி நயினாதீவின் அபிவிருத்தியினை இலக்காக கொண்டு நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாச்சார அபிவிருத்திச் சங்கத்தினை உருவாக்கினார்கள். இந்த சங்கத்தினை உருவாக்கும் அந்த உயரிய முயற்சிக்காக ஒன்றுகூடியவர்களில் இன்று நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகக்குழு உறுப்பினராக உள்ள மருத்துவர் காமாட்சிசுந்தரம் மனோரஞ்சனும் நானும் பங்குபற்றியதுடன் ஆயுட்கால உறுப்பினர்களாகவும் உள்ளோம். இந்த சங்கம் நயினாதீவில் பல்வேறு அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்து வந்துள்ளதுடன் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. இது தவிர கொழும்பிலுள்ள எமது ஊர் மக்களை ஒன்றிணைத்து ஒன்றுகூடலினையும் கலை நிகழ்வுகளையும் நடாத்தி கொழும்பில் வசிக்கும் நயினாதீவு மக்களின் உறவுப்பாலமாகவும் இந்த சங்கம் செயற்பட்டு வருகின்றது. இந்த வெள்ளிவிழா சிறப்பு மலரில் பிரசுரிக்கப்பட்டுள்ள நயினாதீவு சமூக பொருளாதார கல்வி கலாச்சார அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாட்டு அறிக்கையில் அச்சங்கத்தின் விரிவான செயற்பாடுகளை அறிந்துகொள்ளமுடியும்.



கொழுப்பிலேயே இவ்வளவு நயினாதீவு மக்கள் இருக்கிறார்கள் என்றால் ஊரில் இன்னமும் மக்கள் இருக்கிறார்களா? என்று எனது நண்பர் ஒருவர் ஒருமுறை என்னிடம் கேட்டார். அந்த அளவுக்கு இன்று நயினாதீவு மக்கள் குடிபெயர்ந்து யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் வாழ்கின்றார்கள். இருப்பினும் எம்மவர்கள் ஊரிலிருந்து குடிபெயர்ந்து நாட்டின் எப்பாகத்தில் வசித்துவந்தாலும் ஊர் பற்றுடனும் உறவுப்பிணைப்புடனும் தான் வாழ்ந்துவருகின்றார்கள். இன்று யாழ்ப்பாணத்திலோ அன்றி கொழும்பிலோ ஓர் உறவுக்காரரின் நிகழ்ச்சி என்றால் மண்டபம் நிறைந்த உறவுகளுடன் நிகழ்வு சிறப்படைகின்றது. அதேவேளை நயினாதீவில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கும் எம்முறவுகள் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் இருந்து சென்று சிறப்பிக்கின்றார்கள்.

போக்குவரத்துவசதிகளின் விரிவாக்கம் குடிபெயர்ந்த மக்கள் தங்கள் தேவை கருதி நயினாதீவிற்கு அடிக்கடி சென்றுவரக்கூடியதாக இருப்பினும் 1980களின் பின்னரான தொடர்ச்சியான குடிப்பெயர்வு என்பது நயினாதீவின் சனத்தொகையிலும் அதன் பரம்பலிலும் கணிசமான அளவு வீழ்ச்சியினை ஏற்படுத்தியதுடன் விவசாயம் மற்றும் வர்த்தக நடவடிக்கையில் குறிப்பிடக்கூடிய அளவு தாக்கத்தினை ஏற்படுத்தியது.

## நயினாதீவு மக்களின் புலம்பெயர்வும் அதன் விளைவுகளும்

### ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வு

ஈழத் தமிழர்கள் புவியியல், சமூகவியல், அரசியல், பொருளாதாரக் காரணங்களினால் உந்தப்பட்டுத் தாம் தொன்று தொட்டு வழிவழியாக வாழ்ந்த பாரம்பரிய மண்ணை விட்டு; முற்றிலும் வேறுபட்ட பிறிதொருப் பிரதேசத்தில் வாழத்தலைப்படுவதைப் புலப்பெயர்வு என்றுக் கூறலாம். 'புலம்' என்ற சொல்லுக்குத் தமிழ் லெக்ஸிக்கன் அகராதியில் 'திக்கு' [1] எனப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ள அதேவேளையில், 'பெயர்தல்' என்பதற்கு 'இருப்பிடம் விட்டுப் பெயர்தல்' [2] எனப் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் வரும் 'கலந்தரு திருவின் புலம்பெயர்மாக்கள் [3] என்ற அடியும் இங்கு நோக்குதற்குரியது. புலியூர்க்கேசிகன் தனது உரையில்; 'மரக்கலம் மூலம் வருகின்ற செல்வங்களுக்காகத் தம் நாடுவிட்டு நாடு செல்லும் கடலோடிகள் பற்பல நாட்டினருமாக தம்முடன் கலந்திருந்து வாழ்கின்றவர்கள்[4] எனப் புலம்பெயர் மாக்களுக்கு விளக்கம் சொல்லியுள்ளார். இங்கு கடலோடிகள், அயல்நாட்டினர் என்ற பொருளில் "புலம்பெயர்மாக்கள்" என்ற பதம் சுட்டப்பட்டிருப்பதை நோக்க முடிகின்றது. இந்நிலையில் சொந்த இருப்பிடம் விட்டு நீங்கி திசைகள் தோறும் நகர்வதை புலம்பெயர்வு எனக் கூறப் படுகின்றது (மூலம்: யாழ் இணைய ஊடகம்).

---

1. *தமிழ் லெக்ஸிக்கன் அகராதி, பக்.*2785
2. *மேலது, பக்.*972
3. *சிலப்பதிகாரம்* 5,11-12
4. *சிலப்பதிகாரம், புலியூர்க்கேசிகன் உரை, பக்* 67

இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் தமிழர் புலம்பெயர்வு என்பது இருந்த போதிலும் தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் ஆரம்பித்த பின்னரே பெருமளவானோர் புலம்பெயர்ந்தனர். தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒரு சிலர் மேற்படிப்பிற்காக பிரித்தானியா சென்றதும் இன்னும் சிலர் வேலைகள் தேடி மத்தியகிழக்கு நாடுகளுக்கும் மற்றும் ஐரோப்பாவில் குறிப்பாக இத்தாலி மற்றும் சேர்மனி போன்ற நாடுகளுக்கு சென்றதும் உண்டு. இருப்பினும் 1983 இன் பின்னர் ஆயுதப்போராட்டம் தீவிரமடையவே படிப்படியாக அதிகரித்த புலம்பெயர்வு 1990 களின் பின்னர் மிகவும் அதிகரித்தது.

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் ஆரம்பித்தவுடன் அப்போது இந்திய அரசாங்கமும் தமிழ்நாட்டு மாநில அரசும் இலங்கை தமிழர்களின் ஆயுத போராட்டத்திற்கு சார்பாக இருந்ததுடன் உதவிகளையும் வழங்கின. இந்த சூழ்நிலையில் மக்கள் பாதுகாப்புக்கருதி படகுகள் மூலம் தமிழ்நாட்டுக்கு சென்று தஞ்சமடைந்தனர். இவ்வாறு இலங்கையில் இருந்துவரும் அகதிகளுக்காக தமிழ்நாட்டில் அகதிமுகாம்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டார்கள். இருப்பினும் இவ்வாறு தமிழ்நாட்டுக்கு சென்றவர்களுக்குக்கு இந்திய நிரந்தர வதிவுரிமையோ (Settle status) அன்றி குடிஉரிமையோ (Citizenship) வழங்கப்படாது இன்றும் இலங்கை அகதிகள் என்ற பெயருடனேயே வாழ்ந்துவருவது தான் வேதனையான விடயமாகும். இலங்கை அகதிமுகாமை சேர்ந்த மாணவர்கள் பலர் தமது உயர் கல்வியினை தொடர்வதில் தமது வதிவுரிமை காரணமாக சிக்கல்களை எதிர்கொண்டுவருவதுடன் அண்மையில் இலங்கையினை சேர்ந்த தமிழ் மாணவி ஒருவர் தனது வதிவிட உரிமை காரணமாக தமிழ்நாட்டில் மருத்துவ கல்வியினை தொடரமுடியாமல் போனது என்பது கசப்பான உண்மை.

1983 இல் இலங்கை அரசும் அதன் படைகளும் கைக்கூலிகளும் தமிழர் இனவழிப்பு கலவரத்தினை தெற்கில் கட்டவிழ்த்துவிட்டபோது இலங்கையில் தமிழர்கள் இலங்கை அரசாங்கத்தினால் இன்னல்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்ற செய்தி உலகநாடுகளுக்கு சொல்லப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உலகநாடுகள் குறிப்பாக பிரித்தானியா, ஐரோப்பிய நாடுகள், கனடா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் அவுஸ்ரேலிய போன்ற நாடுகள் 1951 இல் ஜெனீவாவில் அகதிகளுக்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளமையினால் தமது அரசியல் சித்தாந்தம் காரணமாக இலங்கை அரசாங்கத்தினாலும் அதன் படைகளினாலும் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய ஈழத் தமிழர்களுக்கு அகதி அந்தஸ்த்து வழங்கின. இவ்வாறு அகதி அந்தஸ்த்து பெற்றவர்களுக்கு இந்த நாடுகள் தங்கள் நாடுகளின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நிரந்தர வதிவுரிமையும் (Settle Status) குடியுரிமையும் (Citizenship) வழங்கின. இதனால் இன்று 14 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் உலக நாடுகள் எங்கும் வதிவுரிமையுடனும் குடிஉரிமையுடனும் வாழ்ந்துவருவதுடன் கல்வியில் சிறந்து விளங்குகின்றனர். இவர்கள் தமிழர் கலை பண்பாடு கலாச்சாரம் என்பவற்றினைப் பாதுகாக்கவும் தமிழரின் அரசியல் விடுதலைக்கும் கடுமையாக உழைத்துவருகின்றார்கள். மேலும் தமிழரின் மரபுரிமை மாதமாக தை மாதத்தினை கனடா மற்றும் பிரித்தானிய அரசுகளை அங்கீகரிக்க வைப்பதில் அந்தந்த நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் வெற்றிபெற்றுள்ளதுடன் தைத்திருநாளாம் தைப்பொங்கலை அரச அங்கீகாரத்துடன் சிறப்பாக கொண்டாடிவருகின்றனர்.

### நயினாதீவு மக்களின் புலம்பெயர்வு

நயினாதீவு என்பது நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலையினால் அதிகம் பாதிக்கப்படாத ஓர் இடமாக இருந்துவந்துள்ளது. நயினாதீவில் பௌத்த விகாரை இருந்தமையினால் அந்த விகாரையின் பாதுகாப்பிற்காக 1983 இல் கடற்படை முகாம் அமைக்கப்பட்டு நயினாதீவானது இலங்கை கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட 1985 இல் இலங்கை இராணுவமும் கடற்படையுடன் இணைந்து நயினாதீவினை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. நயினாதீவிற்கான கடற்போக்குவரத்தின் அடுத்த பக்கமான இருந்த குறிகாட்டுவான் முதல் யாழ் குடாநாடு முழுவதும் தமிழீழ விடுதலைப் போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்துவந்ததினால்



மக்களும் படகு உரிமையாளர்களும் நெருக்கடிகளை எதிர்கொண்டுவந்தனர். இதுதவிர 110 என்ற கடற்படைப் படகு அம்பாள் ஆலய துறைமுகத்தில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் 1986 இல் கண்ணிவெடித் தாக்குதல் நடாத்தி அழிக்கப்பட்டதும் அதனால் ஏற்பட்ட உயிரிழப்புகளும் அம்பாள் ஆலயத்துக்கு ஏற்பட்ட பாதிப்புகளும் உலங்குவானூர்த்தியில் இருந்து நடாத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகமும் நயினாதீவில் மேற்கு கடலில் அப்போது தரித்து நின்ற கடற்படைக்கு சொந்தமான யுத்த கப்பலான வீரையா சூரையாவிலிருந்து நயினாதீவினை நோக்கி நடாத்தப்பட்ட எறிகணை தாக்குதலும் யுத்தத்தின் கொடூரத்தினை நயினாதீவு மக்களுக்கு தெரியப்படுத்தியது. அதன்பின்னர் சின்னபுத்த கோவிலில் இருந்த புத்தர் சிலை குண்டு வைத்து சிதைக்கப்பட்டதும் நயினாதீவில் யுத்த காலத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களாகக் குறிப்பிடலாம்.

இது தவிர தமிழீழ விடுதலைக்காக நீராகாரம் கூட அருந்தாது உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அப்போதைய அரசியல் பிரிவு தலைவர் திலீபனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக புங்குடுதீவுக்கு கொண்டுவரப்பட்டபோது நயினாதீவில் சோக கீதங்கள் இசைக்கப்பட்டதுடன் திலீபனின் படங்கள் வைத்து அலங்கரிக்கப்பட்ட படகுகளில் நயினாதீவு மக்கள் புங்குடுதீவிற்கு சென்று அஞ்சலி செலுத்தினார்கள். இந்திய இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பித்தபோது திலீபனிற்கு அஞ்சலி செலுத்துவதற்கு முன்னின்று செயற்பட்டவர்கள் மற்றும் அஞ்சலியினை நியாயப்படுத்தி கதைத்தவர்கள் என்று பலர் கடற்படையினால் கடுமையாக தாக்கப்பட்டார்கள்.

1983 இன் பின்னர் தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் தீவிரமடையவே எம்மவர்கள் சிலர் புலம்பெயரத் தொடங்கிவிட்டார்கள். அந்த காலத்தில் பெரும்பாலான மேலைத்தேச நாடுகள் இலங்கை மக்களுக்கு நுழைவு அனுமதி (Entry Visa) நடைமுறையினைப் பின்பற்றி வந்தமையினால் இலகுவாக முகவர்களின் துணையின்றி புலம்பெயரக்கூடியதாக இருந்தது. இருப்பினும் 1983 முதல் 1990 வரையான காலத்தில் நயினாதீவிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் எண்ணிக்கை மிக குறைவாக இருந்தாலும் 1990 களின் பின்னர் நிலைமை மாற்றமடைந்தது.

1987 இல் இந்திய இராணுவம் வெளியேற்றப்பட்டபின்னர் 1990இல் இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இரண்டாம் ஈழ யுத்தம் ஆரம்பிக்கவே பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்டு நயினாதீவிலிருந்து பெருமளவான இளைஞர்கள் மற்றும் குடும்பத் தலைவர்கள் புலம்பெயரத் தொடங்கினார்கள். இவ்வாறு புலம்பெயர்ந்தவர்களில் பெருமளவானோர் கனடா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்ததுடன் ஜெர்மனி, பிரான்ஸ், சுவிஸ்லாந்து, இத்தாலி,டென்மார்க், நோர்வே போன்ற நாடுகளுக்கும் மற்றும் சிலர் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் புலமைபெயர்ந்தனர். இன்னும் சிலர் அமெரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கும் புலம்பெயர்ந்தனர். 1991 இல் நயினாதீவிற்கும் யாழ் பெருநிலப்பரப்புக்கும் இடையிலான போக்குவரத்து தொடர்பு துண்டிக்கப்படவே நயினாதீவு மக்களுக்கு திருகோணமலை மற்றும் கொழும்புக்கான கப்பல் போக்குவரத்து வாய்ப்பு கிடைத்தது. இதனால் இளைஞர்களும் குடும்ப தலைவர்களும் இலகுவாக புலம்பெயரக்கூடியதாக இருந்தது. இந்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்தவர்கள் கொழும்பிற்க்கோ அன்றி நாட்டின் ஏனைய பகுதிகளுக்கோ செல்வதானால் அனுமதி (Pass) எடுக்கவேண்டிய சூழ்நிலை இருந்ததுடன் இளைஞர் யுவதிகளுக்கு பிணை வைத்தே அனுமதி பெறவேண்டி இருந்தது. இதனால் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்த மக்களின் புலம்பெயர்வு பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டது.

இவ்வாறு நயினாதீவில் இருந்து புலம்பெயர்ந்த எம் உறவுகள் அவர்களின் அகதி அந்தஸ்த்து உறுத்திப்படுத்தப்படவே தமது குடும்பங்களை தம்முடன் இணைத்துக்கொள்ள தொடங்கினார்கள். இந்த சூழ்நிலையில் நயினாதீவிலிருந்து குடும்பங்கள் புலம்பெயரத்தொடங்கின. குறிப்பாக கனடாவிற்கு பெருமளவானோர் குடும்பங்களாக

புலம்பெயர்ந்தனர். இது தவிர 1990 களில் புலம்பெயர்ந்த இளைஞர்கள் திருமண வயதினை அடைந்தவுடன் தமது வாழ்கை துணையினையும் ஊரிலிருந்து அழைத்துக்கொண்டார்கள்.

நயினாதீவு மக்களின் பொருளாதாரம் அரச தொழில், விவசாயம், வர்த்தகம் மற்றும் மீன்பிடி ஆகியவற்றினை அடிப்படையாக கொண்டதாக இருந்தாலும் 1990களின் பின்னரான காலப்பகுதியில் விவசாயம் மற்றும் வர்த்தகம் என்பன நயினாதீவில் குறைவடையத்தொடங்கி இன்று விவசாயிகளோ அன்றி விவசாயமோ இல்லை என்ற நிலைமை உருவாகியுள்ளமை மிகுந்த மனவேதனை தரும் உண்மையாகும். பயிர்செய் நிலங்கள் தரிசுநிலங்களாகி வேலிகளற்று காணப்படுகின்றன. இந்த நிலைமை உருவாக்குவதற்கு விசாயிகள் குடும்பங்களாக புலம்பெயர்ந்தமை, வெளிநாட்டு பணவனுப்புதல்களால் உள்ளூரிலிருக்கும் மக்கள் விவசாயத்தில் தங்கியிருக்கவேண்டிய நிலைமை இல்லாமல் போனமை மற்றும் காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்களால் மழைவீழ்ச்சி குறைவடைந்து விவசாய காணிகளில் இருந்த கிணறுகள் உவர்த்தன்மையடைந்தமை, ஊரிலுள்ள குளங்கள் தூர்வாரி பராமரிக்கப்படாமை போன்றவை முக்கிய காரணங்களாக இருந்துள்ளன.

ஆசிரியர்களாகவும் அரச நிர்வாகத்துறையிலும் எம்மவர்கள் பலர் நயினாதீவில் கடமை புரிந்துவருவதனால் அரச தொழில் வருமானத்தில் பெருமளவில் பாதிப்பு ஏற்படாத போதும் குடிப்பெயர்வு மற்றும் புலம்பெயர்வினால் ஏற்பட்ட சனத்தொகை வீழ்ச்சியினால் நயினாதீவில் அரச தொழிலில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை கணிசமாக வீழிச்சியடைந்துள்ளது. இருப்பினும் யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் குடிபெயர்ந்து வசித்துவரும் நயினாதீவினைச் சேர்ந்த பெருமளவானோர் அரச பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

பழைய வர்த்தகர்களின் மறைவுக்கு பின்னர் சில வர்த்தக நிலையங்கள் அவர்களின் வாரிசுகளால் சிறிய அளவில் நடாத்தப்பட்டாலும் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் வேறு வேறு நபர்களால் நடாத்தப்பட்டு பின்னர் கைவிடப்படும் நிலைமையே காணப்பட்டது. நயினாதீவில் வர்த்தகம் வீழ்ச்சியடைந்தமைக்கு குடிப்பெயர்வு மற்றும் புலம்பெயர்வினால் ஏற்பட்ட சனத்தொகை வீழ்ச்சி, வர்த்தகர்களும் குடிபெயர்ந்ததுடன் பெருமளவானோர் புலம்பெயர்ந்தமை மற்றும் யாழ் குடாநாட்டுடனான போக்குவரத்து வசதிகள் விரிவாக்கம் பெற்றமை குறிப்பாக மோட்டார் சைக்கிகளில் யாழ்ப்பாணம் சென்றுவரக்கூடியதாக இருக்கின்றமையினால் அங்கிருந்தே தேவையான பொருட்களை கொள்வனவு செய்கின்றமை என்பன காரணங்களாக இருக்கின்றது.

மீன்பிடி வருவாயினைப் பொறுத்தவரையில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டவர்களில் மிக குறைந்தளவானோரே குடிபெயர்ந்தும் புலம்பெயர்ந்தும் சென்றமையினால் நயினாதீவினை பொறுத்தவரையில் மீன்பிடி துறையிலும் அதன் வருவாயிலும் குடிபெயர்வும் புலம்பெயர்வும் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தவில்லை என்றே கூறலாம்.

| Year | Nainativu Population |
|---|---|
| 1981 | 4248 |
| 2007 | 3409 |
| 2008 | 2695 |
| 2009 | 2873 |
| 2010 | 3038 |
| 2011 | 3012 |
| 2012 | 3015 |
| 2013 | 2757 |
| 2014 | 2835 |
| 2015 | 3161 |
| 2016 | 2846 |
| 2017 | 2861 |
| 2018 | 2481 |
| 2019 | 2544 |






## 2009 இல் ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னரான நிலைமை

2009 இல் தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் குடிபெயர்ந்த மற்றும் புலம்பெயர்ந்த நயினாதீவு மக்களின் ஊருக்கான வருகை அதிகரித்ததுடன் சிலர் தமது வீடுகளை புனரமைத்த அதேவேளை இன்னும் சிலர் புதிய வீடுகளை அமைத்தும் வருகின்றனர். இவ்வாறு வீடுகள் புதுப்பொலிவு பெறுவதும் புதிய வீடுகள் கட்டப்படுவதும் குடிபெயர்ந்த மற்றும் புலம்பெயர்ந்த மக்களின் ஓர் மீள்வருகைக்கான ஓர் ஆரம்பமாக பார்க்கமுடிகின்றது. புலம்பெயர்ந்த எம் உறவுகள் தங்கள் குழந்தைகளுக்கு தேவையான கல்வி மற்றும் வாழ்க்கையினை ஏற்படுத்திக்கொடுத்தபின்னர் வருடத்தில் குறிப்பிட்டகாலம் நயினாதீவில் வந்து தங்கிச்செல்லும் காலம் மெல்ல மெல்ல உருவாகிவருகின்றமை மனமகிழ்வினைத் தருகின்றது.

அத்துடன் 2009 இந்த பின்னர் நயினாதீவுக்கு சைவ பௌத்த யாத்திரிகளினதும் சுற்றுலா பயணிகளினதும் வருகை அதிகரித்தது. இவ்வாறு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கும் மற்றும் நாகபூசணி அம்பாள் ஆலய உற்சவ காலங்களில் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருகைதரும் எம்மவர்களுக்கும் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க புலம்பெயர்ந்த எமது உறவுகள் சுற்றுலா விடுதிகளை நயினாதீவில் திறந்துவருகின்றார்கள். இவர்களின் இந்த முயற்சி பாராட்டத்தக்கதாக இருப்பினும் தெய்வீக தீவாக சர்வமத சந்நிதியாக திகழும் நயினாதீவினுடைய சமூக கலாச்சார மற்றும் பண்பாட்டு விழுமியங்களை பாதுகாப்பதில் அனைவரும் உறுதியாக இருப்பது மிகவும் அவசியமானதாகும்.

இவ்வாறு நயினாதீவினை நோக்கி மக்களின் வருகை அதிகரிக்கவே ஊரிலுள்ள ஆலயங்கள் புதுப்பொலிவுபெற்று திருவிழாக்காணும் ஆலயங்களாக சிறப்படைந்ததுடன் ஏற்கனவே திருவிழா இடம்பெற்றுவந்த ஆலயங்களிலும் நிரந்தர தேர் மற்றும் மஞ்சம் என்பன அமைக்கப்பட்டு திருவிழாக்கள் சிறப்பாக இடம்பெற்றுவருகின்றன. இவ்வாறு ஆலயங்கள் சிறப்புற்று விளங்குவதற்கு புலம்பெயர்ந்து வாழும் நயினாதீவு மக்களின் நிதிப்பங்களிப்பு அதிகளவில் காணப்படுகின்றது. தனி நபர்களாகவும் குடும்பங்களாகவும் மட்டுமன்றி நயினாதீவினை சேர்ந்த பெருமளவான புலம்பெயர் உறவுகள் தமது குலதெய்வங்களின் ஆலயங்கள் புதுப்பொலிவுபெற திருப்பணி நிதியினை தாராளமாக வழங்கி உதவியுள்ளார்கள். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. இன்று பல ஆலயங்களில் திருவிழாக்கள் இடம்பெற்றுவருவது புலம்பெயர் உறவுகளை மட்டுமன்றி குடிபெயர்ந்து நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் எம்மவர்களையும் ஊரை நோக்கி அழைத்துவருகின்றது.

ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டிருக்கும் இந்த காலகட்டத்தில் அதிகரித்துள்ள புலம்பெயர்ந்த மற்றும் குடிபெயர்ந்த நயினாதீவு மக்களினதும் சுற்றுலா மற்றும் யாத்திரிகைகளினதும் வருகைக்கு குடிநீர் பற்றாக்குறை என்பது முக்கிய பிரச்சனையாக இருந்ததுடன் இந்த பிரச்சனையினை போக்க கடல் நீரினை நன்னீராக்கும் திட்டம் நயினாதீவில் ஆரம்பிக்கப்பட்டு மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டுவருகின்றமையானது பாராட்டப்படவேண்டியது என்பதுடன் இந்த திட்டம் முழுமையாக செயற்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டு மக்களுக்கு நன்னீர் வசதி கிடைக்கும்போது நயினாதீவில் சனத்தொகை வீழ்ச்சிவீதம் குறைவடைந்து சனத்தொகை அதிகரிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் பெரிதும் காணப்படுகின்றது.

இருப்பினும் கடல் நீரினை நன்னீராக்கும் திட்டத்தினால் நயினாதீவின் கரையோர மீன்பிடித்துறைக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவகையில் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பது மிகவும் அவசியமாகும். கடல்நீரினை நன்னீராக்கும்போது மிகச்செறிவான உப்பும் ஏனைய இரசாயனங்களும் கடலில் கலக்கவிடப்படுவதனால் மீன்களின் இன விருத்திக்கு பாத்திப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலையும் உருவாகலாம். நயினாதீவிலுள்ள மீனவர்கள் பொரும்பாலும் கரையோர மீன்பிடியினையே மேற்கொண்டுவருவதனால் மீன்பிடி பாதிக்கப்படும்போது

கடல்நீரினை நன்னீராக்கும் திட்டம் எதிர்மறையான விளைவினை ஏற்படுத்தி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களை குடிபெயரவைத்துவிடலாம்.

அண்மைக்காலத்தில் நயினாதீவில் வைத்திய சுகாதார வசதிகள் அதிகரித்துவருவதனை காணமுடிகின்றது. மண்ணின் மைந்தன் மருத்துவர் ப.க.நவரட்ணராஜா அவர்கள் ஊர் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற நோக்குடன் தனது ஓய்வு காலத்தில் கனடாவில் இருந்து வருகைதந்து எமது மக்களுக்கு சேவையாற்றிவந்ததுடன் பௌத்த விகாராதிபதியினையும் புலம்பெயர் உறவுகளையும் அணுகி வைத்தியசாலைக்கு தேவையான உடனடி புனர்நிர்மான வேலைகளை மேற்கொண்டும் வைத்திய உபகரணங்களை பெற்றுக்கொடுத்தும் மக்களுக்கு சிறந்த வைத்திய சேவையினை வழங்க ஏற்பாடு செய்துகொடுத்துள்ளார். அந்தவகையில் மருத்துவர் .க.நவரட்ணராஜா, பௌத்த விகாரையின் விகாராதிபதி வணக்கத்துக்குரிய நவடகல படும தேரர், புலம்பெயர் உறவுகள் மற்றும் இலங்கை கடற்படையினருக்கு நன்றிகளை தெரிவிப்பதோடு இவர்களின் முற்சியினால் முன்னேற்றமடைந்துள்ள நயினாதீவின் வைத்திய மற்றும் சுகாதார வசதியானது மக்களின் குடிப்பெயர்வினை ஓரளவு கட்டுப்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்.

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கு சனத்தொகை என்பது மிகவும் இன்றியமையாதது. எனவே சிறந்த திட்டமிடலுடன் கடல் நீரினை நன்னீராக்கும் திட்டத்தினை முன்னெடுப்பதுடன் அரச மற்றும் எமது ஊரின் அபிவிருத்தியினை நோக்காக கொண்ட புலம்பெயர் அமைப்புக்களின் உதவியுடன் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை அதிகரித்து, வீதிகளை புனரமைத்து, சூழல் பாதுகாப்பு திட்டத்தினை நடைமுறைப்படுத்தி, கடலரிப்பினைத் தடுத்து, குளங்களை தூர்வாரி புனரமைப்பதனூடாக மழைநீரினை சேகரித்து, தரிசுநிலங்களை மீண்டும் பயிர்செய்நிலங்களாக மாற்றி, ஊரெங்கும் மரங்களை நாட்டி நயினாதீவினை பசுமைத்தீவாக மாற்றுவதனூடாக குடிப்பெயர்வினை கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதுடன் புலம்பெயர்ந்த உறவுகளின் ஓய்வுகால மீள்வருகைக்கும் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கும் பெரிதும் உதவும்.

ஒற்றுமையே பலம். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

திரு யோகராசா ஜயகாந் [MSc Economics]
நிதி மற்றும் சட்ட ஆலோசகர், பிரித்தானியா
முன்னாள் சிரேஷ்ட பொருளியலாளர்
இலங்கை மத்திய வங்கி



*With compliments*
*Of*
*N. Ranjithkumaran*
*Clapbam Law LLP*

180 Mitcham Road
London SW17 9NJ
020 8767 9717
Info@claphamlawllp.co.uk

# Language (மொழி)



Language is a core part of the human experience. It is a unique ability in nature, unparalleled in its scope. Language allows us to process complex thoughts and to express them. It is described in theoretical linguistics, as a system of discrete infinity. In language, sentences are generated from discrete units (words), and these words can be combined in an infinite number of possible configurations. This allows us to generate an infinite number of expressions. No other communication system in nature, whether it be birdsong, bee dances or primate calls even comes close in its expressive capacity.

The beauty of language is that it is a capacity that we all possess. We acquire language naturally as infants through no effort whatsoever. Take our language of Tamil which has a complex grammar with 9 cases for nouns. English for comparison contains only three cases as shown below:

1) Nominative case: **I, He, She, We**- used for the subject of a verb. E.g., "I went to school." Tamil: I ( நான் -naan) and We (நாம் - naam)

2) Oblique case: **Me, Him, Her, Us**- used for the object of a verb. E.g., "The teacher saw him." Tamil: Me (என்னை - ennai), Us (நம்மை - nammai)

3) Genitive case: **Mine, Hers, Ours**- used for possession. Tamil: Mine, Ours (என்னுடையது -ennudayathu, நம்முடையது - nammudayathu)

However, in addition Tamil also contains 6 other cases for nouns, some of which I have given examples for below:

Associative case: என்னுடன்- ennudan (with me)- indicates association
Ablative case: என்னிடமிருந்து - ennidamirunthu (from me)- indicates movement away
Dative case: எனக்கு- ennakku (to me)- indicating recipient

Tamil also contains additional pronouns when compared to English due to the presence of honorific forms. There are 2 ways in which you can say 'you' (நீ - ni, நீங்கள் - ningal), ningal being more respectful. There are also 2 ways in which you can say 'they' (அவர் / இவர் - avar/ ivar) and (அவர்கள் / இவர்கள்- avargal/ivargal).

Despite the complexity, a native Tamil speaker understands and applies these grammatical rules with no conscious effort. In fact, by the age of 2-3 children are able to master complex rules of grammar before they are even able to draw a cross on a piece of paper. This is quite remarkable and demonstrates a hard wiring towards acquisition of language. It has been argued that one does not



learn language. Instead, the language system grows in the brain the same way a child's bones may grow. I.e., it is built into our DNA. Someone's height is considerably influenced by their genetics but is also affected by environmental conditions such as diet and exposure to sunlight.

Likewise, the development of language also appears to be genetically pre-programmed but is influenced by environmental factors. For instance, a Tamil child raised in an English-speaking environment will speak English. However, a dog raised in an English-speaking family or even a chimp for that matter, will never acquire English. They simply lack the in-built cognitive capacity for language.

All of this begs the fundamental question, "what is language?" I have left this question till the end as my answer may be somewhat surprising. Before I answer, I will add the caveat that the nature of language is still a topic of intense discussion in the field of cognitive psychology and neuroscience. This answer is my interpretation based on the evidence but by no means accepted as dogma. Language is not a system of communication. There are countless ways in which people may communicate and indeed there are innumerable examples in nature. Animals often communicate through dance, smell and facial expression etc. The capacity for infinite expression seems far more powerful than what may be required in nature. Furthermore, it doesn't appear that language evolved for the purpose of communication as it is not modality specific. Language can be expressed through speech (audio) but also sign language (visual). The answer to the question is that language is instead a system of thought. It is a system through which we combine concepts together to generate new concepts.

E.g., 'The man (concept A) is tall (Concept B).'

We can combine this with concept C, 'who flies planes' to form A(C)B 'The man who flies planes is tall'.

These concepts can be words, ideas, numbers etc. An evolutionary change, maybe 100,000 years ago gave humans the ability to combine concepts in a recursive manner (repeatedly), giving language its characteristic infinite capacity. Other skills such as mathematical ability (another infinite system as numbers go on indefinitely) and musicality which also seem uniquely human likely emanate from the language system. This internal language can then be externalised through sound, or hand gestures. In this sense, language is utilised for communication but its primary purpose is actually the generation of new thoughts.

If you are interested in doing more reading on this theory, there is a great scientific paper titled: The Faculty of Language: What Is It, Who Has It, and How Did It Evolve?. A quick google search will lead you to the pdf. For those of you who may have found this article overly academic, I would like to apologise and end on a more personal note. Language is something that unites all human beings and makes us a unique species in nature. The human ability to create new thoughts and express them is unrivalled and this is a capacity that we all possess. It is a reminder that there is far more that connects us than divides us. We should strive to utilise this amazing capacity for the good of mankind. To innovate and find solutions to the problems we face and to bring people together.

By Ajanth Varathanathan


Laadki
www.laadki.co.uk
New
CATALOGUE
OUT NOW




Laadki
www.laadki.co.uk
New
CATALOGUE
OUT NOW

# How to get out of debt?

By Kulanathan Ratnam,MAAT,AFA,FIAB



**Debt**

Last month the Bank of England released figures showing that consumers now collectively owe more than £1.675 trillion. The money is owed through a combination of mortgages, personal loans, overdrafts, hire purchase agreements and on credit and store cards. British household debt is now equal to the total amount owed by Africa, Asia and Latin America to international banks and through loans from other countries.

The amount people borrow has been exponentially increased in recent years due to a combination of low interest rates, making it cheap to borrow money, and soaring house prices and low unemployment, which have boosted people's confidence.

Debt is not just a financial issue. It can trigger stress and depression, and play havoc with personal relationships and health. But there are practical steps you can take to help you get out of debt.

**Don't bury your head in the sand!**

- Make a complete list of all debts.
- Work out a budget to see if you have any money left over for repayments.
- Don't ignore repayment demands. Contact your creditors and explain your situation.
- Do not borrow more money to repay existing debts. Consider ways of earning extra cash instead.

**Prioritise your debts**

Which debts you pay first should depend on the severity of action the creditor could take against you. Priority debts include mortgage arrears, rent arrears, council tax and fines. Lower priority debts include credit and store card arrears, bank overdrafts and hire purchases.

**Switch to get a better rate**

With credit cards, mortgages and loans check if you can switch and save. The bigger the debt, the bigger the likely benefit: remortgaging can save thousands of pounds.

**Negotiating with creditors**

- Explain clearly what you can pay and how often, and if you have priority debts that come first.
- Be realistic about what you can afford. 'Token' offers as £1 a week may be acceptable.
- Creditors may challenge your offer. Be prepared to provide proof of income and expenditure such as bills.
- If creditors do not respond, start paying what you can afford anyway and seek help.



You can also take steps such as talking to citizens advice bureaux, the national debtline (0808 808 4000) or consolidate debts with a debt management companies.

**How to create Wealth?**

Do we all dream about becoming wealthy? Can we make this dream as reality?
Researchers also have studied various newly becoming wealthy people and they have found out that they all had the following action plan.

1 Eliminate Debts.
2 Create an Instant estate with use of low-cost Insurance.
3 Have a written financial plan.
4 Own your own business.

Do you have a written plan to get out of debt and move towards becoming financially independent?

**Own your own Business**

Most of us would like to own a business. If you are selecting a best business Opportunity, you must consider the following 15 points when assessing the potential of a business idea as an ideal money-making multiple sources of income. This list of points should be viewed as a guideline not an absolute. Generally speaking, the more of the following points that your multiple sources of income business idea possesses, the greater its potential for success.

Ideally your money-making multiple source of income should …..

1. Sell to the masses.
2. Fulfil a fundamental need for many people.
3. Be low risk.
4. Provide the opportunity for ongoing passive income.
5. Require a low staff component.
6. Have a stable, growing, long-term demand.
7. Have low overhead costs.
8. Have low start-up costs.
9. Have a unique quality, making it difficult for competitors to copy.
10. Have a positive cash-flow and low inventory costs.
11. Have high profit margins and rates of returns.
12. Have a minimal government regulation.
13. Be portable.
14. Be fun, challenging and satisfying for the business owner.
15. Provide an opportunity to uncover other money-making multiple sources of incomes.

If you can have business idea or a business opportunity that meets all 15 criteria or most of it, you are on the right path to make money.

# பிரித்தானியாவில் தமிழக் கல்வி.



ஓர் இனத்தின் பண்பாட்டிற்கும் நாகரிகத்துக்கும் அடிப்படையாக இருப்பது மொழி. மொழியில் பற்றுக்கொள்ளாத இனம் தன் மொழியையும், பண்பாட்டையும், முகவரியையும் இழந்து, இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விடும். அப்படி அழிந்து ஒழிந்து போன வரலாறுகள் உலகில் பலவுண்டு. செம்மொழிகளுள் ஒன்றான தமிழ்மொழி எம் தாய்மொழி. எம் தாய்மொழி என்பது தமிழர்களாகிய எமக்குப் பெருமை. உயிர்ப்போடும், சீரோடும், சிறப்போடும் இயங்கி வரும் எம் தாய்த் தமிழைப் போற்றிக் காப்பது ஒவ்வொரு தமிழனதும் தலையாய கடமையாகும்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் புலம் பெயர்ந்து வாழ்தல் என்பது இலங்கைத் தமிழர்களுக்கு தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. கடும் அரசியல் நெருக்கடி காரணமாகவும், போர்ச்சூழல் காரணமாகவும் பல ஆயிரக் கணக்கான தமிழ் மக்கள் தம்சொந்த மண்ணை விட்டு, புலம் பெயர்ந்து வாழும் நிலை உருவானது. இதனால், தமிழ் மக்கள் உலகின் பல நாடுகளுக்குச் சென்று வாழத் தொடங்கினர். புதிய சூழலில் பல சவால்களைச் சந்தித்த நிலையிலும் மொழிப் பற்றாளர்கள் தாய்த்தமிழ் மொழியையும், கலாச்சார விழுமியங்களையும் தம் சிறார்களுக்குக் கற்றுக் கொடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டு தமிழ்ப் பாடசாலைகளை ஆரம்பித்தனர்.

புலம்பெயர் தமிழர்களின் வருகைக்கு முன் பிரித்தானியாவில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்கள் தம் பிள்ளைகளின் தமிழ் மொழிக் கல்விக்காக எதையும் முன்னெடுக்கக் கூடிய சூழல் அமைவாக இருக்கவில்லை. புலம்பெயர் தமிழ் மக்களின் வருகைக்குப் பின் தமிழ் மொழியைக் கற்பிக்கும் நோக்குடன் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தமிழ்ப் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டன. படிப்படியாகத் தமிழ்ப் பாடசாலைகளின் எண்ணிக்கை வளர்ந்து வந்துள்ளது.

தற்போது பிரித்தானியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் முனைப்போடு இயங்கி வருகின்றன. ஆரம்பத்தில் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கான பாடத் திட்டமோ, பாட நூல்களோ இருக்காத சூழலில் தாயகத்தில் இருந்து வளங்களைப் பெற்றுத் தமிழ்க் கல்வியை முன்னெடுத்துச் சென்றனர். தொடக்கத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆசிரியர், கற்றோர் போன்றவர்கள் இணைந்து செயற்பட்டனர். காலப் போக்கில் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை போன்ற கல்வி நிறுவனங்கள் புலம்பெயர் நாட்டு கல்வித் திட்டத்தை ஒட்டி தமக்கென ஒரு நிலையான பாடத்திட்டத்தினை உருவாக்கினர். கல்விமான்கள் அடங்கிய நூலாக்கக் குழுவின் ஊடாக மழலையர் நிலை தொடக்கம் வளர்தமிழ் 12 வரையான நூல்களை ஆக்கினர். அந்நூல்களில் மொழியினூடாக தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களையும் தமிழர் விழாக்கள் தொடர்பான மரபுகளையும், கலைகளையும் தமிழ்ச் சிறார்களுக்கு ஊட்டுகின்றனர்.

இப்பாடத் திட்டத்தினுள் கற்றலின் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்ற நான்கு திறன்களையும் உள்ளடக்கியதாக பெருமுனைப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. கேட்டலுக்கென ஒலிவட்டுக்களையும், வாசித்தலுக்கென அந்தந்த வகுப்பு நிலைகளுக்கு ஏற்ற வகையிலான வாசித்தல் நூல்களையும், பேசுதலுக்கான நூலையும் வடிவமைத்துள்ளார்கள். தமிழ் இலக்கிய மாணி பட்டயக் கல்வி தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. இது பாலர் நிலை வகுப்புகளை முடித்தபின் வளர்தமிழ் 1ல் கற்று அனைத்துலகத் தமிழ்மொழித் தேர்வு எழுதுகின்றனர். இதுவே, தேர்வின் தொடக்க நிலை வகுப்பாகும். வளர்தமிழ் 12வரை தேர்வு நடைபெறுகின்றது. உலகின் 14 நாடுகளிலும் ஆண்டு தோறும் யூன் மாதம் வருகின்ற முதலாவது சனிக்கிழமை எழுதுதல் தேர்வு நடைபெறுகிறது.

அனைத்து இடங்களிலும் ஒரே நாளில் எழுதுதல் தேர்வு நடைபெறுவது சிறப்புக்குரிய விடயமாகும். பிரித்தானியாவில் அனைத்துலகத் தமிழ் கேட்டல், பேசுதல், வாசித்தல் பொதுத்தேர்வுகள் ஆண்டு தோறும் மே மாத முற்பகுதியில் வார இறுதி நாட்களில் நடைபெறுகின்றது. அனைத்துலக தமிழ்மொழி எழுதுதல் தேர்வு விடைத்தாள்கள் பிரான்ஸ் நாட்டிலுள்ள தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைமையகத்தில் வெவ்வேறு நாடுகளில் இருந்து வருகை தரும் ஆசிரியர்களால் திருத்தப்பட்டு புள்ளிகள் இடப்படுகின்றன. இறுதியில் ஏற்கனவே, அம்மாணவர்கள் பெற்ற புலன் மொழித் தேர்வுகளின் (கேட்டல், பேசுதல், வாசித்தல்) புள்ளிகளுடன் சேர்த்து பெறுபேறுகள் அனுப்பப்படுகின்றன.



வளர்தமிழ் பாடநூல்களைக் கற்கும் மாணவர்களின் பாடத்திட்டம் CAMBRIDGE O/L. A/L தேர்வுகளுக்கு அமைவான பல விடயங்களைக் கொண்டுள்ளது. அதனால், வளர்தமிழ் நூல்களைக் கற்கும் மாணவர்கள் மிக எளிதாக அத்தேர்வுகளில் உயர் பெறுபேறு பெறும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. இது அவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் பெரும் சாதகமான நிலையை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. புலம் பெயர்ந்து பிரித்தானியாவுக்கு வந்த தமிழ்க் குடும்பங்கள் ஆரம்பத்தில் தம் பிள்ளைகளை வாழிட மொழியைக் கற்று விட வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட வேண்டியவர்களாக இருந்தனர். இந்நிலையில் தமிழ் மொழிக்கல்வி பற்றிச் சிந்திக்க அவர்களுக்கு அவகாசம் இருக்கவில்லை. காலப்போக்கில் அவர்கள் மனதில் எழுந்த சந்தேகங்கள் கேள்விகளாக வெளிவந்தன. பாடசாலைப் பாடங்களைப் படிப்பதற்கே நேரம் போதவில்லை. இந்த் நிலையில் தமிழை எப்படிக் கற்பது? தமிழ் நமக்குச் சோறு போடுமா? தமிழைப் படிப்பதால் என்ன பயன்? தமிழைப் படிப்பதால் பிற மொழிகளைக் கற்கும் போது குழப்பம் வராதா? போன்ற கேள்விகள் எழுந்த போதிலும் காலப்பொக்கில் அந்தக்கேள்விக்கான பதில்களை கல்விச்சூழல் ஏற்படுத்திக்கொடுத்தது. புலம்பெயர் நாட்டில் வாழும் பிள்ளைகள் தமது தாய்மொழியை வீட்டில் பேசவேண்டும் எனவும், அதற்குப் பெற்றோரும் வீட்டில் தாய்மொழியைப் பேசி ஊக்கம் கொடுக்க வேண்டும் எனவும் வாழிட நாட்டுப் பள்ளிகள் வலியுறுத்துகின்றன.

பிள்ளைகளின் 'கருவறைக் கற்றல்' தாய்மொழியில் நடைபெறுவதாகவும், ஆரம்பக் கல்வியைத் தாய்மொழியில் கற்பதால் பிள்ளைகளின் அடைவு மட்டம் சிறப்பாக அமைவதாகவும் UNESCO வின் அறிக்கையில் குறிப்பிட்டு இருப்பது இங்கு நோக்கத்தக்கது. தமது தாய் மொழியைக்கற்பதன் மூலம் ஒரு குழந்தை ஏனைய மொழிகளைக் கற்றுக் கொள்ளக் கூடிய மொழித்திறன்களைப் பெற்றுக் கொள்கிறது என்பது உளவியலாளரின் கருத்து. தற்போதைய நிலையில் மக்கள் மனதில் குடிகொண்டிருந்த சந்தேகங்கள் பெரும்பாலும் நீங்கி விட்டன என்றே எண்ணத் தோன்றுகிறது.

அதிகரித்து வரும் மாணவர் தொகை இதற்குச் சான்று பகர்கின்றது. புலம்பெயர் சூழலில் 128 கல்வி நிறுவனங்கள் மட்டுமன்றி தமிழ்க் கல்வியை முன்னெடுத்துச் செல்வதில் பெற்றோரும் பெரும் பங்கு வகிக்கின்றனர். புலம்பெயர் சூழலில் கிழமையில் ஒருநாள் மட்டும் நடைபெறும் தமிழ்ப் பள்ளிகளில் தமிழைக் கற்கும் மாணவர்களது கல்வியை நிறைவு படுத்துவதில் பெற்றோரின் பங்கு அளப்பரியது. அந்த வகையில் ஆசிரியர், பெற்றோர் என்ற இரு தூண்கள் மாணவரைத் தாங்கி நிற்கின்றனர். இந்த ஆசிரியர், பெற்றோர், மாணவர் என்ற முக்கோணப் பங்களிப்பின் ஊடாகவே புலம்பெயர் சூழலில் தமிழ்க் கல்வி முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

பிரித்தானியாவில் பல பள்ளிகளில் வாழிடக் கல்வியைக் கற்கும் மாணவர்கள் வார இறுதி நாட்களில் தமிழ்க் கல்விக்கூடம் என்ற ஆலமரத்தின் கீழ் ஒன்று கூடித் தமிழ் மொழியைக் கற்று வருகின்றனர். மொழி உணர்வையும் நாட்டுப் பற்றையும் வளர்க்க இந்த ஒன்று கூடல் உதவும் என நம்புவோம்.

புலம்பெயர் சூளலில் மாணவர்கள் தமிழ்மொழியினை தமிழ் பள்ளிகளில் கற்பதனூடாக தமிழரின் கலை கலாச்சார பண்பாடு விழுமியங்களை புரிந்துகொண்டு அதன் அடிப்படையில் தமது எதிர்கால வாழ்வினை சிறப்புற அமைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு தமிழ் பள்ளிகளில் மாணவர்களால் முன்னெடுக்கப்படும் கலைவிழாக்கள் மற்றும் தமிழர் மரபுரிமையினை எடுத்தியம்பும் பொங்கல் விழா என்பன பெரிதும் துணைபுரிகின்றன.

இன்று உலக நாடுகள் தமிழின் தொன்மை, உலக மொழிகளில் தமிழ் விரவிக் காணப்படுகின்றமை, தமிழ்தான் உலகின் முதல் மொழி போன்ற விடயங்களைச் சான்றுகளுடன் ஏற்று வருகின்றன. அதற்கான ஆய்வுகளும் இடைவிடாது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழர் நாம் தமிழராய் இருப்பதற்குப் பெருமை கொள்ளும் நிலை காணப்படுகிறது. இந்நிலையில் இப்போது தமிழைக் கற்காதிருக்கும் மாணவர்கள் கூட இனிவரும் காலங்களில் கூட இணைந்து கொள்வர் என்பது உறுதி. பிழைப்பதற்காக எத்தனை மொழிகளையும் கற்கலாம். வாழ்வதற்காகத் தமிழைக் கற்றே ஆகவேண்டும்.

எல்லா மொழிகளையும் நேசிப்போம். தாய்த்தமிழைச் சுவாசிப்போம்.

திரு மு.வே. பூபாலசுந்தரம்
முந்நாள் தலைமை ஆசிரியர்.
கிங்ஸ்ரன் தமிழ்ப் பாடசாலை பிருத்தானியா

# நயினைப் புலவர்கள் ஒரு வெட்டுமுகப் பார்வை



அறிமுகம்

ஈழத்துப் தமிழ்ப் புலவர் பாரம்பரியத்துக்கு நீண்ட ஒரு வரலாற்றுப் பின்புலம் உள்ளது. தமிழகத்தைச் சார்ந்து வருகின்ற தமிழ்ப் புலவர் பாரம்பரியத்துக்குச் சமாந்தரமாகா ஈழத்திலும் ஒரு புலவர் பாரம்பரியம் இருந்திருக்கிறது. சங்க இலக்கியம் புலவர் பெயர்ப் பட்டியலில் வருகின்ற ஈழத்துப் பூதத் தேவனார் என்ற புலவர் பெருமகனார் ஈழத்தவராகி இருத்தல் கூடுமெனத் தக்க சான்று கொண்டு ஆராய்ச்சியாளர்கள் நிறுவியிருக்கிறார்கள். தவிர ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் வழிவருகின்ற தமிழ்ப் புலமைப் பாரம்பரியம் "ஈழத்தில் மட்டுமல்லாது தமிழகத்திலும் தனது புலமை மேதாவிலாசத்தைப் பதிவு செய்துள்ளது தமிழ் இலக்கிய வரலாற்றில் 19ஆம் நூற்ராண்டு ஈழத்தவர்க்கு உரியது எனத் தக்கவர்கள் பேசும் நிலை என்பது வெறுமனே வந்த ஒன்றல்ல. அதற்குப் பின்னால் வளமான ஒரு பின்புலத்திலேயே நயினாதீவுப் புலவர்களையும் அடையாளப்படுத்திக் கொள்ள முடிகிறது.

"நயினைப் புலவர்கள்" என்ற தலைப்பிலான இக்கட்டுரை நயினாதீவுப் புலவர் பாரம்பரியத்தின் ஊற்றுக்களையும் ஓட்டங்களையும் ஒரு வெட்டு முகப்பார்வையாக நோக்க விழைகிறது. நயினாதீவில் வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற புலவர் பெருமக்களைப் பட்டியலிடுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. மாறாக இப்புலவர் பாரம்பரியத்தின் திசை காட்டிகளாக காலந்தோறும் விளங்கிய சிலரை இனங்கண்டு சுட்டுவதனூடே இப்புலவர் மரபின் வீச்சினை அளவிட முயல்கின்றது.

நயினைப் புலவர் வரிசை குறித்துப் பேசுகின்ற எவரும் நயினை நாகமணிப் புலவர், அண்டில் புலவர், குட்டிப் பிள்ளையார், வே.கனகசபை, நயினை இரட்டையர், வைத்திய கலாநிதி ஆ.இராமுப்பிள்ளை, மார்க்கண்டர் பொன்னர் முதலானோரை விடுத்துப் பேச முடியாது. நயினைப் புலவர் மரபுக்கு அணிசேர்ந்தவர்களில் இவர்கள் தலையானவர்கள்.

நயினைப் புலவர் மரபின் தொடக்கப் புள்ளியாக விளங்குபவர் நாகமணிப்புலவராவார். நயினாதீவைச் சேர்ந்த கதிரேசன் - சின்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனாகப் பிறந்த புலவரின் வாழ்க்கைக் காலம் 1881-1933 வரை காணப்பட்டிருந்தது. ஈழத்தவர் பெருமை கொள்ளத்தக்க தமிழ்ப புலமையினைப் புலவர் கொண்டிருந்தார். திண்ணைப்பள்ளி மரபு புலவரைப் புடம் போட்டது. இப்பள்ளிகளில் இலக்கண, இலக்கியம், சோதிடம், தருக்கம், தத்துவம் முதலான புலங்களில் கற்பித்தல் நடைபெற்றது. தவிர புராணபடனமும் சொல்லித்தரப்பட்டது. இம்மரபினூடாக நாகமணிப் புலவருக்கு நல்லறிவுச் சுடர் கொழுத்தியவர்களாக உபாத்தியாயர்களான வேலாயுதர், வீரகத்திப்பிள்ளை, சோமசுந்தரக் குருக்கள் முதலானோர் காணப்பட்டிருந்தனர். தவிர பின்னாளில் வேலணைத் தம்பு உபாத்தியாயர், புன்னாலைக்கட்டுவன் வித்துவ சிரோன்மணி கணேசையர், புலோலி விசாக உபாத்தயரியர், முதலானோர் மூலமும் தீவகத்தில் தமிழ்ப் புலமைக்கான அடித்தளம் இடப்பட்டதாக அறிய முடிகின்றது. இவர்கள் வழியே தேவார, திருவாசகம், புராண இதிகாசங்கள் நீதி நூல்கள், நிகண்டுகள் தீவக மக்களுக்கு நன்கு பரிச்சயமாயின. புலவர் காலகட்டத்து நயினை மக்களில் பலரும் போதுமான தமிழறிவு வாய்க்கப்பட்டவர்களாக இருந்திருக்கின்றார்கள். இவ்வாறான ஒரு புலமைச் சூழலே நாகமணிப் புலவரை உருவாக்கித் தந்ததாகக் கருதலாம்.

புலவர் மிக இளம் வயதிலேயே கவிபுனையும் ஆற்றல் வாய்க்கப் பெற்றவராக விளங்கினார். பதினான்கு வயதில் தமது மேய்ப்பில் இருந்த செம்மறி ஆட்டுக்குட்டி இறந்தபோது புலவர் பாடியதாகக் கருதப்படும் சாமகவிச் செய்யுள், பின்னாளில் புலவர் அடையப் போகின்ற புலமை விருத்திக்கான குறிகாட்டியாக அமைந்திருந்தது. யாப்பிலக்கணம், எதுகை, மோனை முதலானவற்றில் போதிய பரிச்சயமில்லாத பராயத்தில் புலவர் இச்செய்யுட்களைப் பாடியதாக அறிய முடிகிறது. புலவருக்கு வாய்த்திருக்கக் கூடிய இயல்பான ஆற்றலையே இது வெளிப்படுத்துகின்றது.

நாகமணிப்புலவருடைய ஆக்கங்களில் நயினைமான்மியம், வழிநடைச் சிந்து, ரயில் விபத்துச் சிந்து, நயினை நீரோட்டயமக அந்தாதி மற்றும் கணிசமான தனிப்பாடல்களைச் சுட்டமுடியும். நயினை மான்மியம், நீரோட்டயமக அந்தாதி என்பன புலவரின் மேதா விலாசத்துக்கான மிகச்சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். தலபுராணச் சாயலில் அமைந்து காணப்படுகின்ற நயினை மான்மியத்தில் நாகபூசணி அம்பாள் ஆலய வரலாறு, அம்பாளின் அருள்திறன், மகிமை முதலானவற்றை புலவர் அழகுற அமைத்துப் பாடியுள்ளார். சமகாலத்தவர்களான சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், ஆசுகவி வேலுப்பிள்ளை, அம்பிகைபாகப்புலவர், உடுப்பிட்டி சிவசம்புப் புலவர், க.மயில்வாகனப்புலவர், முருகேசு பண்டிதர் முதலானோருடைய படைப்புக்களுடன் ஒப்பு நோக்கத்தக்க புலவருடைய ஆக்கங்களில் பலவும் நூலுருப் பெறாமல் கால வெள்ளத்தில் அள்ளுண்டு போனமை ஈழத்தவர்களின் தவக்குறைவே எனலாம்.

நாகமணிப்புலவர் காலத்துக்குப் பின்னர் புலவர் மரபில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவராக வருபவர் திருவாளர் ஆண்டில் புலவராவார். அருமையான பாடல்களை நினைத்தமாத்திரத்தே பாட்டுப்பாடுவதில் வல்லவராக ஆண்டில் புலவர் விளங்கினார். தனது மனைவி பொன்னியார் தம்மைவிட்டுப் பிற ஆடவனுடன் சென்றுவிட்டபோது தமது மனைவியின் பெயரில் இவர் பொன்னிபுராணம் என்ற தலைப்பில் ஒரு புராணம் பாடியதாக அறியக்கிடக்கின்றது. இப்புராணத்தின் பாடல்கள் எவையும் கிடைத்ததில் இவருக்குரியதாகச்



சொல்லப்படும் பிற உதிரிப்பாடல்களின் இலக்கிய செழுமையினை அவதானிக்கின்றபோது பொன்னி புராணத்தின் தரத்தினை ஊகித்து அறிய முடிகிறது. சொற்செறிவும், எளிமையும் இவருடைய கவிதைகளின் தனிப்பண்புகளாக விளங்குகின்றன.

பொதுவுடமைத் தத்துவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த திருவாளர் மார்க்கண்டர் பொன்னர் என்பவர் நயினைப் புலவர் மரபுக்கு அணிசேர்த்த பிறிதொருவராவார். இவருடைய கவிகளாகச் சொல்லப்படும் கவிகளில் சமூக அக்கறை விரவிக் காணப்படுகிறது. பொதுவுடமைச் சார்பு கொண்டிருந்த இவர் தமது கவிதைகளில் பட்டணத்து வாழ்க்கை முறை மற்றும் கிராமிய வாழ்க்கை முறைகளில் காணப்பட்டிருந்த ஏற்றத் தாழ்வுகளை பெரிதும் விமர்சித்தார்.

குட்டிப்பிள்ளையார் என்ற புனை பெயர் தாங்கிய புலவர் ஒருவர் பற்றிய செய்திகளும் இப்புலவர் பாரம்பரியத்தில் பேசப்படுகின்றது. ஆயினும் இவருக்குரியதாகச் சொல்லப்படும் பாடல்கள் எவையும் இன்று காணக்கிடைக்கவில்லை.

சரமகவி பாடுவதில் வல்லவராக விளங்கிய திருவாளர் வே.கனகசபை என்பவரும் இம்மரபில் குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்கினார் நயினாதீவு, பிடாரி அம்பாள் மீது "பிடாரி அம்மன் துதி" என்ற பாமாலை ஒன்றையும் இவர் புனைந்ததாகச் சொல்லப்படுகிறது. சந்தங்களைப் பொருத்தமுற அமைப்பதில் இவர் வல்லவராக விளங்கினார்.

நயினை இரட்டையர்கள் என்று இலக்கிய உலகில் பேசப்பட்ட திரு.சோ.இராசரத்தினம், திரு.பொ.தருமலிங்கம் ஆகியோர் இவ்விடத்தில் விதந்து குறிப்பிடத்தக்கவர்களாவர். நயினாதீவு மக்கள் சிலேடையாகவும், நகைச் சுவையாகவும் பேசுவதில் இன்றும் வல்லவராக விளங்குகின்றனர். இந்த ஊற்று மேற்படி இரட்டையர்கள் வழி மேலும் வளம் பெற்றதாக அமைந்தது. நண்பர்கள் வட்டத்துக்குள்ளேயே பெரிதும் அனுபவிக்கப்பட்டதான இவர்களுடைய பாடல்கள் பலவும் அகப்பொருள் பற்றியதாகவே அமைந்திருந்தன. நினைந்து இரசிக்கும் தன்மை இவர்களுடைய பாடல்களுக்கான தனிப்பண்பாக இருந்தது. இந்த இரட்டையர்களுடைய பாடல்களில் பல அக்காலத்து நாளிதழ்களிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. சோ.இராசரத்தினம் அவர்களுடைய அசைவ வினாவிடை நாவலர் பெருமானின் சைவ வினாவிடையை அடியொற்றி வெளிவந்தது. அந்நூலின் சில பகுதிகளைத் தனது கட்டுரை ஒன்றில் பண்டிதர் நா.கந்தசாமி நினைவு கூர்ந்து உள்ளார்.

நாகமணிப் புலவருக்கு அடுத்த நிலையில் நயினைப் புலவர் மரபுக்கு மிகுந்த வளம் சேர்த்தவர் வைத்திய கலாநிதி ஆ.இராமுப்பிள்ளை ஆவார். கணிசமான தனிப்பாடல்களை இவர் படைத்தார். அவற்றுட் பல இலங்கை மற்றும் இந்தியத் தமிழ் நாளிதழ்கள் மற்றும் சஞ்சிகைகளில் வெளியாகின. நினைத்தமாத்திரத்தே கவிபுனைவது இவரது சிறப்பியல்பாகப் பேசப்பட்டது. நயினாதீவின் முக்கிய சம்பவங்கள் பல குறித்தும் இவர் கவிபாடியதாகச் சொல்லப்படுகிறது. அவை எவையுமே எழுத்துருப் பெறவில்லை என்பது சோகமான செய்தியாகும்.

நீண்டு செல்கின்ற நயினைப் புலவர் பாரம்பரியத்தில் தமது பாடல்களினூடு ஏதோ ஒருவகையில் தடம்பதித்தவர்களாக மேலும் பலரை இவ்விடத்தில் சுட்டிக் காட்ட முடியும். நயினை உயர்திரு முத்துக்குமார சாமி, திருவாளர், இராமச்சந்திரா, ப.கு.சரவணபவன் (பாரதியடியான்), இ.ஐயாத்துரை, தலைமையாசிரியர் நா.க.சண்முகநாதபிள்ளை, க.காமாட்சிசுந்தரம், சிவராசசிங்கம், க.வீரகத்தி, வை.விசுவலிங்கம், பசிக்கவி.சி.பரராசசிங்கம், அருட்கவி வே.தருமலிங்கம், கா.பொ.இ.குலசிங்கம் முதலானோர் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர்களாவர்.

நயினைப்ப் புலவர் மரபில் காலத்துக்குக் காலம் பல்வேறு புலவர்கள் வந்து போயிருக்கின்றார்கள். ஈழத்துத் தமிழ்ப் புலமைக்குக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க வளம் சேர்ந்தவர்களில் சிலரும் இப் பட்டியலில் வருகிறார்கள் என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆயினும் இப்புலவர் பெருமக்கள் பலரது ஆக்கங்கள் பிரக்ஞை பூர்வமாக ஆவணப்படும்தப்படாமை இப்புலவர் மரபை அறிந்து கொள்வதில் மிகுந்த இடர்பாட்டை ஏற்படுத்துகிறது. நயினைப் புலவர்களுடைய ஆக்கங்கள் காலமுறைப்படுத்திப் பேணப்பட வேண்டும். நாகமணிப் புலவருக்குப் பின்பு வருவதற்கான புலவர் பெருமக்களது ஆக்கங்களில் பலவும் பேணப்படவேயில்லை என்பது வருத்தத்திற்குரியது. பிற்காலப் புலவர்களது கவித்துவத்தை அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடைக்கும் கல்வெட்டுப் பாடல்களிலேயே கண்டு கொள்ள முடிகிறது. குறிப்பாக வைத்திய கலாநிதி மு.இராமுப்பிள்ளை அவர்களுடைய தனிப்பாடல்கள் பலவும் தீவின் மூத்த தலைமுறையினரின் ஞாபகப் திறனிலேயே குடிகொண்டிருப்பதைச் சுட்டிக்காட்ட முடியும். அவர்களில் பலர் இன்று உயிருடன் இல்லை. நயினைப் புலவர் வரிசையில் வரும் புலவர் பெருமக்களது வழித்தோன்றல்கள், தமது மூதாதையரின் புலமை மேதாவிலாசம் குறித்த தரவுகளை உரியவர்களிடம் வெளிப்படுத்தி உதவ முன்வர வேண்டும். இல்லையேல் நயினாதீவின் புலவர் வரிசை என்பது பெயரளவிலான வெறும் வரிசையாகவே அமையும். நயினைப் புலவர் வரலாறு குறித்த விரிவான ஆவணத்துக்கான ஒரு ஆரம்ப எழுத்தாக்கக்கட்டுரையாக இக்கட்டுரை அமைகிறது. நயினைப் புலவர் வரிசை முழுமை பெறுவது நயினைக் குடிமக்கள் அனைவரது கைகளிலும் தங்கியிருக்கிறது.

பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன்
தலைவர்,
தமிழ்த்துறை, கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# சர்வ சமய சந்நிதிகள்



## அறிமுகம்

இலங்கையில் "சர்வ சமய சந்நிதிகள்" அமைந்து விளங்கும் தனிப்பெருஞ் சிறப்பு மிக்க புனித பூமியாக நயினாதீவு விளங்குகின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து தென்மேற்கே சுமார் 30 கி.மி. தொலைவில் அமைந்துள்ள இத்தீவானது 4.66 ச.கி. மீற்றர் பரப்பளவைக் கொண்டதாகக் காணப்படுகின்றுது. இச்சிறுதீவில் மொத்தமாகவுள்ள எட்டு வட்டாரப் பிரிவுகளிலும் சமய வழிபாட்டுச் சந்நிதிகள் காணப்படுவதை நோக்கும்போது, அத்தீவைக் "கோயிற் தீவு" என்றும் குறிப்பிடலாம். நயினாதீவில் காணப்பட்ட சமய சந்நிதிகளைக் கருத்திற்கொண்டே அத்தீவு காலத்துக்குக் காலம் நாகதீவு (நாகத்தீவு), நாகநயினார்தீவு, நாகேஸ்வரம் ஆகிய பெயர்களினால் அழைக்கப்பட்டு வந்ததாகத் தெரிகின்றது. இத்தீவில் இந்து சமயக் கடவுளர்களுக்கான சந்நிதிகள் மட்டுமன்றி பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்களும் இருப்பது இத்தீவுக்குரிய தனிச் சிறப்பாகும். இங்கு காணப்படும் சமய சந்நிதிகளின் வரலாறு மற்றும் வழிபாட்டுச் சிறப்புக்கள் என்பவற்றை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயம்

இலங்கையில் தாய்த்தெய்வ வழிபாட்டின் மிகு தொன்மைக்குச் சான்றாக நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் நயினாதீவு முதலாம் வட்டாரத்தில் "பரப்பரவன் சல்லி" என்னும் காணிப் பகுதியில் கிழக்கு நோக்கிய வாயிலையுடையதாக அமைந்துள்ளது.

ஆகமமரபுக்குட்பட்ட முறையில் அமைந்து விளங்கும் இவ்வாலயம் கருவறைக்குள் நிமிர்ந்து காணப்படும் கருநாகச் சிலை வடிவமும் அதன் கீழ் உள்ள அழகிய பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் அருவுருவடிவமான அம்பாளின் திருவுருவமும் சுயம்புருவங்களாகவே உள்ளன.

அம்பாளின் காற்சிலம்பு விழுந்த புவனேஸ்வரி பீடமாக இவ்வாலயம் கருதப்படுகின்றது. நாகபாம்பு பூக்கொண்டு வந்து பூஜித்த வழிபாட்டுச் சிறப்பு மிக்க தலமாக இது விளங்குகின்றது. வரலாற்றுப் பெருமையும், வழிபாட்டுச் சிறப்பு மிக்க இவ்வாலயம் அந்நியர் ஆட்சிக் காலத்தில் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். அதன்பின்னர் இவ்வாலயம் இராமலிங்கம் இராமச்சந்திரர் என்பவரால் 1788இல் கல்லுக் கட்டிடமாகக் கட்டப்பட்டது. 1935ஆம் ஆண்டு கிழக்கு வாயில் இராஜகோபுரம் கட்டப்பட்டது. இவ்வாலயத்தின் விமானம் 1951ஆம் ஆண்டு அழகாக அமைக்கப்பட்டது. வீதியின் நுழைவாயிலில் கிழக்கு நோக்கிய வாயிலையடைய 108 அடி உயரமான நவதள நவகலச இராச கோபுரத்திற்கு 2012ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

இவ்வாலயத்தில் 1951, 1963, 1983, 1998, 2012 ஆகிய ஆண்டுகளில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவிய காலங்களில் 1958, 1986 ஆகிய ஆண்டுகளில் இவ்வாலயம் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியது.

இவ்வாலய உயர்திருவிழா ஆனிப் பூரணையை தீர்த்தோற்சவமாகக் கொண்டு நடைபெறுவது வழக்கமாகும். ஆரம்பத்தில் பத்து நாட்களே மகோற்சவம் நடைபெற்றது. 1960ஆம் ஆண்டிலிருந்து பதினைந்து நாட்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது. உயர்திருவிழாவினை விட ஆடிப் பூரத்தினை இறுதி நாளாகக்கெண்டு 10 நாட்கள் ஆடிப்பூரத்திருவிழா இடம்பேற்று வருகின்றது.

இவ்வாலய வழிபாட்டு மரபுகளில் பூரணைதோறும் இடம்பெறும் ஸ்ரீசக்கர பூஜையும் திருமணம் மற்றும் குழந்தைப்பேறு என்பவற்றிற்காகச் செய்யப்படும் நாகசாந்தியும் நாகப் பிரதிஷ்டையும் முக்கியமானவையாக விளங்குகின்றன. இவ்வாலயத்தில் நித்திய அன்னதானம் ஆலய கல்யாணமண்டபத்தில் 1.4.1998 முதல் நடைபெறுகின்றது. வன்னி மரமும் வேம்பும் இவ்வாலயத்தின் தலவிருட்சங்களாக விளங்குகின்றது. 1986ஆம் ஆண்டு முதல் பன்னிரண்டு பேர் கொண்ட அறங்காவலர் சபையினர் இவ்வாலயத்தை பரிபாலனஞ் செய்து வருகின்றனர்.

## வீரகத்தி விநாயகர் ஆலயம்

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தில் கிழக்கு நோக்கிய வாயிலையுடையதாக செம்மணத்துப்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் நயினாதீவில் வாழ்ந்த முடிநாதர் மரபில் தோன்றிய தையலியாசி எனும் பெண் வேதாரணியம் சென்று அங்கிருந்து ஒரு விநாயகர் சிலையை நயினாதீவிற்கு கொண்டுவந்தார். இவ்விநாயகர் சிலை நம்பிபுலம், நடுவகாடு, மூத்தனார் கோயிலில் சுமார் 300 வருடங்களுக்கு முன் செம்மணத்தம்புலத்தில் வைத்து நிலையான ஓர் ஆலயம் அமைத்து வழிபாடாற்றப்பட்டு வருகின்றது. அதன் பின் 1918ஆம் ஆண்டு புதிய விநாயகர் சிலை ஸ்தாபிக்கப்பட்டது. 1931 ஆம் ஆண்டில் இருந்து அலங்காரத் திருவிழா நடைபெற்றது. 1952ஆம் ஆண்டு தொடக்கம் மகோற்சவ விழா சித்திரை



மாதத்தில் நடைபெறுகின்றது. 1972இல் அழகிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் நடைபெற்றது. ஆலய சுற்றுப் பிரகாரத்தில் 32 விநாயகருக்கான படிமங்களைக் கண்டு தரிசிக்கலாம்.

இவ்வாலயத்தில் 1918, 1947, 1968, 1982, 1999 ஆகிய ஆண்டுகளில் மஹாகும்பாபிஷேகம் இடம்பெற்றுள்ளது. இன்று அழகாக வர்ணங்கள் பூசப்பட்டுள்ள ஓர் அழகிய ஆலயமாக இக்கோயில் திகழ்கின்றது. மருதமரம் இவ்வாலயத்தின் தலவிருட்சமாக கருதப்படுகின்றது. நயினாதீவுச் சுவாமிகள் இப்பழைய மரத்தின் கீழ் அமர்ந்தே பல ஆன்மீக சாதனங்களில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வீரபத்திரசுவாமி ஆலயம்

நயினாதீவு நான்காம் வட்டாத்திலுள்ள தம்பபைப்பதியில் கிழக்கு நோக்கிய வாயிலையுடையதாக ஸ்ரீ பத்திரகாளி உடனுறை வீரபத்திரசுவாமி ஆலயம் அமைந்துள்ளது. சுமார் 400 ஆண்டுகள் பழமையுடைய இவ்வாலயம் ஆரம்பத்தில் "வீரபாகு கோயில்" என்றும் "இளைய பண்டாரம்" கோயில் என்றும் அழைக்கப்பட்டு வந்தது. வீரபாகு என்ற பெயருடன் நயினாதீவில் சிலர் வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆரம்ப காலத்தில் இக் கோயிலுக்குள் வாளும், வேலும் வைத்தே வழிபாடு நடைபெற்றது. 1931 ஆம் ஆண்டு இடம்பெற்ற மகாகும்பாபிஷேகத்தின் பின்னரே இக்கோயில் வீரபத்திரர் கோயில் என்று அழைக்கப்படுகின்றது. கந்தபுராண படனம் சிறப்பாக நடைபெற்று வந்த இக்கோயிலில் வருடம் தோறும் வரும் வைகாசி விசாகத்தன்று நடைபெறும் பூசையினை "வேல் பூசை" என்று கூறுவார்கள். "பெரும்பூசை, அன்னதானப் பெரும் விழாவாக நடைபெறுவது குறிப்பிடற்பாலதாகும். ஆகமமுறைப்படி அமைந்து விளங்கும் இவ்வாலயத்தில் 1983ஆம் ஆண்டு முதல் பத்து நாட்கள் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. 1933, 1954, 1981, 1997, 2011 ஆகிய ஆண்டுகளில் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்ற இவ்வாலயத்தில் ஆலமரமும் வில்வமரமும் தலவிருட்சங்களாக விளங்குகின்றன.

## வேள்விநாயன் கோயில்

நயினாதீவு 2ம் வட்டாரத்தில் கிழக்கு நோக்கிய சிறிய கோயிலாக இக்கோயில் விளங்குகின்றது. இக் கோயிலை வெளியில் நாயன் கோயில் என்றும் வெளியில் நாகம்மாள் கோயில் என்றும் அழைப்பர். இந்திரன் கோயில் என்றும் வழங்குவர். இந்திரனிடமுள்ள குலிசம் (வச்சிரம்) இக்கோயிலில் வழிபாட்டிற்குரிய புனிதப் பொருளாக விளங்குகின்றது. வருடம் தோறும் ஆடிப்பூரத்தினத்தன்று பொங்கல் வழிபாடு நடைபெறுகின்றது. தற்போது இக்கோயில் புதிதாக அமைக்கப்பட்டு நித்திய பூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

## முருகமூர்த்தி கோயில்

முருகமூர்த்தி கோயில் நயினாதீவு 2ம் ஆம் வட்டாரத்தில் உள்ள இரட்டங்காலி எனும் காணியில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய வாயிலையுடையதாக இக்கோயில் அமைந்துள்ளது. 2011இல் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தில் ஆறுமுகசுவாமியின் திருமேனி எழுந்தருளி மூர்த்தியாக வைக்கப்பட்டுள்ளது. மணிக்கூட்டுக் கோபுரத்துடன் விளங்கும் இக்கோயில் புதுப்பொலிவுடன் தற்போது விளங்குகின்றது. நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆலமரம் இக்கோவிலின் தல விருட்சமாகும்.

## காட்டுக்கந்தசாமி கோயில்

நயினாதீவு 5A வட்டாரத்தில் நடுவகாடு என்னும் காணிப்பகுதியில் கிழக்கு நோக்கிய வாயிலையுடையதாக இவ்வாலயம் அமைந்துள்ளது. சுணல் சுவாமியார் என்று அழைக்கப்பட்ட ஆறுமுகம் கணபதிப்பிள்ளை என்பவர் இக்கோயிலை ஸ்தாபித்தார். நாற்புறமும் சுற்றுமதில்களுடன் விளங்கும் இவ்வாலயக் கருவறைக்குள் "வேல்" பிரதிஷ்டை செய்யப்பட்டடுள்ளது. இவ்வாலய தல விருட்சம் அரசமரமாகும். வருடந்தோறும் வரும் கந்தசட்டி நாட்களில் அலங்காரத் திருவிழா நடைபெறும். இங்கு நடைபெறும் சூரன்போர் விழாவும், திருக்கல்யாண விழாவும் தனிச்சிறப்புடையவை ஆடிவேல் விழா திருவோரை நட்சத்திரத்தில் சிறப்பாக நடைபெறுகின்றது. இக்கோயிலை மேலும் வளம்படுத்தும் நோக்கில் திருப்பணி வேலைகள் இடம்பேற்று அழகிய கொபுரத்துடன் கும்பாபிஷகம் நடைபேற்ரது.

## பிடாரி அம்மன் கோயில்

பிடாரி அம்மன் கோயில், நயினாதீவு 7ஆம் வட்டாரத்தில் தென்மேற்கேயுள்ள தில்லைவெளி என்னும் காணியிலே கடற்கரையோரத்தில் கிழக்கு நோக்கியதாக அமைந்துள்ளது. சிறுகோயிலாக விளங்கும் இவ்வாலயக் கருவறைக்குள் கடல் வழியாக மிதந்து வந்த பிடாரி அம்பாளின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. முக்கோண வடிவத்துள் அமைந்துள்ள பேச்சி அம்மன் ஆலயம் எனவும் அழைப்பர். வருடந்தோறும் வைகாசி மாதத்தில் பொங்கல் மற்றும் மடைபரவி வேள்வி நடைபெறும். சுமார் 300 ஆண்டுகள் பழமையுடைய இக்கோயிலில் ஆரம்பகாலத்தில் ஆடுவெட்டிப் பலியிட்டு வேள்வி நடைபெற்றது. 1943 ஆம் ஆண்டின் பின்னர் இத்தகைய பலியிடும் வழிக்கம் முற்றாக நிறுத்தப்பட்டு அதற்குப் பதிலாக நீத்துப் பூசணிக்காயை வெட்டிப் பலியிடும் வழக்கம் இருந்து வருகின்றது. தீராத நோய்களைத் தீர்த்தருளும் தெய்வம் என்ற நம்பிக்கையில் அடியார்கள் தமது நேர்த்திக் கடனுக்காக ஆடுகளையும், சேவற்கோழிகளையும், காணிக்கையாகச் செலுத்தி வருகின்றனர்.

இவ்வாலய முன்மண்டபத் தூண்களில் அஷ்டகாளி மாதாஹ்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. 1988இல் ஆரம்பிக்கப்பட்ட நயினை ஸ்ரீ பிடாரி அம்பாள் அன்னதான சபை வேள்வித் தினத்தன்று அடியார்களுக்கு அன்னதானம் வழங்கி வருகின்றது. நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாளின் வேள்வித் தினத்தில் சமய அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பும் கலை, நிகழ்ச்சிகளும் கடந்த 21 ஆண்டுகளாகச் செய்து வருகின்றனர்.

**காளி அம்மன் கோயில்**

காளி அம்மன் கோயில், நயினாதீவு 5ம் வட்டாரத்தில் பிரண்டைக்காடு என்னும் காணியில் கிழக்கு நோக்கிய வாயிலை உடைய காணியில் கிழக்கு நோக்கிய வாயிலை உடையதாக விளங்குகின்றது. சுமார் 250 ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோயிலை விஸ்வகுலமக்கள் நன்கு பரிபாலனம் செய்து வருகின்றனர். இக்கோயிலில் காணியின் எழுந்தருளி மூர்த்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் அலங்காரத் திருவிழா இக்கோயிலில் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வாலயம் தற்பொது புனருத்தாபனம் சேய்யப்பட்டு திருப்பணி வேலைகள் இடம்பேற்று வருகின்றது

**மீனாட்சி அம்மன் கோயில்**

நயினாதீவு 7ம் வட்டாரத்தில் விவசாயிகளின் செழிப்புத் தெய்வமாக கிழக்கு நோக்கிய வாயிலையுடையதாக மீனாட்சி அம்மன் கோயில் அமைந்துள்ளது. தலவிருட்சம் மருதமரமாகும். நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெற்று வந்த இக்கோயில் தற்போது அழகிய சித்திரதேருடன் பங்குனித்திங்கள் முதல்நாள் அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11நாட்கள் மகோற்சவம் இடம்பெற்று வருகின்றது.

**ஐயனார் கோயில்**

நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வடக்கே காவல் தெய்வமாக ஐயனார் கோயில் அமைந்துள்ளது. பூரணமான இக்கோயில் சிலப்பதிகார செட்டியார் காலத்தது என்று கருதப்படுகின்றது. சித்திரை மாதப் பூரணைத் தினத்திலே இக்கோயில் கந்தபுராண படனமும் கஞ்சிவாரத்தலும் தொன்று தொட்டு நடைபெற்று வரும் வழிபாடாக இருந்தது. இக்கோயில் தற்போதய கட்டிடம் சுமார் 300 வருடப் பழமையுடையது. இவ்வாலயத் தலவிருட்சமாக ஆலும் அரசும் விளங்குகின்றன.

**மலையில் ஐயனார்**

நயினாதீவின் 8ம் வட்டாரத்தில் மலையில் புலத்தில் காவல் தெய்வமாக கிழக்கு நோக்கியதாக இக் கோயில் விளங்குகின்றது. கருவறைக்குள் வேல் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இக்கோயிலை மலையில் நாயனார் எனவும் வழங்குவர். இக்கோயிலில் ஐயப்ப சுவாமிக்குத் தனியான சந்நிதி உண்டு. ஐயப்பசுவாமி வழிபாடு இக்கோவிலில் சிறப்புற நடைபெற்று வருகின்றது. ஆலும் பூவரசும் தலவிருட்சங்களாக உள்ளன.

**வைரவர் ஆலயங்கள்**

நயினாதீவில் சிவாலயம் இல்லாமல் இருக்கின்றபோதும் சிவமூர்த்தங்களான வீரபத்திரர், வைரவர் என்போருக்கான கோயில்கள் காணப்படுகின்றன. நயினாதீவு வங்கலாவடி துறைமுகத்தின் முகப்பில் ஞான வைரவர் ஆலயம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. நயினாதீவு நான்காம் வட்டாரத்திலும், ஐந்தாம் வட்டாரத்திலும் ஆறாம் வட்டாரத்திலும் ஏழாம் வட்டாரத்திலும் ஞான வைரவருக்குத் தனியான சிறு ஆலயங்கள் காணப்படுகின்றன. நயினாதீவு பிரதேச வைத்தியசாலை வளாகத்தினுள்ளும் கிழக்கு நோக்கிய வாயிலையுடைய ஞான வைரவர் ஆலயம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**சமாதிக் கோயில்**

ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமிகள் என்று அழைக்கப்படும் நயினாதீவுச் சுவாமிகளின் சமாதிக் கோயில் காட்டுக்கந்த சுவாமியார் கோயிலின் மேற்குப் பக்கத்தில் மேற்கு நோக்கிய நுழை வாயிலை உடையதாக அமைந்துள்ளது. 1886இல் ஆறுமுகம் பார்வதி தம்பதியனருக்கு பிள்ளையாகத் தோன்றிய நயினாதீவு சுவாமியார் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் 26.1.1949இல் இருந்தபடியே மகாசமாதி நிலை எய்தினார். அந்த மகாஞானியின் சமாதி கிழக்கு நோக்கியதாகவே அமர்ந்த நிலையிலேயே வடிவேற் சுவாமிகளின் திருமுன்னிலையில் நயினையில் வைக்கப்பட்டுள்ளது. நித்திய பூசை நிகழும் சமாதிக் கோயில் நாற்புறமும் வாயில் உள்ளதாக அமைக்கப்பட்டுள்ளது. சமாதி மேடைமேல் சோமாஸ்கந்த மூர்த்தியின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. சுவாமிகள் வணங்கிய சிறுசிவலிங்கம், நடேசர் என்பனவும் அம்மேடையில் உள்ளன. இச்சமாதி ஆலயமுன்றலில் தலவிருட்சமாக உள்ள அரசும் வேம்பும் பின்னிப் பிணைந்த நிலையில் காணப்படுகின்றது. போற்றுவதற்கும் வழிபாட்டுக்கும் உரிய ஞானியாக நயினாதீவு ஸ்ரீமத்முத்துக் குமாரசுவாமிகள் விளங்கினார் என்பது இன்று பலருக்கும் தெரியதாகவுள்ளது.

**நாகதீபராஜ மகாவிகாரை**

இலங்கையில் பௌத்த சமயத்தின் புராதன புனித வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாக நயினாதீவு 2ம் வட்டாரத்திலுள்ள நாகதீப விகாரை விளங்குகின்றது. புத்தபகவானின் இரண்டாவது இலங்கைப் பயணம் இடம்பெற்ற புனித பூமியாக நயினாதீவு (மணிநாகதீவு) கருதப்படுகின்றது. புத்தபகவான் ஐந்தாம் ஆண்டில் குளோதர, மகோதர என்றும் இரண்டும் நாக அரசர்களுக்கிடையில் ஏற்பட்ட கடும்போரை விலக்க, மணிநாக தீபத்திற்கு விஜயம் செய்தார் என்று கூறப்படுகின்றது.

ஆரம்பத்தில் பௌத்த கோயில் இருந்த ‘சந்தனை’ என்னும் காணியில் 1950ஆம் ஆண்டில் பௌத்தமடம் ஒன்று அமைக்கப்பட்டது.



வணக்கத்திற்குரிய நன்தோபே சோமசிறி திஸ்ஸ அவர்கள் நயினாதீவின் பிரதான வீதி, ஓரத்தில் ஒரு காணியை வாங்கி தற்போதுள்ள கோயிலை 1939-40 இல் அமைத்தார். அதன் பின்னர் 1946ஆம் ஆண்டளவில் வணக்கத்திற்குரிய பிராக்மணவத்தே பண்டித தர்மகீர்த்தி திஸ்ஸ நாயக்க தேரோ அவர்கள் இக்கோயிலுக்கு வந்தார். 1947ஆம் ஆண்டில் விகாரை கட்டப்பட்டது. 1954ஆம் ஆண்டில் பர்மாவில் இருந்து கொண்டு வரப்பட்ட புத்தர் சிலை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. தற்போது வணக்கத்திற்குரிய நவதகல பதுமகீர்த்தி திஸநாயக்கதேரோ அவர்கள் இவ்விகாரையை சிறப்பாகப் பரிபாலித்து வருகின்றனர். நாள்தோறும் பலர் வந்து வழிபடும் பௌத்த வணக்கத்தலமாக இவ்விகாரை விளங்குகின்றது. பழைய பௌத்த விகாரை நயினாதீவு முதலாம் வட்டாரத்தில் காணப்படுகின்றது.

**இஸ்லாமிய பள்ளிவாசல்**

இந்தியாவில் கீழ்க்கரைப் பகுதியிலிருந்து 1915ஆம் ஆண்டளவில் நயினாதீவுக்கு வருகைதந்த முஸ்லீம் மக்கள் தமது வணக்கத்திற்குரிய தலமாக நயினாதீவு ஆறாம் வட்டாரத்தில் கிழக்கு கடற்கரை அருகில் ஒரு சிறிய பள்ளிவாசலை அமைத்தனர். இப்போதிருக்கும் பள்ளிவாசல் 1919இல் அமைக்கப்பட்டுள்ளது. அருகில் 1923இல் அமைக்கப்பட்ட ஜிம்மா பள்ளிவாசல் காணப்படுகின்றது. இலங்கை இஸ்லாமியருக்குரிய புனித வழிபாட்டுத் தலங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

**கிறிஸ்தவ ஆலயம்**

நயினாதீவில் மானிக்கரை என்னும் காணியில் கிறிஸ்தவ குருமார் தங்கியிருப்பதற்கு 1890ஆம் ஆண்டளவில் ஒரு வீடு அமைக்கப்பட்டது. பின்னர் பள்ளிக்கூடமும் அமைக்கப்பட்டது. வழிபாட்டுக்கென ஒர மடமும் அமைக்கப்பட்டது. இதனை அமைத்தவர்கள் அமெரிக்க திருச்சபையைச் சேர்ந்த புரடட்ஸ்தாந்து மதத்தினர் தென்னிந்திய திருச்சபையினர் சார்பில் நயினைதீவு 7ம் வட்டாரத்தில் மேற்குக் கடற்கரையில் சிறிய அந்தோனியார் ஆலயம் ஒன்று காணப்படுகின்றது. பெனடிக்கோஸ் பிரிவினரும் தமது வணக்கத்திற்காக 7ம் வட்டாரத்தில் சிறிய ஓர் ஆலயம் அமைந்து வழிபட்டு வருகின்றர்.

**நிறைவுரை**

இவ்வாறாக நயினாதீவு இந்து, பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங்களின் வழிபாட்டுத் தலங்களைத் தன்னகத்தே கொண்ட சர்வ சமய சந்நிதியாக விளங்குகின்றதென்பதும் சமய சமரசம் நிலவும் இப்புண்ணிய பூமி சர்வசமயிகளின் யாத்திரைத் தலமாகவும் சமயச் சுற்றுலா மையங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது.

பேராசிரியர் கலாநிதி மா.வேதநாதன்
முன்னைநாள் தலைவர், இந்து நாகரிகத்துறை,
இணைப்பாளர், சைவ சித்தாந்த முது கலைமாணி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.





சித்தாமிர்த புஸ்கரணி
தீர்த்தக்கேணி



நாகபூசணி அம்பாள் ஆலய கோசாலை





ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்



ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத ஸ்ரீ வீரபத்திரசுவாமி ஆலயம்


இரட்டங்காலி முருகன்
ஆலயம்


ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் கோவில்




ஸ்ரீ காட்டுக்கந்தசுவாமி கோவில்


ஸ்ரீ பிடாரி தேவஸ்தானம்


ஸ்ரீ மலையில் ஐயனார்
ஆலயம்


காளி அம்மன் கோவில்




ஆலடி அம்மன் கோவில்


வைத்தியசாலை வைரவர் ஆலயம்


வேள்விநாயன் கோவில்
(வெளியில் நாகம்பாள் கோவில்)


ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்




ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமி
சமாதி கோவில்


பௌத்த விகாரை - நயினாதீவு



மொய்டீன் ஜும்மா பள்ளிவாசல்



அந்தோனியார் ஆலயம்



நயினாதீவுக்கும் அனலைதீவுக்கும் இடையில் உள்ள
கருடன் அமர்ந்த கல்லு



நயினாதீவுக்கும் அனலைதீவுக்கும் இடையில் உள்ள
பாம்பு சுற்றிய கல்லு






# இந்துமத வழக்கங்களின் பின்னணியில் உள்ள அற்புதமான அறிவியல் காரணங்கள்



இந்து மதமானது காலத்தால் மிகவும் தொன்மையான, உலகில் முக்கிய மதங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. உலக மக்கள் தொகையில் 13.8 சதவீதத்தினரை இந்துக்களாகக் கொண்டு உலகின் மூன்றாவது பெரிய மதமாகக் காணப்படுகின்றது. இந்து மதத்தை இவர்தான் துவங்கினார். இந்தநாள், இந்த வருடத்தில்தான் ஆரம்பமானது. இந்து மதத்தின் தோற்றம் இங்கிருந்துதான் வந்தது என எதுவுமே கிடையாது. இத்தகைய பெருமைமிக்க இந்து மதத்தின் பல்வேறு சடங்குகள், பழக்க வழக்கங்கள் மற்றும் மரபுகள் அணிகலன்கள் அணிவது மற்றும் இந்துக் கோவில்களின் பின்புலத்திலுள்ள அறிவியல் சார்ந்த காரணங்களை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

ஆலயங்களின் கோபுரம் உயரமாக அமைப்பதற்கான அறிவியல் காரணங்களைப் பார்ப்போம். கோபுரத்தின் உச்சியில் தங்கம், வெள்ளி, செம்பு அல்லது ஐம்பொன்னால் செய்யப்பட்ட கலசங்கள் இருக்கும். இக் கலசங்களிலும் அதில் கொட்டப்படும் தானியங்களும் உலோகங்களும் மின் காந்த அலைகளை ஈர்க்கும் சக்தியை கலசங்களுக்குக் கொடுக்கின்றன. நெல், கேழ்வரகு, திணை, சோளம், வரகு என்பவையே கொட்டப்படும் தானியங்களாகும். இதில் வரகு மின்னலைத் தாங்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. 12 ஆண்டுக்கு ஒருமுறை குடமுழுக்கு விழா மூலம் செயலிழந்து விடுகின்ற தானியங்கள் நீக்கப்பட்டுப் புதிய தானியங்கள் நிரப்பப்படும். இவ் உயரமான கோபுரம் மூலமாக 7500 சதுர மீற்றர் பரப்பில் இருக்கும் மனிதர்கள் காப்பாற்றப்படுவார்கள். இதனால் தான் ‘ கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் ’ என எமது முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

ஆலயங்களுக்கு பக்தர்கள் செல்வதன் பின்னாலுள்ள அறிவியல் காரணங்களை நோக்குவோம். கோவில் என்பது தெய்வத்தின் இருப்பிடம் மட்டுமில்லை. விஞ்ஞான பூர்வமாக மனிதனுக்கு உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பல நன்மைகள் செய்வதற்காகவே சாஸ்திரப் படி அமைக்கப்படுகின்றன. சாஸ்திரப்படி அமைக்கப்படும் ஆலயங்கள் பூமியின் காந்த அலைகள் அடர்த்தியாகப் பாயும் இடத்தில் அமைக்கப்படுகின்றன. இந்த உயர் காந்த அலைகள் அடர்ந்திருக்கும் இடத்தின் மையப்பகுதியில் கர்ப்பக்கிரகம் (மூலஸ்தானம்) அமைக்கப்படுகின்றது. கர்ப்பக்கிரகத்தில் மூலவிக்கிரத்தின் அடியில் யந்திரங்களைப் பதித்தார்கள். பூமியின் காந்த அலைகளை செப்புத் தகடுகள் உள்வாங்கி சுற்றுப் புறத்திற்கு அதைச் பாய்ச்சுகிறது. கர்ப்பக்கிரகத்தை பிரதட்சணமாக சுற்றும் பக்தர்களின் உடலில் தானாகவே இந்த காந்த சக்தி மென்மையாகப் பாய்கிறது. இந்தச் சக்தி பூரணமாகப் பக்தர்களைச் சென்றடைவதற்காகவே மூன்று பக்கமும் பெரிய யன்னல்கள் இல்லாது காணப்படுகின்றது. ஆண்கள் கர்ப்பக்கிரகத்தின் நம்மேல் பாயக்கூடிய நேரான காந்த அலைகளைப் பெற்றுக் கொள்வதற்காகத்தான் பல ஆலயங்களில் ஆண்கள் மேற்சட்டை அணிவதில்லை எனச் சொல்லப்படுகிறது.

ஆலயத்தில் வழங்கப்படும் தீர்த்தத்தை புனிதமாகக் கருதி பக்தர்கள் பருகுவார்கள். பூஜை முடிந்ததும் பக்தர்களுக்கு வழங்கப்படும் தீர்த்தத்தில் ஏலக்காய், துளசி, கராம்பு போன்றவை கலக்கப்படுகின்றன. இந்தப் பண்டங்கள் எல்லாமே மனித ஆரோக்கியத்திற்கு உதவுகிறது எனும் அறிவியல் காரணமும் இல்லாமலில்லை.

ஆலயத்தின் பிரகாரத்தைச் சுற்றி வருவதன் பின்னாலுள்ள அறிவியல் காரணம் யாதென நோக்குவோம். ஆலயத்தின் பிரகாரத்தை 11 முறை, 108 முறை என்று பிரதட்சணம் செய்யும் போது நமது உடலில் கொழுப்புத் தானாகவே எரிந்து ஆரோக்கியம் கூடுகிறது. வேத கோஷமும், பிராத்தனை, சுலோகங்களும் சொல்லும் போது உடலும் உள்ளமும் புத்துணர்ச்சி பெறுகின்றது.

இந்து கலாச்சாரத்தில் மெட்டி அணிவது பெண் என்பதன் அடையாளத்தைக் கொடுக்கிறது. அதுமாத்திரமன்றி அறிவியல் ரீதியான காரணமும் உண்டு. மெட்டி காலில் இரண்டாவது விரலில் அணிவார்கள். அந்த இரண்டாவது விரலிலிருந்து ஒரு நரம்பு கருப்பை மூலமாக இதயத்துக்குச் செல்கிறது. இந்த விரலில் மெட்டி அணிவதால் கருப்பை பலமாகிறது. மற்றும், இரத்த ஓட்டத்தையும் சீராக்குகிறது. வெள்ளியில் செய்த மெட்டியைத்தான் அணிய வேண்டும். ஏனெனில், வெள்ளியில் இருக்கக் கூடிய ஒருவித காந்த சக்தி காலில் இருக்கும் நரம்புகளில் இருந்து உடலில் ஊடுருவி நோய்களை நிவாரணம் செய்யும் ஆற்றலைக் கொண்டுள்ளது. பெண்கள் கர்ப்பம் அடையும் போது ஏற்படும் மயக்கம், வாந்தி, சோர்வு, பசியின்மை போன்றவற்றையும் வெள்ளி மெட்டி அணிவதால் நீக்கப்படுகிறது.

கையெடுத்துக் கும்பிடுதல் என்பது எமது மதத்தில் காணப்படும் வழக்கமாகும். கையெடுத்துக் கும்பிடுவதிலுள்ள அறிவியல் காரணத்தைப் பார்ப்போம். கையெடுத்துக் கும்பிடுவதனால் கையின் நடுவிரலின் நுனியில் உள்ள அக்குப்பிரசர் புள்ளி அழுத்தப்படுகிறது. இதனால் காது, கண், மூளை

ஆகியவற்றிற்கு ஒரே நேரத்தில் இரத்தம் அதிகமாகப் பாய்கிறது. இதனாலேயே கையெடுத்துக் கும்பிடுதல் எனும் வழக்கத்தினைக் கொண்டுள்ளனர்.

இந்துக்கள் தரையில் உட்கார்ந்து சம்மணக்கால் போட்டு உணவருந்துவதில் உள்ள அறிவியல் காரணத்தைப் பார்ப்போம். மேற்கூறியவாறு அமர்ந்து உணவருந்துவதால் குடலிறக்கம் ஏற்படாமல் தடுக்கப்படுகிறது. நிற்பதனால் தலையில் இருந்து கால் நோக்கியே இரத்தம் பாயும். உட்கார்ந்து இருப்பதனால் தலையிலிருந்து வயிறு நோக்கி நேராக இரத்தம் பாய்கிறது. இதனால் சாப்பிட்ட உணவு ஜீரணமாகிறது.

வாழை இலையில் இந்துக்கள் உணவு உட்கொள்கிறார்கள். இதன் அறிவியல் காரணம் யாதென நோக்குவோம். பாக்கிசன் நோய் (நடுக்க வாதம்) வாழையிலை மூலமாகக் குணப்படுத்தப் படுகிறது. அதுமாத்திரமன்றி புற்று நோயை எதிர்த்துப் போராடும் சக்தியும் உண்டு. உலோகம், பிளாஸ்ரிக்கிலான உணவு உட்கொள்ளும் பாத்திரங்களை சுத்தமாக்குதல் கடினமானதாகும். வாழை இலையைத் தண்ணீரைத் தெளித்து கழுவுவது மாத்திரம் சுத்தமாக்கப் போதுமானது.

பிள்ளைப் பாக்கியம் இல்லாதவர்கள் ஆலயங்களிலுள்ள அரசமரம், வேப்பமரம் என்பவற்றைச் சுற்றி வருவார்கள். அரசமரம், வேப்பமரம் என்பவை அடிக்வைற் ஒட்சிசனை காலை, இரவு நேரங்களிலும் தரமுடியும். செல்களை உயிர்ப்பிக்கும். நோய்கள் விலகும். கர்ப்பம் தரிக்கும். பிள்ளைப் பாக்கியம் இல்லாதவர்கள் மரங்களில் தொட்டிலைக் கட்டிச் சுற்றி வருவதனால் பிள்ளைப் பாக்கியம் கிட்டும் என்ற நம்பிக்கையின் பின்னால் அறிவியல் காரணமும் காணப்படுகின்றது.

இடி பலமாக இருக்கும் போது அர்ஜுனா என அழைப்பார்கள். இதன் பின்னாலுள்ள அறிவியலை நோக்குவோம். இடி பலமாக இடிக்கும் போது சிலரது காது அடைத்து கொய்ஞ் என்று சத்தம் வரும். இதிலிருந்து தப்பவே அர்ஜுனா என்றால் போதும் காது அடைக்காது. அர் என்று சொல்லும் போது நாக்கு மடிந்து மேல் தாடையைத் தொடும். ஜு என்னும் போது வாய் வோ்த்:துக் காற்று வெளியேறும். னா என்னும் போது வாய் முழுமையாகத் திறந்து காற்று வெளியே போகும். இவ்வாறு காற்று வெளியேறுவதால் காது அடைக்காது. இதனால் தான் நம்மவர்கள் அர்ஜுனாவை இடி இடிக்கும் போது துணைக்கு அழைத்தனர். அர்ஜுனன் கிருண்ண பக்தன் என்பதால் அவன் பெயரை உச்சரிப்பது மனதுக்குப் பலம் என்ற ஆன்மீக காரணத்துடன், காது அடைத்து விடக் கூடாது என்ற அறிவியல் காரணமே மறைந்து கிடக்கிறது.

'ஓம்' என்பது இந்து மதம் சார்ந்த ஆன்மீக ஒலியாக பண்டைய காலத்திலிருந்து கருதப்படுகிறது. 'ஓம்' எனும் ஒலி மனதுக்கு அமைதியையும் மனநிலையை ஒருமுகப் படுத்தவும் உதவுகிறது என ஆன்மீக ரீதியாக மட்டுமன்றி அறிவியல் ரீதியாகவும் கூறப்படுகிறது. இவ் 'ஓம்' எனும் ஒலியானது சூரியனில் இருந்து வெளிவருகிறது என்பதை 2010 மற்றும் 2017ம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் கண்டறிந்துள்ளனர்.

மங்களகரமான விஷேட நாட்களில் வாழைமரம், மாவிலை, தோரணங்கள் கட்டப்படுகின்றன. இதுனுள்ளும் அறிவியல் காரணம் மறைந்துள்ளன. மங்கள கரமான விசேட நாட்களில் கூடும் கூட்டங்களில் வெளிப்படும் மூச்சுக் காற்றில் காபனீரொக்சைட் மற்றும் வியர்வை நெடி அதிகமாக இருக்கும். இதனால் கூட்டத்தில் மூச்சுத்திணறல் ஏற்பட வாய்ப்புண்டு. மாசுபட்ட காற்றைத் தூய்மைப்படுத்தி, ஒட்சிசன் நல்ல காற்றை வழங்குவதற்காகவே வாழைமரம், மாவிலை, தோரணங்கள் கட்டப்படுகின்றன.

சாம்பிராணிப்புகை, மஞ்சள் தெளித்தல் என எல்லா ஆலயங்களிலும் வீடுகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. பூச்சித்தொல்லை, கொசுத்தொல்லையை போக்குவதற்காகவே சாம்பிராணிப் புகை போடப்படுகிறது. மஞ்சள் தெளித்தன் காரணம் கிருமிகளை அழிக்கும் தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றமையே ஆகும்.

ஆலயங்களின் வாயிற் படியை ஏன் தொட்டுக் கும்பிடுகின்றனர். அறிவியல் காரணம் யாதென நோக்குவோம். ஒரு பக்தன் ஆலயப் படியைத் தொடக் குனியும் போது அது முதலில் அவனிடம் பணிவை ஏற்படுத்துகிறது. அடுத்து அது அவன் உடம்பிலுள்ள சூரிய நாடியை இயக்குகிறது. படிக்கட்டைத் தொட்டதற்கு வலது கைவிரல்களை நம் நெற்றியில் புருவ மத்தியில் உள்ள சூக்கா சக்கரம் மீது வைத்து அழுத்த வேண்டும். இது நம்மிடம் உள்ள தீய சக்தியை விரட்டும். அத்தோடு தெய்வ சந்நிதிகளில் இருந்து வரும் அருள் அதிர்வலைகள் மிகத் தெளிவாக நமக்குள் தெறிவிக்கச் செய்யும். அது புனிதமானதாக்கி புத்துணர்ச்சியுடன் ஆலுயத்துக்குள் செல்லவைக்கும்.



வீபூதி, சந்தனம் தரிப்பதன் அறிவியல் காரணம் யாது? நம் உடலின் அனைத்து நாடி நரம்புகளும் மூளையுடன் இணைக்கப் பட்டுள்ளன. உடலின் அநேக நரம்புகள் நெற்றிப் பொட்டின் வழியாகச் செல்கின்றன. ஆகவே, நெற்றிப்பகுதி அதிக உஷ்ணமாகவே இருக்கும். நம் அடிவயிற்றில் நெருப்பு சக்தியிருக்கிறது. ஆனால், அந்தச் சூட்டின் தாக்கம் அதிகமாக உணரப்படுவது நெற்றிப் பொட்டில்தான். அதனால் தான் காய்ச்சல் என்றால் நெற்றியில் கைவைத்து உஷ்ணத்தின் தன்மையை அறிகிறோம். வாகனங்களின் எஞ்சின் தொடர்ந்து இயங்கும் போது அதிகம் சூடாகும். இந்தச் சூட்டைக் குறைத்து எஞ்சினுக்கு அதிக ஆயுளைக் கொடுப்பது ரேடியேற்றர். அதுபோல நமது மூளையையும், அதை இணைக்கும் நரம்புகளையும் குளிரச் செய்வததே நாம் நெற்றியில் பூசும் சந்தனக் குழம்பு செய்யும் தலையாய கடமை, தலையில் ஏற்படும் வியர்வை, தலைமேல் விழும் பனித்துளிகள் மற்றும் தண்ணீர் தலைப்பகுதியில் தங்கிவிடும். இதனால் தலைவலி, தூக்கமின்மை ஏற்படும். இப்படிப்பட்ட கெட்ட நீரை உறிஞ்சி வெளிப்படுத்தலே வீபூதி தரிப்பதன் அறிவியல் காரணமாகும்.

நமது கலாச்சாரத்தில் பிறப்பு முதல் இறப்புவரை வேரூன்றியுள்ள சடங்குகளில் காது, மூக்குக் குத்துதல் காணப்படுகின்றது. காது, மூக்கு போன்ற இடங்களில் சிறு உலோகத்தைக் குத்திப் போடுவதன் மூலம் சக்தி மண்டலம் தூண்டப்படுகிறது. மனவுறுதி மற்றும் உயிர்த் தன்மையில் சமனிலை ஏற்படுகின்றது.

ஆலயங்களில் மணி அடிப்பது வழக்கமாகும். இதில் மறைந்துள்ள அறிவியல் காரணத்தை நோக்குவோம். ஆலயமணி ஏழு உலோகங்களின் கலவையால் செய்யப்படுகிறது. கேட்மியம், லெட், ஜின்க், நிக்கல், குரோமியம், மாங்கனீஸ் ஆகியவையாகும். மணியின் தயாரிப்பில் இருந்து ஏழு உலோகங்களின் சேர்க்கை அளவின் விகிதம் ஒரு வியக்கத்தக்க அறிவியலாகும். மனித மூளை வலது, இடது என்று பிரிக்கப்பட்டுள்ளது. இரண்டும் இவ்வாறு செயலாற்றல் தன்மைகளைக் கொண்டவை. இந்த இரண்டையும் ஒன்றாக இணைக்கும் தன்மை ஆலய மணியிலிருந்து எழும் ஒலிகளுக்கு உண்டு. ஆலய மணியை அடித்தவுடன் அதிலிருந்து ஒரு பலத்த ஒலி எழும்புகிறது. அந்த மணியின் ஓசை எதிரொலியுடன் கூடிய ஆழ்ந்த, இடைவிடாத ஒலியாக உரக்க ஒலிக்கும். ஒலியின் முடிவில் கேட்கும் எதிரொலிகள் நம் காதுகளில் 7 வினாடிகள் நீடிக்கின்றன. இது மனித உடலின் 7 சக்கரங்கள் காணப்படும் சக்தி மையங்களைத் தாக்குகிறது. அந்த சக்கரங்கள் மூலாதாரம், சுவாதிஷ்டனா, மணிபுரம், அனாகதம், விசுதீதம், ஆக்கினை, சகஸ்ராரம் ஆகியனவாகும். ஆழ் மனதை விழிக்கச் செய்வதற்காகவே இந்த ஒலியை எழுப்புகிறோம். ஆலய மணியின் ஒலியைக் கூர்ந்து கேட்பது தியானம் செய்வதைப் போன்றதாகும். கோவில் மணியிலிருந்து ஒலி எழும்பும் அந்த நேரம் இந்தத் தன்மை ஒருமுகப் படுத்தி மனதை விழிப்புணர்ச்சி அடையச் செய்து மனதை ஒருமுகப் படுத்தும் ஆற்றலை ஏற்படுத்துகிறது.

குளத்தில் ஏன் காசு போடுகின்றனர். இதன் அறிவியல் காரணத்தை நோக்குவோம். அந்தக் காலத்தில் காசு செம்பினால் செய்யப்படும். காசினைக் குளத்தினுள் எறிவதால் அன்றாடத் தேவைகளுக்கு குளத்து நீரைப் பயன்படுத்துவார்கள். செம்பு நம் உடலுக்கு மிகவும் அவசியமான ஒரு கனிமம் ஆகும். செம்பு தாது குறைபாட்டால் மூட்டுவலி, மாரடைப்பு என்று பல கோளாறுகள் ஏற்படும். எனவே தான் நம் முன்னோர்கள் செம்புக் காசுகளைக் குளங்களில் போட்டனர். செம்புக் காசுகளில் இருக்கும் செம்பு அணுக்கள் நீருடன் கலக்கும்.

அறிவியல் வளர்ச்சி ஏற்படுவதற்கு முன்பாகவே இந்து மதமானது வழக்கங்களின் பின்னணியில் அறிவியல் காரணங்களைக் கொண்டுள்ளன. வேறு மதங்களிற்கு இல்லாத சிறப்பு இந்து மதத்திற்கே உண்டு. மேலைத் தேயர்கள் உள்ளிட்ட பிற மதத்தினர் எமது மதத்தின் அறிவியல் உண்மைகளினை அறிந்து இத்தகைய வழக்கங்களினை பின்பற்றத் தலைப்படுவதனையும் ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம். இத்தகைய பெருமை மிக்க இந்து மதத்தைப் பின்பற்றி உடல், உளரீதியாக நன்மைகளைப் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக.

**செல்வி மு.இ.ஜெயலெட்சுமி**
**ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் நயினாதீவு**









Peri Village

Pizzeria & Grill

Italian Restaurant







Stoneleigh Branch
69 The Broadway
Stoneleigh, Epsom
KT17 2HP

Epson Branch
4 The Derby Square
Epsom
KT19 8AG

Opening Times

| Stoneleigh | | Epsom | |
|---|---|---|---|
| Sunday | – 11 am to 10 pm | Sunday | – 11 am to 10 pm |
| Monday | - 11 am to 10 pm | Monday | - Closed |
| Tuesday | - 11 am to 10 pm | Tuesday | - 11 am to 10 pm |
| Wednesday | - 11 am to 10 pm | Wednesday | - 11 am to 10 pm |
| Thursday | - 11 am to 10 pm | Thursday | - 11 am to 10 pm |
| Friday | - 11 am to 11 pm | Friday | - 11 am to 11 pm |
| Saturday | - 11 am to 11 pm | Saturday | - 11 am to 11 pm |

For Table Reservation Contacts

Stoneleigh: 020 8786 8848

Epsom: 013 7272 1007

# நயினாதீவின் விளையாட்டுத்துறை



வரலாற்று ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் பழம்பெரும் சிறப்பினையுடையது நயினாதீவு சரித்திரக் காலத்துக்கு முற்பட்டதாக மிகப் பழமை வாய்ந்த நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளமையானது சைவசமயம் சார்ந்த சிறப்பாகும். இவ்வாறான நயினை மண்ணின் சிறப்புக்களை ஒருங்கே தொகுக்கும்பொழுது ஒரு ஊரினது தவிர்க்கப்பட முடியாத மிக முக்கிய துறைகளில் ஒன்றாக விளையாட்டுத்துறை காணப்படுகிறது. அவ்வகையில் எமது ஊரினது விளையாட்டுத் துறை வளர்ச்சி தேசிய தரத்திற்கு நிகராக விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. அப்பேற்பட்ட தீவகத்தின் விளையாட்டு வளர்ச்சியினை தருவதில் பெருமையடைகின்றேன்.

## விளையாட்டுத்துறையின் அவசியம்

ஒரு முழுமையான மனிதனை உருவாக்குகின்ற துறை விளையாட்டுத்துறையே யாகும். மனிதன் தனது வாழ்க்கை முறைக்குத் தேவையான பல அம்சங்களை இயற்கையிடமிருந்தே சுயமாக கற்றிருக்கின்றான். இயற்கை மாற்றங்கள், பறவைகள், விலங்குகள் போன்றவற்றின் நடத்தைகள் போன்றவற்றிலிருந்து பல்வேறு விளையாட்டுக்களை ஆதியிலிருந்து விளையாடி மகிழ்ந்திருக்கின்றார்கள். அந்த வகையில் உடலும், உள்ளமும் ஒருங்கே விளைகின்ற பயிற்சியே விளையாட்டுத்துறையாகும். இத்துறையினூடு மனித உடல் பல்வேறு படிநிலை வளர்ச்சியை பெறுகின்றது. பிறந்த குழந்தை இயல்பாகவே பல்வேறு விளையாட்டுக்களை கற்றுக் கொள்கின்றது. மனித உடலின் அனைத்துத் தொகுதிகளும் ஒரு சீரான வளர்ச்சி பெற்று நோயெதிர்ப்புச் சக்தியுள்ள உறுதியான உடற் கட்டமைப்பு முறையான விளையாட்டுப் பயிற்சியாக எய்தப்படுகின்றது. உளவிருத்தியை எடுத்துக் கொண்டால் புலனடக்கம், ஆளுமை விருத்தி, சகிப்புத் தன்மை, தோளுமையுணர்வு தலைமைத்துவப் பண்பு, விட்டுக் கொடுத்தல், கூட்டு முயற்சி, ஒத்திசைவு போன்ற பல சமூக வாழ்க்கை முறைக்குத் தேவையான பண்புகளை இத்துறையினூடாக வளர்த்துக் கொள்ள முடிகிறது. இந்த வகையில் பார்க்கும்பொழுது விளையாட்டுத்துறையானது வாழ்கைக்கு மிக அத்தியாவசியமான துறையாகக் காணப்படுகின்றது.

எமது ஊரின் புவியியல் அமைவு நிலை அங்கு கிடைக்கக் கூடிய வளங்களுக்கேற்ப பல கிராமிய விளையாட்டுக்கள் அன்றும் இன்றும் விளையாடப்பட்டு வருகின்றது. அவ்வகையில் கிட்டிப்புல்லு அடித்தல் என்பது ஒரு பிரபலமான விளையாட்டாகும். ஆரம்ப காலங்களில் முப்பாடசாலை – அதிபர் - ஆசிரியர்கள், மாணவர்கள் நவராத்திரி காலங்களில் வீடு வீடாகச் சென்று கிட்டிப்புல்லு, கோலாட்டம் நிகழ்ச்சி நடாத்திவிட்டு சிற்றுண்டிகள் அருந்தி பெற்றோர்களையும் மாணவர்களையும் மகிழ்வித்து வந்தததை காணக்கூடியதாக இருந்தது. கிளித்தட்டு மறித்தல் இன்றும் நிலைத்து நிற்கின்ற ஓர் அற்புதமான கிராமிய விளையாட்டாகும். ஊரில் பல இடங்களில் கிளித்தட்டு மறித்த நினைவுகள் போர்த் தேங்காய் உடைத்தல், தாயம், ஆடு, புலியாட்டம், கோலாட்டம், சடுகுடு, கெந்தியடித்தல், ஒளித்துப் பிடித்து விளையாடல், கொடி எடுத்தல் போன்ற பல விளையாட்டுக்களும், படகோட்டம், இயந்திரப் படகோட்டம், துவிச்சக்கர வண்டியோட்டம், கிடுகு பின்னுதல், சறுக்குக் கம்பம், கயிறு இழுத்தல், தேங்காய் துருவுதல் போன்ற விளையாட்டுக்களும் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. பல தமிழ் பாரம்பரிய விளையாட்டுக்கள் பல ஊர்களிலும் விளையாடப்படாமல் அருகிய தன்மையே தற்போது காணப்படுகின்றது.

## பாடசாலை மட்டத்திலான விளையாட்டுத்திறன் வளர்ச்சி

எமது ஊரிலுள்ள முன்பள்ளிப் பாடசாலைகள் தொடங்கி பெரிய பாடசாலைகள் வரை இத்துறை கணிசமான அளவு வளர்ச்சி கண்டுள்ளதென்றே கூறலாம். ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலை ஆண்டு1 தொடங்கி ஆண்டு – 5 வரையிலான மாணவர்களைக் கொண்டது. இப்பாடசாலை ஆண்டு தோறும் மாணவர்களிடையே விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகிறது. கலைமகள், அலைமகள் முறையே சிவப்பு, பச்சை நிறங்களிலான இல்லங்களாகும். நயினாதீவு மகாவித்தியாலயம் சேரன், சோழன், பாண்டியன் முறையே பச்சை, சிவப்பு, மஞ்சள் நிறங்களிலான இல்லங்களாகும். இதே போன்று ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம் பாரதி, இளங்கோ, நாவலர் முறையே சிவப்பு, நீலம், பச்சை நிறங்களிலான இல்லங்களாகும்.



இவ்வில்ல விளையாட்டுப் போட்டிகள் இலங்கையின் முறைசார், கல்வித் திட்டத்திற்கு அமைவாக அதன் விதிகளை உள்வாங்கி, மிகச்சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றன. மைதான நிகழ்ச்சிகள் சுவட்டு நிகழ்ச்சிகள் என வகைப்படுத்தப்பட்டு சிறப்பான நடுவர்களைக் கொண்டு நடாத்தப்பட்டு வருகின்றது. இப்போட்டிகளின் புற நிகழ்வுகளாக மரதனோட்டம், உதைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற போட்டிகளும் இல்லங்களுக்கிடையே நடாத்தப்படுகின்றன. இதனோடு வினோத உடைப்போட்டி, இல்ல அலங்காரப் போட்டி போன்ற சுவாரசியமான போட்டிகளும் நடைபெறுவதுண்டு. இந் நிகழ்வுகளில் பல ஆசிரியர்கள் தங்களின் இல்ல வெற்றிக்காக மாணவர்களை உற்சாகப்படுத்தி, சில சந்தர்ப்பங்களில் தாங்களும் தங்களை மறந்து வீரர்களோடு சேர்ந்து மைதானத்தில் ஓடுவதையும் கண்கூடாக பார்க்கலாம். இறுதியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பிரதம, சிறப்பு விருந்தனர்களால் பரிசில்கள், வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்பட்டு ஒரு விழாவைப் போன்று இப்போட்டிகள் நிறைவுக்கு வரும்.

அமரர் ப.க. குகதாசன் வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்த காலத்தில் தொடர்ந்து வட்டார விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடாத்தி வந்தார். பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் பல ஆசிரியர்கள் ஈடுபாட்டுடன் இத்திறன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக எமதூர் பாடசாலைகளில் நமது ஊரைச் சேர்ந்த பெரும்பான்மையான ஆசிரியர்களும், மற்றைய ஊர்களிலிருந்து வருகை தந்து கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களும், விளையாட்டுத் திறன் வளர்ச்சியில் கற்பித்தற் செயற்பாட்டோடு முழு ஈடுபாட்டுடன் செயற்பட்டிருக்கின்றார்கள். அவர்களுள் திரு.இ.சிவபாதசேகரம் ஆசிரியர் உடற்கல்வித்துறைசார் ஆசிரியராவார். இவர் இத்துறை வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளார். அடுத்து திருமதி. வீ.பரமேஸ்வரி ஆசிரியை அவர்களும் வலைப்பந்தாட்டத் துறையில் சிறப்பான பயிற்சி பெற்றவர். இவரும் இத்துறை வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பினை செய்திருக்கின்றார். திருவாளர்களான மு.வே.பூபாலசுந்தரம் ஆசிரியர், சி.நடேசபிள்ளை ஆசிரியர், சோ.தில்லைநாதன் ஆசிரியர், நா.க.சண்முகநாதப்பிள்ளை ஆசிரியர, இ.ரவீந்திரன் ஆசிரியர், துஷ்யந்தன் ஆசிரியர், சோ.குகனேசன் ஆசிரியர், க.ஜீவசீலன் ஆசிரியர் மற்றும் அமரர்களான தருமலிங்கம் ஆசிரியர், சி.குமராசாமி ஆசிரியர், கு.சாந்தலிங்கம் ஆசிரியர், செல்வி சிவானந்தி கதிரேசு ஆசிரியை, திருமதி.தி.யோகலட்சுமி ஆசிரியை எனப் பலரைக் குறிப்பிடலாம். இவர்களுள் சிலர் தற்போது இல்லாவிட்டாலும், அவர்களின் ஈடுபாட்டை நாம் மறந்துவிட முடியாது. இவர்களின் வரிசையில் தற்போது பல புதிய ஆசிரியர்களும் சிறப்பான பயிற்சி பெற்று இத்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றார்கள்.

## விளையாட்டுக் கழகங்களின் தோற்றம்

1959ம் ஆண்டு ஐக்கிய வாலிபர் சங்கம் என்ற அமைப்பு அப்பொழுது அரசினர் வைத்தியசாலை அதிகாரியாகக் கடமையாற்றிய அமரர் டாக்டர் பொன்னையா நடராசா அவர்களின் தலைமையில் தீர்த்தக்கரையடி மைதானத்தில் மாபெரும் விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்தியது. டாக்டர் பொன்னையா நடராசா அவர்கள் மிக்க துடிப்புடைய விளையாட்டு வீரனும் செயல் வீரனுமாவார். இவ்விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான மைதான நிகழ்ச்சியாக குண்டெறிதல், நீளம் பாய்தல், உயரம் பாய்தல், கோல் ஊன்றிப் பாய்தல் போன்ற நிகழ்ச்சிகளும், சுவட்டு நிகழ்ச்சிகளாக 100மீ, 200மீ, 400மீ, 800மீ, 1500மீ என்பனவும் மரதன் ஓட்டப் போட்டியையும், பெண்களுக்கான கோல் ஊன்றிப் பாய்தல் தவிர ஏனைய மைதான நிகழ்ச்சிகளும், சுவட்டு நிகழ்ச்சியும், கிடுகு பின்னல், கயிறடித்தல், தேங்காய் துருவுதல், வேக நடை என்பனவற்றுடன் பொது நிகழ்ச்சிகளாக துவிச்சக்கரவண்டிஇ ஓட்டப்போடடி என்பனவும் தலையணைச் சண்டை, சறுக்குக் கம்பம் ஏறுதல், மாட்டு வண்டிச்சவாரி, நீச்சல் போட்டி, உதைப்பந்தாட்டம் போன்ற நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டு மிகப் பெறுமதிமிக்க பரிசில்களும், வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன.

இவ்வாலிபர் சங்கம் சில வருடங்கள் விளையாட்டுப் போட்டிகளை சித்திரை புதுவருடத்தை ஒட்டியதாக நடாத்தி வந்தது. 1965ஆம் ஆண்டளவில் அரச உத்தியோகத்தர்களாலும், வர்த்தகப் பிரமுகர்களாலும், நயினாதீவு ஐக்கிய வாலிப முன்னணி என்ற இளைஞர் அணியினை உருவாக்கி, விளையாட்டுத் துறையிலும் ஏனைய துறைகளிலும் பெரும் சாதனைகளைச் செய்துள்ளனர். இவ்வாலிப முன்னணியில் குறிப்பிடக் கூடியவர்களாக திருவாளர்கள் ப.க.மகாலிங்கம், இ.தாமோரம்பிள்ளை, க.கதிர்வேற்பிள்ளை, கு.குமாரப்பெருமாள், வே.பூபாலசுந்தரம், ப.ந.ஓங்காரநாதன், ந.நமசிவாயம், ச.இலங்கைநாயகம், இ.சிவஞானசுந்தரப்பிள்ளை, இ.செல்லையா என்பவர்களுடன் நிதிசேகரிப்பில் உதவிய திருவாளர்களான நா.சதானந்தன், ப.யோகராசா, செ.ந.துரைராசசிங்கம், ப.ஜெயராசா ஆகியோர்களும் ஆவர். இவர்களுள் சிலர் எம்மத்தியில் தற்பொழுது இல்லாவிட்டாலும் அவர்களின் ஈடுபாட்டை மறந்துவிட முடியாது.

அக்கால கட்டத்தில் இவ்விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதற்காக பண உதவி தேவைப்பட்டது. இந்நிதியினை சேகரிப்பதற்கு திரைப்படங்களை இறங்குமதி செய்த அப்போதய பிரபல கொழும்பு வர்த்தகர் அமரான இ.சிவசுப்பிரமணியம் மற்றும் S.T.R தியாகராசா ஆகியோர்களால் முதன் முதலாக காவற்காரன் என்ற படம் திரையிடப்பட்ட பொழுது முதல் நாள் வசூல் முழுவதும் இவ் வாலிப முன்னணி விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்கு வழங்கப்பட்டது என்பது இன்றும் மறக்க முடியாதொன்றாகும் இதற்கு முன்னோடியாக நின்று உழைத்தவர் திரு.நா.ஏகாம்பரநாதன் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலிப முன்னணி நடாத்திய மாபெரும் விளையாட்டு விழா ஒரு கிழமைக்கும் மேலாக (சித்திரைத் திங்களில்) நடைபெற்றது. இவ்விழா ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும். இவ் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வருகை தந்த வேணன் அபயசேகரா அவர்கள் இவ்விளையாட்டு வைபவம் ஒரு ஒலிம்பிக் நிகழ்ச்சிக்கு நிகரானது எனப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது. இவ் ஐக்கிய வாலிப முன்னணி தொடர்ந்து சில வருடங்கள் சனசமூக நிலையங்களுக்கிடையே விளையாட்டுப் போட்டியினை நடாத்தி வெற்றிபெற்றோருக்கு பெறுமதி மிக்க பரிசில்களையும் வெற்றிக் கேடயங்களையும் வழங்கி வந்தது.

ஆரம்ப காலங்களில் முறையான விளையாட்டுத் திடல் இல்லாத காரணத்தினால் அம்பாள் ஆலய வளாத்திலும், தீர்த்தக் கரைக்கு அருகிலுள்ள காணியிலும் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டிருக்கின்றன. இதன் தொடர்ச்சியாக சனசமூக நிலையங்களைச் சார்ந்த விளையாட்டுக் கழகங்கள் தோற்றம் பெற்றன. இக்கழகங்கள் மிகச் சிறப்பாக பல விளையாட்டு வீரர்களை உருவாக்கியது நய்நாதீவு மத்திய சனசமூக விளையாட்டுக் கழகம், கணேசா விளையாட்டுக் கழகம், ஞான வைரவர் விளையாட்டுக் கழகம், அண்ணா விளையாட்டுக் கழகம், நாவலர் விளையாட்டுக் கழகம், மணிபல்லவ விளையாட்டுக் கழகம், கடாபி விளையாட்டுக் கழகம், அம்பிகா விளையாட்டுக் கழகம் என்பன குறிப்பிடத்தக்கன.

புதுவருடப் பிறப்பை ஒட்டியதாகவே இக்கழகங்களுக்கிடையே மிகச் சிறப்பாக போட்டிகள் நடாத்தப்பட்டு வந்தன. இப்போட்டிகளில் மைதான சுவட்டு நிகழ்ச்சிகளுடன் உதைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், மரதனோட்டம், வண்டில் சவாரிகள், நீச்சல் போட்டிகள், படகோட்டப் போட்டிகள், மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டு வந்தன. 1965ம் ஆண்டுகளுக்குப் பின்னர் 1976ம் ஆண்டிலிருந்து திரு.மு.வே.பூபாலசுந்தரம், திரு.த.பாலசிங்கம், அமரர் சி.நா.மதியாபரணம் (J.P), அமரர் க.தம்பையா (முன்னாள் கிராமத் தலைவர்) மற்றும் ஏ.சு.யு. இரத்தினசபாபதி (J.P) ஆகியோர்களைத் தலைவர்களாகவும், திரு.இ.சிவபாதசுந்தரம் ஆசிரியர், திரு.நா.க.குமாரசூரியர் (J.P) ஆகியோரைச் செயலாளராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட விளையாட்டுக் கழகம் விளையாட்டுப் போட்டிகளை மிகத் திறமையாக நடாத்தி வெற்றி பெற்றோருக்கு நம்மண் சார்ந்த பெரியோர்கள் திரு. நா.க.சண்முகநாதபிள்ளை, திரு.சி.கோபாலசுந்தரம், திரு.ப.க.பரமலிங்கம், திரு.திருமதி.வே.கருணாகரன், நாசிவராசசிங்கம் ஆகியோர்களை பிரதம விருந்தினர்களாக வரவழைத்து பெறுமதிமிக்க கேடயங்கள் பரிசில்கள் என்பவற்றை வழங்கியது. 2007, 2008 ஆம் ஆண்டுகளில் திரு.சி.ஜெகநாதன் அவர்கள் நயினாதீவு மத்திய சனசமூக நிலையமூடாக சனசமூக நிலையங்களிடையே துடுப்பாட்டப் போட்டியினை நடாத்தி பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கியுள்ளார்.

### பாடசாலை மட்டங்களிலும் சனசமூக நிலைய கழகங்களிலும் மிளிர்ந்த வீரர்கள்

எமது கிராமத்தின் விளையாட்டுத்துறையில் அமரர்களான செ.குற்றாலலிங்கம், வை.விசுவலிங்கம், இ.செல்லபா, கு.நல்லசிவம்பிள்ளை. மு.ச.திருநாவுக்கரசு, பொ.நாகமணி, சோ.கந்தசாமி, தருமலிங்கம் (ஆசிரியர்), ஆ.சதர்மதேவா, சி.வேலாயுதம், ந.பாலசுப்பிரமணியம் (பாண்டியன்). க.நாகலிங்கம், சி.நடராசா, சி.கதிர்காமலிங்கம், சி.சோ.நடராசா, ந.சிவநாதன், க.அருளானந்தசிவம், ச.பரஞ்சோதி மற்றும் திருவாளர்களான சி.நல்லதம்பி, மு.நற்குணசிங்கம், ப.க.பரமலிங்கம், இ.சோமசுந்தரம், இ.அரசரெத்தினம், சந்திரன், வை.இராசரெத்தினம் (அப்பாதம்பி), பொ.இளையதம்பி, க.நற்குணசிங்கம், சி.சண்முகரெத்தினம் (செய்யாமணி), பொ.கைலாயநாதன், இ.பேரின்பநாதன், இ.இராசன், சோ.சந்திரசேகரம், வடிவேலு, ந.ஜெயபாலன், கு.சரவணபவாநந்தன், ப.வேலு, Dr.சிவனேஸ்வரன், கா.நடேசராஜன், சி.பாலசுப்பிரமணியம், ச.வரதராசா (வரதன்), பாலகிருஷ்ணபாரதி, ந.நீலவண்ணன், ச.மணிமாறன், வீ.கருணைலிங்கம், மொகதீன், கமால், தி.லோகேஸ்வரன், சு.அகிலன், க.சசிதரன், மா.செந்திற்குமரன், வீ.புஷ்பராஜா, க.நாகேஸ்வரன் போன்ற பல வீரர்கள் பல்வேறுபட்ட விளையாட்டுத் துறைகளிலும் தம் திறமையினை வெளிப்படுத்தியுள்ளனர்.

யாழ் நகரகக் கல்லூரிகளின் அணிகளுக்காக உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், மெய்வல்லுனர் போட்டிகளில் சிறப்பாக விளையாடிய எமது கிராமத்து வீரர்களான திருவாளர்கள், வே.கருணாகரன், Dr.ப.க.நவரெத்தினராசா, சி.ஜெகநாதன், சோ. தில்லைநாதன், த.மகாலிங்கம், சோ.சபாநாதன், செ.இராமச்சந்திரன், சோ.வரதநாதன், க.கதிரேசப்பிள்ளை, க.ஜெயந்தன், கி.மகேஸ்வரன் மற்றும் அமரர்களான சி.குணரெத்தினம், மு.பரமானந்தன், ப.ந..கனகநாதன், ந.இரத்தினசிங்கம் (சீனன்) என்போர்



குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் பலர் பின்னாளில் நயினாதீவு சனசமூக நிலையங்களின் அணிகளுக்காக பல வருடங்கள் விளையாடியுள்ளனர். பெண்களுள் திருமதிகளான அ.இராசம்மா, ப.இலட்சுமி, கு.சாவுச்சியாம்பாள், ப.கமலா, நா.மகேஸ்வரி, யோ.சிதம்பரம், ரஜனி, கலைவாணி, யோகலெட்சுமி, கலாநிதி, நந்தினி, வசந்தினி, ஜீவமணி, கெங்கேஸ்வரி, அங்கயற்கன்னி என்று பலரைக் குறிப்பிடலாம்.

அண்மைக் காலங்களில் மாகாண மட்டப் போட்டியில் முதலாம், இரண்டாமிடங்களைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு நயினாதீவு மகாவித்தியாலய மாணவி செல்வி கஜபாலினி ஈட்டி எறிதற் போட்டியிலும், கணேச கனிஷ்ட மகாவித்தியாலய மாணவன் செல்வன் ரவீஸ்கரன் கோல் ஊன்றிப் பாய்தல் போட்டியிலும் வெற்றியீட்டி தாய்மண்ணிற்கு ொருமை சேர்தனர் .மாகாணப் மட்டப் போட்டிகளுக்கு சென்ற மாணவர்கள் செல்வன் கு.செந்திற்குமரன் (தற்போது உடற்கல்வி ஆசிரியர் செல்வன் மொ.ஷாகீர் ஹரபாத், செல்வன். சு.தனசீலன், செல்வன் இ.நிமலன், செல்வன் கெங்கேஸ்வரன், செல்வி சு.பிந்துஷா எனப் பலர தாய்மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளனர். மேற் கூறிய வீரர்களுடன் இன்னும் பலர் விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுள்ளனர். கட்டுரையின் சுருக்கம் கருதிக் குறிப்பிட முடியவில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக தேசிய விளையாட்டுத் துறையிலும் எமது ஊரினது விளையாட்டுத்துறை சார்ந்து முக்கிய இடமபிடித்தவர் அமரர் அ.சி.குணரெத்தினம் அவர்களாவர். மிகவும் குறைந்த வளங்களையே கொண்ட எமது ஊரிலிருந்து மிக உயரமான உயரத்தைத் தொட்ட சாதனையாளர் எமது ஊரினது விளையாட்டுத்துறை மாத்திரமன்றி வடகிழக்கு மாகாண விளையாட்டுத்துறைக்கும் ஏன் தேசிய விளையாட்டுத்துறைக்கும் அளப்பரிய சேவையாற்றியுள்ளார். வடகிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். அத்துடன் இலங்கை மெய்வன்மைச் சம்மேளனத்தின் உதவிச் செயலாளராகவும், இலங்கை கால்பந்தாட்ட சம்மேளன நிறைவேற்றுக்குழு உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் சர்வதேச கால் பந்தாட்ட நடுவர் சங்கத்தின் உறுப்பினருமாவார். கால்பந்தாட்ட துறையில் மிகவும் மதிக்கப்பட்ட மூத்த அதிகாரியாகவும் விளங்கினார். இலங்கையிலும் வெளிநாடுகளிலும் நடைபெற்ற சர்வதேசப் போட்டிகளின் போது இலங்கை அணிகளுக்கான முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார். இலஙகை விளையாட்டுத்துறைக்கு இவராற்றிய சேவைகள் நயினை மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளது

### விளையாட்டுத் துறையின் தற்போதைய நிலை

மிகச் சிறப்பான விளையாட்டுத் திறன் வளர்ச்சிகளைக் கொண்ட எமது ஊர் நாட்டிலேற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக சற்று பின்தங்கியே காணப்படுகிறது. இருப்பினும், பாடசாலை மட்ட, கோட்ட மட்ட, வலயமட்ட, மாகாண மட்ட , தேசிய மட்டம் என்ற வகையில் எமது மாணவர்கள் போட்டிகளில் பங்கு பற்றிக் கொண்டிருக்கின்றார்களென்பது பெருமைக்குரியதொன்றாகும். வருடந்தோறும் கழகங்களுக்கிடையிலான போட்டிகள் சனசமூக நிலையங்களின் பங்களிப்புடன் நடைபெற்று வருகின்றது. இருப்பினும் எமது கிராமத்தில் தரமானதொரு விளையாட்டு மைதானம் அமைவதற்கு ஆவன செய்தல் வேண்டும். நயினாதீவு சமூக பொருளாதார கல்வி, கலாசார அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று கல்வித் திணைக்களம், நயினாதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தை மண்ணிட்டு திருத்தியமைக்க பத்து (10) இலட்சம் ரூபாவினை வழங்கியது.

சுற்றுமதிலை சுவிஸ் ஒன்றியம் அமைத்துக் கொடுத்துள்ளது. சகல விளையாட்டுக்களும் விளையாடக்கூடிய வசதிகளுடன் இம் மைதானத்தை அமைக்க வேண்டியுள்ளது. நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலய மைதானப் பணிகளை ஆரம்பித்து நிறைவு செய்ய வேண்டிய கட்டாயத்திலுள்ளோம்.

இத்தனை வசதியீனங்கள் மத்தியிலும் எமது ஊர்சிறார்கள் மாகாண மட்ட தேசிய மட்ட, விளையாட்டுப் போட்டிகளுக்குச் சென்று, வெற்றியீட்டி வருகின்றார்களென்ற செய்தி எமக்கு மிகுந்த மனமகிழ்வைத்தருகின்றது.

இத்துறை மிகப்பரந்த விரிந்த துறையாகும். இது தனியே பல பிரிவுகளாக்கப்பட்டு தொகுக்கப்பட வேண்டியதொன்றாகும். எனது அறிவுக்கு எட்டிய வகையிலும் இத்துறை சார்ந்த பெரியோர்களிடமும் கேட்டறிந்த வகையிலும் இவ்விபரங்களை இங்கு தந்திருக்கின்றேன். தொகுப்பின் சுருக்கம் கருதி மேலெழுந்தவாரியாகவே எமது கிராமத்தின் விளையாட்டுத்துறை சார்ந்த இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

திரு ப.ந.உருத்திரலிங்கம்
ஓய்வு நிலை அதிபர்

# நயினாதீவு கிராம சபையும் கிராம அலுவலர்களும்



எமது உள்ளூராட்சி மன்றம் எமது கிராமத்தின் நலனில் அக்கறை கொண்டு பெரும் பயன்தரு செயற்திட்டங்களை அக்காலத்தில் செய்து முடித்தது அவற்றில் குறிப்பாக பெரும் வீதிகளை ஒழுங்கமைத்தமை, கரையோரப் பகுதிகளில் குடியேற்றத் திட்டத்தின் மூலம் வதிவிட வசதியற்றோருக்கு வதிவிடம் அமைத்தமை, தீவுப் பகுதிக்கென மோட்டோர் படகுச் சங்கம் அமைத்து அச்சேவையினை நடைமுறைப்படுத்தியமை, கடற்கரைகளில் சுகாதாரத் திணைக்களத்தின் உதவியுடன் ஒவ்வொரு வீட்டிற்கும் வாளி மலசலகூடங்களை ஏற்படுத்திக்கொடுத்தமை, குளங்களைப் புனரமைப்புச் செய்து நீரை தேக்கி வைத்தமை போன்ற நற்பணிகளைச் செய்தனர். அந்த வகையில் எமது உள்ளூராட்சிமன்ற முதல்வர்களை நாம் காலம் கடந்தாவது மனம்கொண்டு நினைவு கூருவது எமது முன்னோரைச் சாந்தப்படுத்துவதாக அமையும். உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படத் தொடங்குவதற்கு முன்னர் இரகுநாதர் சரவணமுத்து என்பவர் நயினாதீவின் உடையாராகப் பணியாற்றி வந்துள்ளார். இவரே பிறப்பு இறப்புக்களையும் பதிந்து வந்தார்.

நயினாதீவு மக்கள் தேர்ந்தெடுத்த உள்ளூராட்சி மன்ற முதல்வர்கள்

1. அமரர் இரகுநாதர் சரவணமுத்து செல்லையா அவர்கள் 1வது முதல்வர். தபாலதிபர் (உடையாரின் மூத்தமகன்)
2. அமரர் வேலாயுதர் கதிரேசு நாகமணி அவர்கள் - 2வது முதல்வர் (புலவர்)
3. அமரர் வே.சங்கரப்பிள்ளை விசுவலிங்கம் அவர்கள் - 3வது முதல்வர் (முன்னாள் பிறப்பு இறப்பு பதிவாளர்)
4. அமரர் தம்பையா அமிர்தலிங்கம் அவர்கள் - 4வது முதல்வர் (தலைவர் தீவுப்பகுதி மோட்டார் படகு ஐக்கிய சங்கம்)
5. அமரர் முத்தர் வைத்திலிங்கம் அவர்கள் - 5வது முதல்வர் (கொழும்பர்)
6. அமரர் முத்தர் பொன்னம்பலம் அவர்கள் - 6வது முதல்வர் (வர்த்தகர்)
7. அமரர் வேலுப்பிள்ளை கந்தையா J.P அவர்கள் - 7வது முதல்வர் (ஆசிரியர்)
8. அமரர் வே.க.த.கிருஸ்ணசாமி J.P அவர்கள் - 8வது முதல்வர் (வர்த்தகர்)
9. அமரர் வேலுப்பிள்ளை பரமலிங்கம் J.P அவர்கள் - 9வது முதல்வர்
10. அமரர் சின்னத்தம்பி சுந்தர் தம்பையா J.P அவர்கள் 10வது முதல்வர் (ஒப்பந்தக்காரர்)

எமது உள்ளூராட்சி மன்ற செயலாளராக அமரர் வே.ச.இரத்தினமும் திரு.பொ.தில்லைநாதனும் செயற்றிறனுடன் செயலாற்றினார்கள். தற்பொழுது பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டு பொறுப்பதிகாரியாக திரு.ந.மோகனரூபனும் ஏனைய முகாமைத்துவ உதவியாளர்களாக திருவாளர்கள் இ.பேரின்பநாதனும் கு.ரவீந்திரனும் வினைத்திறனுடன் செயலாற்றி வருகின்றனர். வைத்திய உதவியாளர்களாக க.குகனேஸ்வரனும் நூலகப் பொறுப்பாளராக திருமதி.ச.கலைவாணியும். ஆயுள் வேத தொழிலாளியாக செல்வி அ.நவறஞ்சினியும் கடமை புரிகின்றனர் இவர்களுடன் வெளிக்கள உதவியாளர்களும் சேவையிலுள்ளனர்.

இதேபோல் எமது ஊரின் நிர்வாக வேலைகள் யாவும் உடையார் முறைமையிலிருந்து கிராம சேவையாளர் முறைக்கு மாற்றப்பட்டுள்ளது. இவர்கள் கடமைகள் யாவும் மக்கள் சேவை என்ற புதிய பரிமாணத்தைப் பெறுகின்றது. உ-ம் : வைத்தியசேவை, ஆசிரிய சேவை, நிர்வாக சேவை

மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற வாசகத்திற்கிணங்க எமக்குச் சேவை செய்த, சேவை செய்துவரும் கிராம சேவையாளர்களை நினைவு கூறுவோம்.

1. அமரர் நாகநாதி கந்தை – தலைமைக்காரர்
2. அமரர் நாகமணி நடராசா – தலைமைக்காரர்
3. அமரர் கந்தையா சிவசிதம்பரம் - தலைமைக்காரர்
4. அமரர் வேலுப்பிள்ளை சிவப்பிரகாசம் - கிராம சேவையாளர்
5. திரு.தில்லையம்பலம் பாலசிங்கம் - கிராம சேவையாளர் - புங்குடுதீவு.
6. திரு.சோமசுந்தரம் சந்திரசேகரம் - கிராம சேவையாளர்
7. திரு.மதியாபரணம் அம்பிகைபாகன் (விசேட சேவை உத்தியோகத்தர்)



8. அமரர் நாகேந்திரம் கந்தசாமி – கிராம சேவையாளர்
9. திரு.இரத்தினசபாபதி குலசிங்கம் - கிராம சேவையாளர் (மாற்றலாகியுள்ளார்)
10. அமரர் பொன்னுத்துரை அன்பழகன் - கிராம சேவையாளர்
11. திரு.தியாகராசா கோகுலரூபன் - கிராம சேவையாளர்
12. திருமதி. ஸ்ரீ நாகேஸ்வரன் - கிராமசேவையாளர்
13. திருமதி.வி. கிரிதாஸ் - கிராம சேவையாளர்

திடீர் மரண விசாரணை அதிகாரிகள்

1. அமரர் சரவணமுத்து குமாரவேலு J.P
2. அமரர் வைத்திலிங்கம் மருதமுத்து J.P
3. திரு.சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு J.P
4. திரு.நாகராசா தியாகராசா J.P. (பதவியிலுள்ளவர்)

திருமண பதிவுகாரர்

1. திருமதி மீனாட்சி நவநீதிகிருஷ்ணன

பொது சுகாதார பரிசோதகர்

1. திரு.சண்முகநாதன் கடம்பரூபன்

சமுர்த்தி அலுவலர்

1. திருமதி.சு.ஜெயகாந்தன்
2. திரு.நவரெத்தினம் சாந்தரூபன் (இவர்களது மகத்தான சேவையினை மணிபல்லவ கலாமன்றம் உளமார வாழ்த்துகின்றது.)
3. வை.சுதாகர்
4. க.விஜேந்திரன்
5. க.கிருஷ்ணபாபு

நயினாதீவிலுள்ள பௌதீக வளங்கள் 2012 (தனியாருக்குச் சொந்தமானவை)

1. மாட்டு வண்டில் - 03
2. பயணப் படகுகள் - 52
3. ரைக்ரர் - 06
4. லான் மாஸ்டர் - 30
5. ஓட்டோ – 55
6. மோட்டார் சைக்கிள் - 150
7. வைஜிரோ – 01
8. வடி – 03
9. ஜீப் - 01
10. அம்புலன்ஸ் படகு – 01 (பழுதடைந்த நிலை)
11. கார் - 01
12. மீன் பிடிப்பதற்கான சிறிய படகுகள் - 151
13. பஜாச் - 01

மின் பிறப்பாக்கிகள்
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் - 02
இராச மகாவிகாரை – 03
மின்சார சபை - 04
தனியாருக்குச் சொந்தமானவை - 05
திறந்தவெளி அரங்கு - 05

பிரதியாக்கம் : திரு யி. சிவபாதசேகரம் (மணியான்)
ஓய்வு நிலை அதிபர்




பிரதேச வைத்தியசாலை - நயினாதீவு



நயினாதீவு ஆயுள்வேத
வைத்தியசாலை




# Nathan & Co.

## Solicitors and Administrators of Oaths

Mr. V. Sri Shanmuganathan
Mrs T A Jaffrey




**Tel: 020 8542 1805**
Fax: 020 8540 9773

106 Kingston Road, Wimbledon
London SW19 1LX

# நயினாதீவின் வைத்திய சேவை
# அன்றும் இன்றும் - ஓர் நோக்கு



நிலையில்லாத மனித வாழ்வு நிலைபெற வேண்டுமானால் சுகாதாரமும் வைத்தியமும் இன்றியமையாததாகின்றது. சுகாதார வைத்திய சேவைகள் இன்று நேற்று தோன்றியதல்ல. மனிதன் தோன்றி வாழ ஆரம்பித்து வளர்ச்சியடையத் தொடங்கிய காலப்பகுதியிலிருந்தே ஏதோ ஒரு வகையில் அவற்றின் முன்னேற்றத்தை நாம் காணலாம். இன்று நினைத்துப்பார்க்க முடியாதளவுக்கு வைத்திய விஞ்ஞானத்தின் வளர்ச்சியையும் வெற்றியையும் காணமுடிவதோடு அதனைப் பெற்று மனித சமூகம் பயனடையக்கூடியதாகவுள்ளது.

இலங்கையின் யாழ் மாவட்டத்தில் வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எம் மணித் தீவான நயினாதீவின் வைத்திய சேவையை நோக்குவோமாயின் அவற்றை பின்வரும் தலைப்பின் கீழ் தெரிந்துகொள்வது பொருத்தமானதாக அமையும் எனலாம்.

i. நாட்டு வைத்தியமும் விசகடி வைத்தியமும்
ii. ஆயுள்வேத வைத்திய முறை
iii. ஆங்கில வைத்திய முறை

**I நாட்டு வைத்தியமும் விசகடி வைத்தியமும்**

நயினாதீவின் வைத்திய சேவையின் வளர்ச்சிப் பாதையினை உற்று நோக்கின் ஆரம்ப காலத்திலிருந்து நாட்டு வைத்தியமுறையே இருந்து வந்திருக்கின்றது. கைநாடி பிடித்து நோயை இனங்கண்டு வைத்தியம் செய்யும் முறையாக நாட்டு வைத்தியம் காணப்பட்டது.

நாட்டு வைத்தியம் பற்றிய குறிப்புகள் இக்கிராம மக்களால் வாய்மொழி இலக்கியங்களான பாடல், பழமொழிகள் போன்றவற்றை மனனம் செய்து அவற்றைப் பாடி பாதுகாத்து வந்துள்ளனர். நோய் ஏற்படாமல் இருக்கவும், அவற்றுக்காகக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும், உணவுப் பழக்கங்களையும், அவற்றுக்குப் பயன்படுத்தும் மருத்துவ பொருட்களையும் கூறுவதாக இது அமைந்து காணப்பட்டுள்ளது. "பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்" என்கிற பொதுப்பழமொழியினை நாட்டு வைத்தியத்திற்கு சிறந்த உதாரணமாகக் கூறலாம்.

நயினாதீவின் நான்காம் வட்டாரத்தைச் சேர்ந்த வாழ்ந்து மறைந்த திருமதி குழந்தை கதிரன் என அழைக்கப்படும் அம்மையார் குழந்தையைப் பிரசவிப்பதற்கு கைதேர்ந்தவராக விளங்கினார். நயினாதீவு ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த ஐயன் கதிரி என்பவரும் குழந்தை பிரசவிப்பதில் சிறந்து விளங்கினார். விச ஜந்துக்கள் கடிக்கான வைத்தியமும் சிறப்பாகக் காணப்பட்டது. விசத்தை இறக்குவதற்கு சிகிச்சையாகப் பார்வை பார்த்தல், கடியுண்டவர் தனது சிறுநீரைக் குடித்தல், கடிக்கப்பட்ட இடத்திற்கு மேல் கட்டுப் போடுதல், கழுவுதல், மருத்துவ இலைகளை அரைத்துப் பூசுதல், எண்ணெய் பூசுதல் போன்ற பல முறைகள் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. ஏனைய நோய்களுக்கான வைத்தியமும் நோய்களைப் பொறுத்து மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அமரர் தம்பையாவும் அவர்களது புதல்வர்களும் மற்றும் செங்கண்மாரி வைத்தியத்திற்கு புகழ்பெற்று விளங்கிய அமரர் கந்தையா பரியாரியாரும், வை. மருதமுத்து, திரு கதிரவேலு போன்றவர்களும் இந்நாட்டு வைத்தியத்தில் சிறப்பானவர்களாக விளங்கியுள்ளனர். விசகடி வைத்தியத்தைப் பொறுத்த வரையில் பார்வை பார்த்து வைத்தியம் செய்வதில் அமரர்களான திருமதி ம.வரதலட்சுமி (குட்டியாபிள்ளை ஆச்சி), ஐ.சுந்தரலிங்கம் (திருவியப்பா) அமரர் உஷன் போன்றவர்கள் பின்னாளில் பிரகாசித்தனர்.

இக்காலப்பகுதியில் பார்வை பார்த்து வைத்தியம் செய்வதில் திரு அ.தவேஸ்வரன், திருமதி ச.தனிநாயகம், திருமதி க.சண்முகலிங்கம் போன்றவர்களும் அவர்கள் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்கின்றனர். முறிவு நெறிவுகளுக்குப் பத்து கட்டும் வைத்தியத்தை திரு.ஐ. தியாகராசா அவர்களும் அண்ணாக்கு தொங்கல், உழுக்கு போன்ற நோய்களைத் தீர்த்து வைப்பதில் ஐயாக்குட்டி (அமரர்), ஐயன்குட்டி (அமரர்), நாகமுத்தன் (அமரர்), செய்நம்பு (அமரர்), தெய்வானைப்பிள்ளை (அமரர்) க.தில்லைவனம் (அமரர்), தையலம்மை (அமரர்) திருமதி மாரிமுத்து (அமரர்), நாகரெத்தினம், மீனாட்சி, பார்வதி, ஜெ.விஜயலட்சுமி, அமராவதி, திரு.மு.கிருஷ்ணசாமி போன்றவர்கள் காலத்திற்குக் காலம் சிறந்து விளங்கி வந்திருப்பதும், வருவதும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியதாகும்.

**II ஆயுள்வேத வைத்தியமுறை**

எம் ஊரைப் பொறுத்தவரை வைத்தியம் செய்யும் ஒரு பரம்பரை இருந்து வந்தது என்றால், அது அமரர் தம்பையாவும் அவரது புத்திரர்களுமென்றால் மிகையாகாது. அவர்களது சேவை இன்றும் கிடைக்கின்றது. பெயர் பெற்ற வைத்தியரான தம்பையா சோமசேகரம் அவர்களின் பிள்ளைகள் இப்பணியைச் சிறப்பாக செய்து வந்திருக்கின்றனர். ஆயுள்வேத கல்லூரி ஆரம்பிக்கப்பட்டபோது முதல் மாணாக்கராகச் சேர்க்கப்பட்டு சிறப்புச் சித்திபெற்று தேறியவர் ஆயுள்வேத வைத்திய கலாநிதி ஆ.இராமுப்பிள்ளை ஆவார். துரதிஷ்டவசமாக அவருக்கு நியமனம் கிடைக்கவில்லை. இவரைத் தொடர்ந்து எம்மூரைச் சேர்ந்த பலர் ஆயுள்வேத கல்லூரியல் படித்து வெளியேறி நாட்டின் பல பாகங்களிலும் சேவை செய்து வருகின்றனர்.

முன்னைய காலத்தில் ஆயுள்வேத வைத்தியமுறை நிறுவனமயப்படுத்தப்படவில்லை. வைத்திய அதகாரி கௌரவ, தகநாயக்க அவர்கள் அமைச்சராக வந்தபோதுதான் சுதேச வைத்தியத்திற்கு முக்கியத்துவம் வழங்கி உள்ளூராட்சி மன்றங்களில் ஆயுள்வேத வைத்திய முறையை அமுல்படுத்தினார். (இவர் ஆயுள்வேத வைத்திய கலாநிதி ஆவார்). இதன் பயனாக நயினாதீவு உள்ளூராட்சி மன்றத்திற்கு வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். முதல் வைத்தியராக அமரர் சோமசேகரம் அவர்கள் நியமிக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து இவரது சகோதரர் அமரர் த.மயில்வாகனம் கடமையைப் பொறுப்பேற்று கடமையாற்றினார். இன்றுவரை ஆயுள்வேத வைத்திய சேவை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. நயினாதீவு உப அலுவலக வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்டு ஆயுள்வேத அமைச்சராகவிருந்த சாலியந்தய திஸாநாயக்க அவர்களால் 2013ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் சிறப்பாக இவ்வைத்தியசேவை நடைபெற்று வருவதோடு பலர் அங்கு சென்று வைத்திய சேவையைப் பெற்று வருவது குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாகும்.

1980,90 களில் நய்னா தீவில் "பாக்கியம் ஆயுள்வேத வைத்திய நிலையத்தின" சேவையும் 2000 ஆண்டுக்கு பிற்பட்ட காலப்பகுதியில் வைத்தியர் சோ.லோகநாதன், சோ.சபாநாதன் ஆகியோரின் ஆயுள்வேதம் சார்ந்த வைத்தியப்பணி எம் மக்களுக்கு சிறப்பாக கிடைத்தமையும் இங்கே குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும்.

**அன்றுதொட்டு இன்று வரை ஆயுள்வேத வைத்திய அதிகாரிகளாக சேவையாற்றியவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | வைத்திய கலாநிதி அமரர் த. சோமசேகரம் (நயினாதீவு) | 09. | வைத்திய கலாநிதி சு. யோகநாதன் |
| 02. | வைத்திய கலாநிதி அமரர் த. மயில்வாகனம் (நயினாதீவு) | 10. | வைத்திய கலாநிதி து. ரத்னலஜி (யாழ்ப்பாணம்) |
| 03. | வைத்திய கலாநிதி அமரர் வி. மாசிலாமணி (அளவெட்டி) | 11. | வைத்திய கலாநிதி ஏ. சிவபாலன் (காரைநகர்) |



| | | | |
|---|---|---|---|
| 04. | வைத்திய கலாநிதி அமரர் சிவாவேலாயுதம் (நயினாதீவு) | 12. | வைத்திய கலாநிதி திருமதி து. எட்னா (யாழ்ப்பாணம்) |
| 05. | வைத்திய கலாநிதி ளு. பொன்னையா (வேலணை) | 13. | வைத்திய கலாநிதி ஆ. வாரணி (யாழ்ப்பாணம்) |
| 06. | வைத்திய கலாநிதி திருமதி சாந்தினி சிவகுமார் (நயினாதீவு) | 14. | வைத்திய கலாநிதி மு. செல்வநாதன் |
| 07. | வைத்திய கலாநிதி திருமதி சு. சிவசுதன் (சாவகச்சேரி) | 15. | வைத்திய கலாநிதி ஏ. மெரோன் (யாழ்ப்பாணம்) |
| 08. | வைத்திய கலாநிதி சு. பூபதிஸ்வரி (மானிப்பாய்) | 16. | வைத்திய கலாநிதி வு. சபேசன் (நல்லூர்) |

**III ஆங்கில வைத்திய முறை**

"பழையன கழிதலும் புதியன புகுதலும் தவிர்க்க முடியாதவை" அந்த வகையில் எமது ஊரின் வைத்திய சேவையும் நாட்டு வைத்தியம், ஆயுள்வேத வைத்தியம் என்பவற்றிலிருந்து முற்று முழுவதாக விலகாமல் கால மாற்றத்திற்கும் வளர்ச்சிக்குமேற்ப ஆங்கில வைத்திய முறைக்குள் பிரவேசித்தமை தவிர்க்க முடியாததாகும்.

ஆங்கில வைத்திய முறை என்பது தகவல், பரிசோதனைகள் மூலம் பெறப்பட்ட முடிவுகளைக் கொண்டு நோயை இனங்கண்டு மருத்துவரால் கொடுக்கப்படும் மருந்துகளும் சிகிச்சைகளுமாகும். இதில் பக்கவிளைவுகள் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகும். நயினாதீவைப் பொறுத்தவரையில் 1940ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்தே ஆங்கில வைத்தியமுறை முளைவிடத் தொடங்கியிருக்க வேண்டுமென எண்ணத் தோன்றுகின்றது. தலைமை வாத்தியார் அமரர் ச.நா.கந்தையா அவர்களின் முதலாம் வட்டாரத்திலுள்ள வீட்டில் வைத்தியர் சின்னையா (Apothy cary in-charge) அவர்கள் வைத்திய சேவையை செய்து வந்தார். பெரிய காயங்ககளுக்கு தையல் போடும் வசதி வாய்ப்புகள் இருக்கவில்லை. இவரின் வருகைக்குப் பின்பே தையல் போடும் முறை காலங்கடந்து எம்மூர் மக்களுக்கு கிடைத்தது. இதனால் வீணான குருதிப் பெருக்கமும், பெரிய தழும்பு போன்ற அடையாளங்களும், இறப்பும் ஓரளவு தவிர்க்கப்பட்டது.

நயினாதீவுக்கென ஒரு தனியான அரச வைத்தியசாலை நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கை இலங்கை பாராளுமன்றத்தில் எதிரொலித்தது. அதன் பயனாக 1952ஆம் ஆண்டு சித்திரை மாதம் 17ஆம் திகதி அப்போதைய போக்குவரத்து அமைச்சராகவிருந்த சேனாதிபதி சேர்.ஜோன் கொத்தலாவல அவர்களால் எமதூர் வைத்தியசாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, வெளிநோயாளர் பிரிவு எனக் கட்டப்பட்டு மக்களுக்கு சேவை புரியத் தொடங்கியது. புதிதாகக் கட்டப்பட்ட பிரசவ விடுதியையும் வைத்தியசாலைக் கட்டடத்தையும் 1954ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் முதலாம் திகதி பிரதமராகவிருந்த சேர். ஜோன் கொத்தலாவல அவர்கள் அன்று ஹெலிகொப்டர் மூலம் வருகை தந்து வைத்தியசாலையை இனிதே திறந்து வைத்தார். முதல் வைத்தியராக வைத்திய கலாநிதி அமரர் பொ.நடராசா அவர்கள் கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் மக்கள் மனதை வெல்லும் வகையில் சிறப்பான மருத்துவ சேவையை வழங்கினார்.

இவ் வைத்தியசாலை உருவாக்கம் பற்றி பேசுவதாக இருந்தால் அமரர் தம்பையா சோமசேகரம் அவர்களையும் அவர் தலைமையையும் ஊர் பெரியவர்களையும் ஒதுக்கிவிட முடியாதளவிற்கு அவர்களின் பணி போற்றுதற்குரியது. இவ்வைத்தியசாலையின் உருவாக்கத்தில் த. சோமசேகரம் முதன்மையானவராக முன்னின்று செயற்பட்டார். வைத்திய வளாகத்தில் காணப்படுகின்ற சவுக்கு, தென்னை மரங்களையும் ஏனைய பூ மரங்களையும் வைத்திய விடுதியிலுள்ள தென்னை மரங்களையும் நாட்டுவித்தார். அவரது காலத்திலேயே வைத்தியர் விடுதியை பல பரப்பு இடைவெளி கொண்டதாக அமைத்தமையினாலேயே பலபரப்பு காணியை இன்று வைத்தியசாலைக்குரிய காணி என உரிமை கோர முடிகின்றது. இக்காணியிலே இன்று புதிய வைத்தியசாலையொன்று கட்டுவதற்கான முஸ்தீபுகள் மேற்கொள்ளப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வைத்திய கலாநிதி பொ.நடராசா அவர்களுக்குப் பின்னர் வைத்திய அதிகாரிகளான எஸ்.அப்பாத்துரை, எஸ்.விநாயமூர்த்தி ஆகியோரின் வைத்திய சேவையைத் தொடர்ந்து எம் ஊரைச் சேர்ந்த வைத்திய கலாநிதி கதிரேசு அவர்கள் வைத்தியசாலைக்கு முன் வீட்டில் அமர்ந்திருந்து இரவு பகல் பாராது சிறந்த சேவையாற்றினார். அதன் பின்னர் பல்வேறு வைத்தியர்கள் இங்கே சேவையாற்றிவந்துள்ளனர். 1970 இற்கு பிற்பட்ட காலப்பகுதியில் குடும்பநல மருத்துவ மாதுவாக எம் ஊரைச் சேர்ந்த திருமதி நா.கமலாம்பிகை அவர்கள் சிறந்த முறையில் வைத்தியசாலைக்கு அருகில் இருந்து கடமையாற்றி பல நூற்றுக்கணக்கான பிரசவங்களை கவனித்து ஒரு புதிய அத்தியாயத்தை இவ்வைத்தியசாலையில் தொடக்கி வைத்தார். வைத்திய கலாநிதி தியாகர் திருநாவுக்கரசு அவர்கள் இவ்வைத்தியசாலையில் இருமுறை கடமையாற்றி சிறந்த வைத்திய சேவையாற்றினார். வைத்திய சேவையைப் பொறுத்த மட்டில் இவரது காலம் ஒரு பொற்காலமாகத் திகழ்ந்தது. இவரது காலத்தில் மூன்று வைத்தியர்கள் காணப்பட்டனர். பல் வைத்தியர் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் பற்சிசிக்சை மேற்கொண்டு வந்தார். அக்காலப்பகுதியில் ஒரு மருந்தாளர், ஒரு மருந்துக் கலவையாளர் என இருவரும் மருந்து கொடுப்பதற்காக கடமையாற்றினர். 1980 இற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் குடும்பநல மருத்துவ மாதுவாக செல்வி பூலோகசுந்தரி எனும் எம் மண்ணைச் சேர்ந்தவர் சிறந்த முறையிலே கடமையுணர்வுடன் வைத்தியசாலைக்கு அருகிலிருந்து சேவையாற்றினார். மருத்துவர் இல்லாத நேரத்திலே வைத்தியராகவும் துணிந்து செயற்பட்டார். ஒரு மாதத்தில் இருபது தொடக்கம் அறுபது வரையான பிரசவங்கள் இவரது காலத்திலே நிகழ்ந்தது என்றால் அது மிகையல்ல.

இவ் வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்களுக்கான ஆளணி இல்லாத போதும் அக்காலத்திலே திரு. மு. மகாலிங்கம், அமரர் கந்தசாமி, அமரர் சுப்பிரமணியம், திரு.இராசரத்தினம், அமரர் க.சகாதேவன், திரு. ஆர்.கந்தசாமி, அமரர் எஸ்.நாகமுத்து, அமரர் கே.சரஸ்வதி, திரு.க.காந்திமதி, திருமதி நீற்றா (குடும்பநல மாது), கே. வைகுந்தநாயகி, கே.வசந்தகுமாரி போன்றோர் வைத்தியர்களுடன் இணைந்து சிறப்பானதொரு வைத்திய சேவையை எம் மக்களுக்கு பெற்றுக் கொடுத்தனர். சுகாதார பணியாளர்களாக திரு.வைரவன், திரு.ஐ.மார்க்கண்டு, திரு.மகேந்திரன், திரு. பிள்ளையான், திரு.திருச்சந்திரன் போன்றோர் சிறப்பாகப் பணியாற்றினர்.

போர்ச்சூழல் காரணமாக யாழ்பெருநிலப்பரப்புடன் தீவுப்பகுதி தொடர்பற்று இருந்தபோது தீவுப் பகுதியில் (ஏனையதீவுகள்) உள்ள நோயாளர்கள் நயினாதீவு வைத்தியசாலையிலேயே தங்கிநின்று சிசிச்சை பெற்று வந்தனர். அந்தக் காலத்திலேயே இவ்வைத்தியசாலையானது ஒரு பராமரிப்பு நிலையமாகவும் காணப்பட்டது. அந்தக் காலத்தில் காரைநகரைச் சேர்ந்த வைத்தியர் கே.பாலசுப்பிரமணியம் என்பவர் மக்களுக்கு சிறந்த சேவை ஆற்றினார். அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அதே ஊரைச் சேர்ந்த வைத்தியர் சங்கரப்பிள்ளை என்பவர் தங்கிநின்று எம் ஊருக்கும் தீவுப்பகுதி மக்களுக்கும் சிறந்த சேவையை வழங்கினார்.

1993 - 1996 வரையான காலப்பகுதியில் வைத்திய அதிகாரியாக எம் மண்ணைச் சேர்ந்த செல்வி அருணா பத்மநாதன் அவர்கள் தனது சேவையை எம் மக்களுக்கு வழங்கினார். இக் காலப்பகுதியில் மருத்துவ மாதுவாக, யாழ்ப்பாணம் மாசியப்பிட்டியைச் சேர்ந்த டானியல் (P.H.M) அவர்கள் பல பிரசவங்களை இங்கே செய்து முடித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

2003 - 2007 ஆண்டு வரை வைத்திய அதிகாரியாக புங்குடுதீவைச் சேர்ந்த சண்முகரெத்தினம் அவர்கள் கடமையாற்றினார். இவரது காலத்திலேயே வைத்தியசாலைக்குரிய அம்புலன்ஸ் படகு "சமுத்திரதேவி" படகிலே எழுவை தீவுக்குச் சென்றும் சேவையாற்றி வந்தார். இக்காலத்தில் குடும்பநல உத்தியோகத்தராக பருத்தித்துறையைச் சேர்ந்த பா. சசிதா என்பவர் சிறப்புடன் சேவையாற்றினார்.

2007 - 2010ஆம் ஆண்டு வரை வைத்திய அதிகாரிகளாக Dr.த.மெடோனா, Dr.க.அபிராமி, Dr.த.கனிமொழி போன்றோரும் 2012ஆம் ஆண்டு Dr.பு.ரெரன்ஸ் அவர்களும் அவரைத் தொடர்ந்து Dr.செ. சர்வானந்தரும் சிறந்த முறையிலே பல மாற்றங்களுடனும், புது உத்வேகத்துடனும் வைத்திய சேவையினை வழங்கினர். இக்காலப்பகுதியின் பரிசாரகராக இருந்து மேற்பார்வையாளராக பதவி உயர்வு பெற்று திருமதி ப.விஜயலட்சுமி சிறப்புடன் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

2012 - 2015 வரையான காலப்பகுதியில் யாழ் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர்கள் தினமும் அம்புலன்ஸ் வண்டி மூலம் வந்து சிகிச்சை வழங்கி வந்தனர். 2015 - 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் Dr.தினகரன், Dr.மகேஸ்வரி, Dr.கமலநாதன், Dr.உமாபதி, Dr.ராஜ்குமார், Dr.கு.பாலச்சந்ததிரன் போன்ற வைத்தியர்கள் மாறிமாறி சிகிச்சை வழங்கி வந்தனர். குடும்பநல மாதுவாக அனுசியா கடமையாற்றி வந்தார். இக்காலத்தில் பிராந்திய சுகாதார வைத்தியர் பணிமனையில் வைத்தியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவிய காலமாகும். இதனை உணர்ந்து எமது ஊரைச் சேர்ந்த Dr.முருகதாஸ் காந்தி என்பவர் 2016-2018 வரை சிறந்த சேவையாற்றினார். இக்காலப்பகுதியிலேயே அவரின் மரணமும் துரதிஷ்டவசமாக நிகழ்ந்தது.

2018 காலப் பிற்பகுதிகளில் Dr.ந.மகேஸ்வரி, Dr.கனகரெத்தினம், Dr.பாலச்சந்திரன், Dr.பேரின்பநாயகம், Dr.விமலசந்திரன் போன்றோர் மாறி மாறி கடமையாற்றினர். நயினாதீவுக்கென ஒரு நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர். இளைஞர்கள் இது விடயத்தில் அக்கறைகொண்டு செயற்பட்டு கௌரவ ஆளுநர் வரை சென்று முறையிட்டதன் விளைவாக தென் மாகாணம் மாத்தறையைச் சேர்ந்த சகோதரமொழி வைத்தியர் திருமதி Dr.வு.டர்சிகா சில மாதங்கள் நிரந்தர வைத்தியராக பணியாற்ற நியமிக்கப்பட்டு சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

2020ஆம் ஆண்டு தொடர்ந்து நிரந்தர வைத்தியராக Dr.ளு. பேரின்பநாயகம் அவர்களும் நயினாதீவைச் சேர்ந்த Dr.மு.நவரெத்தினராசா (கனடா) அவர்கள் நயினாதீவு மண்ணுக்காக சிறந்த சேவையாற்ற வேண்டும் என்ற பெருநோக்கோடு இங்கு வந்து சேவையாற்றுவது பாராட்டப்பட வேண்டியதாகும். வைத்தியசாலையில் கடமையாற்றும் குடும்பநல உத்தியோகத்தர் தங்குவதற்கான விடுதி புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இன்று குடும்பநல மருத்துவ மாதுவாக உரும்பிராயைச் சேர்ந்த ளு.நிரோஜினி கடமையாற்றிவருகின்றார்.

நயினாதீவு வைத்தியசாலை வரலாற்றில் முதல் தடவையாக இப்பொழுது ஒரு ஆண் தாதி என்ற வகையில் மீள் இணைப்பாக எம்மூரைச் சேர்ந்த திரு. வி. இராசநாயகம் அவர்கள் சிறப்பாக கடமையாற்றி வருவதும் நோயாளர் நலன்புரிச் சங்கம் புதிதாக அமைக்கப்பட்டு புதிய உத்வேகத்துடன் செயற்பட்டு வருவதும் தெல்லிப்பழை வைத்தியசாலையில் கடமையாற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் ந.சரவணபன் அவர்கள் மாதத்தில் ஒரு தடவை இவ் வைத்தியசாலைக்கு வருகைதந்து அர்ப்பணிப்புமிக்க சேவையை வழங்கிவருவதும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாகும். மேலும், இவ்வைத்தியசாலைக்கென ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு இரவு வேளைகளில் பாதுகாப்புக் கடமைகளை வழங்குவதும் விசேடமாக குறிப்பிடவேண்டியதொன்றாகும்.

இவ்வைத்தியசாலைக்கு வருகை தரும் அவசர நோயாளர்கள் அம்புலன்ஸ் வண்டியின் ஊடாக நாகபூசணி அம்மன் ஆலய இறங்குதுறைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ் படகுமூலம் குறிகட்டுவான் இறங்குதுறைக்கு கொண்டுசெல்லப்படுகின்றனர். அங்கிருந்து புங்குடுதீவு, வேலணை வைத்தியசாலைகளுக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டி மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இதில் சிலவேளைகளில் வீண் காலதாமதம் ஏற்படுவதும் அதனால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதும் தவிர்க்கமுடியாததாகின்றது.

எமது வைத்தியசாலையில் காலத்துக்குக் காலம் வைத்தியர் இல்லாத பிரச்சினை ஏற்படுவது ஒரு பாரிய அச்சுறுத்தலாகவே உள்ளது. எம்மூரைச் சேர்ந்த பல வைத்தியர்கள் வதிவிட மற்றும் தொழில் முன்னேற்றத்தின் நிமித்தமாக பல்வேறு இடங்களில் வைத்தியசேவையாற்றி வருவது அனைவரும் அறிந்ததே. இவர்களை ஒருங்கிணைத்து மாதத்திற்கு ஒருவர் என்ற வகையில் இங்கே சேவையாற்ற தியாகங்களை மேற்கொண்டு முன்வருவார்களாயின் நிரந்தர வைத்தியர் இல்லாத பிரச்சினையை எளிதில் தீர்க்கக்கூடியதாக இருக்கும் என்பதே எம்மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பாகும்.

எம்மூர் வைத்தியசாலை அமைக்கப்பட்டு தற்போது ஏழு தசாப்தங்களை அண்மித்து இருக்கின்றது. இவ்வைத்தியசாலை கடற்கரையை அண்டிய பகுதியில் அமைந்திருப்பதால் எளிதில் அதன் சுவர் கட்டடங்கள் பழுதடைந்து உடைந்தவண்ணமே உள்ளன. தீந்தை பூசினாலும் அவை நின்று நிலைப்பதில்லை. எனவே, ஒரு புதிய வைத்தியசாலையை அமைக்கவேண்டிய தேவைப்பாடு எழுவதும் தவிர்க்கமுடியததாகின்றது. இது தொடர்பில் வாதப் பிரதிவாதங்களுக்கு அப்பால் ஜர்மனியில் வசிக்கும் திருமதி ஜெ.வாசன் குடும்பத்தினர் ஜர்மன் செஞ்சுலுவைச் சங்கத்தின் உதவியுடனும் எம்மூரைச் சார்ந்த புலம்பெயர் அமைப்புக்களினதும் ஏனைய அரசசார்பற்ற அமைப்புக்களினதும், பொதுமக்களினதும் உதவியுடன் புதிய வைத்தியசாலையை கட்டுவதற்கு எடுத்திருக்கும் முயற்சி வெற்றியளிக்குமாயின் அனைவருக்கும் மகிழ்ச்சியே. வைத்திய அதிகாரிகளினால் சிறந்த செவையினை வழங்குவதற்கு அவர்களுக்கு பொதிய வசதிகளை பெற்றுக்கொடுப்பது இன்றியமையாதது ஆகும்.

எமது வைத்தியசாலையின் சேவை சிறப்பாக அமைவதற்கு காலாதிகாலமாக செயற்பட்டுவரும் எம்மூரைச் சார்ந்த வைத்தியர்கள், ஊழியர்கள் அதேபோல ஏனைய இடங்களைச் சார்ந்த வைத்தியர்கள், ஊழியர்கள் ஆகியோரரின் அர்ப்பணிப்புமிக்க மகோன்னதமான சேவையாலேயே எமது மக்களுக்கான வைத்தியசேவை நீடித்து நிலைபெற்றிருக்கிறது. அதேபோல அரச நிறுவனங்கள், சுகாதார அமைச்சு, பொது அமைப்புகள், தனிநபர்கள் போன்றோர் எம் வைத்தியசாலைக்கு வழங்கும் அன்பளிப்புக்களும், சேவைகளும் எம் வைத்தியசாலையின் சேவையை மேலும் விரிவுபடுத்தி ஓர் முன்னேற்றப் பாதைக்கு இட்டுச்சென்றுகொண்டிருக்கின்றது எனலாம்.

மருத்துவர் ப. க. நவரெட்ணராஜா அவர்களின் வருகையின் பின்னர் நயினாதீவு வைத்தியசாலையில் பல்வேறு அபிவிருத்திப்பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன் நயினாதீவு மக்களுக்கான வைத்திய வசதியில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்பட்டது எனலாம். புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் வைத்திய அதிகாரிக்கான அறை செப்பனிடப்பட்டதுடன் நோயாளர் காவுவண்டிக்கான தரிப்பிடமும் அமைக்கப்பட்டுள்ளது. 2020 இல் அரசாங்கத்தினால் வெசாக் பண்டிகையினை நயினாதீவில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றவேளை நயினாதீவு வைத்தியசாலையின் ஆண்கள் மறறும் பெண்கள் விடுதிகளை செப்பனிடுவதற்கான நிதி அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டதுடன் நயினாதீவு விகாராதிபதி அதி வணக்கத்துக்குரிய நவடகல படும தேரர் அவர்களின் விடா முயற்சியினால் கடற்படையினரின் பங்களிப்புடன் திருத்தவேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு ஆண்கள் மறறும் பெண்கள் விடுதிகள் திறந்துவைக்கப்பட்டுள்ளது. மேலும் விடுதிகளுக்கு தேவையான கட்டில்கள் மற்றும் பல்வேறு மருத்துவ உபகரணங்களும் அன்பளிப்புக்களாக கிடைத்துள்ளது. முகப்பேற்றுவிடுதி, மருந்தகம், சத்திர சிகிச்சை அறை என்பவற்றை செப்பனிடுவதற்கு வைத்தியசாலை நலன்புரிச்சங்கத்துடன் இணைந்து மருததுவர் ப.க.நவரெட்ணராஜா அவர்கள் பல்வேறு முயற்சிகளை எடுத்துவருகின்றார்.

**நயினாதீவு வைத்தியசாலையில் கடமையாற்றிய**
**நிரந்தர வைத்தியர்கள் விபரம்**

01. வைத்திய கலாநிதி பொ.நடராசா (நயினாதீவு)
02. வைத்திய கலாநிதி S. அப்பாத்துரை
03. வைத்திய கலாநிதி S. விநாயகமூர்த்தி (கரவெட்டி)
04. வைத்திய கலாநிதி க. கதிரேசு (நயினாதீவு)
05. வைத்திய கலாநிதி S. பழனிவேலு (அனலைதீவு)
06. வைத்திய கலாநிதி S. செந்தில்குமாரன் (திருநெல்வேலி)



07. வைத்திய கலாநிதி S. தர்மலிங்கம்
08. வைத்திய கலாநிதி S. ஸ்ரீராகவன் (இமையானன்)
09. வைத்திய கலாநிதி ச. இராசரெத்தினம் (நயினாதீவு)
10. வைத்திய கலாநிதி த. இரத்தினசிங்கம் (நயினாதீவு)
11. செல்வி ளு. சேனாதிராசா (காரைநகர்)
12. வைத்திய கலாநிதி S. தர்மசீலன் (கோண்டாவில்)
13. வைத்திய கலாநிதி ஆ. கருணாகரன் (குப்பிளான்)
14. வைத்திய கலாநிதி S. சத்தியசீலன் (யாழ்ப்பாணம்)
15. வைத்திய கலாநிதி தியாகர் திருநாவுக்கரசு (நயினாதீவு, இருமுறை)
16. வைத்திய கலாநிதி திருமதி. அருணாா பத்மநாதன் (நயினாதீவு)
17. வைத்திய கலாநிதி மு. பாலசுப்பிரமணியம் (காரைநகர்)
18. வைத்திய கலாநிதி அமரர் அ.சங்கரப்பிள்ளை (காரைநகர்)
19. வைத்திய கலாநிதி அமரர் S. இரத்தினசபாபதி (பருத்தித்துறை)
20. வைத்திய கலாநிதி S. டயஸ் ( காலி)
21. வைத்திய கலாநிதி S. சண்முகரெத்தினம் (புங்குடுதீவு)
22. வைத்திய கலாநிதி ரெறன்ஸ் புஸ்பராசா ( அச்சுவேலி)
23. வைத்திய கலாநிதி மெடோனோ செல்வரத்தினம்
24. வைத்திய கலாநிதி S. சர்வானந்தர்
25. வைத்திய கலாநிதி அபிராமி ஆனந்தராசா
26. வைத்திய கலாநிதி த. கனிமொழி
27. வைத்திய கலாநிதி K. பாலச்சந்திரன் (நயினாதீவு)
28. வைத்திய கலாநிதி முருகேஸ் காந்தி (நயினாதீவு)
29. வைத்திய கலாநிதி N. மகேஸ்வரி
30. வைத்திய கலாநிதி திருமதி T டர்சிகா (மாத்தறை)
31. வைத்திய கலாநிதி S.பேரின்பநாயகம்
32. வைத்திய கலாநிதி க.நவரெத்தினராசா (நயினாதீவு)

**தற்போது வைத்தியசாலையில் கடமையாற்றும்**
**வைத்தியர்கள் - ஊழியர்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| வைத்திய அதிகாரி | - | Dr. S. பேரின்பநாயகம் |
| | - | Dr. மு. நவரெத்தினராசா |
| பல் வைத்தியர் | - | Dr. ளு. தர்சிகா |
| மருத்துவ கலவையாளர் | - | N. சுப்ரான் |
| குடும்பநல மாது | - | S. நிரோஜினி |
| தாதிய உத்தியோகத்தர் | - | திரு.வி.இராசநாயகம் (மீள் இணைப்பு) |
| பரிசாரகர்கள் | - | T. ரமேஸ்<br>I. மார்க்கண்டு<br>V. தமிழ்வாணி<br>தி. நந்தினி<br>K. கிருஷ்ணேஸ்வரி<br>K. மரியகொலச்சிக்கா |
| சுகாதார தொழிலாளி | - | ம. ஸ்ரீகாந்த்<br>K. சசிகலைவாணி<br>த. தாரணி |
| அம்புலன்ஸ் சாரதி | - | R. கமலகண்ணன் |
| அம்புலன்ஸ் படகு | - | A. சில்வஸ்ரர்<br>N. டிக்சன்<br>பு. விமலேஷன்<br>K. நிமல்ராஜ் |

ஆக்கம்: திரு. தருமலிங்கம் பாலமுருகன்
ஆசிரியர் (மேல்மாகாணம்)
நயினாதீவு






நயினாதீவு வடக்கு தண்ணீர்
தாங்கியும் அதன் குளமும்




கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம்
நயினாதீவு
Seawater Desalination Plant
National Water Supply & Drainage Board
Nainativu




MAN & CO
Building & Maintenance
SHOP FITTING
DOUBLE GLAZING
BATH ROOM
APPROVED CONTRACTOR
safe
ELECTRICAL WIRING
KITCHEN
ALL GAS & ELECTRICAL WORKS ARE CARRIED OUT BY GAS SAFE & NIC APPROVED CONTRACTORS
M: 07903 216 934
3 Fryent Way, Kingsbury, London NW9 9ER
PATIOS
LOFT CONVERSION
உங்கள் தேவைகளுக்கான வரைபடங்களை வரைந்து கொள்வதற்கும் அது தொடர்பான ஆலோசனைகள் பெறுவதற்கும் உள்ளூராட்சிமன்ற (Council) அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் எங்களிடம் ஆலோசகர்கள் உள்ளனர்
No call out charge
CENTRAL HEATING
DRIVE WAYS
EXTENSIONS
Email-thiru@manandco.co.uk / Web: www.manandco.co.uk

# நயினாதீவில் வங்கிசார் செயற்பாட்டின் தேவையும் வளர்ச்சியும்



நயினாதீவில் வங்கி ஒன்றின் தேவை நீண்டகாலமாக இருந்துவந்தபோதிலும் நயினாதீவு மக்கள் தங்கள் வங்கி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ள வேலணை, ஊர்காவற்றுறை அல்லது யாழ்ப்பாணத்துக்கு சென்றுவர வேண்டியிருந்தது. குறிகாட்டுவானூடான கடல் பயணம் ஆரம்பித்ததன்பின்னர் ஊர்காவல்துறையின் முக்கியத்துவம் நயினாதீவு மக்களுக்கு குறைந்துபோய்விட்டது.

இருப்பினும் வங்கி கொடுக்கல்வாங்கல்களுக்கு அப்பால் கிராமப்புற மக்களின் சேமிப்பினை ஊக்குவிக்கும் முகமாக தேசிய சேமிப்பு வங்கி - NSB (National Saving Bank) தபாலகத்தினூடாக தபால் சேமிப்பு கணக்கினை அறிமுகப்படுத்தி சாதாரண வங்கி வட்டிவீதத்துக்கு மேலதிகமாக 1% வட்டியினை வழங்கி வந்தது. இந்தச் சேமிப்பு கணக்கினை எம்மவர்கள் பலர் நயினாதீவு தபாலகத்தில் பேணிவந்ததுடன் அவர்களின் எந்தச் சிறிய சேமிப்பினையும் இந்தச் சேமிப்புக் கணக்கில் வைப்பிலடக்கூடியதாக இருந்தது.

நாட்டில் யுத்த சூழ்நிலை நிலவிய காலத்தில் அரசாங்கம் பாதுகாப்புக்கருதி அரச உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகளை காசோலை மூலமே வழங்கிவந்தது. நயினாதீவினைப் பொறுத்தவரையில் மூன்று பாடசாலை ஆசிரியர்கள், தபாலக உத்தியோகத்தர்கள் ஊழியர்கள், வைத்தியர், வைத்தியசாலை பணியாளர்கள் ,பிரதேச சபை உப அலுவலக பணியாளர்களுக்கான சம்பள கொடுப்பனவுகள் காசோலை மூலமே வழங்கப்பட்டுவந்தது.

மக்கள் இந்த காசோலையினை மாற்றுவதற்கு வேலணை அல்லது யாழ்பாணத்திற்கே சென்றுவரவேண்டி இருந்தது. இருப்பினும் அந்த காலத்தில் ஊரிலிருந்த கடைகளில் (வ. க .கடை, சு. கு .கடை, காராளியர் கடை, மாணிக்கம் கடை, நியூ மாணிக்கம் கடை, மணிவாசகம் கடை) கடன் கணக்குகளை பெரும்பாலான அரச உத்தியோகத்தர்கள் வைத்திருந்தமையினால் தமது சம்பள காசோலைகளை கடைகளில் கொடுத்து தமது கடனை கழிவு செய்ததுடன் மீதியினை கடை உரிமையாளர்களிடம் பணமாக பெற்றுக்கொண்டனர். இவ்வாறான சூழ்நிலையில் நயினாதீவினைச் சேர்ந்த பெரும்பாலான அரச ஊழியர்களுக்கு தமது சம்பள காசோலையினை பணமாக்குவதற்கு வங்கிக்குச் செல்லவேண்டிய தேவை இருக்கவில்லை. கடை உரிமையாளர்களும் அரச காசோலை என்ற காரணத்தினால் எந்தவித பயமும் இன்றி காசோலைகளை பெற்றுக்கொண்டதுடன் சில வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்திற்கு கொள்வனவிற்கு செல்லும்போது தமது கொள்வனவு செலவுக்கு அந்த காசோலைகளை பயன்படுத்தி வந்ததுடன் சிலர் அவர்களின் வங்கி கணக்கில் வைப்பிலிட்டனர்.

இது தவிர நயினாதீவினைப் பொறுத்தவரையில் அதிகம் பணம் சேரும் இடமாக நயினை நாகபூசணி அம்பாள் கோவில் காணப்பட்டுவந்ததுடன் உண்டியல் சில்லறைகளே பல ஆயிரங்களை தாண்டி இருக்கும். இருப்பினும் ஆலய வருமானத்தினை வைப்பிலிடக்கூடிய வங்கி வசதி நயினாதீவில் காணப்படாமையினால் ஆலய நிர்வாகம் அந்த பணத்தினை யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசென்று வங்கியில் வைப்பிலிட வேண்டி இருந்தது. இது தற்துணிவினடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுவந்தாலும் ஆபத்துநிறைந்ததாகவே காணப்பட்டது.

1991 முதல் 1996 வரையான காலப்பகுதியில் நயினாதீவிற்கும் யாழ் பெருநிலப்பரப்புக்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தமையினால் வங்கித் தேவைகளுக்கு நயினாதீவு மக்களும் அம்பாள் ஆலய நிர்வாகமும் திருகோணமலை மற்றும் கொழும்புக்கே செல்லவேண்டி இருந்தது.

மேலும் 1983 இல் நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலையினால் எம்மவர் பலர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு சென்றமையினால் ஊரிலுள்ள உறவுகளின் செலவுகளுக்கு பணம் அனுப்புவதற்கு நயினாதீவில் வங்கி வசதி இல்லாதிருந்ததினால் பலர் கடிதங்களுக்குள் வெளிநாட்டு நாணய தாள்களை வைத்து அனுப்பி வந்ததுடன் இவ்வாறு கடிதங்களுக்குள் பணம் இருந்த காரணத்தினால் சில சந்தர்ப்பங்களில் அந்தக் கடிதங்கள் உரியவர்களுக்கு கிடைக்காமல் போனதும் உண்டு. கடிதங்களுக்குள் பணத்தினை வைத்து அனுப்புவது சட்டவிரோதமானது.

பிற்பட்ட காலத்தில், வெளிநாட்டு பணமனுப்புதல்கள் உண்டியல் எனப்படும் முகவர்களினூடாக அனுப்பப்படவே மக்கள் அந்த முகவர்களிடம் சென்று இலங்கை ரூபாயிலேயே பணத்தினை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தபோதிலும் நயினாதீவு மக்கள் பணத்தினை பெற்றுக்கொள்ள யாழ்ப்பாணம் செல்லவேண்டியிருந்தது. சிலர் வெளிநாடுகளில் இருந்து தமது உறவுகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக பணவனுப்பல்களை மேற்கொண்டுவந்தனர். முகவர்களிடம் சென்று பணத்தினை பெற்றுக்கொள்வதானாலும் வங்கிகளில் பணத்தினை பெறுவதானாலும் நயினாதீவு மக்கள் வேலணைக்கோ அன்றி யாழ்ப்பாணத்துக்கோ செல்லவேண்டி இருந்தது.

இந்தச் சூழ்நிலையில் தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போராட்டம் 2009 இல் மௌனிக்கப்பட்ட பின்னர் பௌத்த விகாரையை தரிசிப்பதற்காக சிங்கள பௌத்த மக்களின் வருகை நயினாதீவிற்கு அதிகரித்தது. இந்த சூழ்நிலையில் நயினாதீவு பௌத்த விகாரையின் வருமானமும் அதிகரிக்கவே அந்த வருமானத்தினை வைப்பிலிட நயினாதீவில் வங்கி ஒன்றின் தேவை அதிகரித்தது. அதிகரித்த வங்கி தேவையினைப் பூர்த்திசெய்ய இலங்கை வங்கியின் கிளை ஒன்று நயினாதீவு நாக விகாரைக்கு அருகிலுள்ள திருமதி மனோன்மணி ஆசிரியர் அவர்களின் இல்லத்தினை வாடகைக்கு பெற்று 2010 ஆம் ஆண்டு முதல் இயங்கிவருகின்றது.

நயினாதீவு மக்களும் நாகபூசணி அம்மன் ஆலய நிர்வாகமும் பௌத்த விகாரையும் தமது வங்கி செயற்பாடுகளை நயினாதீவில் நிறுவப்பட்டுள்ள அரச வங்கியான இலங்கை வங்கி கிளையினூடாக இலகுவாக மேற்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் நயினாதீவிற்கு வருகை தரும் சைவ மற்றும் பௌத்த சுற்றுலா பயணிகளும் பயனடைந்து வருகின்றனர்.

நயினாதீவில் வங்கிசேவையின் விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக ஒத்தோபர் 2021இல் தன்னியக்க வங்கிச் செயற்பாட்டு இயந்திரம் (ATM) பொருத்தப்பட்டு செயற்பட்டு வருவதுடன் நயினாதீவு மக்களும் சுற்றுலாப் பயணிகளும் இதன்மூலம் பெரிதும் பயனடைந்து வருகின்றனர்.

நயினாதீவு ஒரு சிறிய தீவாக இருப்பினும் ஆரம்ப மற்றும் இரண்டாம்தர பாடசாலைகள், வைத்தியசாலை, பிரதேசசபை அலுவலகம், நூலகம், ஆயுள்வேத வைத்தியசாலை போன்ற அரச சேவை வசதிகளுடன் இன்று வங்கி வசதியும் கிடைக்கப்பெற்றுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. நயினாதீவு இலங்கை வங்கி கிளையில் ஆரம்பம் முதல் பலர் கடமையாற்றியிருந்தாலும் எமது மண்ணின் புதல்வி செல்வி கணேசலிங்கம் (பெரியதம்பி) சாயினி அவர்கள் வங்கி உதவியாளராக நியமிக்கப்பட்டு 2019 முதல் கடமையாற்றிவருகின்றமை எமது மண்ணுக்கு பெருமை சேர்ப்பதாய் அமைந்துள்ளது.

திரு சிவபாதசேகரம் மணிகரன் B.Com
உதவி முகாமையாளர் தரம்
தேசிய சேமிப்பு வங்கி
வெள்ளவத்தை - கொழும்பு
3 ஆம் வட்டாரம் நயினாதீவு






# நயினாதீவு தபால் அலுவலக வரலாறும் அதனூடான சேவைகளும்



இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் நயினாதீவு திரு தம்பையா கணேசர் அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆளணியற்ற உப தபாலதிபராக நியமிக்கப்பட்டதுடன் இலங்கையின் பிற மாவட்டங்களிலிருந்து கிடைக்கும் கடிதங்களை மக்கள் 5ஆம் வட்டாரத்திலிருந்த அவரது இல்லத்தில் சென்று பெற்று வந்தனர்.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் அரசாங்கத்தினால் நயினாதீவில் உப தபால் அலுவலகம் அமைக்கப்பட்டதுடன் அதற்கான ஆளணியும் நியமிக்கப்பட்டனர். 2ஆம் வட்டாரத்திலிருந்த திரு நடராச சர்மா அவர்கள் உப தபால் அதிபராக நியமிக்கப்பட்டதுடன் நாகபூசணி வித்தியாசாலைக்கு அருகிலுள்ள அவரது வீட்டின் ஒரு பகுதியினை அரசாங்கம் வாடகைக்குப்பெற்று உப தபால் அலுவலகமாக 1973 ஆம் ஆண்டு வரையும் செயற்பட்டு வந்ததுடன் இது யாழ்ப்பாண பிரதம தபால் அலுவலகத்தின் கட்டுப்பாட்டின் கீழும் யாழ்ப்பாண பிரதம மாவட்ட தபால் அத்தியட்சகரின் பரிபாலனத்திலும் இயங்கிவந்தது.

உப தபால் அலுவலகத்திற்க்கான உப தபால் அதிபர்களின் நியமனங்கள் ஓய்வூதியமற்ற ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்களாக இருந்ததுடன் அவர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்தது. இந்த உபதபால் அலுவலகத்திற்கு திருவாளர்கள் சதாசிவம், பாலசிங்கம் மற்றும் விசுவலிங்கம் ஆகியோர் தபால் விநியோகத்தர்களாக நியமிக்கப்பட்டனர். இந்த உப தபால் அலுவலகத்தில் தந்தி வசதிக்கான இயந்திரம் பொருத்தப்பட்டு திரு குற்றாலலிங்கம் அவர்கள் தந்தி இயந்திர இயக்குனராக நியமிக்கப்பட்டார். திரு குற்றாலலிங்கத்தின் பின்னர் திரு மகாதேவா அவர்கள் தந்தி இயந்திர இயக்குனராக கடமையாற்றியதுடன் தந்தி சேவகராக திரு முத்துக்குமாரு அவர்கள் நியமிக்கப்பட்டார். தந்தி இயந்திர இயக்குனர் மற்றும் தந்தி சேவகர் ஆகியோர் மாதாந்த அரச சம்பளத்திற்கும் ஓய்வூதியத்துக்கும் உரித்துடையவர்களாக இருந்தார்கள்.

இந்தக் காலத்தில் காசுக்கட்டளை, தந்திக்காசுக்கட்டளை, தபாற்கட்டளை, தபாற்கந்தோர் சேமிப்புக்கணக்கு போன்ற பணப்பரிமாற்ற வழிமுறைகள் இந்த உபதபால் அலுவலகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன் மக்களுக்கான மாதாந்த உதவுத்தொகை, கச நோயாளர்களுக்கான கொடுப்பனவு, தொழுநோயாளர்களுக்கான கொடுப்பனவு, மூன்று பாடசாலை ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவு என்பன இந்த உப தபால் அலுவகத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

நயினாதீவிற்கான தபால் பைகள் யாழ்ப்பாணம் பிரதம தபால் அலுவலகத்திலிருந்து அரச பேரூந்து மூலம் ஊர்காவல்துறை துறைமுகத்திற்கு எடுத்துவரப்பட்டு அங்கிருந்து படகு மூலம் நயினாதீவிற்கு கொண்டுவரப்பட்டது. அந்தக்காலத்தில் நயினாதீவிற்கும் ஊர்காவல்துறைக்கும் இடையில் இலக்கம் 1 (No 1), இலக்கம் 2 (No 2) என்ற இரு படகுகள் சேவையில் ஈடுபட்டதுடன் நயினாதீவிலிருந்தும் தபால் பைகள் படகு மூலம் ஊர்காவல்துறைக்கு கொண்டுசெல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் கொண்டுசெல்லப்பட்டுவந்தது.

தபால் விநியோகத்தர்களாக கடமைபுரிந்த திருவாளர்கள் பாலசிங்கம் மற்றும் விசுவலிங்கம் ஆகியோர் வேறு தொழில்களுக்கு சென்றமையினால் அவர்களின் வெற்றிடங்களுக்கு திருவாளர்கள் சுந்தரலிங்கம் மற்றும் இராசரெத்தினம் ஆகியோர் நியமிக்கப்பட்டார்கள். திரு சுந்தரலிங்கம் அவர்கள் தபால் விநியோகத்தராக கடமையாற்றிய காலத்தில் குதிரையின் மூலமும் குதிரை வண்டியின் மூலமும் தபால் விநியோகம் செய்தமை சிறப்பம்சமாகும்.

வெளிநாட்டு வருமானங்களோ தொடர்புகளோ மிக மிக குறைவாக இருந்த இந்த காலத்தில் எம் ஊரவரில் பலர் தொழில் நிமித்தம் இலங்கையின் பலபாகங்களிலும் குறிப்பாக கொழும்பு நகரில் அரச உத்தியோகத்தர்களாக வர்த்தகர்களாக இருந்துவந்தனர். இவர்கள் தமது குடும்பத்தினருக்கு மாதாமாதம் காசுக்கட்டளையாகவும் தபால் காசுக்கட்டளையாகவும் பணத்தினை அனுப்பிவந்தார்கள். இந்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான பணம் யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு கொடுப்பனவுகள் நயினாதீவு உப தபாலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

உப தபாலதிபராக கடமையாற்றிய திரு நடராச சர்மா அவர்கள் இளைப்பாறியதும் திருமதி சிவகாமி மகாதேவா அவர்கள் உப தபால் அதிபராக நியமிக்கப்பட்டார். இந்தக் காலத்தில் ஊர்காவல்துறை படகு போக்குவரத்துக்குப் பதிலாக புங்குடுதீவு இறுப்பிட்டி களுதைப்பிட்டி ஆகிய துறைமுகங்களூடாக புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச்சங்க படகின் மூலம் தபால் பைகள் நயினாதீவிற்குக் கொண்டுவரப்பட்டதுடன் நயினாதீவில் சேகரிக்கப்பட்ட தபால்களும் அவ்வாறே யாழ்ப்பாணத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

காலம்சென்ற முன்னாள் பிரதமர் கௌரவ திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில் அமைந்த அரசில் கௌரவ திரு குமாரசூரியர் அவர்கள் தபால் அமைச்சராக இருந்தபோது நயினாதீவு உப தபால் அலுவலகம் இரண்டாம் தர தபாலகமாக 1973 ஆம் ஆண்டு தபால் திணைக்களத்தினால் தரமுயர்த்தப்பட்டது. அதன்படி நயினாதீவு 5ஆம் வட்டாரத்திலுள்ள திரு சின்னையா குணரத்தினம் அவர்களின் வீட்டை வாடகைக்கு பெற்றுக்கொண்ட தபால் திணைக்களம், நயினாதீவு தபால் அலுவலகம் மற்றும் தபால் அதிபர் விடுதி என்பவற்றினை அமைத்து செயற்படுத்தத் தொடங்கியது. முன்னாள் பிறப்பு இறப்பு திருமண பதிவாளர் காலம்சென்ற திரு சரவணமுத்து இலங்கைநாயகம் அவர்கள் அக்காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அங்கத்தவராக இருந்து நயினாதீவு உப தபால் அலுவலகம் தரமுயர்த்தப்படுவதற்கு பெரும்பங்காற்றினார்.

தரமுயர்த்தப்பட்ட தபால் அலுவலகத்தின் முதலாவது தபால் அதிபராக யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் இருந்து மாற்றுத்தபால் அதிபராக (Relief Postmaster) திரு கருணைராசா அவர்கள் நியமிக்கப்பட்டார். உப தபால் அதிபர்களாக கடமையாற்றியவர்கள் குறிப்பிட்ட உப தபாலகம் தரமுயர்த்தப்படும்போது தாமாக பதவியிழந்தவர்களாகவே கருத்தப்பட்டுவந்த நிலையில் தபால் அமைச்சர் கௌரவ திரு குமாரசூரியர் அவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின்மூலம் திருமதி சிவகாமி மகாதேவா அவர்களை தபால் அதிபர் சேவையினுள் உள்வாங்கப்பட்டு நயினாதீவு தபாலகத்தின் முதலாவது உதவி தபால் அதிபராக நியமிக்கப்பட்டார்.

நயினாதீவு தபாலகம் தரமுயர்த்தப்பட்டபின்னர் தபாலகத்தின் ஆளணியினராக தபால் அதிபர், உதவி தபாலதிபர், ஐந்து தபால் விநியோகத்தர்கள், அலுவலக உதவியாளரொருவர், தந்தி சேவகர் ஒருவர் என ஒன்பது அரச சேவையினர் நியமிக்கப்பட்டனர். தபால் அதிபர் சேவையில் நான்கு (04) ஆண்டு சேவைக்காலத்தினைக் கொண்ட இரண்டாம்தர தபாலகமான நயினாதீவு தபால் அலுவலகத்திற்கு 1974 ஆம் ஆண்டு திரு சிவபதம் அவர்கள் தபால் அதிபராக நியமிக்கப்பட்டதுடன் திருமதி சிவகாமி மகாதேவா அவர்கள் கொழும்புக்கு மாற்றலாகி சென்றமையினால் அவரின் இடத்துக்கு திரு சண்முகராசா அவர்கள் நியமிக்கப்பட்டார்.

திரு சிவபாதத்தின் பின்னர் திரு அமிர்தலிங்கமும் அவரின் பின்னர் திரு குலசிந்தாமணியும் தபால் அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர். 1985 இல் யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் 4 ஆண்டு சேவையினை பூர்த்திசெய்த நிலையில் பராமனாதி யோகராசா ஆகிய நான் நயினாதீவு தபால் அதிபராக அடுத்த நான்காண்டுகளுக்கு நியமிக்கப்பட்டேன். திருமதி சிவகாமி மகாதேவா அவர்கள் கொழும்பிலிருந்து மாற்றலாகி நயினாதீவு தபாலகத்தில் உதவி தபால் அதிபராக கடமையேற்றார்.



1983இல் தமிழீழ விடுதலைக்கான ஆயுத போராட்டம் உக்கிரமடையவே அரச சேவைகள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது. இந்த காலத்தில் நயினாதீவு முழுவதும் கடற்படையின் கட்டுப்பாட்டில் இருந்த அதேவேளை குறிகாட்டுவான் மற்றும் புங்குடுதீவு என்பன தமிழீழ விடுதலை போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே நான் நயினாதீவு தபாலகத்தில் நயினாதீவினைச் சேர்ந்த முதலாவது தபால் அதிபராக பொறுப்பேற்றேன். நெருக்கடியான சூழ்நிலை காணப்பட்டபோதிலும் எனது ஊருக்கும் மக்களுக்கும் சேவையாற்ற கிடைத்த வாய்ப்பு என்பது என்றும் மறக்கமுடியாத இனிமையான நாட்களாகவே என்மனத்துள் நிலைத்து நிற்கின்றது.

நான் தபாலதிபராக பதவியேற்ற போது தபால் விநியோகஸ்தர்களாக திருவாளர்கள் சுந்தரலிங்கம், முத்துக்குமாரு, சண்முகநாதன், குமாரசூரியர் மாற்றம் ஞானேஸ்வரன் ஆகியோர் கடமையாற்றியதுடன் தந்தி சேவகராக திரு ராசலிங்கமும் அலுவலக உதவியாளராக திரு புனிதநாதன் அவர்களும் கடமையாற்றினார். திரு ராசலிங்கம் அவர்கள் திரு முத்துக்குமாரு அவர்கள் ஓய்வு பெறவே தபால் விநியோகத்தராக பதவி உயர்வு பெற்றார். அந்தவகையில் திரு ராசலிங்கம் அவர்களின் இடத்திற்கு தற்காலிக தபால் ஊழியராக இருந்த திரு தவனேசன் அவர்கள் நியமிக்கப்பட்டார்.

தபால் ஊழியர்கள் சீருடைகளை அணிந்து பணியாற்ற வசதியாக இலவச சீருடை துணிகளை பெற்றுக்கொடுத்து கடமை நேரத்தில் சீருடை அணிந்து பணியாற்ற தபால் ஊழியர்களுக்கு வாய்ப்பேற்படுத்தி கொடுத்ததுடன் அலுவலக செயற்பாடுகளை உறவு நிலைகளுக்கப்பால் முடிந்தவரை திறம்பட நடாத்தி தற்காலிக தபால் ஊழியர்களாக பலரை பதிவுசெய்து, பின்னர் அவர்கள் நிரந்தர தபால் ஊழியர்களாக நியமிக்கப்படுவதற்கும் ஆவன செய்யக்கூடியதாகவிருந்தது.

நயினாதீவு தபாலகம் தரமுயர்த்தப்பட்ட பின்னர் இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பு மற்றும் நிலையான வைப்பு கணக்குகளை தபாலகத்தில் வைத்திருக்கும் வாய்ப்பு ஊர் மக்களுக்கு கிட்டியிருந்தது. மேலும் போர் சூழல் தீவிரமடையவே எம்மவர் பலர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து சென்றமையினால் வெளிநாட்டு கடிதங்கள் மற்றும் பொதிகளின் வரவும் அதிகரித்தது. இது தவிர மக்களுக்கான உதவிக் கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதியம் என்பன தபாலத்தினாலேயே தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவந்தது.

தொலைபேசி ஊடான தொடர்பாடல் வசதிகள் வளர்ச்சியடையாத அந்த காலத்தில் தந்தி சேவையினூடாகவும் வானொலி அழைப்பு எனப்பட்ட சேவையினூடாகவுமே மக்கள் அவசர தொடர்புகளை நயினாதீவு தபாலத்தினூடாக மேற்கொண்டு வந்தார்கள். வானொலி அழைப்பினை மேற்கொள்ளுவதற்கு வசதியாக தொடர்பு கோபுரம் ஒன்றும் நயினாதீவு தபாலகத்தில் அமைக்கப்பட்டதுடன் அந்த கோபுரம் இப்பொழுதும் காணப்படுகின்றது.

பாதுகாப்புக்கருதி, நயினாதீவிற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து எடுத்துவரப்படும் தபால் பைகள் நயினாதீவு கடற்படை முகாமில் சோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே தபாலகத்திற்கு கொண்டுசெல்லப்படல் வேண்டும் என்ற கட்டுப்பாட்டினை கடற்படையினர் விதித்தபோது இதுவிடயம் தொடர்பில் நான் தபால் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்தேன். முத்திரைகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கான பணத்தினை தபாலில் அனுப்புவதனை நிறுத்துவதாக அறிவிக்கப்பட்டதுடன் ஓய்வூதியர்களை அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் கோட்டை ராணுவ முகாமிற்கு வரும்படியும் பாதுகாப்பு காரணங்களினால் அங்குவைத்தே ஓய்வூதிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. முத்திரைகளும் ஏனைய கொடுப்பனவுகளுக்கான பணமும் கோட்டை ராணுவ முகாமில் வைத்தே தபால் திணைக்களத்தினால் தரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தபால் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய செயற்பட்டு ஓய்வூதியர்களுக்கான கொடுப்பனவினை கோட்டை ராணுவமுகாமில் வைத்து மேற்கொண்டதுடன் முத்திரைகளையும் ஏனைய கொடுப்பனவுகளுக்கான பணத்தினையும் எனது தற்துணிவின் பேரிலேயே ஊருக்கு கொண்டுசென்று சேர்க்கவேண்டியிருந்தது. ஏனைய கொடுப்பனவுகளுக்கு பணம் போதாதுபோனால் அடுத்த மாத ஓய்வூதிய கொடுப்பனவிற்கு கோட்டை

ராணுவமுகாமிற்கு செல்லும்வரை காத்திருக்கவேண்டிய சூழ்நிலை காணப்பட்டதுடன் இதனால் மக்களுக்கான சில கொடுப்பனவுகளில் காலதாமதமேற்பட்டதுண்டு.

ஓய்வூதிய கொடுப்பனவுக்காக யாழ்ப்பாணம் செல்லும்போது பண்ணை பாலத்தினூடான போக்குவரத்து தடைப்பட்டிருந்ததினால் அராலித்துறையினூடான படகு போக்குவரத்தின் மூலமே யாழ் பெருநிலப்பரப்பை அடைய முடிந்தது. ஒருதடவை இவ்வாறு வள்ளத்தில் செல்லும்போது வள்ளம் நடுக்கடலில் கவிழ்ந்ததினால் அனைத்து ஓய்வூதிய ஆவணங்களும் கடலில் நனைந்துவிட்டது. இருப்பினும் கழுத்துவரை மட்டுமே கடல் நின்றபடியால் படகில் சென்ற அனைவரும் உயிர்பிழைத்துக்கொண்டோம்.

இது இவ்வாறிருக்க தமிழீழ விடுதலைக்கான ஆயுதப்போரில் அப்போது ஈடுபட்ட தமிழீழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (Eelam People's Revolutionary Liberation Front-EPRLF) சதம் 50 பெறுமதியான ஈழம் முத்திரையினை வெளியிட்டு உள்ளூர் தபால் போக்குவரத்துக்கு அந்த முத்திரையையே பயன்படுத்தும்படி மக்களை கேட்டுக்கொண்டது. அதன்படி நயினாதீவிற்கும் ஈழம் முத்திரை ஒட்டப்பட்ட கடிதங்கள் வரத்தொடங்கின. இதனை அறிந்த கடற்படையினர் பலத்த கெடுபிடிகளை ஏற்படுத்தியதுடன் தபால் பைகளை சோதனையிடும்போது ஈழம் முத்திரை ஒட்டி வரும் கடிதங்களை சேகரித்து கடித முகவரியிலிருந்தவர்களை விசாரணைக்கு உட்படுத்தினர். தபாலகத்துக்கும் வந்து ஈழம் முத்திரை தொடர்பில் விசாரணை மற்றும் சோதனைகள் நடத்தினார்கள்.

இவ்வாறு பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் 1985 முதல் 1989 வரை நயினாதீவில் தபால் அதிபராக கடமையாற்றியபின் யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திற்கு மாற்றலாகிச் சென்றேன். எனது இடத்துக்கு எம்மவரான திரு கந்தசாமி மகாதேவா அவர்கள் நியமிக்கப்பட்டதுடன் அவரின்பின்னர் எம்மவர்களான திரு கணபதிப்பிள்ளை குமாரசூரியர் அவர்களும் திரு முத்துக்குமாரு சபேசன் அவர்களும் கடமையாற்றியுள்ளார்கள். தற்போது எம்மவரான திரு நமசிவாயம் கமலம் அவர்கள் தபாலதிபராக கடமையாற்றி வருகின்றார். தற்போது தபாலகத்தில் புதிய இலத்திரனியல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் தொலைபேசி மற்றும் இலத்திரனியல் மூலமான இலகு தந்திச்சேவையும் நடைபெறுகின்றது.

## நயினாதீவு தபாலக சேவைக்காலத்தில் இடர்கால பணி

நயினாதீவிலுள்ள கடற்படைக்கு தேவையான உணவு மற்றும் ஏனைய பொருட்கள் காரைநகர் கடற்படை முகாமிலிருந்து 110 என்று பெயரிடப்பட்ட கடற்படை படகுமூலமே கொண்டுவரப்பட்டு வந்ததுடன் அந்த படகு நயினாதீவு அம்பாள் கோவில் துறைமுகத்திலேயே தரித்து நிற்கும். 1986 இல் இவ்வாறு 110 தரித்து நின்றபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் கண்ணிவெடித்தாக்குதலுக்கு இலக்காகி படகு கடலில் மூழ்கியதுடன் அதில் பயணித்த கடற்படை சிப்பாய்களும் உயிரிழக்க நேரிட்டது. கோபமடைந்த கடற்படை மற்றும் இராணுவத்தினர் அனலைதீவிலிருந்து படகுமூலம் நயினாதீவிற்கு வந்த எம்மவர்கள் 7 பேரை சுட்டுக்கொன்றதுடன் அம்பாள் கோவில் கதவு, முருகன் மற்றும் பிள்ளையாருக்கான தேர்கள் மற்றும் மஞ்சம் என்பவற்றை எரித்துச் சாம்பலாக்கினர்.

இந்த சூழ்நிலையில் பீதியடைந்த நயினாதீவின் வடக்கில் இருந்த மக்கள் நயினாதீவு மகாவித்தியாலயத்தில் ஒன்று சேரவே அப்போதைய மகாவித்தியாலய அதிபராக இருந்த காலம்சென்ற நா க சண்முகநாதபிள்ளை அவர்களுடன் நானும் இணைந்து அகதிமுகாமொன்றை மகாவித்தியாலயத்தில் உருவாக்கி மக்களுக்கு சமைத்த உணவுகளை வழங்க ஏற்பாடு செய்தோம்.

அகதிமுகாம் தொடர்பில் அறிந்துகொண்ட கடற்படையினர் தபால் அதிபர் எங்கே என்று விசாரித்து என்னிடம் வந்தவர்கள் அகதிமுகாமை உடனடியாக மூடிவிடுபடியும் மக்களை உடனடியாக அவர்களின் வீடுகளுக்கு திரும்பும்படியும் சிங்களத்தில் ஆக்கிரோஷமாக கூறினார்கள். மக்களின் பீதியான மனநிலையினை கடற்படைக்கு தெளிவுபடுத்தியதுடன் இரண்டு தினங்களில் மக்கள் வீடுகளுக்கு திரும்புவார்கள் என்று கூறியபோது அதனை ஏற்று கடற்படையினர் திரும்பிச்சென்றனர். மேலும் அப்போது கமநல சேவை



ஆணையாளராக இருந்த எம்மவரான ப க பரமலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவத்தின் உலங்குவானூர்தி மூலம் இராணுவ அதிகாரிகளுடன் நயினாதீவிற்கு வருகை தந்து மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தினார்கள்.

இதன்பின்னர் 1987 இல் இந்திய அமைதிகாக்கும் படைக்கும் தமிழீழ விடுத்தலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பித்தபோது யாழ்ப்பாண பெருநிலப்பரப்பிலிருந்த எம்மூரவர்கள் பாதுகாப்பு தேடி ஊருக்கு வருவதற்காக குறிகாட்டுவான் துறைமுகத்திற்கு வந்து வெள்ளைக்கொடிகளை காட்டியபடி நின்றார்கள். யுத்தம் ஆரம்பித்துவிட்டமையினாய் கடற்படை படுகுபோக்குவரத்தினை இடைநிறுத்தி வைத்திருந்தது. புங்குடுதீவு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலம்.

குறிகாட்டுவானில் மக்கள் கூட்டமாக வெள்ளைக்கொடி காண்பித்தவண்ணம் நிற்பதாக தபால் அதிபர் என்றறீதியில் ஊர் மக்கள் என்னிடம் வந்து தெரிவித்ததுடன் கடற்படையை அணுகி படகு போக்குவரத்துக்கு ஆவன செய்து அனாதரவாக நிற்கும் எம் உறவுகளை ஊருக்கு கூட்டிவர நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். இதுவிடயம் தொடர்பில் கடற்படையை தொடர்புகொள்ள ஏற்கனவே தீர்மானித்திருந்தமையால் நானும் ஊர் மக்களும் நாகவிஹாரையில் அப்போதிருந்த பெரியசாமியை அணுகி விடயத்தினை தெளிவுபடுத்தியதுடன் நானும் பெரியசாமியும் கடற்படை பொறுப்பதிகாரியைச் சந்தித்து நிலைமையினை தெளிவுபடுத்தினோம்.

எமது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட கடற்படை பொறுப்பதிகாரி இரண்டு படகுகளை அனுப்புவதற்கு உடன்பட்டதுடன் தபால் அதிபரான என்னை படகில் சென்று குறிகாட்டுவனிலுள்ள நயினாதீவினை சேர்ந்தவர்களின் பெயர், முகவரி மற்றும் அடையாள அட்டை இலக்கம் என்பன அடங்கிய பட்டியலினை தயாரித்து மூலப்பிரதியை கடற்படையிடம் ஒப்படைக்கும்படியும் அதன் பிரதியினை என்னுடன் வைத்திருக்கும்படியும் கூறப்பட்டது. பட்டியலிலுள்ளவர்கள் ஊரில் ஏதாவது பிரச்சனையில் ஈடுபட்டால் அதற்கு தபால் அதிபராகிய நானே முழு பொறுப்பு என்றும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் நான் கைதுசெய்யப்படுவேன் என்றும் கடற்படை பொறுப்பதிகாரியினால் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையின் நிபந்தனைகள் அனைத்தினையும் ஏற்றுக்கொண்டு இரண்டு படகுகளில் குறிகாட்டுவான் சென்றபோது அங்கு தமிழீழ விடுதலைப் புலிகள் என்னை அழைத்துச்சென்று அரை மணிநேரம் விசாரணை நடத்தினார்கள். அதன்பின்னர் மக்களை பதிவுசெய்து ஊருக்கு அழைத்துவந்தோம். கடற்படை அனைவரையும் கடும் சோதனைக்கு உட்படுத்தியதுடன் ஊருக்குள் செல்ல அனுமதித்தார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து எம்மூரவர்கள் நயினாதீவிற்கு பாதுகாப்பு தேடி வந்தபின்னர் கடற்படை ஒவ்வொருநாளும் தபாலகத்திற்கு வந்து ஏதும் பிரச்சனை உள்ளதா என்று விசாரித்து செல்வார்கள்.

இவ்வாறு தபால் சேவைக்கு அப்பால் நயினைத் தாயின் புதல்வனாகிய நான் ஊரில் தபால் அதிபராக கடமையாற்றிய அந்த நான்கு ஆண்டுகளில் எம்மூர் மக்களுக்கும் என்னால் முடிந்த சேவையினை வழங்க கூடியதாக இருந்தது என்பது மிகுந்த மன நிம்மதியினைத் தருகின்றது.

திரு பரமநாதி யோகராசா
ஓய்வுநிலை பிரதம தபால் அதிபர்
வட்டாரம் 5, நயினாதீவு




அஞ்சல் அலுவலகம் - நயினாதீவு




இலங்கை வங்கிக் கிளை - நயினாதீவு





# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி
# அமுதசுரபி அன்னதான சபை



**1960ஆம் ஆண்டில்லிருந்து 2012 ஆம் ஆண்டுவரை**

வரலாற்றுச் சிறப்பும், ஆன்மீகப் பொலிவும் பெற்று அறுபத்தி நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி சக்திபீடத்தைத் தன்னகத்தே கொண்டு மணிபல்லவம் என்னும் நயினாதீவில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளை உயர் திருவிழாக்களின் போது உள்ளன்போடு நெக்குருக்கி அம்பாளின் அருளாசிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் உள்நாட்டின் பல பாகங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் அம்பாளைத் தரிசிக்க வரும் பல்லாயிரக்கணக்கான அடியார்களின் பசியைப் போக்குவதற்கு உணவுச்சாலைகளோ, சிற்றுண்டிச்சாலைகளோ சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் போதியளவு இருக்கவில்லை. பணத்தைக் கொடுத்துவிட்டு பசி தீராமல் வருந்திக்கொண்டு போவதைக் கண்டு மனம் வெதும்பிய நயினாதீவிலுள்ள அன்புள்ளம் கொண்ட புத்திஜீவிகளும், வர்த்தகர்களும் ஒன்று கூடி, அடியார்களின் பசிப்பிணியைப் போக்குவதற்கு உடனடியாக திடசங்கற்பம் கொண்டவர்களாக இருந்ததன் விளைவாக, அவர்கள் சிந்தனையில் கருவாகி, 1960ம் ஆண்டில் "நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதானசபை" என்ற பெயருடன் ஓர் வரையறுக்கப்பட்ட சபையை உருவாக்கி அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலிருந்து தெற்குப் பக்கமாக சுமார் 300 மீற்றர் தொலைவில் ஒரு தற்காலிக ஓலைக் கொட்கையை அமைத்து, தருமசீலர்களினால் உவர்ந்தளிக்கப்பட்ட பொருட்களின் உதவியைக் கொண்டு அதே ஆண்டு உயர் திருவிழா தொடக்கம் அடியார்களுக்கான அன்னதானத்தைத் தொடர்ந்து வழங்கி பசியைப் போக்கி வந்தனர்.

**அன்னதான சபையின் ஆரம்ப கர்த்தாக்கள்**

நயினாதீவு நாகபூசணி அம்பாளைத் தரிசித்துச் செல்வோரின் பசியைப் போக்கிடும் அறப்பணியில் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதானசபையின் ஆரம்பகர்த்தாக்களாக இருபத்தைந்து (25) அன்புள்ளம் கொண்டவர்கள் இருந்தனர்.

இச்சபையின் தலைவராக முன்னாள் கிராம சபைத் தலைவர் திரு.சி.க.தம்பையா அவர்களும், உபதலைவராக திரு. வே.கந்தையா ஆசிரியர் அவர்களும், இணைக்கச் செயலாளர்களாக திரு.இ.இ.பூபாலசிங்கம், திரு.க.வே.பரமலிங்கம் ஆகிய இருவரும், இணைப் பொருளாளர்களாக திரு.நா.கணபதிப்பிள்ளை, திரு.சி.இ.சின்னத்துரை ஆகிய இருவரும். கௌரவ உறுப்பினர்களாக திரு.வே.க.த.தம்பிமுத்து, திரு.இ.குலசேகரம்பிள்ளை, திரு.சு.கதிரேசு, திரு.நா.காராளபிள்ளை, திரு.வே.ச.இரத்தினம், திரு.க.குமரையா, திரு.வே.கந்தசாமி, திரு.வே.பரமசாமி, திரு.வே.சிவப்பிரகாசம், திரு. வே.க.த.கிருஷ்ணசாமி, திரு.ஐ.இ.பரமலிங்கம், திரு.மு.சண்முகராசா, திரு.ந.சுப்பிரமணியம், திரு.சி.நா.மதியாபரணம், திரு.ஆ.சி.பரமசாமி, திரு.இ.முத்தையா ஆகிய பத்தொன்பது பேரும் விளங்கினர். இவர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள், போற்றுதற்குரியவர்கள்.

ஒவ்வொரு ஆண்டும் ஓலைக் கொட்டகை போடுவதில் பொருளாதார ரீதியாக மட்டுமன்றி காணிக்காரர்களின் வெறுப்புக்களையும், சில விஷமிகளின் நெருக்கடிகளையும் எதிர்ப்புக்களையும் சபையினர் எதிர்நோக்க வேண்டியவர்களாக இருந்தனர். அம்பாளின் அருட்கடாட்சத்தினாலும், சபையினரதும், தொண்டர்களினதும் விடா முயற்சியினாலும் அம்பாளின் அடியார்களுக்குப் பசியை தீர்க்கும் அரும்பணிகளை சகித்துக் கொள்ளமுடியாத சிலரால், தற்காலிகக் கொட்டகை தீயிட்டுக் கொளுத்தப்பட்டபோதிலும் அம்பிகையின் கிருபையினாலும், தொண்டர்களின் முயற்சியினாலும் உணவுப் பொருட்கள் வைத்திருந்த பகுதியில் தீ பரவாமல் பாதுகாக்கப்பட்டது. சபைத் தலைவர் திரு.சி.க.தம்பையா அவர்களின் விவேகம், துணிச்சல், செயற்றிறன் காரணமாகவும் அவர் உடனடியாக ஏனைய செயற்திறன்மிக்க அங்கத்தவர்களுடன் சேர்ந்து அதே தினம் புதிய கொட்டகை அமைத்து அடியார்களுக்கான பகல் அன்னதானத்தைத் வழங்கி பசியைப் போக்கினார். இச்சாதனையை நயினைக் கவிஞரும் கஸ்தூரி என்று அழைக்கப்படுபவருமாகிய மறைந்த ஆ.இராமுப்பிள்ளை அவர்கள் கீழ்வரும் பாடல் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.



"ஒருகாலிருக்க ஒளியோன் எரிக்க உதவாது நிற்க வருணன்
மறுகால் நிறுத்தி ஒரு நாளிகைக்குள் - வளர்
அன்னதான நிலையம் தருமாறு அமைத்த தகவீர
மைந்தர் தனையீன்ற நாடு நயினை"

ஆரம்பத்தில் உயர் திருவிழாக் காலங்களில் அம்பிகை அடியார்களுக்கு அன்னதானம் பகலும் இரவும் வழங்கி வந்தனர். தற்பொழுது வருடாந்த உயர் திருவிழாக்கள் மட்டுமன்றி தைப்பூசம், ஆடிப்பூரம், கும்பாபிஷேகம் போன்ற விசேட தினங்களிலும் வருகைதரும் அடியார்களுக்குச் சிறப்பான முறையில் அன்னதானப் பணியைச் செய்து வருகின்றனர்.

**ஸ்ரீ நாகபூசணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதான சபை மண்டபம்**

அன்னதானத் தருமத் தொண்டைத் தொடர்ந்து செய்து வருவதற்கு ஏதுவாகவும் ஒரு காணியை வாங்கி அதில் ஒரு நிரந்தரமான கட்டிடத்தைக் கட்டி முடிக்க வேண்டுமென நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் யாத்தரீகர்களின் அன்னதான சபையினர் தீர்மானித்தனர். அம்பிகையின் கருணையினால் அவர்கள் சிந்தனைகள் வீண்போகவில்லை.

முன்னைய காலங்களில் இப்பணிக்காகச் சேர்க்கப்பட்ட நிதியில் செலவுகள் போக மீதமாக இருந்த நிதியுடன், தருமசீலர்கள், மற்றும் அடியார்களினால் வழங்கப்பட்ட நிதியுடன் நயினாதீவு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.சு.இராமசாமி, திருமதி.இராமசாமி விசாலாட்சி தம்பதிகளின் காணியிலிருந்து ஐந்து பரப்புக் காணியை சபைக்குச் சொந்தமாக 1967ம் ஆண்டளவில் அன்னதான சபையினர் வாங்கியதோடு, அக்காணியில் 200 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட ஒரு நிரந்தர மண்டபமும் கட்டப்பட்டது. நல் இதயங்களைக் கொண்ட திரு.சு.இராமசாமி, திருமதி.இராமசாமி விசாலாட்சி தம்பதியினரும் இச்சபையின் ஆரம்ப கர்த்தாக்களுக்கு இணையாகப் போற்றுதற்குரியவர்கள். அம்மண்டபத்திற்கு "ஸ்ரீ நாகபூசணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதான சபை மண்டபம்: எனப் பெயரிட்டனர். இம்மண்டபமே தற்பொழுது பிரதான மண்டபமாகக் காட்சி அளிப்பதுடன் பல ஆண்டுகளாக இந்த மண்டபத்திலேயே ஒரு தடவையில் 800 அடியார்களுக்கான அன்னதானத்தைத் தொடர்ந்து வழங்கி பசியைப் போக்கி வந்தனர். அயலூர்களிலும், பிற மாவட்டங்களிலும், உலகின் பல பாகங்களிலுமுள்ள அம்பிகை அடியார்களிடமிருந்து உதவிகளும் அன்பளிப்புகளும் பெறப்பட்டு தமது சேவையை திறம்பட செய்து வந்தனர்.

இப்பிரதான மண்டபத்தின் நுழைவாயில் ஆரம்பத்தில் வரவேற்பறையும், வடக்குப்பக்க மூலையில் வழிபாட்டறையும் தெற்குப் பக்க மூலையில் அலுவலக அறையும் அமைந்துள்ளன. நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் அன்ன பூரணியாக அமைந்திருக்கும் இடமாக வழிபாட்டறை கருத்தப்படுகின்றது. வழிபாட்டறையில் வைக்கப்பட்டுள்ள பெரிய அம்பாள் படம் அம்பாள் ஆலயத்தின் வருடாந்த கொடியேற்றத் திருவிழாவின் போது ஆலயத்தில் பூசைக்கு வைக்கப்பட்டு பின் ஊர்வலமாக அன்னதான சபைக்கு எடுத்து வரப்பட்டு அமுது நிவேதிக்கப்பட்டு பூசைகள் நடைபெற்ற பின் அடியார்களுக்கு அமுது கொடுக்கும் அன்னதானப்பணி ஆரம்பமாவது வழமையான நடைமுறையாக இருந்துவருவது சிறப்பான அம்சமாகும். வழிபாட்டறையைத் தொடர்ந்து வரவேற்பறை காணப்படுகின்றது. இங்கு ஆரம்பகர்த்தாக்கள் இருபத்தைந்து பேரினதும் நிழற்படங்கள் கிழக்குப் பக்கச் சுவர்களில் வைக்கப்பட்டுள்ளன. ஒரு காலகட்டத்தில் தருமசீலர்கள் மற்றும் அம்பிகை அடியார்களைத் தேடிச்செல்லாமல் அவர்களே அன்னதான சபையை நாடி வந்து பொருளுதவி, பண உதவி வழங்கி வந்தனர். இன்றைய நிலையில் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுத சுரபி அன்னதான சபையில் சுமார் 1200 அடியார்களுக்கு ஒரே முறையில் சமைத்துப் பரிமாறக் கூடிய தளபாட வசதிகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. நயினாதீவு ஸ்ரீ நாகபுஷணி அமுதசுரபி அன்னதான சபையின் அமைவிடம் நன்னீர் தட்டுப்பாடுள்ள பகுதியாகும். நன்னீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு திரு.திருமதி. இ.தியாகராஜா மற்றும் திருமதி.மு.க.பொன்னம்பலம் குடும்பத்தினர்களினால் நன்கொடையாக வழங்கப்பெற்ற காணியில் இரண்டு நன்னீர்க் கிணறுகள் அமைக்கப்பட்டு சபைக்குத் தேவையான நன்னீர் பெறப்பட்டு மூன்று பாரிய நீர்த்தாங்கிகளில் சேமிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது.

**நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபை**

அம்பாளின் உயர் திருவிழாக் காலத்தில், அன்னதான சபையினர் இலங்கையின் பல பாகத்திலுமுள்ள அம்பிகை அடியார்களிடமிருந்து நிதியாகவும் மற்றும் பொருளாகவும் நன்கொடைகளைப் பெற்று அம்பிகையைத் தரிசிக்கவரும் அடியார்களின் பசியைப் போக்கும் பணியை உள்நாட்டவர்களும், வெளிநாட்டவர்களும் கண்டு பரவசம் அடைந்துள்ளனர். மணிபல்லவம் என இலக்கியங்களில் குறிப்பிடப்படும் இத்தீவானது மணிமேகலை அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தைப் பெற்ற இடமாகவும் கருதப்படுகின்றது. நயினையம்பதியின் வரலாறு அமுதசுரபியின் வரலாற்றோடு தொடர்புள்ளதை நாகமணிப் புலவர் பதிவு செய்துள்ளமையால் மணிமேகலை கூறும் வரலாறு தொடர்ந்தும் பேணப்பட்டு வந்தமை அறிய முடிகின்றது. 1968ம் ஆண்டு திருவிழாக் காலத்தில் சென்னையிலிருந்து வெளிவரும் "கலைமகள்" பத்திரிகையின்

முன்னாள் ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன் அவர்கள் அம்பாளைத் தரிசிப்பதற்காக நயினாதீவுக்கு வந்திருந்தபோது அம்பாளையும் தரிசித்து, பின் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் யாத்திரீகர்களின் அன்னதானசபை மண்டபத்திற்கும் சென்றார். அங்கு சமையலறைகள், அமுது தயாரிக்கப்பட்டு குவிக்கப்பட்டிருக்கும் அமுதசுரபி மேடை, கறியமுது பரிமாறும் அறை, நீரத்தாங்கிகள் முதலிய இடங்களைப் பார்வையிட்ட அவர், மணிபல்லவக் காதைகள் மூலம் நாம் அறிந்த முப்பத்திரண்டு தருமங்களுக்கும் முதல்வியாகிய உலக மாதாவாகிய சகலகலாவல்லி என்னும் புவனேஸ்வரி அம்பிகையிடம் பசிப்பிணி தீர்க்கும் அமுதசுரபி என்னும் அட்சயபாத்திரத்தைப் பெற்ற மணிமேகலை அவள் அருளால் பசித்தோர்க்கெல்லாம் பசிப்பிணி தீர்க்கும் பாக்கியம் பெற்றதைப் போன்று அன்னதான சபையினர் அடியார்களுக்கு அமுது படைத்து உபசரிப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன் அவர்கள் அன்னதான சபை மண்டபத்திற்கு "அமுதசுரபி" என்னும் பெயரையும் உள்வாங்கி, நயினாதீவின் வரலாற்றோடும், இலக்கியச் சான்றுகளோடும் முற்றிலும் பொருத்தமானதெனக் கருதி 15.06.1968 முதல் "நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபை" எனப் பெயரிடப்பட்டதுடன் வாழ்த்திச் சில பாடல்களையும் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று

"துலங்குவளம் கெழுமுகின்ற இலங்கையினில்
வடபாலே சோதியாகி
இலங்குகின்ற நாகபூஷணித்தாய்தான்
கோயில்கொண்ட எழிலார் தீவு
நலங்கெழுமு நயினாதீவதன்கண்ணே விழாவினிலே
நண்ணும் பக்தர்
குலங்மெழுமும் உணவுபெற அறச்சாலை ஒன்றமைத்தார்
கொள்கை சான்றோர்."

### அன்னதான சபையின் புதிய அங்கத்தவர்களும் தர்மகர்த்தா சபையும்

காலப் போக்கில் பிரதான பதவிகளை வகித்த ஆரம்பகர்த்தாக்களும் ஏனைய சில உறுப்பினர்களும் அவர்களது முதுமையின் காரணமாக அமரத்துவம் அடைந்தாலும், மகோற்சவ காலங்களில் வரும் அடியார்களின் தொகை அதிகரித்தமையினாலும் சபையின் நடைமுறை விதிகளுக்கமைவாக புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டு விரிவாக்கப்பட்டதுடன் அவர்களுள் புதிய தர்மகர்த்தா சபையும் வருடாந்தம் தெரிவு செய்யப்பட்டு முன்னோர் காட்டிய வழியில் திறம்பட தங்கள் சேவையை ஆற்றி வருகின்றனர். 1997ம் ஆண்டு ஆனித் திங்கள் முதல் இன்றுவரை தலைவராகப் பதவி வகிக்கும் திரு.தம்பிமுத்து சிவானந்தன் மற்றும் செயலாளராகப் பணியாற்றிய ஓய்வு பெற்ற அதிபர் மறைந்த திரு.கு.சாந்தலிங்கம் ஆகியோரின் வழிகாட்டலில் காலத்திற்குக் காலம் தெரிவு செய்யப்படும் தர்மகர்த்தா சபையினர், அங்கத்தவர்கள், தொண்டர்கள், நற்சேவையாளர்கள் ஆகியோரின் அயராத முயற்சியின் பயனாக நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்காலம் அமுதசுரபி அன்னதான சபையின் பொற்காலம் எனலாம்.

### முகாமைத்திறனும் நிதிமுகாமைத்துவமும்

வருடா வருடம் நடைபெறும் உயர் திருவிழாக்களின் போது பல்லாயிரக்கணக்கான அம்பிகையின் அடியவர்களுக்கு அமுதளிக்கும் பாரிய பணி பெருஞ்செலவில் நடைபெறுகின்றது. இதற்கான வளங்களை ஒருங்கிணைந்து எவ்வித சேதாரமுமின்றி நடாத்துவதற்குச் சிறப்பான முகாமைத்துவம் முக்கியமானதாகும். எனவே இப்பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்பு, விடாமுயற்சி, தன்னலமற்ற சேவை மனப்பான்மை என்பவற்றை தன்னகத்தே கொண்ட செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் இத்தருமப் பணியைக் கண்ணாகக் கொண்டு செயற்படுவதால் இப்பணி தெய்வீகப் பணியாக, அறப்பணியாக அர்ப்பணிப்புடன் நடைபெறுகின்றது. நேரகாலத்துடன் தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தடையின்றி அன்னதானப் பணியை நடாத்தக்கூடிய ஏற்பாடுகள் சிறப்பான முறையில் செய்யப்படுவது பாராட்டத்தக்கதாகும்.

எல்லா வளங்களும் கிடைக்கப் பெற்றாலும் நிதி வளமின்றி இப்பாரிய பணியைச் சரிவரச் செயற்படுத்துவது மிகவும் கடினமாகும். எனினும் அமுதசுரபி அன்னதான சபையைப் பொறுத்தமட்டில் இப்பணியை நிறைவேற்ற உள்ளூர், வெளியூர் அம்பிகை அடியார்கள் தாமாக முன்வந்து நிதியுதவி, பொருளுதவி செய்வது தொண்டின் சிறப்பை உணர்ந்ததனால் தான் என்று கூறினால் மிகையாகாது. இங்கு நேர்மை, வெளிப்படைத் தன்மை, மக்கள் பங்களிப்பு, நிதிக் கையாளுகையில் கட்டுப்பாடு இருப்பதனால் அம்பிகை அடியார்கள் தம்மாலான நிதி, பொருள், உடல் உழைப்பு ஆகியவற்றை வழங்கி இத்தொண்டு சிறப்புடன் நடைபெற உதவுகின்றார்களெனின் இத்தொண்டின் பெருமையை வியந்தும், அறிந்தும் வழங்கும்



ஆதரவு என்றே கூறலாம். இது சிறந்த நிதி முகாமைத்துவத்தின் வெளிப்பாடு எனலாம். சபையினால் பெறப்படும் பொருள், நிதியுதவி என்பவற்றுக்கான பற்றுச் சீட்டுக்கள் உடனுக்குடன் வழங்கப்படுவதுடன் வருடாந்த ஆண்டறிக்கையில் பொருள், நிதியுதவி அளித்தோரின் பெயர்களுடன் தொகை மற்றும் பெறுமதி குறிப்பிட்டு வெளியிடப்படுவது நிதியினைக் கையாளும் ஏனைய நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டாகும்.

### கல்யாண மண்டபம்

வருடா வருடம் பெருகிவரும் அடியார்களுக்கு ஒரு மண்டபத்தில் வைத்து அமுது கொடுப்பதற்கு சிரமமும் கவலையும் அடைந்த சபையினர், முன்னர் பிரதான மண்டபத்தை அமைப்பதற்கு வாங்கிய காணி உரிமையாளரிடமிருந்து பிரதான மண்டபத்திற்கு தெற்குப் புறமாகவுள்ள மிகுதியான பன்னிரெண்டு பரப்புக் காணியையும் வாங்கினர். அக்காணியில் 100 அடி நீளமும் 32 அடி அகலமும் கொண்ட புதிய மண்டபம் அமைக்கப்பட்டது. இம்மண்டபம் ஒரு தடவையில் சுமார் 500 அடியார்களுக்கான அன்னதானத்தைத் தொடர்ந்து வழங்கி பசியைப் போக்கும் வசதியுடையது. மேலும் இம் மண்டபம் உயர் திருவிழாக் காலம் அல்லாத நாட்களில் இருப்பதற்கு கதிரைகள் வசதியோடு திருமண விழாக்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள் மற்றும் பொது வைபவங்கள் நடாத்துவதற்கும் குறைந்த கட்டணத்தோடு உதவி வருவது பொது மக்கள் மத்தியில் பெருஞ்சேவையாகக் கருதப்படுகின்றது.

### களஞ்சிய மண்டபம்

பிரதான மண்டபத்திற்குத் தெற்கு புறமாகவும் கல்யாண மண்டபத்திற்கு மேற்குப் புறமாகவும் அமைந்துள்ள 50 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட இம்மண்டபத்தை நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும், முன்னாள் கிராம சேவையாளருமான அமரர் வே.சிவப்பிரகாசம் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது பிள்ளைகளினால் நன்கொடையாக அமைத்துக் கொடுக்கப்பட்டது. இங்கே அன்னதானத்திற்குரிய பொருட்கள் களஞ்சியப்படுத்தப்படுகின்றன.

### அன்னபூரணி இறைபயணிகள் தங்கும் இல்லம்

அமுதசுரபி அன்னதான சபை மண்டபத்தின் அருகாமையில் வடமேற்குப் பகுதியில் திரு.திருமதி.இ.தியாகராஜா மற்றும் திரு.திருமதி.இ.கனகசபாபதி குடும்பத்தினர்களினால் நன்கொடையாக வழங்கப்பெற்ற 10 பரப்பு விஸ்தீரமுள்ள காணியில் முன் விறாந்தைகளுடனும் விசாலமான மண்டபத்தோடும் முப்பத்தியாறு அறைகளையும் கொண்ட பாரிய மண்டபமாக காட்சி தரும் அன்னபூரணி இறைபயணிகள் தங்கும் மண்டபம் நவீன வசதிகளையும் வனப்புக்களையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்திலுள்ள அறைகள் ஒவ்வொன்றுக்கும் சக்தி பீடங்களின் பெயர்கள் சூட்டப் பெற்றுள்ளதுடன் உயர் திருவிழாக் காலங்களிலும் ஏனைய நாட்களிலும் அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்கள் குறைந்த கட்டணத்தோடு தங்கிச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

### இந்து கலாசார நூலகரும் அறநெறிப் பாடசாலையும்

கடந்த 18.03.2003 அன்று இந்து கலாசார நூலகம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களாலும், இந்து கலாசார திணைக்களத்தின் அன்றைய மேலதிகச் செயலாளர் திரு.ப.க.பரமலிங்கம் அவர்களாலும், பண்ணிசை வகுப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைப்பிரிவின் தலைவர், இசைப்பேரசு, சங்கீத பூஷணம் நா.வி.நவரெத்தினம் அவர்களாலும் அங்குரார்ப்பணம் செய்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில், நயினாதீவிலுள்ள மூன்று பாடசாலைகளிலும் இருந்து பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் அறநெறிப் பாடசாலையில் பயில்வதற்குப் பதிவு செய்யப்பட்டனர். அறநெறிப் பாடசாலையும், பண்ணிசை வகுப்புக்களும் ஆரம்பத்தில் அமுதசுரபி மண்டபத்திலேயே நடாத்தப்பட்டது. பின்னர் தளபாட உபகரண வசதிகள், அடிப்படை வசதிகள் இல்லாத காரணங்களினால் மூன்று பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு, கல்வி திணைக்களத்தின் அனுமதியுடன் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் அந்தந்தப் பாடசாலைகளில் அறநெறிக் கல்வியும், பண்ணிசையும் இன்று வரை போதிக்கப்பட்டு வருகின்றமை நன்றியுடன் குறிப்பிடத்தக்கது. பயிற்றுவிக்கும் எல்லா ஆசிரியர்களுக்கும் அமுதசுரபி அன்னதான சபையின் அறக்கொடை நிதியிலிருந்து மாதாந்தம் ஊக்குவிப்பு வேதனம் வழங்கப்படுகின்றது.

### அலங்கார வரவேற்பு வளைவு

அமுதசுரபி அன்னதான சபையின் 50வது ஆண்டின் நிறைவை கம்பீரமாக காட்சி தரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் அலங்கார வளைவு அமுதசுரபி மண்டப அமைப்பை அணி செய்கின்றது. அமலனுக்கு அமுதளித்த ஆதிநாயகியின் தோற்றம் நிர்மாணிப்பின் மேற்பகுதியில் காணப்படுகின்றது திராவிடக் கட்டிடக் கலைப் பாணியில் கோபுரக்கலச

அமைப்புக்களோடு ஏனைய அலங்காரங்களோடும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நயினாதீவின் வரலாற்றில் அமைக்கப்பட்ட முதலாவது அலங்கார வளைவு இதுவாகும்.

### திரு.சி.க.தம்பையா அவர்களின் நினைவுச் சிலை

ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் அன்னதான சபையின் முதல் தலைவருமாகிய காலஞ் சென்ற திரு.சி.க.தம்பையா அவர்களின் தன்னலமற்ற சேவையை நினைவு கூர்ந்து அன்னதான சபை வளாகத்தில் அவரது நினைவுச் சிலை நிர்மாணிக்கப்பட்டு 2010ம் ஆண்டு அம்பாளின் திருமஞ்சத் திருவிழாவன்று திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

### முதியோர்களுக்கான மண்டபம்

முதியவர்களின் வசதிகருதி, முதியோர்கள் ஆசனங்களில் அமர்ந்து உணவு உண்ணுவதற்கு ஏதுவாக புதிய மண்டபம் அமைப்பதற்காக நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவர் திரு.ஆ.தியாகராஜா அவர்களால் 2011ம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு 2012ம் ஆண்டு உயர் திருவிழாவின்போது வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

### சமய, கல்வி மற்றும் சமூகப் பணிகள்

அன்னதானப் பணியில் மாத்திரம் நின்றுவிடாது சமய கல்வி மற்றும் சமூகப் பணிகளுக்கு அமுதசுரபி அன்னதான சபையினர் உதவி செய்து வருகின்றனர். எமது கிராமத்தில் நயினாதீவு சமூக, பொருளாதார கல்வி கலாசார அபிவிருத்திச் சங்கத்தினூடாக நிறைவேற்றப்பட்ட பல செயற்திட்டங்களுக்கு அமுதசுரபி அன்னதான சபை பங்களிப்புச் செய்துள்ளமையைக் குறிப்பிட்டாக வேண்டும்.

04.02.1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்தவுடன் நயினாதீவு தீவிரமாக முன்னேற்றமடைந்தது. ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயமும், ஸ்ரீ நாக விகாரையும் மிகவும் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஸ்ரீ நாகபூஷணி அம்பிகைக்கு 1957ம் ஆண்டு அழகிய சித்திரத் தேரும், 1960ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டு பாரிய வளர்ச்சி கண்ட நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையும், மணிமேகலை வரலாற்றைப் பொன்னெழுத்துக்களால் பொறித்து மண்பல்லவ கலாமன்றத்தினால் மேகலை அரங்கு நிர்மாணமும் நயினாதீவின் பெருமைகளை பறைசாற்றி நிற்கின்றன. அதனைத் தொடர்ந்து நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் 2012ம் ஆண்டு தை மாதம் 29ம் திகதி நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின் போது நிறைவேற்றப்பட்ட திருப்பணிகளான புவனேஸ்வரி கலையரங்கம், கலையம்சத்துடன் கூடிய திருக்கேணி, கிழக்கு நுழை வாயில் 108 அடி நவதள, நவகலச இராஜகோபுரமும் ஆலய உள் மற்றும் வெளிப் பிரகார புனர்நிர்மாணமும் தற்போதைய காலத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்ற நிழ்வுகளாகும்.

நிறைவாக, இத்தகைய அரும்பணியாற்றும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் பணி காலத்தால் மறக்க முடியாததொன்றாகும். பொன்விழா, மணி விழா, பவள விழா, நூற்றாண்டு விழாவென விழாக்கள் பல செய்து நற்பணியை குறையின்றி நடாத்த அம்பிகை அடியார்கள் மற்றும் தருமசீலர்கள் ஆகியோரின் பங்களிப்பும் அம்பிகையின் அருளாசியும் கிடைக்க வேண்டுமென நயினையம்பதி ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைச் சிரம் தாழ்த்தி, கரம் கூப்பி அவள் திருவடிகளை இறுக்கப்பற்றி வணங்கி, அன்னை நாகபூஷணியின் தெய்வீகத் திருவருள் அனைவருக்கும் இனிதே கிடைக்க வேண்டுமென மனமுருகிப் பிரார்த்தித்து, அருள் சுரக்கும் அன்னை அடியார் நினைந்துருகவும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் வரலாற்றை அறியவும் இக்கட்டுரை இனிது பயன்பட வேண்டுமென விரும்பி, அன்பர் என்பவர்க்கே நல்லனவெல்லாம் தரும் அன்னை நாகபூஷணி அம்பாளின் பாதக் கமலங்களைப் பணிந்து நிற்கின்றேன்.

துணை நூல் : நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் 50வது ஆண்டு நினைவு பொன் விழா மலர் "அமுத சுரபி"

திரு அம்பலவாணர் சர்வானந்தராஜா
முன்னாள் அறங்காவலர் - நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம்,
இணைப்பாளர் - நயினாதீவு சமூக, பொருளாதார கல்வி,
கலாசார அபிவிருத்திச் சபை,
அங்கத்தவர் - ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை.








## ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய யாத்திரீகர் தொண்டர் சபையும் தாகசாந்தி நிலையங்களும்



நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய யாத்திரீகர் தொண்டர் சபையானது சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆலய உயர் திருவிழாக் காலங்களில் பெரும் தொகையான பக்தர்கள் ஆலயத்துக்கு வருவதால் அவர்களுக்கு உதவும் நோக்கோடு திருவாளர்கள் மு. க. பென்னம்பலம் மற்றும் நா. விசுவலிங்கம் ஆசிரியர் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இதன் பணிமனை கோவிலின் தெற்குப் பகுதியில் அமைந்திருந்தது. தற்பொழுது ஆலய அறங்காவலர் சபையினரால் கோவிலின் மேற்குப் புறத்தில் தொண்டர் பணிமனை ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆலயத்தை நாடிவரும் பக்தர்களின் பிரைச்சனைகள் உடனுக்குடன் தீர்த்து வைக்கப்படுகின்றது. மேற்சொன்ன ஆரம்ப கர்த்தாக்களுடன் கொழும்பில் வர்த்தகத்தில் ஈடுபட்ட பலரும் ஊரிலுள்ள சிலரும் இப்பணியில் தீவிரமாகச் செயற்பட்டனர். அக்காலத்தில் திரு.பொ.கனகரெத்தினம் சிறந்த அறிவிப்பாளராகச் செயற்பட்டமை குறிப்பிடப்பட வேண்டியது.

தற்போது இதன் தலைவரான திரு.அ.சண்முகநாதன் J.P அவர்களும் திரு.பொ.திருச்செல்வம், தொண்டர் செ.சந்திரசேகரம், க.சிதம்பரநடராசா, ப.க.மகாதேவா, இ.அருணாசலம், செ.குலசிங்கம், சி.சுப்பையா போன்ற பலர் இப்பணியைச் சிறப்பாக ஆற்றி வருகின்றனர். ஆலய அறங்காவலர் சபையினரின் பூரண ஒத்துழைப்பும் இவர்களுக்கு கிடைத்து வருகிறது. இளைஞர்களையும் இப்பணியில் இணைத்துச் செயற்பட்டால் வாழையடி வாழையாக எதிர்கால சந்ததியினரும் தொண்டின் மகத்துவத்தை உணர்ந்து தம்மையும் வளர்த்த சமூகத்தையும், நல்வழியில் இட்டுச் செல்ல முடியும். வாழ்க நிம்தொண்டு, வளர்க சமூகம்.

**தம்பையா நாகசாந்தி நிலையம்**

நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்க வரும் அடியார்களின் தாகத்தைத் தீர்க்கும் நோக்கோடு திருவாளர் தம்பையா அவர்களால் உருவாக்கப்பெற்று அவரது மகனார் இல்லறஞானி, வைத்தியர் த.சோமசுந்தரம் அவர்களாலும் சகோதரர்களாலும் தொடர்ந்து இப்பணியாற்றப்பட்டு வந்தது. சுமார் மூன்று தலைமுறையாக இப்பணி தொடர்கிறது. தற்பொழுது திரு.லோகநாதன், வைத்திய கலாநிதி சபாநாதன், திரு.குகனேசன், அதிபர் ஆகியோராலும் அவர்தம் உறவுகளாலும் இப்பணியாற்றப்படுகிறது. அன்பர் சிவபாதம் அவர்களது தொண்டும் பாராட்டப்பட வேண்டியது. பணிகள் சிறக்க வாழ்த்துவோமாக!

**ஏனைய தாகசாந்தி நிலையங்கள்**

அமரர் செ.நா.நல்லதம்பி குடும்பத்தினரும், அமரர் சின்னத்துரை ஞாபகார்த்தமாக அவர் புத்திரர் சி.நல்லதம்பி குடும்பத்தினராலும் அமரர் வே.விசுவலிங்கம் ஞாபகார்த்தமாக அவர் புத்திரர் வி.மகேஸ்வரநாதன் குடும்பத்தினராலும் தாகசாந்தி சேவை அம்பாளில் உற்சவ காலங்களில் இடம்பெறுவது பாராட்டப்பட வேண்டியது.

திரு சோ.தில்லைநாதன் J.P





# வாழ்வதில் அர்த்தமில்லை என்ற எண்ணம்?



நீங்கள் சில நேரங்களில் வாழ்க்கை கடினமானதாகவும், தொடர்ந்து போராட்டங்களுக்கு முகம் கொடுப்பது பயனற்றது என்பது போலவும் உணரக்கூடும். மேலும் உலகமே வெறுத்துப்போனமாதிரி, நீங்கள் தனிமைப்படுத்தப்படட மாதிரியும் சிந்திக்கநேரிடலாம்.

பல காரணங்களால் இவ்வாறான சிந்தனை வந்து உங்களை குழப்பமடையச் செய்யலாம். உங்களுக்கு கீழே குறிப்பிடட ஏதாவது காரணம் இருக்கலாம்.

1 அதிகளவு தாங்கமுடியாத உடல் நோவு மற்றும் நாள்பட்ட நோய்களால் அவஸ்தைப்படுதல்.
2 நடைமுறை வாழ்வில் அடுத்தடுத்த பிரச்சினை, தோல்விகளால் நம்பிக்கை இழத்தல்.
3 எதிர்மறையான, குழப்பமான மன எண்ணங்கள்
4 பிரச்சினைக்கு ஒரு தீர்வை அல்லது தீர்வுக்கான வழியை கண்டுபிடிக்க முடியாத நிலை.
5 சிலசமயங்களில் காரணமின்றியே "இனிவாழ்வதில் பயனில்லை" என்ற எண்ணம்.
6 "என்னாலே தான் இவ்வளவு பிரச்சினை, நான் இல்லை என்றால் எல்லோரும் நன்றாயிருப்பார்கள்" என்ற எண்ணம்.
7 தன்னம்பிக்கை குறைந்து "எதுக்கும் பிரயோசனம் இல்லை" என்ற எண்ணம்.
8 குடும்பம், நண்பர்கள் என சூழ இருந்தாலும், தனிமைப்பட்ட உணர்வு தோன்றுதல்.

நம்மை சுற்றி பிரச்சினைகள் இல்லாத மனிதர்கள் இல்லை எனலாம். இவற்றிலிருந்து மீண்டு வருவதற்கு ஒவ்வொருவருக்கும் தாங்கும் சக்தி வளரவேண்டும். இதனை குடும்பம், கல்விக்கூடங்கள், வேலை மற்றும் சமூகம் தரவேண்டும்.

வாழ்வில் சலிப்படைந்தவர்கள், விரக்தியின் விளிம்பில் நிற்பவர்கள் பின்வரும் உண்மைகளை கவனத்தில் எடுத்துப் பின்பற்ற வேண்டும்.

1 நீங்கள் தனித்துவிடப்படவில்லை, உங்களைப்போன்றே பலரும் வாழ்வினை வெறுத்த, விரக்தியின் விளிம்பிற்கு சென்று காலங்களைக்கடந்து மீண்டுவந்து தற்போது வாழ்ந்து வருகிறார்கள்.

2 நம்பிக்கை உள்ளவர்களிடம் மனம் திறந்து உங்கள் விரக்திநிலை பற்றி கதைப்பதால் உங்கள் பாரம் மனதில் சற்று குறைந்ததாக உணர்வீர்கள்.

3 அன்புக்குரியவர்களின் இழப்பு அல்லது பிரிவு, குடும்பத்தகராறு, வேலைப்பிரச்சினைகள், பரீட்சை மற்றும் காதல் தோல்வி, பணம் மற்றும் கடன் பிரச்சினைகள், இவை மட்டுமல்ல சிலருக்கு குழந்தை பிரசவித்ததுடன் ஏற்படும் மாற்றம், நாள்பட்ட நோய் உள்ளவர்களும் விரக்தியின் விளிம்பிற்கு சென்று வாழ்வது அர்த்தமற்றது என்ற உணர்வுக்கு வந்த அனுபவங்களை பார்க்கின்றோம். எனவே உங்களுக்கு மட்டும் தான் ஏன் இப்படி? என்று குற்றவுணர்வு கொள்ளாமல், இது யாருக்கும் நடக்கலாம் என்பதை அறியவேண்டும்.

4 உங்களால் பிரச்சினைகளிலிருந்து மீண்டு வரமுடியும்.
5 உதவிகள், ஆலோசனைகள் பெற தொண்டுநிறுவனங்கள், அமைப்புகள் உள்ளன.
6 உங்கள் குடும்ப உறுப்பினர், உறவினர், நண்பர் அல்லது சக ஊழியரிடம் உங்கள் மனநிலையை தெரியப்படுத்துங்கள்,
7 நீங்கள் கடுமையாக மனதால் பாதிக்கப்பட்டு,விரக்தியின் விளிம்பில் நின்று உடல் அல்லது உயிருக்கு நீங்களே ஆபத்தை கொண்டுவரக்கூடிய நிலையில் இருப்பதாக உணர்ந்தால் அருகில் உள்ள உதவிக்கான அவசர சேவை நிறுவனத்துடன் தொடர்புகொள்ளலாம் அல்லது வைத்தியசாலைக்கு நேரில் செல்லவும்.
8 தேவைப்படும்போது உளவள சிகிச்சை நிபுணரை, மனநல ஆலோசகரை, வைத்தியரை அல்லது சமூக சேவகரை அணுகவும்.
9 உங்கள் சமயம் சார்ந்த ஆலோசகரை அணுகவும்.
10 ஒரே மாதிரியான பிரச்சினை உள்ளவர்கள் இணைந்து ஏற்படுத்திய விழிப்புணர்வு குழுக்களில் இணைந்து அவரவர் வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களை பகிர்ந்து தெளிவு பெறலாம்.

இறுதியாக, சமூக மாற்றத்தினால் தொழில்நுட்ப கருவிகள் என்ற போர்வையில் கையில் கைத்தொலைபேசி காவிக்கொண்டு தன்னை சுற்றி நிகழும் நல்லது தீயது எதையும் கருத்தில் எடுக்காது மூழ்கி இருக்கும் அனைவரும் அதை சற்று நிறுத்தி உங்களைச் சுற்றிய உலகத்தில் உள்ள கோவிட் விளைவுகள், பொருளாதார-சமூக மாற்றம், குடும்ப நிகழ்வுகளை நேரடியாக தரிசிக்க, தாங்க பழகுங்கள் அப்போது தான் வாழ்வது அர்த்தமுள்ளதாகத் தெரியவரும்.

மனநல மருத்துவர் திரு மனோரஞ்சன் பிருத்தானியா



Pravin A Pattni
Jewellers
Specialists in Diamond & Platinum Jewellery
207 Upper Tooting Road • London • SW17 7TG
T: 020 8672 1415 • F: 020 8682 0053 • E: info@papjewellers.co.uk



We Stock Gold Bullion Coins And Gold Bars For Investment. You Pay No V.A.T.
We also offer you professional valuation service with digital photographs undertaken by a Fellow of the Institute of Registered Valuers.

# வாழ்த்துவோம் வாரீர்

**பேராசிரியர்கள் (Professors)**

1. பேராசிரியர் மா வேதநாதன் (இந்துநாகரீகத்துறை)
2. பேராசிரியர் க நாகேஸ்வரன் (தமிழ்த்துறை)
3. பேராசிரியர் கி விசாகரூபன் (தமிழ்த்துறை)
4. பேராசிரியர் ந சுகந்தன் (மருத்துவம்)
5. பேராசிரியர் ந கெங்காதரன் (மனிதவள முகாமைத்துவம்)

**கலாநிதிகள் விரிவுரையாளர்கள் (Doctorates, and Lecturers)**

1. திரு வீ இராமச்சந்திரன் (பௌதீகவியல்)
2. கலாநிதி நா மு வி நவரத்தினம் (இசைத்துறை)
3. திரு ந பரந்தாமன் (இசைத்துறை)
4. கலாநிதி (திருமதி) சு ஸ்ரீநாகபூஷணி (இசைத்துறை)
5. வைத்தியர் ம உமாகாந் (மருத்துவம்)
6. கலாநிதி (திருமதி) கெ நதீரா (தமிழ்த்துறை)
7. செல்வி சி மங்களரூபி (வரலாறு)
8. திரு வி கருணலிங்கம் (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)
9. திரு க சகாதேவன் (தொழிநுட்பக்கல்லூரி)
10. திரு சி சண்முகம் (தொழிநுட்பக்கல்லூரி)
11. திருமதி ச செல்வராணி (தொழிநுட்பக்கல்லூரி)
12. திரு அ தியாகேஸ்வரன்

**பல்கலைக்கழக விரிவுரை உதவியாளர்கள் (Demonstrator)**

1. திருமதி வி சிவகௌரி (அரசியல் விஞ்ஞானம்)
2. திருமதி செ தயாளினி (தமிழ்)
3. திருமதி ஜ ஜனனி (புள்ளிவிபரவியல்)
4. திருமதி பா பவித்திரா (வரலாறு)

**பல்கலைக்கழக கல்விசாரா உத்தியோகத்தர்கள் (University Non-Academic Staffs)**

1. திரு செ திருவருட்செல்வன் (கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர்)
2. திருமதி லதா உமாசங்கர் (யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர்)

**புலவர்கள் (Poets)**

1. திரு க நாகமணிப்பிள்ளை
2. அண்டில் புலவர்
3. குட்டிப்பிள்ளையார்
4. திரு வே கனகசபை
5. திரு சோ இராசரெத்தினம்
6. திரு போ தருமலிங்கம்
7. வைத்திய கலாநிதி ஆ இராமுப்பிள்ளை
8. திரு மார்க்கண்டர்
9. திரு பொன்னர்

**பண்டிதர்கள் (Bandits)**

1. திரு நா கந்தசாமி
2. திருமதி பா புனிதவதி

**வித்துவான்கள் (Legends)**

1. திரு சி குமாரசாமி
2. திரு ப க குகதாசன்
3. திரு ப க காமாட்சிசுந்தரம்

**கல்வி அதிகாரிகள் (Education Officers)**

1. திரு அ சி நல்லையா
2. திரு ப க குகதாசன்

**உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் (Assistant Directors of Education)**

1. திரு சி நடேசபிள்ளை
2. திரு சோ தில்லைநாதன்
3. திரு கு சரவணபவானந்தன்
4. திரு சி செல்வரத்தினம்
5. திரு க கதிரேசபிள்ளை
6. திரு கோ தர்மபாலன்






## ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபர்
(Teachers' Training College Principal)

1. திரு வீ கருணலிங்கம்

## ஆசிரிய ஆலோசகர்கள்
(Inservice Advisors)

1. செல்வி இ ஜெயலெட்ச்சுமி
2. திருமதி யோ ரஞ்சிதா
3. திரு ச பரமேஸ்வரன்
4. திரு க சிவஞானசுந்தரம்
5. திரு கி தவகுலரத்தினம்
6. திரு வி தனிநாயகம்
7. திரு தி தயாபரன்

## பாடசாலை அதிபர்கள் (School Principals)

1. திரு எஸ் என் கந்தையா
2. திரு செ தில்லையம்பலம்
3. திரு செ ஐயாத்துரை
4. திரு வே விசுவலிங்கம்
5. திரு நா கந்தசாமி
6. திருமதி ந சிவபாக்கியம்
7. திரு ஐ சரவணபவன்
8. திரு ச செல்லத்துரை
9. திரு தி தியாகராசா
10. திரு நா க சண்முகநாதபிள்ளை
11. திரு தா பாலசிங்கம்
12. திரு சி தருமலிங்கம்
13. திரு ப க காமாட்சிசுந்தரம்

15. திரு கு கனகசுந்தரம்
16. திரு சு பொன்னம்பலம்
17. திரு இ சிவபாதசேகரம்
18. திருமதி ச தவமணி
19. திருமதி ஜெ சரஸ்வதி
20. திரு சோ தில்லைநாதன்
21. திரு க ஞானசுந்தரம்
22. திரு கு சரவணபவானந்தன்
23. திரு க கணேசு
30. திரு ச கணேஸ்வரன்
31. திரு சி சோமேஸ்வரபிள்ளை
32. திரு வே ஞானகாந்தன்
33. திரு ம ஞானசம்பந்தன்
34. திருமதி தி யோகலெட்ச்சுமி
35. திருமதி த மங்களகௌரி
36. திருமதி வே மாலினி
37. திருமதி இ சிவனேஸ்வரி
38. திரு சோ குகநேசன்
39. திரு ப பரமேஸ்வரன்
40. திரு க பரமேஸ்வரன்
41. திரு நா இராதாகிருஷ்ணன்
42. திருமதி க வரலெட்சுமி
43. திரு ந மயூரன்
44. திருமதி வி கடம்பமலர்
45. திரு மு சத்தியசீலன்
46. திரு த மாதவன்
47. திரு சோ யோகேஸ்வரன்
48. திரு சி நடேசபிள்ளை

## ஆசிரியர்கள் (Teachers)

### 1ஆம் வட்டாரம்

1. திரு சி சின்னத்துரை
2. திரு சோமசுந்தரம்
3. திரு நா க கார்த்திகேசு
4. திருமதி செ நீலாயதாட்சி
5. திருமதி இ பரமேஸ்வரி
6. திரு க பாலசிங்கம்
7. திருமதி பா கமலாம்பிகை
8. திருமதி தே மாலினி
9. திருமதி வே கமலம்
10. திரு வே நவரெத்தினம்
11. திரு க சோமசுந்தரம்
12. திருமதி க கனகாம்பிகை
13. திருமதி சு பரமேஸ்வரி
14. திருமதி க பிரபாளினி
15. திருமதி ம சொர்ணம்மா
16. திருமதி ந பூமகள்






5. திருமதி பு அன்னலெட்சுமி
6. திருமதி பா புனிதவதி
7. திருமதி இ துளசிவேணி
8. திரு கே சரவணமுத்து
9. திரு பொ கந்தையா
10. திருமதி க வள்ளியம்மை
11. திருமதி க தேவகி
12. செல்வி க வாசுகி
13. திருமதி க சுமதி
14. திரு க உருத்திரகுமாரன்
15. திருமதி தி பவானி
16. திருமதி சா வாசுகி
17. திருமதி உ செம்மணச்செல்வி
18. திரு பு சுஜீப்குமார்
19. திருமதி பா உருக்குமணி
20. திருமதி பா உமா
21. திருமதி கா கனகம்மா
22. திரு ந உருத்திரலிங்கம்
23. திருமதி ச சாரதாமணி
24. திருமதி உ யோகேஸ்வரி
25. திரு இ வீரகத்தி
26. திரு கு செந்தில்குமரன்
27. திரு க கனகரெத்தினம்
28. திருமதி க விமலாதேவி
29. திருமதி மு தர்சினி
30. திருமதி இ கிருபா
31. திருமதி கு ஜெயபிரபா
32. திரு பொ ஸ்ரீபாலன்
33. திருமதி சி ஏகநாயகவல்லி
34. திரு மு நாகலிங்கம்

<u>3ஆம் வட்டாரம்</u>

1. திருமதி ப தங்கம்மா
2. திருமதி கு வள்ளியம்மை
3. திரு ச சோமசுந்தரம்
4. திருமதி சோ கனகாம்பிகை
5. திருமதி சோ ராகினி
6. திருமதி ப அகிலாண்டேஸ்வரி
7. திருமதி இ தனலெட்சுமி
8. திருமதி தி ஞானலெட்சுமி
9. திரு கா சொர்ணலிங்கம்
10. திரு வே குலசேகரம்
11. திருமதி நா சியாமளா
12. திருமதி நா இரத்தினேஸ்வரி
13. திரு சி இரத்தினசபாபதி
14. திருமதி சி பாக்கியரெத்தினம்
15. திருமதி கு அனுபாமா
16. திருமதி மு இந்திரேஸ்வரி
17. திருமதி ச ஸ்ரீதேவி
18. திரு பா காசிநாதன்
19. திருமதி ம இந்திராதேவி
20. திரு வே கந்தையா
21. திரு தி சண்முகரெத்தினம்
22. திரு வி வினோத்
23. திரு கோ முருகதாஸ்
24. திருமதி கோ அருள்மாமணி
25. திருமதி தே கலாவதி
26. திரு ப பரந்தாமன்
27. திருமதி ப சுமதி
28. திரு தி முகுந்தன்
29. திருமதி ப யமுனா
30. திருமதி தே இறாகினி
31. திரு பொ முருகதாஸ்
32. திருமதி அ நிர்மலா
33. திருமதி பிரியதர்ஷினி

<u>4ஆம் வட்டாரம்</u>

1. திரு சி ஸ்ரீனிவாசமூர்த்தி
2. திருமதி வி கமலாதேவி
3. திருமதி ந கிரிசாம்பாள்
4. திருமதி க சுந்தரேஸ்வரி
5. திருமதி த சாந்தினி
6. திருமதி து சகுந்தலாதேவி
7. திரு பொ நாகமணி
8. திரு நா இரெத்தினசபாபதி
9. திருமதி நி தயாளசௌந்தரி
10. திருமதி தா தங்கம்மா
11. திருமதி ப மணிமொழி
12. திருமதி சீ சாரதாமணி
13. திருமதி க தர்ஷினி
14. திரு ப புவனரஞ்சன்
15. திருமதி பு ராதிகா
16. திரு தா யசோதரன்
17. திரு ச கிருஷ்ணமூர்த்தி
18. திரு சொ சர்வானந்தன்
19. திருமதி ப லெட்சுமி
20. திருமதி தி யசோதரா





**5 ஆம் வட்டாரம்**

1. திரு தி இராசபாலன்
2. திருமதி இ சசிதேவி
3. திருமதி ஜெ புஷ்பா
4. திரு ஐ பாஸ்கரன்
5. திருமதி ஐ பானு
6. திரு ச ஜெயரட்ணம்
7. திருமதி மோ சாந்தா
8. திரு அ தேவராசா
9. திருமதி ஜெ கமலா
10. திரு எஸ் ஸ்ரீஸ்கந்தராசா
11. திருமதி சி நந்தினி
12. திரு கி கிருபானந்தா
13. திருமதி சோ இராஜேஸ்வரி
14. திரு த இலங்கைநாயகம்
15. திரு நா கிருபானந்தசிவம்
16. திரு சா வெற்றிவேலுப்பிள்ளை
17. திருமதி வே உமாரஞ்சினி
18. திரு ப உமாசுதன்
19. திருமதி உ சுபோதினி
20. திருமதி வி தமிழினி
21. திரு வை நடராசா
22. திருமதி வே சுசீலாதேவி
23. திருமதி இ பத்மலோசினி
24. திருமதி சு கௌரியம்பாள்
25. திரு தி நிதர்சனன்
26. திருமதி ப சித்திராதேவி
27. திருமதி மோ தவநிதி
28. திருமதி க ரேணுகா
29. திருமதி ர காந்தலோஜினி
30. திருமதி சா கவிதா
31. திருமதி ந பேரின்பநாயகி
32. திருமதி மு காயத்திரி
33. திருமதி வி சிவகௌரி
34. திரு த சிவயோகலிங்கம்
35. திரு சி ஜெயசண்முகபாமா
36. திருமதி ந சுஜி
37. திரு க கணேஸ்வரன்
38. திருமதி க சிவஞானவதி
39. திரு இ கனகசபாபதி
40. திரு வே பூபாலசுந்தரம்
41. திருமதி பூ விசாலாட்சி
42. திருமதி ச கடம்பமலர்
43. திருமதி தி சியாமளா
44. திருமதி கு இரத்தினேஸ்வரி
45. திரு சோ திவாகரன்
46. திருமதி தி முத்துலெட்சுமி
47. திருமதி உ மாதேவி
48. திருமதி கி சர்வேஸ்வரி
49. திருமதி வே புஷ்பராணி
50. திரு த சதாசிவம்
51. திருமதி ச திலகவதி
52. திருமதி க நாகேஸ்வரி
53. திரு வே தம்பிப்பிள்ளை
54. திருமதி து சியாமளா
55. திருமதி ச பிரேமலதா
56. திருமதி த வசந்தாதேவி
57. திருமதி ஜெ விமலாதேவி
58. திருமதி ஜெ சியாமளாதேவி
59. திருமதி ச தாரணி
60. திருமதி ச நந்தினி
61. திருமதி க தவநிதி
62. திருமதி ச பதுமநிதி
63. திரு ந ஜெயசிவதாசன்
64. திரு மு கமலவேணி
65. திருமதி ப விமலா
66. திருமதி ப கமலா
67. திருமதி ப மங்களேஸ்வரி
68. திருமதி வ நந்தினி
69. திருமதி மு வசந்தி
70. திருமதி இ நாகரெத்தினம்
71. திருமதி த வசந்தி
72. திருமதி ஜெ உஷா
73. திருமதி பா வசந்தராணி
74. திருமதி ந லலிதாம்பாள்
75. திருமதி க தில்லைநாயகி
76. திருமதி சே கமலாம்பிகை
77. திருமதி க லலிதாம்பாள்
78. திருமதி ச சுபாஷினி
79. திருமதி ஜோ ரஞ்சினி
80. திருமதி ஞா அனிந்திதை
81. திருமதி சி விமலாதேவி
82. திருமதி தி ஜெகதீஸ்வரி
83. திருமதி க நிவேதிகா
84. திரு க சிவஞானம்
85. திரு சி காலாவதி
86. திருமதி ச சபாநந்தினி
87. திருமதி து வசந்தி
88. திரு ச மதியழகன்
89. திருமதி ம ஜெயந்திமலர்
90. திருமதி ர காந்தலோஜினி
91. திரு க நாகேஸ்வரன்
92. திருமதி போ இரஞ்சினி
93. திருமதி மு கடம்பவனவாசினி
94. திருமதி மு தர்மகுலராணி
95. திரு த பிரபாகரன்
96. திரு த பாலமுருகன்
97. திருமதி சி சுதாமதி
98. திருமதி இ சிவகலா
99. திருமதி ஜெ நிமலவாசுகி
100. திரு பா சிவராசா
101. திருமதி ஸ்ரீ ஏகநாயகி
102. திரு அ விஜிதா
103. திருமதி க வள்ளியம்மை
104. திருமதி க மகாலெட்சுமி
105. திரு சி ரகுபதி
106. திருமதி க ரோகினி
107. திருமதி சி நிரஞ்சினி
108. திருமதி ஜீ உதயபாரதி
109. திரு க சிவானந்தன்
110. திருமதி சி ரோகினி
111. திருமதி நீ நாகேஸ்வரி
112. திருமதி இ ரேணுகா
113. திருமதி ல சுமித்திரா



**6 ஆம் வட்டாரம்**

1. திருமதி இ சோதீஸ்வரி
2. இ திரவியநாதன்
3. திரு ந மயூரன்
4. திரு ந நர்த்தனன்
5. திருமதி வீ பரமேஸ்வரி
6. திரு சோ லோகேஸ்வரன்
7. திரு வி உதயகுமார்
8. திருமதி உ மனோகரி
9. திருமதி மு லீலாவதி
10. திருமதி ச திருமகள்
11. திருமதி வி ரதீஸ்வரி
12. திருமதி ப அன்புமொழி
13. திரு கு ஜெயச்சந்திரன்
14. திருமதி கே சுபாஷினி
15. திருமதி ஆ சுபத்திரா
16. செல்வி க சிவானந்தி
17. திரு நா கணபதிப்பிள்ளை
18. திருமதி நீதிமணி
19. திரு ம மயில்வாகனம்
20. திருமதி தி யசோதரா
21. திரு மு கங்கா
22. திருமதி பா வசந்தி
23. திரு த பரநிருபசிங்கம்
24. திரு ப சுரேஷ்குமார்

**7 ஆம் வட்டாரம்**

1. திரு கு செந்தில்குமார்
2. திருமதி கு சோபனா
3. திருமதி ய ஓம்சக்தி
4. திரு ஐ திருவாசகநாதன்
5. திரு ச மலர்விழி
6. திரு ப அகிலன்
7. திருமதி க புனிதமலர்
8. திரு ப அருண்குமார்
9. திருமதி உ திருபுராம்பாள்

**8 ஆம் வட்டாரம்**

1. திரு பொ சர்வானந்தா
2. திருமதி ம அனுசியா
3. திரு தி தயாபரன்
4. திருமதி த வசந்தா
5. திருமதி கு பரிமளாதேவி
6. திரு தி கருணாகரன்
7. திருமதி சே ஜெயவதனி
8. திரு பா கிருபாகரன்
9. திருமதி மு ஜெஸீமா
10. திரு த மதியழகன்
11. திரு தி சிவகுமார்

**நீதிவான்கள் (Judges)**

1. திரு நா க கதிரவேற்பிள்ளை
2. திரு இ ஏகநாதன்

**சட்டத்தரணிகள் (Lawyers)**

1. திரு தி திருநாவுக்கரசு
2. திரு த ஸ்ரீபதி
3. திரு பொ கயிலாயநாதன்
4. திரு ப பரமேஸ்வரன
5. திருமதி சி சிவகலாநிதி
6. திரு சு சுதர்ஜனன்
7. திருமதி சியாமினி
8. திரு ப ஜனார்த்தனன்
9. திரு அ ஸ்ரீராகவன்
10. செல்வி ச வினுஜா
11. திருமதி பிரியந்தி

**சமாதான நீதவான்கள் (Justice of Peace)**

1. திரு ச திருநாவுக்கரசு
2. திரு க இரத்தினசபாபதி
3. திரு அ சண்முகநாதன்
4. திரு ப க பரமலிங்கம்
5. திரு ப க மகாதேவா
6. திரு க குமாரசூரியர்
7. திரு சு நவனேசன்
8. திரு மு புனிதநாதன்
9. திரு கு நந்தகுமார்
10. திரு மு கதிர்காமநாதன்
11. திரு சோ தில்லைநாதன்
12. திரு ந கதிரவேலு
13. திரு ந கருணாகரமூர்த்தி
14. திரு கா செல்வரெத்தினம்
15. திரு க உருத்திரகுமாரன்
16. திரு கு சரவணபவானந்தன்
17. திரு ந விஸ்வநாதன்
18. திரு வி சபாநாதன்
19. திரு ச கவிரன்
20. திரு க மகாலிங்கம்
21. திரு கோ வாமதாசன்
22. திரு ஸ்ரீ ஞானேஸ்வரன்
23. திரு நா சண்முகநாதன்
24. திரு த ரமேஷ்

**வைத்தியர்கள் (Doctors)**

1. வைத்தியர் சி ஜெயரட்ணம்
2. வைத்தியர் ந சிவானந்தன்

3. வைத்தியர் ப க நவரட்ணராசா
4. வைத்தியர் கு பாலச்சந்திரன்
5. வைத்தியர் க புஸ்பராசா
6. வைத்தியர் இ மருதயனார்
7. வைத்தியர் சா மனோகரன்
8. வைத்தியர் கே சிவகுமார்
9. வைத்தியர் கு இளங்கோ
10. வைத்தியர் (திருமதி) இ சுமதி
11. வைத்தியர் (திருமதி) கோ கோமதி
12. வைத்தியர் சி அனுரகுமாரன்
13. வைத்தியர் கா மனோரஞ்சன்
14. வைத்தியர் நா பார்த்தீபன்
15. வைத்தியர் து கோகுலன்
16. வைத்தியர் ந அரவிந்தன்
17. வைத்தியர் மு ஜங்கரன்
18. வைத்தியர் (திருமதி) ஐ சசிகலா
19. வைத்தியர் வே பவந்தன்
20. வைத்தியர் சோ பதந்தன்
21. வைத்தியர் சோ சுபந்தன்
22. வைத்தியர் (திருமதி) வே சாரதாதேவி
23. வைத்தியர் (திருமதி) த தர்சிகா
24. வைத்தியர் சு குணபூஷணம்
25. வைத்தியர் (திருமதி) சி தாரணி
26. வைத்தியர் இ காங்கேயன்
27. வைத்தியர் க காங்கேயன்
28. வைத்தியர் ச விதூசன்
29. வைத்தியர் (திருமதி) ஜோ நிஷாந்தினி
30. வைத்தியர் (திருமதி) ஞா காயத்திரி
31. வைத்தியர் (திருமதி) த அபர்ணா
32. வைத்தியர் க தர்சனன்
33. வைத்தியர் ச ரஜீவ்
34. வைத்தியர் மா ஸ்ரீராம்
35. வைத்தியர் க ராகுலன்
36. வைத்தியர் (திருமதி) ஏ பத்மாசினி
37. வைத்தியர் சி நிராகுலன்
38. வைத்தியர் சி ஜமுனாநந்தா
39. வைத்தியர் (செல்வி) ம ஆரணி
40. வைத்தியர் கு குமாரசூரியர்
41. வைத்தியர் ப பிரகதீஸ்வரன்
42. வைத்தியர் சா ஹரிதாசன்
43. வைத்தியர் ம உமாகாந்
44. வைத்தியர் (திருமதி) அ மைதிலி
45. வைத்தியர் (செல்வி) உ அனுரா
46. வைத்தியர் (திருமதி) எஸ் மேனகா
47. வைத்தியர் சி பகிராஜ்
48. வைத்தியர் ச கிரிஷாந்
49. வைத்தியர் பா பிரபாகரன்
50. வைத்தியர் அ பிரியசங்கரி
51. வைத்தியர் (திருமதி) முரளீஸ்வரன்
52. வைத்தியர் கா கஜன்
53. வைத்தியர் இ ராகுலன்
54. வைத்தியர் (திருமதி) நி சுனந்தா
55. வைத்தியர் (திருமதி) இ சிறிதுஷாரா

**பல்வைத்தியர்கள் (Dental Surgeons)**

1. திரு க திரிலோசனன்
2. திருமதி ம தயாநிதி
3. செல்வி இ ரதினி
4. திருமதி முரளீஸ்வரன்

**உதவி வைத்தியர்கள்**
**(Reserve Medical Practitioners-RMPs)**

1. திரு சு கதிரேசு
2. திரு ச ராசரெத்தினம்
3. திரு தி திருநாவுக்கரசு
4. திரு து தருமலிங்கம்
5. திரு சோ பரராசசிங்கம்
6. திரு பொ காசிலிங்கம்
7. திருமதி சி மீனாட்சி
8. திருமதி சு வனிதாமணி
9. திரு கு குகானந்தன்

**ஆயுள்வேத வைத்தியர்கள்**
**(Ayurvedic Doctors)**

1. திரு த சோமசுந்தரம்
2. திரு த மயில்வாகனம்
3. திரு த செட்டி
4. திரு வி வேதநாதன்
5. திரு சி பஞ்சரெத்தினலிங்கம்
6. திரு வே சிவக்கொழுந்து
7. திருமதி கு ஈஸ்வரி
8. திரு சோ சபாநாதன்
9. திரு நா கந்தையா
10. திருமதி ச சண்முகப்பிரியா
11. திரு கா நடேசன்
12. திரு க சத்தியசீலன்
13. திரு சு தனரஞ்சன்

**தாதிமார்கள் (Nurses)**

1. திரு வி இராசநாயகம்
2. திரு ச சுதாகர்
3. திருமதி த கேசவராணி
4. திருமதி இ புஷ்பராணி
5. திருமதி கருணலிங்கம்
6. திருமதி சு சரோஜினிதேவி





### மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர் (Medical and Laboratory Technicians)

1. திரு ச நவரெத்தினராசா

### மருத்துவிச்சிகள் (Midwifes)

1. திருமதி சி மாணிக்கம்
2. திருமதி இ பூலோகசுந்தரி
3. திருமதி ம ஈஸ்வரி
4. திருமதி வே கமலவேணி
5. திருமதி நா கமலாம்பிகை
6. செல்வி இராசையா

### மருந்தாளர்கள் (Pharmacists)

1. திரு அ மாசிலாமணி
2. திரு த கனகலிங்கம்
3. திரு பாலசிங்கம்

### வைத்தியசாலை ஊழியர்கள் (Hospital Staffs)

1. திருமதி க சரஸ்வதி
2. திரு ஜெயரத்தினராசா
3. திரு கே குணாகரன்
4. திரு தியாகலிங்கம்
5. திரு க சுரேஷ்வரன்
6. திரு பா ஜெய்சங்கர்
7. திரு இ ஸ்ரீராகவன்
8. திருமதி கே மகேஸ்வரி
9. திருமதி க கிஸ்ணேஸ்வரி
10. திருமதி ய சுகந்தி
11. திரு ப சுதாகரன்
12. திரு ஐ மார்க்கண்டு
13. திருமதி கு நிமலராஜி
14. திருமதி க காந்திமதி
15. திருமதி கு வசந்தி
16. திருமதி புஷ்பராணி
17. திருமதி வைகுந்தம்
18. திருமதி ப தமிழ்வாணி
19. திருமதி தி நந்தினி
20. திரு ம பருகாந்த்
21. திருமதி க சசிகலைவாணி
22. திரு ச தாரணி
23. திரு பு விமலேசன்
24. திரு க ரமேஷ்

### பொது சுகாதார அதிகாரிகள் (Health Officers)

1. திரு ஜெகநாதன்
2. திரு ச கடம்பரூபன்

### திடீர் மரணவிசாரணை அதிகாரிகள் (Coroners)

1. திரு ச திருநாவுக்கரசு
2. திரு நா தியாகராசா

### பொறியியலாளர்கள் (Engineers)

1. திரு இ சதாசிவம்
2. திரு மா சந்திரபாலன்
3. திரு பா ஏகானந்தராஜா
4. திரு ஆர் கணேசு
5. திரு சி குலசிங்கம்
6. திரு கு சிவானந்தன்
7. திரு த முன்னைநாதன்
8. திரு க தீபன்
9. திரு சி நந்தகுமரன்
10. திரு த கண்ணன்
11. திரு க யாதவன்
12. திரு வே கஜந்தன்
13. திரு தா ஸ்ரீராமநாதன்
14. திரு தா ரவிசங்கர்
15. திரு ஞா சிவானுஜன்
16. திரு கு சுரேஷ்
17. திரு அ அழகேஸ்வரன்
18. திரு சி விஜயகுமார்
19. திருமதி ஜசித்திரா
20. திருமதி ஜனித்திரா
21. திரு மு பிரசாந்த்
22. திரு க பிரணவரூபன்
23. திரு ப அருண்மொழிவர்மா

### நில அளவையாளர்கள் (Surveyors)

1. திரு சு லோகநாதன்
2. திரு கு குமரப்பெருமாள்
3. திரு சி கோபாலசுந்தரம்
4. திரு சோ நடராசா
5. திரு க நாகேஸ்வரன்
6. திரு இ இரத்தினராசா
7. திரு க இராசகுலேந்திரன்
8. திரு சி சந்திரசேகரம்
9. திரு கு சந்திரசேகரம்
10. திரு ஜெ சுமன்ராஜ்

### படவரைஞர்கள் (Draftsmen)

1. திரு நா பாலகிருஷ்ணன்
2. திரு நா சண்முகநாதன்
3. திரு அ மருதயனார்
4. திரு க சிவானந்தராசா
5. திரு ந கணநாதன்





## கணக்காளர்கள் மற்றும் துறை சார்ந்தோர்
(Accountants and Related Professionals)

1. திரு தி குகதாசன்
2. திரு இ குலநாதன்
3. திரு ம சத்தியரூபன்
4. திரு ந விமலன்
5. திரு ந நிமலன்
6. திரு பிரகாஷ்
7. திரு த சச்சிதானந்தன்
8. திரு பொ தியாகமணி
9. திரு த யோகநாதன்
10. திரு சு மாசிலாமணி

## கணக்காய்வு அதிகாரி (Auditors)

1. திரு கு விநாயகமூர்த்தி

## பொருளியலாளர் (Economist)

1. திரு யோ ஜயகாந்

## வங்கி அதிகாரிகள்
(Bank Officers)

1. திரு தியாகராசா
2. திரு க மகாலிங்கம்
3. திரு ச சாந்தலிங்கம்
4. திரு கு சச்சிதானந்தன்
5. திரு ந ஓங்காரநாதன்
6. திரு வே ஞானோதரன்
7. திரு வ விக்கினேஸ்வரன்
8. திரு இ விஜயரெத்தினம்
9. திருமதி அ ஜெகதீஸ்வரி
10. திரு சி மணிகரன்
11. திரு பிறைசூடி
12. செல்வி செல்லத்துரை
13. செல்வி கணேசலிங்கம்
14. திரு ஜோ நிருஷண்ன்
15. திரு ந கோபிநாத்
16. திருமதி தி தூஷித்தா
17. திருமதி பா கஜனி

## இலங்கை நிர்வாகசேவை அதிகாரிகள்
(Sri Lanka Administrative Service (SLAS) Officers)

1. திரு ப க பரமலிங்கம்
2. திரு க இராசலிங்கம்
3. திரு க சபாபதிப்பிள்ளை
4. திரு சி கதிரவேலு
5. திரு சே சந்திரமணி
6. திரு அச்சுதன்
7. திரு ந பிரணவன்

## ஆராய்ச்சி, திட்ட மற்றும் அபிவிருத்தி உதவியாளர்கள் (Research, Planning and Development Assistants)

1. திரு பே தவேஸ்வரன்
2. திருமதி சி சிவாணி
3. திருமதி ச ஷர்மினி
4. திருமதி பா பவித்திரா
5. திருமதி சி சுலோசினி
6. திருமதி சிவசக்தி

## இறைவரி அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள்
(Income Tax Officers and Officers

1. திரு த பாலசிங்கம்
2. திரு சி நவநீதம்பிள்ளை
3. திரு ப ஜெயராசா
4. திரு ச இராசேந்திரா
5. திருமதி இ ரீட்டாநாயகி
6. திரு சி சந்திரகுமார்

## தொழில் அதிகாரிகள்
(Labour Officers)

1. திரு இ தாமோதரம்பிள்ளை
2. திரு ப ஜனார்த்தனன்

## தபால் அதிபர்கள் (Post Masters)

1. திரு ச செல்லையா
2. திரு வை செல்லத்துரை
3. திரு சே விசாகப்பெருமான்
4. திரு சு மயில்வாகனம்
5. திரு வை சிவப்பிரகாசம்
6. திரு ந சிவானந்தசர்மா
7. திரு திரு சு பாலேந்திரா
8. திரு பொ விநாயகமூர்த்தி
9. திரு நா க கதிரவேற்ப்பிள்ளை
10. திரு ந பரராஜசிங்கம்
11. திரு ப யோகராசா
12. திரு ப க மகாதேவா
13. திரு வை யோகலிங்கம்
14. திரு ந திருநாவுக்கரசு
15. திருமதி ம சிவகாமி
16. திரு வை இராசரெத்தினம்
17. திரு நா க குமாரசூரியர்
18. திரு மு சபேசன்
19. திரு கோ யோகராசா
20. திரு மா நமசிவாயம்
21. திரு ந கமலம்




# MTN Enterprise Ltd

Accounting and IT Specialist for Small Businesses

*Our services*

- Bookkeeping
- Annual Accounts
- Corporation Tax Returns
- Personal Taxation
- VAT
- Payroll
- IT Solutions
- Company Secretarial
- Security Solutions
- Legal Assistance

Tel: 0203 633 2396 Fax: 0203 475 4372

Email: info@mtnenterprise.co.uk

Find us: www.mtnenterprise.co.uk

Follow us: www.facebook.com/MTNenterprise

85 Great Portland Street, Marylebone, London, W1W 7LT

### தபால் ஊழியர்கள் (Postal Staffs)

1. திரு செ சதாசிவம்
2. திரு வை விசுவலிங்கம்
3. திரு ஐ சுந்தரலிங்கம்
4. திரு ஆ முத்துக்குமாரு
5. திரு வை இராசரெத்தினம்
6. திரு ச சண்முகநாதன்
7. திரு நா குமாரசூரியர்
8. திரு போ ஞானேஸ்வரன்
9. திரு மு புனிதநாதன்
10. திரு வீ இராசலிங்கம்
11. திரு அ தவேஸ்வரன்
12. திரு வை சுப்பிரமணியம்
13. திரு இ அன்பழகன்
14. திரு ந கோகுலன்
15. திரு ச சங்கரன்
16. தொரு க கேதீஸ்வரன்
17. திரு கோ கதிர்காமநாதன்
18. திரு மு குகபாலன்
19. திரு சு நவனேசன்
20. திரு நா பதீபன்
21. திரு கு விமலசேகர்
22. திரு ப மனோகரன்

### புகையிரத நிலைய அதிபர்கள் (Railway Station Masters)

1. திரு க இராமச்சந்திரன்
2. திரு ஆ கனகசபை
3. திரு பொன்னுத்துரை
4. திரு கு ஜயந்தன்

### தரைப்படையினர் (Army)

1. திரு இ தியாகராசா
2. திரு க சிவஞானம்

### காவல்துறை அதிகாரிகள் (Police Officers)

1. திரு ஆ சின்னக்குட்டி
2. திரு இ சுந்தரலிங்கம்
3. திரு ச திருநாவுக்கரசு
4. திரு சி சிதம்பரநாதன்
5. திரு ச பரம்சோதி
6. திரு மா விஜயகுலசிங்கம்
7. திரு இ சிவநாதன்
8. திரு ச பாலகிருஷ்ணபாரதி
9. திரு ந கணேசமூர்த்தி
10. திரு க அருளானந்தம்
11. திரு ந செல்வநாயகம்
12. திரு ந இரத்தினசபாபதி

### இலங்கை போக்குவரத்துச்சபை உத்தியோகத்தர்கள் (Ceylon Transport Bord (CTB) Officers)

1. திரு க நற்குணசிங்கம்
2. திரு சி நல்லதம்பி
3. திரு க ஆறுமுகம்
4. திரு ந திருலோகநாதன்
5. திரு சி சுந்தரம்பிள்ளை
6. திரு இ கணபதிப்பிள்ளை
7. திரு சோ செல்வரெத்தினம்
8. திரு வீராசாமி
9. திரு ஆ பத்மநாதன்
10. திரு க துரைமணி
11. திரு சோ மகேஸ்வரன்

### நிர்வாக அதிகாரிகளும் முகாமைத்துவ உதவியாளர்களும் (Administrative Officers and Management Assistants)

1. திரு ஆ தியாகராசா
2. திருமதி ச நாகம்மா
3. திருமதி இ இராசேஸ்வரி
4. திரு ப வேலாயுதம்
5. திரு ச காசிலிங்கம்
6. திரு வைத்திலிங்கம்
7. திரு இரத்தினகோபால்
8. திரு த குணரெத்தினம்
9. திரு ந பரராஜசிங்கம்
10. திரு ப க மகாலிங்கம்
11. திரு இ தாமோதரம்பிள்ளை
12. திரு வை விசுவலிங்கம்
13. திரு க பாலகிருஷ்ணன்
14. திரு நா ஏகாம்பரநாதன்
15. திரு ஆ தனபாலசிங்கம்
16. திரு இ பரராஜசிங்கம்
17. திரு த கணபதிப்பிள்ளை
18. திரு சி இராசநாயகம்
19. திரு இ மாகாதேவா
20. திரு க திருச்செல்வம்
21. திரு சு தனபாலசுந்தரம்
22. திரு நா சதானந்தன்
23. திரு மா குலமணி
24. திரு இ தவராசா
25. திரு நா திருநாவுக்கரசு
26. திரு சு கனகரெத்தினம்
27. திரு இ சிவஞானசுந்தரம்பிள்ளை
28. திரு நா இராசநாயகம்
29. திரு பொ தில்லைநாதன்
30. திரு ம நவரெத்தினம்
31. திரு க பத்மநாதன்
32. திரு சி சிவப்பிரகாசம்








33. திருமதி நா இந்துமதி
34. திருமதி சா வேதநாயகி
35. திருமதி அ இராஜலெட்சுமி
36. திருமதி அ புனிதம்
37. திருமதி ச கேதாரகௌரி
38. திருமதி சி சரோஜினி
39. திருமதி வே அருணந்தி
40. திருமதி ச மகேஸ்வரி
41. திருமதி து வாமதேவி
42. திருமதி சோ நகுலேஸ்வரி
43. திரு ந மோகனரூபன்
44. திருமதி சு ஜெயலெட்சுமி
45. திருமதி வி ஞானகௌரி
46. திரு சி ஜெயகுமார்
47. திரு சி வேல்முருகன்பிள்ளை
48. திரு கா சாயுட்சியநாதன்
49. திரு க சந்திரன்
50. திரு க திருநாமம்
51. திருமதி சு அருந்தவநாயகி
52. செல்வி நா சுதந்திராதேவி
53. திரு நா சிவராசசிங்கம்
54. திரு த தமிழன்பன்
55. திரு முத்துக்குமாரு
56. திரு கிருஷ்ணன்
57. திரு வே கனகராசா
58. திரு இ பொன்னம்பலம்
59. திரு க கருணாநிதி
60. திரு க செல்வராசா
61. திரு சி பரராஜசிங்கம்
62. திரு க இராசரெத்தினம்
63. திரு ஞா அச்சுதன்
64. திருமதி சி கிருஷ்ணா

**சிறாப்பர் சேவைகள் (Sirappar Service)**

1. திரு வே கருணாகரன்

**உடையார் (Udayar)**

1. திரு இ சரவணமுத்து

**கிராமசபைத் தலைவர்கள் (Village Councillors)**

1. திரு ச செல்லையா
2. திரு க நாகமணிப்பிள்ளை (புலவர்)
3. திரு வே விசுவலிங்கம்
4. திரு க தம்பையா
5. திரு வே கந்தையா
6. திரு வே பரமலிங்கம்
7. திரு க கிருஷ்ணசாமி

**விதானைமார் (Vithans)**

1. திரு நா நடராசா
2. திரு க சிவசிதம்பரம்
3. திரு வே சிவப்பிரகாசம்

**கிராமசேவையாளர்கள் (Grama Savants)**

1. திரு ச சந்திரசேகரம்
2. திரு பொ புண்ணியமூர்த்தி
3. திரு ம அம்பிகைபாகன்
4. திரு சோ சந்திரசேகரம்
5. திரு கந்தசாமி
6. திரு பொ குலசிங்கம்
7. திரு பொ அன்பழகன்
8. திரு சே சுதர்சன்
9. திருமதி கி வினோதினி
10. திருமதி நா ஶ்ரீரங்கா

**கமநல உத்தியோகத்தர்கள் (Agrarian Officers)**

1. திரு வி சபாநாதன்
2. திரு பொ பத்மநாதன்
3. திரு ஜெகநாதன்

**பிரதேசசபை உத்தியோகத்தர்கள் (Pradesa Saba Officers)**

1. திரு இரத்தினம்
2. திரு பொ தில்லைநாதன்
3. திரு சி பேரின்பநாதன்
4. திருமதி அ வடிவழகு
5. திருமதி ம மகாலெட்சுமி
6. திரு சண்முகலிங்கம்
7. திரு சண்முகம்
8. திரு அந்தோனி
9. திரு கோ தர்மபாலன்
10. திரு க குலசிங்கம்
11. திருமதி ச கலைவாணி
12. திரு ந மோகனரூபன்
13. திரு கு ரவீந்திரன்
14. திரு சோ குமரகுரு
15. திரு தோ. அருள்பிரகாசம்
16. திரு ப சுவர்ணன்
17. திரு ந சுரேஷ்குமார்
18. திரு தி நந்தகுமாரன்
19. திருமதி ஶ்ரீ தர்ஷினி
20. திரு தி ரகுலோட்சனன்
21. திருமதி எ நவரஞ்சினி
22. திரு எ கேதீஸ்வரன்



**JAN Consultancy Services Ltd**

**Our Services**

- Company and Business Formation
- Business Development and Management
- Break-Even Analysis and Business Plan
- Business Expansion Plan
- Visa Applications and Legal Assistance
- Accounting Assistance
- Digital Marketing
- Business IT Solutions

**TRY OUR SERVICES WITH MINIMUM COST FOR MAXIMIZING PROFIT**

**Telephone: 0203 633 6675**

**Email: janconsultancyservicesltd@outlook.com**

124 City Road
London
EC1V 2NX

# BEST CHOICE

Your Trusted Estate Agents

Info@bestchoiceestates.com www.bestchoiceestates.com

**395, Northolt Road, Harrow, HA2 8JE**

**Properties URGENTLY Required, Call us on**

**0208 423 6455**

**0750 786 0784**

**8% MANAGEMENT**

**5% LETTINGS**

Zoopla! PropertyCastle All property search ends here Gumtree DPS The Deposit Protection Service





# IYKONS

Business Process Reengineering
Mobility
Taxation
Ecommerce
Risk Management
Data Analytics
Financial Accounting
Implementation
Human Resources
Business Application
Consulting
UX Design

14 Elm Road, Chessington, Surrey KT9 1AW, United Kingdom

T +44 20 3598 2904 | F +44 20 8150 5667

info@iykons.com | www.iykons.com

## பிறப்பு, இறப்பு மற்றும் திருமண பதிவாளர்கள் (Registers)

1. திரு இ சரவணமுத்து
2. திரு ச விசுவலிங்கம்
3. திரு வே கனகராசா
4. திரு ச இலங்கைநாயகம்
5. திருமதி ந மீனாட்ச்சி
6. திரு க இரெத்தினசபாபதி
7. செல்வி கோபாலகிருஷ்ணன்
8. திருமதி நா சங்கீதா

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் (Samurthi Officers)

1. திரு ந சாந்தரூபன்
2. திரு கு ஜெயகாந்தன்
3. திருமதி ஜெயகாந்தன்
4. திருமதி கி பிரியங்கா
5. திரு க பிறைசூடி

## மகளீர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (Women Development Officers)

1. திருமதி சு வேணுகாரணிகா

## வர்த்தகர்கள் - கொழும்பு மற்றும் ஏனைய மாவட்டங்கள் (Businessmen – Colombo and other Districts)

1. திரு ஆர் எஸ் எஸ் மணியம்
2. திரு அம்பலவாணர்
3. திரு தம்பிமுத்து
4. திரு முருகேசபிள்ளை
5. திரு பழனிவேலு
6. திரு திருச்செல்வம்
7. திரு மு நகுலேஸ்வரன்
8. திரு இரத்தினம்
9. திரு குகதாசன்
10. திரு கனகரத்தினம்
11. திரு சிவம்
12. திரு சண்முகநாதன்
13. திரு பூ சிறிதரசிங்
14. திரு பூ ராஜன்
15. திரு சிறிகாந்தன்
16. திரு இலட்சுமணன்
17. திரு இ பிரபாகரன்

## வர்த்தகர்கள் – யாழ்ப்பாணம் (Businessmen – Jaffna)

1. திரு பூபாலசிங்கம்
2. திரு தி சாமிநாதன்
3. திரு வேலுப்பிள்ளை
4. திரு பரமசாமி
5. திரு பழனிவேலு
6. திரு இரத்தினசபாபதி
7. திரு க மகாலிங்கம்
8. திரு மு சண்முகராசா
9. திரு ப உதயன்
10. திரு பரமசாமி

## வர்த்தகர்கள் - நயினாதீவு (Businessmen – Nainativu)

1. திரு வ கந்தசாமி (வ.க)
2. திரு சு குமாரசாமி (சு.கு)
3. திரு தர்மலிங்கம் (தருமர்)
4. திரு கணபதிப்பிள்ளை
5. திரு காராளபிள்ளை
6. திரு சோதிராசா
7. திருமதி விசாலட்ச்சி
8. திரு மாணிக்கம்
9. திரு சின்னத்தம்பி
10. திரு கோபாலபிள்ளை
11. திரு நடராஜா
12. மணிவாசகர்
13. திரு மாணிக்கம்
14. திரு புஸ்பராசா
15. திரு கோபாலபிள்ளை

எம்மால் முடிந்தவரை சேகரிக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் அடிப்படையில் இந்த பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் நிச்சயமாக பலரின் பெயர்கள் விடுபட்டிருக்கும் என்பதும் தவறுகள் பல இருக்கும் என்பதும் எமக்கு நன்கு தெரியும். இருப்பினும் இது ஓர் ஆரம்ப முயற்சி. பெயர்கள் தவறவிடப்பட்டிருந்தாலோ, பெயர்கள் பிழையாக பதிவிடப்பட்டிருந்தாலோ அல்லது சரியான இடத்தில் குறிப்பிடப்படாது இருந்தாலோ தயவுசெய்து பெருமனத்துடன் மன்னித்து உங்களது அல்லது உங்களின் உறவுகளினது சரியான விபரங்களை nainativumwa@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அறியத்தருவீர்களாயின் அடுத்துவரும் பதிப்புக்களில் அல்லது ஏனைய அமைப்புக்களின் பதிப்புக்களில் சரியான விபரங்களை பிரசுரிக்கக்கூடியதாக இருக்கும். இவ்வாறானதோர் ஆவணப்படுத்தல் முயற்சிக்கு உங்கள் அனைவரினதும் ஆதரவினை வேண்டிநிற்கின்றோம்.



## 1995 முதல் 2020 வரை கழகத்தின் வளர்ச்சிக்காய் கரம் கொடுத்த நிர்வாகசபை உறுப்பினர்கள்

1. திரு கு.முரளிதரன்
2. திரு தி.சந்திரபாலன்
3. திரு.அ.பஞ்சானந்தராசா
4. திரு.சோ. சற்குணநாதன்
5. திரு.சா.குகேந்திரன்
6. திரு.சு.அமிர்தலிங்கம்
7. திரு.க.புவனேஸ்வரா
8. திரு.து.சசிகுமார்
9. திரு.சு.வரதன்
10. திரு.மா.சுரேந்திரன்
11. திரு.க.குகராசா
12. திரு.இ.குலநாதன்
13. திரு.கு.சச்சிதானந்தன்
14. திரு.கு.சிவநேசன்
15. திரு.ஆ.சிவச்சந்திரன்
16. திரு.க.குகனேஸ்வரா
17. திரு.பா.ஏகாந்தராஜா
18. திரு.பா.பாலமுரளி
19. திரு.ப.நகுலேந்திரன்
20. திரு.ந.ஸ்ரீபதி
21. திரு.ப.விவேகானந்தா
22. திரு.சி.திருமாறன் செஞ்சுடர்
23. திரு.கு.ந.செல்வநாயகம்
24. திரு.மு.மகேஸ்வரன்
25. திரு.சி.கோடீஸ்வரன்
26. திரு.ப.ஜெகதீஸ்வரன்
27. திரு.வே.இரவீந்திரன்
28. திரு.சி.துசிதரன்
29. திரு.அ.கேசவராசா
30. திரு.செ. வித்தியரூபன்
31. திரு.இ.சதாசிவம்
32. திரு.வே.பூபாலசுந்தரம்
33. திரு.செ.ரமேஸ்
34. திரு.நா.இளங்கேஸ்வரன்
35. திரு.இ.ஸ்ரீஸ்கந்தவள்
36. திரு.அ.ஸ்ரீராமமூர்த்தி
37. திரு.க.சிவகுமாரன்
38. திரு.அ.யசோதரராசா
39. திரு.க.சர்வானந்தன்
40. திரு எஸ்.திவாகரன்
41. திரு.அ.சச்சிதானந்தராஜா
42. திரு.தி.சுரேன்
43. திரு.ச.நந்தகுமார்
44. திரு.அ.கருணாகரன்
45. திரு.ந.பாலசரவணன்
46. திரு.சோ.வரதநாதன்
47. திரு.க.தயானந்தன்
48. திரு.த.பஞ்சலிங்கம்
49. செல்வி சு.பூபாலசுந்தரம்
50. செல்வி.சோ.பூபாலசுந்தரம்
51. திருமதி.கி. நீலரஞ்சிதராஜா
52. திருமதி.வி.மதுரைலிங்கம்
53. திருமதி.ஸ்ரீ.கிருஸ்ணவேணி
54. திரு. சா.யோகேந்திரன்
55. திரு. க.சோதீஸ்வரா
56. திரு. க.றமேஸ்வரன்
57. திரு. கு.எட்வின்
58. திருமதி ச.கிருபாநிதி
59. திரு. ம.புஸ்பாகரன்
60. திரு. சா.யோகேஸ்வரன்
61. திரு. ந.கௌரிபாலன்
62. திரு. தி.ஜீவேந்திரன்
63. திருமதி அ.வடிவாம்பிகை
64. திரு.ந.கிருஸ்ணா
65. திரு.க.கணேசபதி
66. திரு.ந.கமலானந்தன்
67. திரு.செ.நிசாந்நன்
68. திரு.இ.காசிநாதன்
69. திரு.அ.சதானந்தராஜா
70. திருமதி ச.சர்மினி
71. திரு.யோ.ஜயகாந்
72. திரு.கா.மனோகரன்
73. திரு.தி.குகதாசன்
74. திரு.க.மதிபாலன்
75. திரு.கோ.கேதீஸ்வரன்
76. வைத்தியர் வீ. தர்மகுலசிங்கம்
77. வைத்தியர் கா. மனோரஞ்சன்

RUBY'S
EVENTS CATERING

WHETHER YOU'RE LOOKING FOR AN AFTERNOON TEA, CANAPE & BOWL FOOD, SIT DOWN MEALS OR AN INTERACTIVE LIVE SERVING STATION, WE CAN HELP. WE OFFER FLEXIBLE CATERING OPTIONS FROM SIMPLE BUFFETS TO FULLY CATERED SIT DOWN MEALS.











GET IN TOUCH WITH US

We'd love to assist in making your dream event a reality.
We are passionate about providing the best food to suit every occasion. To find out more about our mouth-watering selection of authentic Sri Lankan and South Indian dishes, get in touch with the team ASAP.

020 8799 7180
mail@rubyscatering.co.uk
Unit 4, Walmgate Rd, Perivale, Greenford UB6 7LH

Follow Us On





எட்டுத்திக்கும் அமைதியும், மகிழ்ச்சியும் பெருகட்டும்.....

RS PRINTERS

பிரித்தானியா நாட்டில் எமது மக்களின் அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும்
சிறப்புற சேவைசெய்யும் நிறுவனங்கள் மற்றும் மக்கள் நல சங்கங்களை உருவாக்கிய
நல்ல உள்ளங்களுக்கும் அதனை போற்றி பாதுகாத்து வளர்க்கும்
சிறப்புமிகு பணியைச் செய்து கொண்டு இருக்கும்
தலைவர், நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கும்
எமது வாழ்த்துக்கள் கூறுவதோடு,
எங்களது பணியை அவர்களோடு இணைந்து தொடர்வதில் பெருமிதம் கொள்கின்றோம்.



All Your Printing Needs.... (Small or Big Quantity)

Flyer, Leaflet, Catalogues, Brochures, Annual Report, Magazine, Newspaper, Folder,Ticket, Souvenir
Letterhead, Invoice, Receipt, Business Cards, Diary, Calendar, Wall Planner, Rubber Stamp, Invitation Cards,
Foil Printing, Flex Printing, Banner, A Board, Roll-up Banner, Poster (Any size), Copy (Colour and Black and white)

கண்கவரும் வண்ணங்களில் விதவிதமான அழைப்பிதழ்கள், பலகாரப் பெட்டிகள்
அரங்கேற்ற மலர்கள், நினைவு மலர்கள், அலுவலகத்திற்குரிய அச்சுப்பதிவேடுகள்
மற்றும் உங்கள் தேவைக்கான அனைத்து அச்சுப்பதிப்புக்களுக்கும் அணுகவும்.

24 HOURS SERVICES

நாங்கள் மிகவும் சிறப்பான முறையில் விளம்பர துண்டு பிரசுரங்கள்
அரங்கேற்ற மலர்கள், அழைப்பிதழ்கள்
ஆண்டு மலர்கள், Banners, நினைவு மலர்கள்
கண்ணீர் அஞ்சலி (Notice - 2மணி நேரத்தில்)
செய்துதரப்படும்



RS Printers Ltd 88 Horsenden Lane North, Greenford UB6 7QH | T: 020 8782 3844, M: 077 6522 4337
Email: rsprintersltd@gmail.com | www.rsprinters.com



அழகிய நயினாதீவு தெற்கு கடற்கரை




இலங்கை மின்சார சபை - நயினாதீவு



பொது மயானம் - நயினாதீவு



இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து - நயினாதீவு







நயினாதீவினை யாழ்குடாநாட்டுடன் இணைக்கும் குறிகாட்டுவான் இறங்குதுறை



நோயாளர் காவு படகு - நயினாதீவு


நயினாதீவு
Map Drawn By: N. Balakrishnan, Nainativu




மங்கையர் மனம் கவரும் அசல் 22 கரட்
ஆபரணங்களின் நகை மாளிகை
Sri Soobana jewellery
JEWELLERS | PAWNBROKER
உங்கள் அனைத்து தங்க
நகைகளையும் நம்பிக்கை
உத்தரவாதத்துடன்
நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
சிங்கப்பூர் விலைக்கு
அனைத்து நகைகளும்
தாலிக்கொடிகளும்
பெற்றுக்கொள்ளலாம்
Repay Loan From
1.99%
உடனே நாடுங்கள்
அனைத்து வகையான
தங்க நகைகளும்
இங்கே அடகு பிடிக்கப்படும்
START FROM 1.99% to 3.49%
Find us on Facebook
Terms & Conditions Applied
020 8900 9009 | 020 8900 9000
OPENING HOURS : MON - SAT 10.00 AM - 6.30 PM | SUN 11.00 AM -6.30 PM
www.srisoobanajewellers.co.uk
194 EALING ROAD, WEMBLEY, MIDDLESEX HA0 4QG



# நன்றி

கழகத்தினை உருவாக்கி அதன் வளர்ச்சிக்காய் அல்லும்பகலும் உழைத்த உழைத்துவருகின்ற ஆரம்பகர்த்தாக்கள், கழகத்தின் செயற்பாடுகளுக்கு என்றும் ஆலோசனைகளை வழங்கிவரும் கழகத்தின் காப்பாளர்கள், கழக கணக்குகளை சரிபார்க்கும் கழகத்தின் கணக்காய்வாளர், கழக கணக்குகளை எந்தவித எதிர்பார்ப்புமின்றி சமர்பித்துவரும் MSR நிறுவனத்தார், கடந்த 25 வருடங்களாக கழகத்தின் தூண்களாக இருந்து உழைத்துவரும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், கழகத்தின் செயற்பாடுகளுக்கு என்றும் ஆக்கமும் ஊக்கமும் தந்து ஒத்துழைப்பு வழங்குவதுடன் நிதிப்பங்களிப்புக்களை மனமுவந்து வழங்கிவரும் கழகத்தின் உறுப்பினர்கள், நலன்விரும்பிகள் மற்றும் நன்கொடையாளர்கள், எமது செயற்திட்டங்களை நயினாதீவில் முன்னெடுக்கும் எமது சேய்க்கழகத்தின் நிர்வாக உறுப்பினர்கள், உதவியாளர்கள், 25ஆவது ஆண்டு விழா சிறப்புற ஆதரவளித்த நன்கொடையாளர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், இசை குழுவினர், இசை கலைஞர்கள், எல்லாவற்றுக்கும் மேலாக நிகழ்வை கண்டு கழிக்க பெரும்திரளாக வருகை தந்து மகிழ்வித்த இரசிகப்பெருமக்கள், வெள்ளிவிழா மலர் சிறப்பாக வெளிவர கட்டுரைகள், கவிதைகள், வாழ்த்துச்செய்திகள், புகைப்படங்கள் என்பவற்றை தந்துதவிய உறவுகள், நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தின் 50ஆவது ஆண்டுநிறைவினை முன்னிட்டு வெளியிடப்பட்ட "பொற்றாமரை" சிறப்பு மலரில் இருந்து கட்டுரைகள் சிலவற்றை மீள் பத்திப்பிட அனுமதிதந்த நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தின் நிர்வாகத்தினர், எமது ஊரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய கழகங்கள், எமது அயல் தீவுகளை பிரித்தானியாவில் பிரதிநிதித்துவப்படுத்தும் கழகங்கள் மற்றும் மலரினை சிறப்புற ஒழுங்கமைத்து தந்த தட்டெழுத்தாளர்கள், அழகுற அச்சேற்றிய அச்சகத்தினர் அனைவருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம், பிரித்தானியா தனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதுடன் கழகம் தொடர்ந்து சிறப்புடன் செயற்பட அனைவரினதும் ஆதரவினையும் நிற்கின்றது. 2020 ஏப்ரலில் நடாத்த இருந்த கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாவானது COVID -19 நோய்த்தொற்றுப் பரவல் காரணமாக பிற்போடப்பட்டது. மலரிற்கான ஆக்கங்கள், வாழ்த்துச்செய்திகள் மற்றும் ஆசிச்செய்திகளில் பல 2020 இல் பெற்றுக்கொள்ளப்பட்டவை என்பதனை தெரிவித்துக்கொள்வதுடன் மலரில் ஏதேனும் எழுத்துப்பிழைகள் மற்றும் கருத்துப்பிழைகள் இருப்பின் பெருமனத்துடன் மன்னித்துக்கொள்ளும்படி அன்பாக கேட்டுக்கொள்கின்றோம்.

நயினை மணிமேகலை முன்னேற்றக் கழகம்

பிரித்தானியா

23/07/2022

